
திராவிடநாடு
பொங்கல் மலர் 1962
கே. மாதவன்
விலை ரூ 1-50



# அன்பு வாழ்த்து

★

ஏற்றமும் இன்பமும் பொங்கி எழில் தவழும் நந்நாளாம் தமிழர் திருநாளில்— பொங்கற் பெருநாளில், மலர் அளிக்கும் கருத்துக் குவியல்களைப் படித்தின்புறு வதல் உங்கள் அனைவருடனும் நாங் களும் பங்கு பெறும் நல்வாய்ப்போடு; நமது குறிக்கோளாம் விடுதலைப் பாதை யில் அமைந்துள்ள படிக்கட்டுகளில் ஒன்றான தேர்தலிலும் நாம் பெரிதும் ஈடு பாடு கொண்டு நமது இலட்சிய வெற்றி யைத் துரிதமாக்குவதல் உறுதுணை யாய் நின்று பணிபுரிவோம் என்பதனை நமது வாழ்த்தாக வழங்குகிறோம்.


வாழ்க தமிழ்!


வெல்க திராவிடம்!!

உங்கள்,

காஞ்சிபுரம்.
14-1-62.

**'திராவிட நாடு'**
**பணிமனைத் தோழர்கள்.**





# புத்தாண்டு வந்த தைப்

# போற்றுவோம்!



(வாணிதாசன்)

இத்திங்கள் தைத்திங்கள்! இப்பரிதி பொற்பரிதி!
புத்தாண்டு வந்ததைப் போற்றுவோம்!—எத்திசையும்
தாயகத்தின் மேன்மை தமிழின் சிறப்போங்க
ஓயா துழைத்துயர் வோம்!

இந்நாடோ உன்னுடாம்! இப்பொங்கல் தைப்பொங்கல்!
பொன்னும் பரிதி புதுப்பரிதி!—தென்னவனே!
வாழ்ந்த இனம்நீ! மறந்தாயோ? இன்றுனது
தாழ்ந்தநிலை சற்றே நினை!

விண்ணை வெளியை விரிகடலை மேற்பரப்பை
மண்ணைப் பொன்ஆக்கி வரும்பரிதி—பண்ணூர்
தமிழர் புதுப்பரிதி தந்ததைத் தேக்காது
அமைய அமையுமே நாடு.



காஞ்சிபுரம்,
14-1-'61.

## தம்பி,

செவியில் விழவே இல்லையா நான் கூப்பிடும் குரல்? எப்படியப்பா விழப்போகிறது? இன்ப ஒலி கேட்டுக் கேட்டுச் சொக்கிப்போயல்லவா இருக்கிறாய்! அண்ணன் இந்த நேரத்தில் அழைப்பது காதிலே விழும் என்றுதான் எப்படி எதிர்பார்க்கமுடியும்? பொங்கலோ! பொங்கல்! என்ற குரலொலி இசையாகி இன்ப ஒலியாகி உன்னை ஈர்த்துவைத்திருக்கும் வேளை—நான் உன்னை அழைத்து வேறு வேலைகளிலே எங்கே ஈடுபடுத்திவிடப் போகிறேனோ என்ற ஐயப்பாட்டின் காரணமாக ஒரு சமயம், குரலொலி காதில் விழாததுபோலக் காட்டிக்கொள்கிறாயோ என்னவோ, எனக்கென்ன புரிகிறது. ஆனால் நான் உன்னை அழைப்பது, உன் விழாக் கோலத்தைக் கலைத்துவிட்டு வேறு வேலைகளைச் செய்திட உடனே கிளம்பு என்று கூறிட அல்ல. ஒவ்வொரு நாளும் நீ உன் இல்லத்துள்ளாருடன் இன்றுபோல் மகிழ்ச்சி பொங்கி வழிந்திடும் நிலையிலே இருக்கவேண்டும், பால் பொங்கும் இந்நாள் திருநாள்—எனினும் என்றென்றும் உன் வாழ்வு தேனோடு பால் கலந்த பான்மைபோல இருந்திடவேண்டும் என்று விரும்பி, உனக்கும் இல்லத்தவருக்கும் என் இதயங்கனிந்த நல் வாழ்த்துக்களைத் தந்திடவே அழைத்தேன்.

மகனே! என்று தாய் அழைக்க, எங்கே அவன்? என்று தந்தை கூப்பிட, அண்ணனிடம் கூறுகிறேன் என்று உடன் பிறந்தாள் பேசிட, என்னங்க! என்ற இசையைத் துணைவி எழுப்பிட, எங்கப்பா! இல்லே! எங்கப்பா! என்று நீ பெற்றெடுத்த செல்வங்கள் ஒருவரோடொருவர் விளையாடி, அதன் காரணமாக வம்பு விளைந்து, அப்பா! என்று அழுகுரலைக் கிளப்புவேன் என்று எச்சரிக்கை விடுத்திடும் குரலெழுப்ப, இத்தகு ஒலிகளுக்கிடையிலே உள்ள உனக்கு, என் அழைப்பொலி கேட்கிறதோ, இல்லையோ என்று நான் ஐயப்படுவதில் தவறில்லையே!

# தேனில் தோய்த்த பழம்



தம்பி! விழாக்கோலம் கொண்டுள்ள இல்லத்தில் எழிலோவியங்களாகத் திகழும் உன் பெற்றோரும் மக்களும் வளம்பல பெற்று, வாழ்வின் இன்பம் கண்டு, பல்லாண்டுகள் வாழ்ந்து நாட்டினை வாழவைப்பார்களாக. நினது இல்லத்தில், தமிழ் தழைக்கட்டும்! நின் ஆற்றல் தமிழைக் காத்திடப் பயன்படட்டும்! நின் வீரம் வளரட்டும்! அவ்வீரம் தாயகத்தின் மாண்பு காத்திடப் பயன்படுத்தப்படவேண்டும்! மரபு மறவாதோனே! மாண்பு மிகுந்திடவேண்டுமென்பதிலே நாட்டம் மிகக் கொண்ட நல்லோய்! வெல்க உன் முயற்சிகள்! பெற்றிடும் வெற்றிகள் மற்றையோர்க்கும் வழங்கத்தக்க பேறுகளை உனக்கு அளிக்கட்டும்! ஏறுநடையுடையோனே! வீரர் வழி வந்தவனே! மாற்றார்க்கஞ்சா மறக்குடிப் பிறந்தோனே! நினது இல்லம் இன்று புதுக்கோலம் கொண்டு பொலிவுடன் உளது! கை சிவக்க இல்லத்துப் பெண்டிர், இட்டடி நோக எடுத்தடி கொப்பளிக்கப் பாடுபட்டுக், குப்பை நீக்கிக் கரைகள் போக்கி, வண்ணச் சுண்ணம்அடித்து வகையாய்க் கோலமிட்டுப், பசுமை அழகாலே இருப்பிடம் பாங்குபெறத் தோரணம் கட்டி அலங்காரம் கூட்டியுளார்! அத்தனையும் கண்டதனால் அகமகிழ்வாய் நீ என்று ஆரணங்கு எண்ணிடாமல் இருந்திடுவதுதான் உண்டோ? ஆனால் முத்தழகி முந்தானைதனைக் கொண்டு முகத்தைத் துடைத்திடுவாள், உன் முகமோ எள் வெடிக்கும்! உழைப்பதிகமானாலே உருக்குலைந்து போகுமென உள்ளம் தனில் எண்ணி, ஊரெல்லாம் கூட்டுவயோ? உண்டோ இன்னும் கோலம்? பாரெல்லாம் கூடி நின்று 'பதக்கம்' அளிப்பாரென்று இப்பாடு படுகின்றாயோ! என்றெல்லாம் கேலி மொழிதான் பேசிப் பார்க்கின்றாய். ஆரணங்கு அறியாளா ஆடவர் முறைதன்னை, ஓரப் பார்வையுந்தான் வேறென்ன கூறிடுமோ! உள்ளுக்குள் சிரிக்கின்றாள் உன் போக்குத்தான் கண்டு!! ஊரெல்லாம் விழாக்கோலம் கொண்டிடும் இத்திருநாளில், மனையெல்லாம் மாளிகையாய் மாறிடவே வேண்டாமோ! யார் அதனைச் செயவல்ல 'மாயாவி' அவளல்லால்!! அறியாமல் அருகிருந்து ஆயிரம் பேசுகின்றாய்! அகன்றிடுவாய், அவள் இங்கு அழகளிக்கும் காரியத்தில் ஆர்வம் மிகக் கொண்டுவிட்டாள்! அடுத்த வீட்டு அழகியுடன் போட்டியிட்டாள், அந்திசாயும் வேளையிலே அல்லி பூத்த ஓடையருகினிலே!! மான் துள்ளும் என் மனையில், மயிலாடும், பார்த்திடுவாய்! தேன்சிந்தும் செடி கொடிகள் காட்டிடுவேன், கைவண்ணம் கலந்து வெண்பொற்சுண்ணப்பொடியதனால் என்று வேல்விழி விளம்பிவிட்டாள்; துடியிடையாள் தோற்பாளோ! நாம் இருவரும் உலவிடும் இந்நல்லோடைதன்னையும், தவமிருக்கும் குருகினையும், தாய் முகத்தை நோக்கிடும் சேய் விழிபோல் விழியுடைய அணிலும் அது தின்னும் பழக்கொத்தும்;பார்த்திடுவாய்,நீரிருக்கும், ஆங்கு நீலம் பூத்திருக்கும், கன்று களைத்து வந்து நீர் பருகும் கண்டிடலாம்! எல்லாம் இக்கரத்தால் எழுதிடுவேன் என் முற்றம், வண்ணம் பல கொண்ட சுண்ணப் பொடி கொண்டு! கண்டு வியந்திடுவாய் காலை மலர்ந்ததுமே என்று கூறித் துவக்கிவிட்டாள் எழில்காட்டும் போட்டியினை. அதை எண்ணி ஆரணங்கு, இடை துவளும் என்றறிந்தும், சரிந்த கூந்தலினைச் சரிப்படுத்த மனமுமின்றிச் சிந்துபாடிடும் புலவோன் தனியோர் உலகதனில்தான் உலாவி இருத்தல்போலத், தையல் இருக்கின்றாள் — நீயோ கை காட்டி அழைக்கவில்லை கண் காட்டிப் பார்க்கின்றாய், கனிவுள்ள சொல் கூட்டி அழைக்கின்றாய்! போ! போ! தோற்றாய்! இன்று விழாக்கோலம் வீடெல்லாம் காட்டிடவே அவள் நினைப்பு,நேரம் எல்லாம்! — என்று நான் கூறிடலாம்; நீ கேட்கவா போகின்றாய்! போ! அண்ணா! பொல்லாத கோலமது போட்டிட இவள் முனைவாள், பின்னர் தாள் வலியும் தலை வலியும் தன்னாலே வந்து சேரும், யார் பிறகு அதற்கெல்லாம் அல்லற்படவேண்டிவரும். நான் அண்ணா! அதனால்தான், நாளெல்லாம் கோலமதை நாட்டிலுள்ளார் கேட்டுக்கொண்டதுபோல் போட்டபடி இருக்க வேண்டாம், வா உள்ளே! என்றழைத்தேன். வம்பு அல்ல, நிச்சயமாய்! — என்று பதிலுரைப்பாய். ஏ! அப்பா! உனக்கென்ன, பதிலளித்து வெற்றிபெற வல்லமைக்கா பஞ்சம்!!

ஒன்றினை இன்றெண்ணிப் பார்த்திடுவாய்! வெறும் இலைகளே இருந்த கொடி அரும்பதனைக் காட்டிப் பின் அதுவே மலராகி, மணம் பரப்பிக் காட்டுவதும், தூவியது உட்சென்று, உயிர் பெற்று நிலம் பிளந்து, தாவி அணைத்திடத் தன் தாய் நோக்கிச் சென்றிடும் சேய் போல, மண் பிடிப்பினிலிருந்து விண்தொட்டு விளையாட எண்ணுதல்போல், பயிர் வளர்ந்து கதிர் குலுங்குவதும், தாளாலே நீர் உண்டு சுவை கூட்டித் தலையாலே தந்திடும் தாரணியுள்ளார்க்கு அன்னைபோல் விளங்குகின்ற தென்னை ஓங்கி வளருவதும் எற்றுக்கு? எவர் பொருட்டு?

நாம் வளர்ந்து வருவது வீட்டுக்கு நாட்டுக்கு; தொண்டாற்ற, துயர்நீக்க; தோழமை பூண்டொழுக, தொல்லுலகம் வளம்பெறவே மிகும் உழைப்பை நல்கிட. உரைக்கின்றார், உணர்கின்றோம்; உணராமலேயே கூடப் பலர் உரையாடி இருக்கின்றார். ஏடு பலதன்னில் நாடறிய எழுதியுள்ளார். எனவே பொருள் விளக்கம் பெறுகின்றோம். ஆனால், வானத்துக் கருமேகம் மழைமுத்தாய் மாறுவதேன்? எவர் பொருட்டு? யார் அழைப்பு? யாது பயன் கருதி? கொடியாடக் கனியாட, செடியாட மலராட, ஆடை விலகியாட வீசிடும் காற்றதுவும், என்ன பயன் கண்டு இவ்வேலை செய்கிறது? கதிர்

தந்துகொண்டிருக்கும் பயிர் வளர்ந்து, யாரிடம் பயன் கண்டு மகிழ்கிறது!! பழம் தந்து மரமதுவும் பரிசு என்ன பெறுகிறது! ஒன்றும் காணேம்! சேருக்கி வைக்கின்ரேம் நீர் பெய்து, செடி கொடியும் பயிர் வகையும் இருக்கும் இடம் தன்னில்! ஏனய்யா எனக்கிந்தச் சகதியிடம் எனக் கேட்கும் போக்கினைக் கொள்ளாமல், சேறு தந்த நமக்குச் செந்நெல் மணியதனைப் பயிர் தரக்கண்டோம்; செந்தேன் சுவைகொண்ட பழம் தந்து மரமதுவும் நமைக்கண்டு கூறிடுது, இன்று இது போதும், நாளை வா! மேலும் பெற! என்று. நாமோ? என் செய்கின்ரேம். கொடுத்தது என்ன, கொண்டது என்ன எனும் கணக்கினை மறக்கின்ரேம் முற்றும். நமக்குள் ஒருவருக்கொருவர் கொடுப்பது கொள்வது எனும் முறையில், இங்ஙிலையா கொள்கின்ரேம்! அடேயப்பா! எத்தனை எத்தனைகணக்குகள், காபந்து, வழக்குகள், வல்லடிகள்! ஏமாளியோ நான் ஏழு கொடுத்து ஆறு பெற! என்றெல்லாம் கேட்கின்ரேம். தூவிய விதையினுக்கு நாம் என்ன தந்தோம், தம்பி! மண்ணுக்குள் போட்டு மூடி விட்டோம், மரித்தவரைச் செய்வதுபோல். பின்னர் நீர் தெளித்து வருகின்ரேம். விதையோ நமக்குத் தாயன்புக்கு அடுத்தபடி எனத்தக்க உள்ளன்பு தருகிறது! பெறுகிரேம் நாம், ஒரு கணக்கும் பார்க்காமல்!

வள்ளல்களிடம்கூடக் கணக்கு வரைவார் உண்டென்னலாம்! அஃதன்றி, கவிதை வாரி வழங்கினர் காண், பொருள் பெற்ற பெரும் புலவர்! இயற்கையோ எந்த ஓர் வள்ளலும் எதிர்த்து நிற்க ஒண்ணுத இயல்பினதாய் இருந்திடுதல் இன்றளவும் காண்கின்ரேம்.

பயன் துளியும் கருதாது பாருக்கு இனிமைதனைப் பயக்கும் இயற்கைக்கு, நாம் நன்றி கூறிடவே வந்தது இந்தத் திருநாள். கடன் மெத்தப்பட்டுவிட்ட மாந்தர், ஓர்நாள் கூடிக், கதிரவன் தரும் ஒளிக்கும் கதிர்தரும் பயனுக்கும், மண்தந்த மாட்டுக்கும், வந்தனைகள் செய்து, வாழ்த்துப் பல பாடி, உம்முடைய உதவியினுல் உயிர் வாழ்ந்து வருகின்ரேம்; உலகு தழைத்திடவே உழைத்திடும் உத்தமர்காள்! வாழி! நீர் வாழி! எமை வாழ்விக்கும் வள்ளல் வாழி! எனப் போற்றுகின்ரேம். ஞாயிறு போற்றுதும் என்று நம் இளங்கோ, பாடியது, இயற்கையின் பெருநிதியை நாம் பெற்று வாழ்வதை எடுத்தியம்பத்தான். கதிரவன் ஒளியதால், உயிர் வளருவதால், ஞாயிறு போற்றுதும் எனும் மொழிவழிப் படி, பொங்கற் புதுநாள் எனும் திருநாள் கொண்டாடி மகிழ்கிரேம்.

தம்பி! கதிரவன் ஒளியில் உயிர்ப்புச் சக்தி இருப்பது இன்று பள்ளிப்படிப்பு அதிகம் இல்லாதவரும் அறிந்துள்ள ஒன்ருகும். ஆனல், அதிலே உள்ள விந்தையினைக் கூர்ந்து கவனித்திருக்கிருயா? கதிரவன் ஒளி, காரிருளை விரட்டுகிறது, 'காலை மலர்கிறது' என்று கூறுவது கவிதா நடைக்காக மட்டுமல்ல, அரும்பு கூம்பிக் கிடத்தல்போலத்தான் இரவுக் காலத்தில் உலகு இருக்கிறது; பகலவன் எழுந்தால் பகல் காண்கிரேம்; அரும்பு இதழ் விரித்திடுதல்போல, உறக்கம் கலைந்து உலகு எழுகிறது, மலர்கிறது.

தட்டி எழுப்பதுதல் மட்டுமின்றி, உயிர்ப்புத்தந்து காத்து நிற்பது ஞாயிறு. ஆயினும், இதனை அறிவாயே! எந்தச் சக்தி உயிர்ப்புத் தருகிறதோ, அதுவே அளவு அதிகமாகிப் போயின், கடும் வெயிலாகித் தகிக்கிறது, தணலென்ருகிறது, பொரித்துத் தள்ளுகிறது, எரித்து விடுகிறது, கருக்கிவிடுகிறது, சாம்பலாக்கி விடுகிறது.

எனவே, ஆக்கும் சக்தியும் அழிக்கும் சக்தியும் ஒரே இடத்தில் இருக்கிறது; அடைத்துவைக்கப்பட்டுள்ள அந்த 'வலிவு' ஆக்கும் பணியினைச் செம்மையாகச் செய்திடவேண்டுமெனின், அது பயன்படுத்தப்படும் 'அளவு'தான் முக்கியம். அளவு அதிகமாயின் அழிவுதான்!

இந்த அளவும், எல்லாப் பொருள்கட்கும், எல்லாக் காலத்துக்கும், எல்லா இடங்கட்கும், எல்லா நிலைமைகட்கும் ஒரேவிதமாக இருந்திடும் என்றும் எண்ணற்க; இருத்தலும் கூடாது;

எனவே, இந்த 'அளவு'க்கு அளவுகோல், எது என்று அறுதியிட்டுக் கூறிட முடியாது. அதுமட்டுமல்ல. நமது தேவைகளுக்கு ஏற்ற வகையில் அந்த அளவினை நாம் கூட்டக் குறைக்க, முறைப்படுத்த, வகைப்படுத்தவும், முடியும் என்று பொதுவாகக் கூறி விட முடியாது. கதிரவன் ஒளிதரும் விளக்கு அல்ல தேவைக்கும் விருப்பத்துக்கும் ஏற்றவகையிலே, மட்டுப் படுத்த அல்லது அதிகப்படுத்த அல்லது இல்லாது செய்திட. கதிரவன் ஒரு ஒளிப்பிழம்பு! இருக்குமிடம் நீண்ட நெடுந்தூரம்! எத்தனை கல் தொலைவு என்ற கணக்கினைக் கூறுவது விஞ்ஞானம். நாம் உணருவது இது; ஞாயிறு எவ்வளவு தொலைவிலே உளது என்ருல், நாம் அதனுடைய துணைகொண்டு உயிர்ப்புச்சக்தி பெறும்விதமான அளவு தொலைவில் உளது. இல்லையேல் ஒன்று, ஒளியும் வெப்பமும் கிடைக்கப்பெறுது உயிர்ப்பொருள் யாவும் உறைந்துபோய்விடும்; அல்லது தீய்ந்து தீர்ந்துபோகும். இயற்கை நியதி இரண்டும் ஏற்படாதபடி அமைந்துள்ளது, உறைந்துபோகச்செய்திடவும், கொளுத்திக் கருக்கிவிடவும் முடியும் என்பதனை நாம் உணரக்கூடிய 'குறிகள்' ஒவ்வோர் அளவு அவ்வப்போது நமக்குத் தென்படத்தானே செய்கின்றன. கொளுத்தும் வெயில்! என்கிரேம். கொட்டும் குளிர்! என்கிரேம். அவைகுறிகள்! எச்சரிக்கைகள்! இயற்கை மூலம் நாம் பெறும் வலிவின் அளவுமுறை தவறிப்

போனல், என்ன நேரிடும் என்பதனை நாம் அறிந்து கொள்ள, இந்தக் 'குறிகள்' போதுமானவை.

தம்பி! காய்கதிரோன் உள்ளடக்கிக்கொண்டுள்ள வலிவு மட்டுமல்ல, பொதுவாக இயற்கையின் ஆற்றலே இத்திறத்ததுதான். தேவைக்கேற்ற, நிலைமைக் குத்தக்க அளவு இருந்தால்மட்டுமே பலன்; அளவுமுறை கெட்டால் எல்லாம் பாழ்வெளியே, படுசூரணமே! கண்ணைக் கவர்ந்திடும் வண்ணப் பூக்கள் உதிர்வதுபோலக் காட்சிதரும் வாணம், ஒன்று; வீழ்ந்ததும் அதிர்ச்சிகளை வெடிப்புகளை இடிபாட்டை பெருந்தீயை மூட்டிவிடும் வெடிகுண்டு மற்றென்று. முறை கெட்டால், அளவு அதிகமானல் என்ன ஆகும் என்பதனை, இதனின்றும் அறிந்துகொள்ளலாம்.

இயற்கைக்கு இத்தகைய ஆற்றல் இருப்பினும், அதன் இயல்பு பெரும் அளவு, உயிர் இனத்துக்கு வாழ்வளிக்கும் செம்மைக்குப் பயன்பட்டு வருகிறதேயன்றி, அழிவுக்குப் பயன்பட வில்லை. எவ்வகையாலோ எத்துறையிலோ ஆற்றல்பெற்ற மாந்தர்கூடத் தமக்குள்ள 'அழிக்கும் சக்தியை' இயற்கைபோலப் பொறுப்புடன் அளவுபடுத்தி உபயோகிக்கின்றனரா எனில் இல்லை என்னலாம்.

உடல்வலிவோ பொருள்வலிவோ சிறிதளவு மிகுதியாக உள்ளதென்றல், அதனைக்காட்டி ஆதிக்கம் பெறவும் பிறரை அழித்திடவும் காட்டும் உணர்ச்சி தடித்து விடுகிறது; சில வேளைகளிலே அது வெறியாகியும் விடுகிறது.

செங்கிஸ்கான், தைமூர் என்றழைக்கப்படுவோர், தமக்கு இருந்த தாக்கும் ஆற்றலை அழிவுக்குப் பயன்படுத்தி, வெறியாட்டமாடித், தரணியை நிலைகுலையச் செய்தனர் என்பர். நம் நாட்களிலே இட்லர் தனக்குக் கிடைத்த ஆற்றலை, வலிவை, ஆதிக்கம்பெற அழிவினை மூட்டிடவே பெரிதும் பயன்படுத்தியதனைக் கண்டோம்.

பாயாத புலி, பதுங்காத நரி, சீறாத பாம்பு, உறுமாத மிருகம், கொத்தாத கழுகு, இல்லை என்பதுபோல, வலிவு ஏறப்பெற்றவர்கள் வெறிச் செயலில் ஈடுபடாதிருப்பது, நூற்றுக்கு எண்பதுக்கு மேற்பட்ட அளவு இல்லை என்றே கூறலாம். இயற்கையை, மாந்தர் இயல்புடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது, எத்துணையோ பாராட்டத் தோன்றுகிறது. அழிக்கும் சக்தியைக் காற்றும் கதிரோனும், மழையும் பெருநதியும், கடலும் நிலநடுக்கமும் எரிமலையும் எரிநட்சத்திரமும், மிருகம் போலவோ, மாந்தரில் வெறிகொண்டலைவோர் போலவோ, அவிழ்த்துவிட்டிருந்தால், அவனி ஏது? காலம் ஏது? கருப்பொருள் ஏது? எல்லாம் பாழ்வெளியாகிப்போயிருக்கும்.

இயற்கை, மிகப்பெரும் அளவுக்கு, உயிர்க்கு ஊட்டம் தரவே பயனளித்து வருகிறது; அழிக்கும் தீச்செயலில் ஈடுபட்டுவிட்வில்லை.

கதிரோனுக்கு விழாக் கொண்டாடும் இந்நாளில் இக்கருத்தினை எண்ணிக்கொள்வது பொருத்தமுடைத்து என்பதனல்இதனைக்கூறினேன். ஆனல். தம்பி! மனிதன் தன் அறிவுத் திறனைக்கொண்டு கூடுமானமட்டும், அழிவு தன்னை அண்டாதபடி தடுத்துக்கொள்ளக் கற்றுக்கொண்டான்; பழகிக்கொண்டான். விஞ்ஞானம் இதற்கான முறைகளை, வாய்ப்புகளைப் புதிது புதிதாகத் தந்தவண்ணம் இருக்கிறது.

இத்துடன் மனிதன் தன் வசதிக்கு ஏற்றபடி வாழ்க்கை முறையை அமைத்துக்கொண்டான்; சுற்றுச் சார்பினைச் சமைத்துக்கொள்கிருன். சுற்றுச் சார்புக்கு ஏற்றபடி இயல்பு, தொழில், தொடர்பு, ஆகியவை அமைகின்றன, இன்று திருநாள், இது ஓர் புதிய, இனிய, சுற்றுச்சார்பை இல்லங்களிலே ஏற்படுத்தி வைக்கிறது. புத்தாடை, சுவை உணவு, கலகலப்பு, தோழைமை, குதூகலம், நமது இல்லங்களைப் புதுக்கோலம்கொள்ளச் செய்வது காண்கிருேம். நேற்று உண்டு மகிழ்ந்தோம், நாளையும் உண்போம், எனினும் இன்று—விழா நாளன்று—உண்பதும் உரையாடுவதும் தனியானதோர் 'சுற்றுச்சார்பு' காரணமாகத் தனிச்சுவை பெறுகிறது.

ஊரெங்கும். அல்லது மிகப் பெரும்பாலான இடங்களிலே விழாக்கோலம் இருப்பது, அவரவர் இல்லத்தில் அமைந்துள்ள விழாக்கோலத்தை அதிகப்படுத்தியும் புதுவிதமாக்கியும் காட்டுகிறது,

பல சமயங்களில். சிலருடைய இல்லங்களிலே புத்தாடை, அணிகலன் பெறுவதும், சுவைமிகு பண்டங்கள் உண்பதும், பேசி மகிழ்வதும், இசை கேட்டு இன்புறுவதும் நடைபெற்றிருக்கக்கூடும். ஆனல் சிலருடைய இல்லங்களில் மட்டுமே, சீர்தெரியும், மற்றைய இல்லங்களில் அது அப்போது இராது, எனவே அவர்கட்கு, மகிழ்ச்சி இருக்கக் காரணம் இல்லை. விழா நாளெனில் அதுபோலன்று. ஊரெல்லாம் கொண்டாடுவர். தத்தமது இல்லத்தில் உள்ளது போன்றே மற்றையோர் இல்லங்களிலும் விழாக்கோலம், அளவும் வகையும் மாறுபடும் எனினும், மகிழ்ச்சிக்கான 'சூழ்நிலை' ஓரளவுக்கேனும் இருந்திடும். ஊரெல்லாம் வாழ்ந்திடக் கேடொன்றும் இல்லை! யான்பெற்ற இன்பம் பெறுக இவ்வையகம்! என்பனபோன்ற முதுமொழிகளின் வழி நிகழ்ச்சிகள் அமைந்திருப்பதுபோலத் தோற்றம் அளிக்கிறது விழாநாளின்போது.

எனவே, பொது இன்பத்தில் நமது இன்பம் ஒரு பகுதி, எல்லோரும் இன்பம் பெறுகின்றனர், நாம்

மட்டும் அல்ல என்ற உணர்வுதரும் உவகை விழா நாளுக்கென அமையும் தனிச் சிறப்பாகும்; தேனில் தோய்த்த பழம் புது தித்திப்புப் பெறுதல்போல, ஊரெல்லாம் மகிழ்ந்திருக்கும் வேளையிலே நாமும் மகிழ்ந்திருக்கும் வாய்ப்புப் பெற்றோம் எனும் எண்ணம் பொங்கற் புதுநாளில் கிடைக்கப் பெறுகிறோம்.

தளதளவென்று செடிகொடிகள் இருந்திடுவதே கண்ணுக்கு விருந்தளிக்கத்தான் செய்கிறது. பசுமைக் காட்சி பாங்குடன் தெரியும்போது பார்த்துக்கொண்டிருந்தாலே பட்டபாடுகூட மறந்துபோகுமளவு மனதுக்கு ஓர் 'தெம்பு' ஏற்படத்தான் செய்கிறது. நீலநிற வானத்தைக் காணும்போது ஓர்வித மகிழ்ச்சி பிறப்பதில்லையா! அதுபோல.

பசுமைப் பாங்கு காட்டும் செடிகொடியில் வண்ண மலர்கள் பூத்திடும் காட்சி தெரியுங்காலை, வனப்பு மிகுதியாகிப் புது மகிழ்ச்சி பெறுகிறோம்.

மலர்க்குவியல் காணக் காட்சிதான் எனினும், செடிகொடியில் அவை பூத்திருக்கும்போது — தனிக் கவர்ச்சி தெரிகிறது.

விழாநாள் மகிழ்ச்சி, செடி கொடியில் அன்றலர்ந்து மணம் பரப்பும் மலர்போன்றது. எனவேதான், அந்த மகிழ்ச்சியிலே தனியானதோர் சுவை பெறுகிறோம்.

தம்பி! எல்லா இல்லங்களிலும் என்ற சொற்றொடரை நான் மெத்தவும் பயன்படுத்தியுள்ளேன், பொருளை விளக்க, பாடம் காட்ட; எனினும் இன்று நாடுள்ள நிலையில், விழாவும் மகிழ்ச்சியும் எல்லா இல்லங்களிலும் உளது என்று கூறுவது இயலாது; நெஞ்சறிந்து பொய்யுரைக்க எவருமே துணிந்திடார். வறுமை கப்பிக்கொண்டுள்ள நிலை இன்று, வாட்டி வதைக்கிறது. வரிக்கொடுமை ஓர்புறம் அகவிலை மற்றோர் புறமும், மக்களை இடுக்கித் தாக்குதலுக்காளாக்கி இருக்கிறது. இந்நிலையில் விழா கொண்டாட, மகிழ்வெய்தி இருந்திட வாய்ப்புள்ள இல்லங்கள் மிக அதிகம் எனக் கூற இயலாது.

ஏதோ சில இடத்தில் இருந்திடும் இன்பச் சூழ்நிலை எல்லா இடங்களிலும் பரவிடத்தக்கதோர் நன்முயற்சியில் ஈடுபடுவது சான்றோர் கடன்.

இருப்பது இருக்கும், நடப்பன நடக்கும் என்று எண்ணி இருந்துவிடுதல் நன்றன்று.

எனவேதான், தம்பி! நாம் நமது சக்திக்கு ஏற்ற அளவு என்று மட்டுமல்ல, அதனினும் மீறிய அளவுக்கு எல்லோர்க்கும் எல்லாம் இருந்திட வேண்டுமென்ற குறிக்கோளுக்காகப் பாடுபட்டு வருகிறோம். திராவிடநாடு திராவிடருக்கே என்ற நமது திட்டத்தின் அடிப்படையாக இஃதே அமைந்திருக்கிறது.

எல்லார்க்கும் எல்லாம் இருந்திடும் இன்பநிலையைக் காண நாம் மேற்கொள்ள வேண்டிய பணிகள் ஏராளம் என்பதையும் பல்வேறு வகையின என்பதனையும் எண்ணிப் பார்த்தால் உணருவர்,

அந்த உணர்வு வருவது அப்பப்பா! இத்துணை அளவுளதா? இத்தனை வகைகளுளவா? என்று மலைத்துப்போக, மருண்டுபோக, சலிப்படைந்துபோக அல்ல. மேற்கொள்ள வேண்டிய பணி ஏராளம், பலவகையின, எனவே, நாம் நமது நேரத்தை நினைப்பை, அறிவை, ஆற்றலை மிகுதியாக இக்காரியத்தில் ஈடுபடுத்தியாக வேண்டும் என்பதிலே நாட்டம் பெறுவதற்கும், அதிலே விருப்பம் பெறுவதற்கும், அந்தப் பணியுடன் நாம் ஒன்றிப் போய்விடுவதற்காகவும் இதனைக் கூறினேன், என் ஊன் கலந்து உயிர்கலந்து உரைக்கின்றாய் என்று கூறத்தக்க விதமாக, நாம் நம்மை இலட்சியத்துக்கு ஈடுபடுத்திக்கொள்ள வேண்டும். களம்புகு வீரன். எட்டு நாட்கள் வீரம் காட்டினேன், பத்து எதிரிகள் மீது பாய்ந்தேன், இருபது வடுக்கள் ஏற்றேன், இது போதும் என வீடு திரும்பிவிட்டேன் என்று கூறிடான். அவன் சென்றது மாற்றானை வீழ்த்த. அவன் ஆற்றிட வேண்டிய கடமை அது. அக்கடமை, குறிக்கோள் ஆகிவிடுகிறது. அந்தக் குறிக்கோள் ஈடேறும் வரையிலே, அவன் மேற்கொண்ட பணி முடிந்ததாகப் பொருளில்லை.

பணியாற்றுவதிலே ஏற்பட்டுவிடும் கடுமை, எதிர்ப்படும் ஆபத்துகள் ஆகியவற்றினால் களைத்தோ கலங்கியோ போன நிலையில், தொடர்ந்து பணியாற்றும் நிலை குலைந்து போவதுண்டு; தம்மால் இயலவில்லை என்பதைக் கூறிடுவது தகுதிக்கு குறைவல்ல, உண்மை நிலைமையை மறைப்பது தீது, ஆகாது என்ற உணர்வு உடையவர்கள், தம்மால் பணியாற்ற முடியாது போயிற்று என்பதைக் கூறிடுவர். இவ்வகையினர் மிகச் சிலரே! மிகப் பலருக்கு இத்தகைய இயல்பு ஏற்படாது. தொடர்ந்து பணியாற்றித் தொல்லைகளை ஏற்றுக்கொள்ள இயலாத தமது நிலையை, தோல்வியை எவரும் கண்டுபிடித்துவிடக்கூடாது என்பதிலே கருத்து வைத்து, வலிவிழந்ததாலோ கோழைத்தனம் மிகுந்ததாலோ, சபலத்தாலோ தன்னலச் சுவையாலோ, பணிபுரிவதை நிறுத்திக்கொள்ள முடிவு செய்துகொண்டு, தம்மை அதற்காக எவரும் இழித்தும் பழித்தும் பேசிட இடம் ஏற்படக் கூடாது என்பதற்காகக், குறிக்கோளையே குறைகூறவும், இழித்துப் பேசவும் கொள்கை வழி தொடர்ந்து நடப்போரை நையாண்டி செய்தும், அவர்மீது வசை உமிழ்ந்தும்,

தமது தோல்வியைக் கோழைத்தனத்தை மறைத்துக் கொள்ள முனைவர். இக்குணம் கொண்டவர், சிறு நரிக்கு ஒப்பானவர் என்ற கருத்துடன், சிறுகதை எழுதியோர், சிச்சீ! இந்தப் பழம் புளிக்கும்!!—என்று எழுதிக் காட்டினர்; அறிவீர்.

அஃதேபோல, நம்மிடையேயும், அத்தகையோர் அவ்வப்போது கிளம்பத்தான் செய்கின்றனர். வீரம், கொப்பளிக்கப் பேசிய வாயினல் வீணுரைகளைக் கொட்டுவர்! கொள்கைக்காகவே வாழ்கிறோம், சாவு எமை மிரட்டினும் அஞ்சோம்! என்று பேசி, நாட்டவர் கேட்டுக் கை தட்டி ஆரவாரம் செய்து, இஃதன்றோ வீரம்! இதுவன்றோ கொள்கைப்பிடிப்பு! என்றெல்லாம் புகழ்பாடக் கேட்டுத் தமது மார்பை நிமிர்த்தி நாடகம் காட்டி மகிழ்ந்தவர்களே பிறிதோர் நாள், நான் யோசித்துப் பார்த்தேன்! அமைதியாக வீற்றிருந்து யோசித்துப் பார்த்தேன்! அறிவுத் தெளிவுடன் யோசித்துப் பார்த்தேன்! என்னென்பேன், தோழர்காள்! கொள்கை உப்புச் சப்பற்றது, உருப்பட முடியாதது என்பதனை உணர்ந்தேன்! கொள்கைக்காக நடப்பதாக எண்ணிக்கொண்டு கோணல்வழி நடந்தேன், மடைமையில் உழன்றேன், மாசு நீக்கப்பட்ட மணியானேன் இன்று, என்று பேசித், தொடர்ந்து கொள்கை வழி நிற்போரைத் தாக்கிடவும் முனைவர்.

அவர்தம்போக்கு, அவரைவந்து பீடித்துக்கொண்ட தன்னலம், பலக்குறைவு, அதனல் ஏற்பட்டது. அவர்தம் பேச்சு, நோய்கொண்ட நிலையில் கிளம்பும் முக்கல் முனகல், விக்கல் விம்மல், படபடப்பு ஆகியவைகளே. இவை நமக்கு அவர்பால் அனுதாபம் ஏற்படுத்தவேண்டுமேயன்றி, ஆத்திரம் மூட்டுதல் அறவே ஆகாது. பல்போன கிழவர் கரும்பினைச் சாருகத் தந்தாலன்றி, பரிவுடன் ஏற்றுக்கொள்கிருரா! இல்லையே!! சொல் போன தோழர்கள் அதே நிலையினரே! கொள்கை இழந்தோர் குணமிழந்தோரே! எனினும் அதனைக் காட்டிக் கொள்ள, வெட்கம் குறுக்கிடாதோ! குறுக்கிடவே, எமது வீரம் வற்றிப்போய்விடவில்லை, அறிவாற்றல் அழிந்துபடவில்லை, மாருக பன்மடங்கு வளர்ந்துவிட்டது; எமக்குக் கொள்கைபிடிக்கவில்லை, முன்னம் இனித்ததெல்லாம் இன்று கசக்கிறது, முன்பு சுவைத்தன இன்று குமட்டல் தருகின்றன, முன்பு எது வீரம் என்று எண்ணிக்கொண்டிருந்தோமோ, அது இன்று வீம்பு அல்லது வெறி உணர்வு என்று தோன்றுகிறது, என்று கூறித் தமக்கு வந்துற்ற நோயினைப் பிறர் காணு வண்ணம் மறைத்திட முயல்கின்றனர். வேறென்ன!

இங்நிலை, தன்நிலை மறந்திடும்போது ஏற்படுதல், தவிர்த்திட முடியாததாகி விடுகிறது.

மூங்கில், கரும்பைவிடத் தழைத்து ஓங்கி வளரத்தான் செய்கிறது; சுவை தாராது! அதுபோல், கொள்கையற்ற நிலையின் துணைகொண்டு, தமது இடத்தை 'உயரமானதாக' ஆக்கிக்கொண்டு கொள்கையாளர்களைக் காட்டிலும் நாங்கள் உயர்வு பெற்றுவிட்டோம் என்று நினைத்துக்கொள்வதும் கதைத்துக்கொள்வதும், ஓங்கி வளரும் மூங்கில் கரும்பினைப் பழித்திடுதல் போன்றதாகும். தம்பி! பொங்கற் புதுநாளிலே காண்கிருயே பூசுணையும் இஞ்சியும்! இஞ்சியின் அளவு என்ன? பூசுணையின் அளவு யாது? எதற்கு எது மணம் அளிக்கிறது? விளக்கவா வேண்டும்.

கொள்கையுடன் தம்மைப் பிணைத்துக்கொண்டவர்கள், எதிர்ப்புகண்டு அஞ்சார். ஏமாற்றம் ஏற்படும் போதுகூட மனம் உடைந்து போகார்.

குத்திப் புடைத்தெடுத்துப் புதுப்பானை தன்னிலிட்டு, பால்பெய்து சமைக்கிருரே, பொங்கல், அதற்கான அரிசி, கிடைத்தது, எப்படி? அரிசியாகவேவா? இல்லையே! விதை முளையாகி, முளை வளர்ந்து பயிராகி, பயிருடன் களை முளைத்து, களை பறித்த பின்னர் தழைத்து, பூச்சிகட்கு ஈடுகொடுத்து, பிறகு, கதிர்விட்டு, முற்றி, செந்நெல்லாகிப் பிறகு அரிசி காண்கிறோம். இந்த நிலைக்கு இடையில், உழவன் என்னென்ன தொல்லைகளை, ஏமாற்றங்களை, எரிச்சலூட்டும் நிகழ்ச்சிகளைச் சந்தித்தான், சமாளித்தான், அறிவோமே! பயிருடன் களை கண்ட காலை, நிலத்தையும் உழைப்பையுமா நொந்துகொள்கின்றனர். இல்லையே! மேலும் உழைத்து, தம் உழைப்பினை உருக்குலைக்க முளைத்திட்ட களையினை அகற்றுவோம் என்று பாடுபல படுகின்றனர்.

உழவன், செந்நெல் மணியினை, அடித்தெடுத்துக் களஞ்சியம்தனில் சேர்த்திடும் வரையிலே, தான் மேற்கொண்ட பணியினின்றும் வழுவிடான்! உழவன் குறிக்கோள், அறுவடை! அந்த அறுவடை காணுமட்டும், உழைத்தாகவேண்டும்; உழைத்தே தீருகிறுன்.

பயிர் தரமாக இல்லை, ஊட்டம் போதுமான அளவு இல்லை, கதிர் செம்மையாக இல்லை, பதர் மிகுதி மணி குறைவு, என்று ஏதேனும் கூறிவிட்டு, உழவன், தன் பணியினைவிட்டு விடுகின்றுனே? விட்டுவிட்டிருப்பின், இன்று இல்லத்தில் இஞ்சியும் மஞ்சளும், மாபலா வாழையும், மற்றைப் பொருள்களும் எப்படிக் கிடைத்திருக்க முடியும்?

எனவே உழவர் திருநாள் இடையிலே இன்னல் ஏற்படினும், தொடர்ந்து பணியாற்றி, அறுவடை கண்டே தீருவது என்ற உறுதியை உழவர் காட்டினர் என்பதை அறிந்து பாராட்டு வழங்கிட, ஏற்றநாளாகும்.

விதை தூவும்போதே அறுவடை காணவேண்டும் எனும் குறிக்கோளினை உழவன் கொண்டான்; இடை

யில் எதுவரினும் அந்தக் குறிக்கோளை அவன் மறந்தானில்லை, அதனினின்றும் வழுவிடவும் இல்லை. அதன் காரணமாகத்தான், பலவித உணவுவகை, பருகுவன, சூடுவன, பூசுவன யாவும் உலகு பெற்றுளது. களை கண்டு கலக்கம் கொண்டு கழனிவிட்டுக் கழனி மாறி விட்டிருந்தால், என்ன கிடைத்திருக்கும்? தோல்வி!!

இந்த அரிய கருத்து நிரம்பக் கிடைக்கும் நல்ல நாள், தமிழர் திருநாள்.

ஏர்கட்டி உழும்போது எட்டு ஊரார் கேட்டு மகிழத் தக்க பாட்டெழுப்பிய உழவன், களைகண்டு கதிகலங்கி, இந்த வயலினிலே இறங்கியதே என் தவறு! என் உழைப்பதனை இதற்கீந்தது பெருந் தவறு! இனி என் உழைப்பை இதற்கு நான் அளித்திடவே போவதில்லை. அம்மட்டோ! இந்த வயலினையே அழித்தொழிப்பேன், இது உறுதி என்று இயம்பிடக் கேட்டதுண்டா? இல்லை! ஆனால், தமது தகுதியும் திறமையும் அறியாததாலேயே, தாரணியில் பலப்பலரும் தலைவர்களானார்கள், இனி அவர்க்குக் கிடைத்திட்ட அந்த இடம் நாம் பெறுவோம், நமக்கு அது கிட்டாது என்பது விளங்கிவிட்டால், இடத்தையே அழித்தொழிப்போம் என்று கூறிடுவோர் கண்டு வியப்பு அடைதல் வேண்டாம்; இத்தகைய இயல்பு கொண்டோர், இத்தனை நாள் எந்தவிதமாகத்தான் இங்கிருந்தார், கொள்கை முழக்கி வந்தார், குறிக்கோளின் தத்துவத்தை விளக்கி நின்றார் என்று எண்ணித்தான் எவரும் வியப்படைதல் வேண்டும்.

உனைச்சுற்றி இன்றுள்ள பொருள் பலவும், காடென்றும் மேடென்றும் கட்டாந்தரையென்றும் முன்னம் மாந்தர் ஒதுக்கிவிட்டிருந்த நிலம் தந்தவையன்றோ!

இன்றோ இன்பம் நாம் துய்ப்பது இயற்கையை வெல்ல, அதன் ஆற்றல் துணைகொள்ள, எண்ணற்ற மக்கள் எத்தனையோ காலமாக எடுத்துக்கொண்ட முயற்சிகளின் வெற்றியைக் காட்டுகிறது, எனவே உழைப்பின் மேன்மையை, உலகு கொண்டாட அமைந்தது பொங்கற் புதுநாள்.

நிலந்தினிலே உழுதிடுவோர், சேருக்க மிதித்திடுவார், செய் தொழிலுக் கேற்றவண்ணம், வெட்டியும் குத்திக் குடைந்தும், பிளந்தும் குழி பறித்தும், எத்தனையோ செய்திருப்பது, காண்கின்றாய், அல்லவா? எதன் பொருட்டு? பலன் காண! எவர் துய்க்க அந்தப் பலன்? நிலம் அல்ல!

பலன்காண மக்கள் உழைத்திடுதல் காண்போர் உழைப்போரை வாழ்த்துகின்றார், உழைப்பின் ஏற்றம் செப்புகின்றார்; உண்மை; தேவை.

ஆயின், வேறொன்று உணர்தல்வேண்டும். பலன் காண உழைக்கின்றான் மனிதன், அவன் காணும்பலன் வழங்கும் நிலமோ பலன் காணாதது மட்டுமல்ல, தன்வலிவு தானிழந்து, பொருளிழந்து போவதுடன், வெட்டுவார் நிற்பதையும் வெறுத்திடாமல், அவர்க்கும் இடம் அளித்திடும் பொறை உண்டே, அம்மம்ம! மிகப் பெரிது!!

என் சோறு உண்டவனா என்சொல்லை மீறுவது! நான் அளிக்கும் ஊதியத்தால் உயிர்பிழைக்கும் போக்கினனா, நாக்கை நீட்டி நின்றான், நானவனுக்கு உயிர் கொடுத்தோன் என்பதனையும் மறந்து! என் வீடு ஏறி நின்று என்னையேஏசிட, என்னதான் துணிவு உனக்கு; இறங்கு என் இடம்விட்டு என்றெல்லாம் ஊரார் உரையாடல் கேட்கின்றோம். பொன்னுடன் மணியும், பொன்னுடையானேனும் இஃது இல்லாதானாயின், என்னுடையான் என்று எவரும் கூறிடத்தக்க, உண்ணும் பொருள் பலவும், சுவைதரும் கனியதுவும், மணம்தரும் மலர்தானும், தந்துதவும் நிலமதுதான், ஒரு பலனும் காணாதது மட்டுமல்ல, கருவி கரம்கொண்டு தன்னை இம்சிப்போனின் தாள், தங்கி இருப்பதற்கு இடம்கொடுக்கும், இயல்பு என்னே! சின்னஞ்சிறு பூச்சி, நமதுடலில் ஓரிடத்தில் ஊர்ந்து நமக்குத் தொல்லை தந்திடும்போதினிலே, எவ்விதம் துடிக்கின்றோம், எவ்விதம் தேடுகின்றோம், கண்டெடுத்துப் பூச்சியினைக் கொன்றழிக்கத் துடிதுடித்து. எத்தனைவிதமாகத் தாக்குகிறார், நிலமதனை! எத்துணை பொறுமையுடன் எல்லாம் தாங்கிக்கொண்டு, பலன் தந்துதவுகிறது நிலம் என்னும் நேர்மை. உழுதால் உணவளித்து, குடைந்தால் நீரளித்து, ஆழக் குடைந்திட்டால், அரும் பொருள்கள் பல அளித்து, ஏனென்று கேளாமல், எப்பலனும் பெற்றிடாமல் ஈந்திட நான் உள்ளேன், பெற்றிடுவாய்! பிழைத்திடுவாய்! எத்தனைவிதமான இன்னலும் இழிவும், நீ என்மீது சுமத்திடினும், எல்லாம் மறந்திடுவேன், பலபொருளைத் தரமறப்பேன் அல்லேன்! குத்தியவன் குடைந்தவன், வெட்டியவன் இவனன்றோ, இவன் நிற்க இடம்கொடுக்க ஏன் நாம் ஒப்புதல்வேண்டும். பழி தீர்த்துக்கொள்வோம், இவன் நம்மைப் படுத்தியபாடுகட்கெல்லாம்,என்ற சிறுமதி துளியுமின்றிச் செல்வம் ஈந்திடுவது காண்கின்றோம்.

**அகழ்வாரைத் தாங்கும்**
**நிலம்போலத்தம்மை**
**இகழ்வாரைப் பொறுத்தல்தலை.**

என்றார் **வள்ளுவர்.** பொறையுடைமையில் இஃது தலையாயது என்று கூறுகிறார்.

நிலன்தரும் பலன்கண்டு மகிழ்ந்து, நன்றிகூறும் இந்நாள், பொறையுடைமையைப் போற்றிடவும் வேண்டும்.

தம்பி! உன் எதிரே காணப்படும் விளைபொருள் யாவும், விதையாக ஒருபோது இருந்தவை. நிலம்,

தன்னிடம் ஒப்படைக்கப்பட்டிருந்ததனை, எத்துணை பாங்காக வளரச் செய்து நமக்கு அளித்துளது கவனிந்தனையா! தன்னிடம் ஒப்படைக்கப்பட்ட 'விதை' கவரப்படாமலும், அழிக்கப்பட்டு விடாமலும் பாதுகாப்பு அளித்து, பிறகு முளைவிட்டபோது, வெளியே சென்றிட இடமளித்து, தான் பெற்ற குழந்தையை உலவ இடம் கொடுத்து, அதேபோது பாதுகாப்புக்காகத் தன் ஆடையால், குழவியை ஒரு குறிப்பிட்ட அளவு இடம் வரையில் மட்டுமே உலவிடத்தக்க விதமாகப் பிணைத்து வைக்கும் தாய்போல, செடியும் கொடியும் பயிரும் தன்னுள் இருந்து வெளிக்கிளம்பிட இடமளித்து, அதேபோது, வேர்களை இறுக்கிப் பிடித்துக்கொள்வதன் மூலம், நெடுவழியும் கெடுவழியும் போய்விடாதபடியும் தடுத்து வைத்திருக்கிறது.

இத்தனை பரிவு வழங்கும் நிலத்தைத்தான், பல்வேறு பொருள்களைப் பெற்றுப் பயன் துய்க்கும் மாந்தர், பெயர்க்கிறார்கள், பிளக்கிறார்கள், குடைகிறார்கள். அகழ்வாரை நிலம் தாங்கிக்கொள்கிறது.

என்னென்ன உதவிகள் செய்தேன் தெரியுமா இன்னாருக்கு என்று கூறிடத் தோன்றும்போதெல்லாம் தம்பி! நிலம் மாந்தர்க்கு வழங்கிடும் உதவியின் தன்மையை எண்ணி, அடக்க உணர்ச்சி பெறவேண்டும். நிலம் மாந்தர்க்கு வழங்கும்திறத்துடன் மாந்தர் ஒருவருக்கொருவர் கொடுத்துக் கொள்ளும் உதவிகளை ஒப்பிட்டுப் பார்க்கும்போது, நமக்கே, வெட்கமாக இருக்கும்.

என்னிடம் உதவி பெற்றுக்கொண்டு என்னையே இகழ்கிறான்—நான் எப்படி அதனைத் தாங்கிக்கொள்வேன் என்ற எண்ணம் எழும்போதெல்லாம், தம்பி! அகழ்வாரைத் தாங்கிக்கொள்ளும் நிலத்தை எண்ணி பொறையுடைமையைப் பூண்டிடல் வேண்டும்.

இத்தகு நற்கருத்துக்கள் பெற்றிடத்தக்க நாள், இத்தமிழர் திருநாள்.

நற்கருத்துகள் பலவும் நாம் பெற்றிடலாம் இந்நாளில்—அதுவும் அதற்காக ஏடெடுத்துப் படித்த பிறகு என்றுகூட இல்லை. நம்மைச் சுற்றியுள்ள நிலைமைகளை, நினைப்புகளை, பொருட் குவியலைக் கண்டாலே போதும், நான் சுட்டிக் காட்டிய கருத்துகள் உன் நெஞ்சிலே சுரக்கும்.

அதுசரி அண்ணா! பொங்கற் புதுநாளில் மகிழ்ச்சி பெறலாம், மாண்பு பெறலாம் என்கிறாய், ஒப்புக்கொள்கிறேன்—பொங்கற் புதுநாள், நாடு முழுதுக்கும் மகிழ்ச்சி தரத்தக்க நிலையினில் இன்று இல்லையே. அதனை மாற்றி அமைத்து மனைதொறும் மனைதொறும், மகிழ்ச்சி பொங்கிடத்தக்கதோர் சூழ்நிலையைக் காண வேண்டாமா—அதற்கு யாது செயல் வேண்டும் என்று கேட்கிறாய், புரிகிறது. என் பதிலும் உனக்குத் தெரியும்; நமது அரசு அமைதல்வேண்டும்; அதற்கும் அடிப்படையாக நமது நாடு நமது ஆகவேண்டும். அந்தக் குறிக்கோளின் அரவணைப்பிலே நாம் இருக்கிறோம். தம்பி! உனக்கும் எனக்கும் இடையே ஏற்பட்டுள்ள 'பாசப் பிணைப்புக்குக் காரணம் என்ன? நாம் ஏற்றுக்கொண்டு போற்றிவரும் குறிக்கோள்' திராவிடநாடு திராவிடர்க்கே எனும் இலட்சியம்.

எல்லோரும் இன்புற்றிருக்க வேண்டுமென்பதற்கே, திராவிடநாடு திராவிடருக்கே எனும் குறிக்கோள் கொண்டுள்ளோம் என்று கூறுகின்றீர், நோக்கம் சாலச் சிறந்தது, வழி தவறு; எல்லோரும் இன்புற்றிருக்க நாடு தனியாதல் வேண்டும் என்பதில்லை, திட்டமிட்டுப் பணியாற்றி, உற்பத்தியைப் பெருக்கினால், ஊர் தழைக்கும், உற்ற குறைகள் யாவும் நீக்கப்பெற்று எல்லோரும் வாழ்வர், என்ன கூறுகின்றீர் என்று கேட்கின்றனர் காங்கிரசார். தம்பி! அவர்கள் பேச்சினை நாகரிகமுள்ளதாக்கி நான் இதுபோல் எடுத்துரைத்தேன்.

எல்லோரும் இன்புற்று வாழ்ந்திடவே, எமது கட்சியினர் திட்டம் தீட்டுகின்றனர்—இரண்டு முடிந்தது, மூன்றாவது இன்று நடை பயிலக் காண்கின்றீர். இந்தத் திட்டங்கள், நாட்டு வாட்டம் போக்கிடவும், கேட்டினை நீக்கிடவும், வீட்டினிலே வாழ்வின் ஒளிவந்து பரவிடவும் ஏற்ற வழி காட்டிடும் காண் என்று பேசுகின்றனர்.

திட்டமிட்ட சீரமைப்பு என்பதனை தி. மு. கழகம் தேவையற்றது என்று கூறவில்லை. ஆயின், அது காட்டி, உரிமை வாழ்வு மறுத்திடுவது அறமாகாது என்று கூறுகிறது. சோளக் கொல்லைப் பொம்மை காக்கை கடுவனை விரண்டோடச் செய்திடக்கூடும், எனினும், வயலுக்குடையான் வரப்பருகே நின்று காத்து வளம் பெறுதற்கு அது ஈடாகாது. கார் கண்டதும் ஏர்மீது கண்பாயும் உழவனுக்கு! மாரி பெய்திடட்டும் என்றிருந்திடமாட்டான், பொய்த்திடின் என்னாகும் என்றெண்ணி, மார்பு உடையப் பாடுபட்டேனும், காலத்தில் நீர் பாய்ச்சிக் கடமையாற்றுகின்றான். இவை யாவும் தனக்கென உள்ள வயலில்!

திட்டங்கள், திருவிடம் அமைந்தால் தீய்ந்துபோய் விடுமோ! இல்லை! திட்டமிட்ட சீரமைப்பு அப்போதும் இருந்திடத்தான் வேண்டும்—எனவே, திட்டம்தனைக் காட்டித் திருவிட விடுதலை வேண்டுவதில்லை என உரைப்போர், பருகிடப் பால் கொடுத்துவிட்டுப் பசுவினைப் பறிப்பவர் போன்றாராவர்.

திட்டம் இரண்டு முடித்தோம் என்று, வழி நடந்த களைப்பாலே வியர்வையை வழித்தெடுத்துக் கீழே வீசி விட்டுப் பேசுவார்போல் உரைக்கின்றார் ஆட்சியாளர்— திட்டமிட்டதன் பலன், தேனாகி இனிக்கிறதா அல்லது பலனைத் தேடிக் கண்டறிய ஓர் முயற்சி நடக்கிறதா என்பதனை எண்ணிப்பார்த்தால் போதும், இவர் கூற்று எத்தகையது என்பதனை அறிந்திடலாம்.

> திட்டம் இரண்டு முடித்ததனால் செல்வம் வளர்ந்தது; எனினும் அச்செல்வம் எங்கு போய் ஒளிந்தது என எவர்க்கும் புரியவில்லை. எனவே, சென்று உசாவுங்கள், செல்வம் எங்கு உளது என்று.

இக்கருத்துடன் உரையாற்றி நேரு பெருமகனார், திட்டத்தால் கிடைத்திட்ட செல்வம் சமுதாயமெங்கும் பரவிக்கிடக்கிறதா, அல்லது சிலருடைய கரம் சிக்கிச் சீரழிந்துபோகிறதா என்பதனை ஆராய்ந்து அறிந்து கூறத் தனிக்குழுவை அமைத்துள்ளார். இஃது அவர் பொறுப்புணர்வுக்கு பொன்னான எடுத்துக் காட்டு எனப் புகழ்ந்துரைப்பர், காங்கிரசார். கூறட்டும் தவறில்லை. அதுபோன்றே, திட்டமிட்டு ஈட்டிய செல்வம் எங்கு சென்று ஒளிந்துளது என்று தேடிக் கண்டறிய வேண்டிய நிலை, யாது பாடம் தருகிறது? திட்டமிட்டது, செல்வம் வளரப் பயன்பட்டதுவே அல்லாமல், சீரான வளர்ச்சியை, எல்லோரும் பலன் காணும் முறையினைத் தரவில்லை.

கரும்பு கரம் எடுத்து, கேட்போருக்குத் தரமறுத்து, தனியே ஓரிடத்தில் ஒளித்து வைத்துவிட்டவர்கள், தாமும் அஃதுண்ண நேரம் கிடைக்காமல் வேறுவேறு அலுவலிலே ஈடுபட்டுக் காலம் கடந்தபின்னர், கரும்பதனைத் தேடும்கால், கட்டெறும்புக் கூட்டம் அதனை மொய்த்துக் கிடப்பதனைக் காண்பர்.

இன்று கரும்பு எங்கே? கட்டெறும்புக் கூட்டத்திடம் சிக்கிற்றோ, கண்டறிவீர் என்று பண்டிதர் குழு அமைத்தார்; திட்டத்தின் பலன், மக்கட்கு வந்து சேரவில்லை என்பதற்குச் சான்று இதுபோதும், பல தேடி அலைவானேன்.

ஆங்கில அரசு இங்கிருந்து அகன்றபோது, இருப்பாகப் பல வகையில் விட்டுச்சென்ற தொகை 1,179,74,00,000 ரூபாய்கள் என்கின்றார். இவ்வளவும் வீணாகிப்போனதென விம்முகிறார் நிலை அறிந்தோர், நேர்மையாளர்.

வாழை, உண்பதற்கு, வழித்தெடுத்துக் கூழாக்கி வண்ணத்தாள் ஒட்டுதற்கா?

கரும்பு சாறுபெற, அடிப்பிலிட்டு எரிப்பதற்கா?

சந்தனம் மார்புக்கு; சாணம்போல் வீடு மெழுகுதற்கா?

எதெதனை எம்முறையில் பயன்படுத்திக்கொள்கிறோமோ அதைப் பொறுத்து, அப்பொருளினால் நாம் அடைகின்றோம் முழுப்பலனும்; கூரைக்குக் கழியாக வேய்ந்திடவா, கரும்பு! வேய்ந்திடின் கரும்பினால் காணத்தக்க பலனை நாம் இழந்து, கவைக்குதவாக் காரியத்துக்கு அதனைப் பயன்படுத்திக்கொண்டதனால் பாழாக்கி விட்டோம் என்பதன்றோ பொருள்.

அம்முறையில் வெள்ளையர் விட்டுச்சென்ற கிட்டத்தட்ட 1200 கோடி ரூபாயும், பசையாகிப் பாழ்பட்ட வாழையென, கழியாகிப் பயன் இழந்த கரும்பென, ஆகாவழிகளுக்குச் செலவாகிப் பாழாகிப் போயிற்று. இஃதொன்று போதும் கணக்கறிந்து வாக்களிக்கும் நிலைபெற்ற நாடுகளில், இன்றுள்ள ஆட்சியினை ஏற்கோம் என்று கூறிவிரட்டுதற்கு.

இருப்பு இதுபோல இல்லாது போயிற்று. இது மட்டுமன்று. நாளுக்கு நாள் வரிகள் ஏறி, தொகை வளர்ந்து கேட்டிடும்போதே 'மலைப்பு' மூட்டிடும் நிலை உளது. சென்ற ஆண்டு டில்லிப் பேரரசுபெற்ற வருவாய் கிட்டத்தட்ட ஆயிரம் கோடி ரூபாய்; தமிழ்நாடு அரசு, கிட்டத்தட்ட நூறு கோடி ரூபாய்.

இதில், பெரும்பகுதி, ஏழை எளியோர்கள், நடுத்தரத்தினர் கொட்டிக் கொடுத்திட்ட, மறைமுக வரியாகும்.

கலால் வரி, சுங்க வரி என்பவைகள் வளர்ந்துள்ள வகை அறிந்தால், வாய் வீச்சில் வல்லவராம் காங்கிரஸ் பேச்சாளர்கூடச், சிந்தை நொந்திடும் நிலை பெறுவார், வெளியே காட்டமாட்டார்.

**கலால்வரி**

| | |
|---|---|
| 1946—47 | 43·03 கோடி ரூபாய் |
| 1948—49 | 50·65 ,, |
| 1950—51 | 67·54 ,, |
| 1952—53 | 83·03 ,, |
| 1954—55 | 103.65 ,, |
| 1955—56 | 132·27 ,, |

இவ்விதம் ஏறிக்கொண்டே போகிறது. கணக்கு முழுதும் காட்டிக் கலங்கிடச் செய்வானேன்! பண்டங்கள் செய்கையிலே, கைமாறி வருகையிலே, இன்னபிற வழிமூலம் பெறுகின்றார் பெருந்தொகையாய், காலால் வரி.

**சுங்கவரி**

| | |
|---|---|
| 1946—47 | 89·22 கோடி |
| 1948—49 | 126·16 ,, |
| 1950—51 | 157·15 ,, |
| 1951—52 | 231·69 ,, |

இப்படி இந்தத்துறை வரியும் ஏறுமுகம் காண்கின்றோம். பெரும்பொருள் வரிமூலம் பெற்றிடுதல், அரசு நடாத்தத் தேவைப்படுகிறது, வரியின்றி அரசாளல் ஆகாது என்று ஆட்சியாளர் அறைகின்றார்! வரியின்றி அரசாள இயலாது; உண்மை; மறுப்பார் இல்லை; ஆயின் வசதிபெருக்கிட வரியன்றி வேறோர் வகைஇல்லை என்பரோ? கூறுவர், வன்னெஞ்சக்காரர். ஆனால் ஏழைமுகம் காணும் இரக்க மனமுள்ளோர் இதுபோல் கூறார். வரிக்காகவே வரிந்துகட்டி நின்றிடவும், வல்லடிக்கு வரவும் வலிவுபெற்றுக்காட்டும் பேரரசு, வருவாய்த்துறை அனைத்தும் 'பெரும்புள்ளிகள்' இடம் விட்டுவிட்டு, இருக்கின்றார்; அப்போக்கினை மாற்றி, வருவாய் தரத்தக்க தொழிலெல்லாம் நடத்தி, பொருள்ஈட்டி மக்கள் முதுகெலும்புதனை முறிக்கும் வரிச் சுமையைக் குறைத்திடுதலே அறிநெறியாகுமென்பார். மறுத்திடுவார், உண்டா!! பெரும் தொகையை வரியாகப் பெற்று, மக்களை வறுமையிலே உழலவிட்டு, வரித்தொகையைச் செலவு செய்யும் வகையேனும், வாட்டம் போக்குவதாய், வளம் காண உதவுவதாய் உளதா? இல்லை என உரைக்கும், இவராட்சிக் காலத்தில் ஏறியபடி உள்ள படைச் செலவு கணக்கெடுத்தால்,

### பாதுகாப்புச் (இராணுவ) செலவு

| | | |
|---|---|---|
| 1957—58 | 279·65 | ,, |
| 1958—59 | 278·81 | ,, |
| 1959—60 | 280·18 | ,, |
| 1960—61 | 310·00 | ,, |

இந்த நிலையினிலே, பெரும் பொருள் செலவாகி வருகிறது; தொகை வளர்ந்தபடி உளது. தம்பி! பாதுகாப்புத் துறைக்கு இத்துணைப் பெரும் பொருள் செலவிடுவது காந்திய போதனைக்கும், பஞ்சசீல உபதேசத்துக்கும் பொருந்துவதாக இல்லைஎன்பது ஒருபுறமிருக்க, இந்தத் துறைக்குச் செலவாகும் இத்துணை பெரும் பொருளும், போட்ட முதல் மூலம், வருவாய் பெருகிடுவதாக அமையாது. கோழிக்குத் தீனியிடல், முட்டை பெற உதவும், காக்கைக்குத் தீனியிட்டுக் காணும் பலன் உண்டோ? விளை நிலத்துக்கு நீர்பாய்ச்சிடுதல், வேண்டும் பொருள்பெற உதவும், கற்பாறை மீதினிலே நாளெல்லாம் நீர்பாய்ச்சிக் கண்டெடுக்கப்போவதென்ன?

இருப்பு இலாதுபோய், மக்கள் இடுப்பு முறிய வரி போட்டுத் திரட்டியதில் பெரும்பகுதி பட்டாளச் செலவுக்காக்கி, வருவாய்பெறும் தொழில் நடாத்தும் வழி அடைத்துவிடுவதுடன், தீட்டியுள்ள திட்டங்கள் நடைபெற்றுத் தீரவேண்டும் என்பதற்காக, வெளி நாடுகளிலே பெற்றுள்ள கடன் தொகை (ஈராண்டுக்கு முன்புவரை)

4971 கோடி என்று கணக்களிக்கின்றார், அறிந்தோர். கைபிசைந்தவண்ணம் கூறுகின்றார் 1960-61ம் ஆண்டு மட்டும், வாங்கியுள்ள கடனுக்குச் செலுத்த வேண்டிய வட்டித்தொகை, 143 கோடி என்பதாக!

இருப்புக் கரைந்தது, வரி வளர்ந்தது, கடன்சுமை ஏறிற்று — இவ்வையாவும்கூடப் பொறுத்துக்கொள்ளலாம்—சுடுமணல் வழிகடந்தால், சோலைபோய்ச் சேர்ந்திடலாம் எனும் உறுதி உண்மை எனில். அஃது உண்டா? இருபெரும் திட்டங்கள் முடிந்தான பிறகும், சோலை ஏழைக்கில்லை, சுடுமணலே அவனுக்காக என்ற நிலையே நீடித்து இருக்கிறது, நிலைத்துவிட்டிருக்கிறது.

> ஐந்தே அணு நாள்கூலி பெற்று அல்லற்படுவோர் 6 கோடி. நாலணு பெற்று நலிவுற்றுக் கிடப்போர் நாலு கோடி, இரண்டணு பெற்று ஏங்கிக்கிடப்போர் இரண்டு கோடி.

என்று இவ்விதமாக, ஆட்சிப் பொறுப்பினரும், ஆராய்ச்சி நிபுணர்களும் அளித்து வரும் கணக்கேடு காட்டுகிறது.

என்ன பலன் கண்டோம் இருதிட்டவெற்றியினுல்? எரிச்சல்கொள்ளாது, ஏழையை இகழாது, எடுத்தேன் கவிழ்த்தேன் எனும் போக்குக் காட்டாது, எண்ணிப் பார்த்து இதற்கு ஏற்ற விடை அளித்திடும் அன்பர் உண்டோ, தேடிடுவீர்!

திட்டம் தெளிவற்று, அக்கரை துளியுமற்று, அடி பணியும் செல்வர்தமை ஆனமட்டும் தூக்கிவிட்டு, ஆட்சி நடத்துகிறார் ஆங்கிலர் என்றுரைத்தோம். அவர் ஆட்சி அகற்றிவிட்டோம், ஆளத் தொடங்கி ஆண்டு பதினைந்தாகிறது. இன்று, முதலாளிகள் முகாமில், கேட்பதென்ன குரல்? இன்று அவர் கோட்டை இடித்திட்டோம் எனக் காட்ட முன்வருவாரா? எங்ஙனம் இது இயலும்? கணக்குக் கேளீர்.

> வெள்ளையராட்சி இங்கு இருந்தபோது இலாபம் பெற்றிட முதலாளிகள் தொழில் நடத்த, மூலதனம் போட்டிருந்தார்; தொகை அன்று 700 கோடி எனக் கணக்குண்டு.

> இன்று முதலாளிகளின் முகாம், அழித்து யாம் ஏழையரை ஏற்றம்பெறச் செய்ய வந்தோம் என முழக்கமெழுப்பி அரசாள்கின்றார், காங்கிரசார். வெள்ளையர் நாட்களிலே முதலாளி மூலதனம் 700 கோடி எனில், இந்தப் பதினைந்து ஆண்டுகளில், இது எந்த அளவு குறைந்துளது? கணக்குக் காட்டுவரா காங்கிரசார்!

காட்ட மாட்டார். அவர் காட்டும் கணக்கெல்லாம் உரக்கூடை, பொலிகாளை!

இன்று இவர் ஆட்சியிலே முதலாளிமார்கள் தொழில் நடத்தப் போட்டுள்ள மூலதனம் 1900 கோடி ரூபாயாகும்.

வெள்ளையர் ஆட்சிக் காலத்தைவிட இன்று முதலாளித்துவ முறை ஏறக்குறைய மும்மடங்கு வளர்ந்துளது; கொழுத்துளது.

இதற்கோ திட்டம்? ஏழைகளைக் காப்பதற்கே எமது திட்டம் என்றனரே, நிறைவேற்றிக் காட்டினரா? இன்னமும் கேள், தம்பி! இலாபம்தன்னைக் காண முதலாளிகள் நடாத்தும் தொழில்களுக்கு, சலுகைகள், கடன் தொகைகள், சன்மானம் என்பவைகள் இவர்கள் கொடுத்துள்ளார்-கஞ்சிக்குத் தாய்கதற, கைப்பொருளை அதற்குத் தந்திடாமல், ஆவின்பால் வாங்கி அரவுக்கு ஊற்றுவான்போல், வீடில்லை மாடில்லை, என்று ஏழை கதறுகையில், இலாபக் கோட்டை கட்டும் முதலாளிகள் மகிழ, காங்கிரஸ் ஆட்சியினர் தந்த தொகை 590 கோடி ரூபாய்! அறம் இதுவா?

இலாபம் தரும் தொழிலெல்லாம் ஏன் நடத்தக் கூடாது என்று நாம் அரசு நடத்துவோரைக் கேட்கும் போது, என்ன பதில் கூறுகின்றார். இதற்கெல்லாம் 'முதல்' போடப் பணத்தைச் செலவிட்டுவிட்டால், மற்றப் பல செயல்கள் நடவாதே என்கின்றார்.

இலாபம் தரும் தொழில் நடத்தப் பணம் இல்லை என்று கூறும் இவர், சுறண்டல் நடாத்தும் அந்தச் சுகபோகிக் கூட்டமாம் முதலாளிமார்களுக்கு அள்ளிக் கொடுத்த தொகை கிட்டத்தட்ட அறுநூறு கோடி ரூபாய்!

அந்தப் பெருந்தொகையை முதலாளிகட்கு அளித்திடாமல், இவரே தொழில் நடத்தப் போட்டிருந்தால், இன்று செல்வர்களைக் கொழுத்திடவைக்கும் இலாபம் மக்களுக்கன்றோ கிடைத்திருக்கும். நடத்துவது மக்களாட்சி என நவில்கின்றார் நேர்த்தியாக! சமதர்மம் மேற்கொண்டோம் என்று சமர்த்தாகப் பேசுகின்றார். சமதர்மம் காணும் முறையா அறுநூறு கோடி ரூபாயை அள்ளி முதலாளிகளுக்கு அளித்திடுவது! அறிவற்றோம் துணிவற்றோம் என்று நமை எண்ணுகின்றார், அப்பட்டமான பொய்யை அவிழ்த்துக் கொட்டுகின்றார்.

ஒரு சேதி கேள் தம்பி! இந்திய துணைக்கண்டமதில், இரு குடும்பங்கள் மட்டும், தொழிலுலகில் பெற்றுள்ள ஆதிக்கத்தின் அளவு கூறுகின்றேன். இரு குடும்பங்களிடம் மட்டும் பெருந்தொழில்கள் 400 சிக்கிக் கிடக்கின்றன!

இத்தனை தொழில்கள் இரு குடும்பத்திடம் இருந்தால், இவை தம்மில் கிடைத்திடும் இலாபம் அவ்வளவும் இரு குடும்பத்துக்கன்றோ சென்று அடைபட்டு விடும்! இரு குடும்பம் மட்டும் இத்தனை தொழில் நடத்தி இலாபம் ஈட்டிக்கொண்டால், செல்வம் பரவுவது ஏது, செழுமையை மக்கள் காண்பது எங்ஙனம்!

அதனால்தான், ஐந்தணாவும் நாலணாவும், இரண்டே அணாக்களும் நாளெல்லாம் பாடுபட்டுப் பெறுவோர்கள் பலகோடி உளர்!

இத்தனை கோடி மக்கள் இடர்ப்பாட்டில் இருக்கையிலே மொத்தமாய் வளர்ச்சி பெற்றோம் திட்டம் நிறைவேற்றி என்று செப்புவது சரியாமோ! சிந்திக்கச் சொல், தம்பி! சீற்றம் விட்டொழித்து.

இரு குடும்பம் தம்மிடம் இறுக்கிப் பிடித்துள்ள பெருந்தொழில்கள் நடாத்தப் போட்டுள்ள மூலதனம், எவ்வளவு தொகை என்பதனைக் கேட்டிடுவாய்—500 கோடி ரூபாய்! ஆங்கில ஆட்சியது அக்ரம ஆட்சியாகும்; கொள்ளை அடிப்போரைக் கொழுக்க வைக்கும் கொடிய ஆட்சியாகும் என இடி முழக்கம் எழுப்பினரே! இவராளத் தொடங்கியபின், இந்நிலையில் முதலாளி, கோட்டை அமைத்துக்கொண்டு, கொடிகட்டி ஆள்கின்றான்! கேட்பார் உண்டா? கேட்பது, நீயும் நானும்! நாட்டவர்க்கும் இது தெரியவேண்டாமோ? தெரிவிப்பாய், தெளிவளிப்பாய்.

தனிப்பட்டோர் கொழுத்து வாழத் தொழில் நடத்த விட்டுவிடல், ஏன் என்று கேட்டுப்பார்—பதிலா வரும்—செச்சே! பதறிடுவர், பகைத்திடுவர், பழித்திடுவர், பதிலளித்திட முன் வாரார்!!

தொழில் நடத்தி இலாபம் குவித்திட, முதலாளிகளுக்கு இடம் கொடுத்திட்டால், அவர் சுறண்டும் தொகையினிலே, காங்கிரஸ் பெருந்தொகை தேர்தல் நிதியாகப் பெற்றிட வழி உளது; அரிமாவின் பின் நடந்தால் சிறுதுண்டு கிடைக்கிறதே, சிறு நரிக்கு, அஃதே போல்! பிர்லா எனும் பெரிய முதலாளியிடம் உள்ள பல தொழிலிலே ஒன்று, மோட்டார் தொழிலாகும்; இந்துஸ்தான் மோட்டார் என்பததன் பெயராகும். இந்த அமைப்புமட்டும் காங்கிரஸ் தேர்தல் நிதிக்காகக் கொடுத்த தொகை எவ்வளவு? மூர்ச்சையாகிப் போகாதே, தம்பி! பிர்லா தொழிலமைப்புத் தந்ததொகை இருபது இலட்சம்!!

இருபது இலட்சம் ரூபாய் நன்கொடையை எளிதாகக்கொடுத்திட, பிர்லாவின் மனம் இடங்கொடுத்தது எதனாலே? காங்கிரஸ் கட்சியது நாடாள்வதாலேதான்,

தொழில் நடத்திப் பொருள் திரட்டப் பிர்லாவும் பிறரும் வாய்ப்புப் பெறுகின்றார். சுறண்டிக்கொள்ள உரிமை, காங்கிரஸ் அரசு தந்திடும்போது, ஈடுசெய்யவேண் டாமோ! செய்கின்றார்! ஒரு தொழில் அமைப்புமூலம் மட்டும் இருபது இலட்சரூபாய். பெருந்தொகை என் பாய் தம்பி! நமக்கு அது, எண்ணிப் பார்த்திடக்கூட இயலாத தொகையாகும்; ஆனால் அவர்தந்த தொகை யினைப் பிர்லா பெற்ற இலாபத்துடன் ஒப்பிட்டுபார்த்தால் தான், உண்மைநிலை புரியும்.

பிர்லாவின் மோட்டார் தொழிலில், 1960-ம் ஆண்டு கிடைத்துள்ள இலாபம்,

**2,85,71,127**

ஆகும். இத்தனை பெரிய இலாபம்கிடைத்தது எவராலே? எவர் இவர்க்கு இந்தத் தொழிலை நடத்துதற்குத் துணை நிற்கின்றாரோ, அவராலே! அவர் காங்கிரஸ் அரசு நடாத்துபவர்! எனவே, அடித்தகொள்ளையில் ஒரு பகுதி யைக் காங்கிரசுக்கு அளிக்கின்றார், செல்வம் பெற்றோர்.

கூட்டுச்சதி என்பதன்றி வேறென்ன இதற்குப் பெயர்?

'ஏழையைக் காட்டிக் கொடுப்பது என்பதன்றி, இதற்கென்ன வேறு பெயரிடுவீர்!

எத்துணை துணிவிருந்தால் இச்செயலில் ஈடுபட்டு, எமதாட்சிக்கு உள்ள குறிக்கோள், சமதர்மம் என்றும் கூறுவர்!

வழிப்பறி நடத்துபவன், 'கனம் குறைத்தேன்' என் பதுபோல், பேசுகின்றார்; கேட்டு மக்கள் திகைக் கின்றார்.

தேபர் என்பார் உனக்குத் தெரிந்திருக்கும்—ஊரார் மறந்திருப்பார்—ஓராண்டு காங்கிரசுக் கட்சிக்குத் தலைவ ராய் இவர் இருந்தார். இவர் கணக்கும், நான் கூறும் கருத்தினையே வலியுறுத்திக் காட்டுகிறது.

மொத்தமாய்க் கணக்கெடுத்தால், நாட்டில் ஒரு வருக்குச் சராசரி வருவாய். 306-ரூபாய்! எனினும், கிரா மத்தார் வருமானம் இந்தக் கணக்கு முறைப்படியே பார்த்திடினும், 95-ரூபாய்தான்! ஏன் இந்த அவலநிலை? இன்னும் கிராமத்தில் உள்ளோரே, பெரும்பாலோர். அவ ரெல்லாம், மிகக் குறைந்த வருவாய்தான் பெறுகின்றார். திட்டமிட்டு என்ன கண்டோம் ?

இங்கிலையில் இருக்கிறது இவர் போடும்திட்டம்! இதைக்காட்டி, 'இன்பத் திராவிடத்தை' ஏன் கேட்டு அலைகின்றீர், நாடு பூங்காவாக நாங்களாக்கிக்காட்டு கின்றோம் என்று நீட்டி முழக்குகின்றார்—அவர்பேச்சை நெட்டுருப்போட்டவர்கள், நாட்டைக் கலக்குகின்றார் நாராச நடைகலந்து.

தூற்றிடுவோர் தொகையதுவும் வகையும் வளர்ந் திடினும், தூய நம் கருத்துத் துவண்டுவிடப்போவதில்லை; ஆர்வம் கொழுந்துவிட்டெரிகிறது. எவர் என்ன ஏசி னாலும், எதிர்ப்புப் பல மூட்டிடினும் எடுத்த செயலதனை முடித்திடும் முயற்சிக்கே மூச்சு இருக்குதென்ற, உறுதி கொண்டோர் தொகையும் நாளுக்கு நாள் வளர்ந்தபடி உள்ளது காண்!

ஆனால் தம்பி! நமது உறுதி உரத்த குரலால், தடித்த சொற்களால், எடுத்தேன் கவிழ்த்தேன் என்ற பேச்சால், வெளிப்படுத்த நினைப்பது தவறு; தீது; நெடு நாள் நிலைக்காது. 'வேகம்' வேகமாக வளரும்; ஒரு சிறு ஐயப்பாடு, அல்லது அச்சம் அல்லது சலிப்பு அல்லது சபலம் ஏற்பட்டால் போதும், மிக வேகமாக வீழ்ந்து விடும், அல்லது வேறு திக்குத் தாவும்! எனவே, உறுதிக் கழகு உறுமுதல் என்றோ, வீரத்துக்கழகு காரமாய்ப்பேசு தல் என்றோ, தவறான தத்துவம் கொள்ளக்கூடாது. அவ்விதம் 'வேகம்—காரம்—சூடு—மிக அதிகம் கலந்து, திராவிடநாடு குறித்துப் பேசியோர், பிறகோர் நாள், நிலைகுலைந்து நினைப்பு அழிந்து, அடியற்ற நெடும் பனையாகிப் போயினர், கண்டோம்.

குறிக்கோள் மறுத்திடுவோர் கடுமொழியால் நம்மைத் தாக்கிடினும், தாங்கிக்கொள், தம்பி! என நான் கூறிவரும் இயல்புடையோன்—கூறுவதுமட்டுமன்று, நான் தாங்கிக்கொள்கின்றேன். அந்தோ, இப்போக்கு, நம்மைக் கோழைகளாக்கிவிடும். ஏன் இந்த அண்ணன் இதுபோல் பயம்கொண்டு பேசுகிறான் தூற்றுவோர் தமைத் துதிபாடி அடக்குவதோ! வெட்டுக்கு வெட்டு என்னும் வீரம்கொள்ள வேண்டாமோ! இன்று மாலை வாரீர், என் முழக்கம் கேட்டிடலாம், நான் சாடும் வேகம் கண்டு, சரியுது பார் எதிர்ப்பெல்லாம், அமைச்சர்களைத் துச்சமென்று அடித்துப் பேசினால்தான், அடங்குவர் மாற்றார்கள்; எழுச்சிகொள்வார் நம் தோழர். இந்த முறைதான் நாம் இனிமேற்கொள்ள வேண்டுமென்று சங்கநாதம் செய்த சிங்கங்கள் இன்று எங்கே? நம்மோடு இல்லை!! வேகம் விறுவிறுப்புப் போனவிதம் தானென்ன! அறிவு மேம்பாட்டால் அமைதி அரசோச்சுது என்றும், நாகரிகம் முற்றியதால் நாவடக்கம் பெற்றோம் என்றும் இன்று அவர் பேசுகின்றார். பணிவும் குழைவுமன்றோ பண்பாகும் என்கின்றார்.

படபடத்த பேச்சு நம் பாங்கான வளர்ச்சியினைப் பாழாக்கும் என்று 'பாடம்' புகட்டுகின்றார்.

இந்த மாறுதல், இத்துணை விரைவாக இவர்க்கு வரக் காரணம் என்ன? உள்நோக்கம் நான் அறியேன், எனினும் ஒன்று புரிகிறது, வேகமாகப் பேசினரே, அப்

போதே, உறுதி இருந்ததில்லை, உரத்த குரல் மட்டுந்தான் அவர் உடைமை! என்று தெரிகிறது. நான் சொன்னேன் அன்றே, அடக்கம் அழுத்தத்தின் விளைவு, ஆர்ப்பரிப்பு அஃதன்று என்று, என் சொல்லை நம்பாமல், எதிரியைத் திக்கு முக்காடச் செய்யும் தீப்பொறிப் பேச்சினரை தீரமிகக் கொண்டவர்கள், மாற்றுரைத் தீர்த்துக்கட்டிவிடுவார்கள் என்று பலரும் எதிர்பார்த்திருந்தார்; ஏமாற்றம்தான் கண்டார்.

**"அரசியலில் ஒதியமரம்போல் இருக்கும் காமராசரின் தைரியத்தை நாம் அறிவோம். இப்படிப் பட்டவர்களிடத்தில்தான் நாங்கள் பயப்பட வேண்டுமென்று எதிர்பார்க்கிறார்கள். கோழிக் குஞ்சு மனம் படைத்தவரிடத்தில் நாம் அடங்கி நடக்க வேண்டுமென்று எதிர்பார்க்கிறார்கள்."**

**காமராசர் ஓதியமரம்! அவருக்கு இருப்பது கோழிக் குஞ்சு மனம்!!**

இத்துணை கேவலமாய்ப் பேசியவர், இன்று என்ன கோலம்கொண்டுவிட்டார்? நாடறியும்!

இவ்வளவு வேகமாகப் பேசியவர்கள் வேறுபாதை சென்றனர்; அதே வேகம் அங்கேயும்! ஆக அவர்கட்கு உள்ள குணமும் தெரிந்த வித்தையும், வேகம்! மிக வேகம்! மிகமிக வேகம்!—இவ்வளவே என்பது புரிகிறதல்லவா?

ஆகவே தம்பி! காரணமற்ற வேகம்வேண்டாம்—அன்னையைக்கேள், பக்குவமாகப் பண்டம் வெந்துவிட்டது என்றால், கொதிக்கும் சத்தம் குறைந்துவிடும். அதுபோன்றே கொள்கைப்பிடித்தம் நல்லமுறையிலே ஏற்பட்டுவிட்டால், வீணனவேகம் எழாது. சிறிதளவு அழுகிய பழத்தைக் கண்டிருக்கிறாயா—மேலே கசியும். சுவையில் புளிப்பேறிவிட்டது, பக்குவம் கெட்டுவிட்டது என்பது பொருள். கரும்பு, அப்படித்தெரியவில்லை, பார்த்தனையா, தம்பி! அடக்கமாக இருக்கிறது, எவ்வளவோ சுவையைத் தன்னுள் அடக்கிவைத்துக்கொண்டு.

கொள்கையில் நமக்குப் பிடிப்பு இருக்கிறது என்பதைக் காட்டிக்கொள்வதற்காக, கனல் கக்குவது, எக்காரணம் கொண்டோ அக்கொள்கையிலே ஐயப்பாடு ஏற்பட்டுவிட்டால், உடனே காரிஉமிழ்வது, இரண்டுமே, மனம் பக்குவப்படாத நிலையைத்தான் காட்டுகிறது. அது கூடாது, தம்பி! நம் நாவிலிருந்து எதுவந்தாலும் நாடு ஏற்றுக்கொள்ளும், அல்லது அதை ஏற்றுக்கொள்ளக்கூடிய சிலரை நாட்டிலே தேடிப் பிடித்துக்கொள்ளலாம், என்ற நினைப்பு எழலாகாது.

அது எந்தவிதமான 'புத்தி' என்று என்னைக் கேட்காதே, தம்பி! எனக்கு வேறோர் வகையான புத்தி பற்றிய குறிப்புத் தெரியும், அதை வேண்டுமானால் கூறுகிறேன்.

திராவிடநாடு திராவிடருக்கே எனும் நமது குறிக்கோளில் நம்பிக்கை இருப்பதை நாடறியச் செய்ய வேண்டும் என்பதுடன், அந்தக் கருத்தை மறுப்போரை நையப் புடைக்கவேண்டும் நாவினால் என்ற நினைப்பு ஆதிக்கம் செலுத்தி வந்த நேரத்தில், காங்கிரஸ் அமைச்சர்கள், நமது கொள்கையை இழித்தும் பழித்தும் பேசிவரக் கேட்டு நான் வருத்தப்பட்டுக்கொண்டேன், அமைச்சர்கள் ஒப்புக்கொள்ளக்கூடிய விதமாகக் கொள்கையை விளக்க நமக்குப் போதுமான திறமை இன்னமும் வளரவில்லைபோலும் என்று எண்ணிக்கொண்டிருந்திருப்பேனே தவிர, அமைச்சர்களை ஒதியமரம் என்று தடித்த வார்த்தை கொண்டு ஏச மனம் வந்ததில்லை. அப்படிப்பட்ட வார்த்தைகளைப் பேசி என் நாவினையும் நான் அசிங்கப்படுத்திக் கொண்டதில்லை, கேட்பவர்கள் காதிலே நாராசம் பாயும்படியும் நடந்துகொண்டதில்லை.

எனவே, நமது கொள்கைகளை ஏற்றுக்கொள்ள மறுத்த அமைச்சர்களுக்கு இருக்கும் புத்தி எந்த விதமான புத்தி என்ற ஆராய்ச்சியில் ஈடுபட்டுக் கடுமொழியால் தாக்கினதில்லை.

வள்ளுவப் பெருந்தகை கூறினர் அல்லவா, கனியிருக்கக் காய் கவர்தல் கூடாது என்று; அம்மொழி வழி நான் நின்று வந்திருக்கிறேன். ஆனால், இன்று 'திராவிட நாடு' கொள்கை தீது, ஆகாது என்ற கருத்தினைக் கொண்டுவிட்டவர்கள், 'திராவிடநாடு' ஆதரவாளர்களாக இருந்தகாலை, திராவிடநாடு கூடாது என்று கூறிய அமைச்சர்களின் 'புத்தி' எப்படிப்பட்டது என்பதை வீரதீரம்—காரம்—கலந்து பேசுவதாக எண்ணிக்கொண்டு, எடுத்துரைத்தனர். என்னவிதமான புத்தி இருக்கிறது அமைச்சர்களுக்கு தெரியுமா, தம்பி! தம்பியாக இருந்துகொண்டு பேசிவிட்டுச்சென்றவர்கள், இன்று மறந்துவிட்டிருப்பார்கள்; நான் எப்படி மறக்க முடியும், அதனால் அதைக் கூறுகிறேன். அமைச்சர்களுக்கு இருப்பது,

"திருவோட்டுப் புத்தி"

விளக்கம் கேட்கிறாயா? அவர்களே தந்தனர், அதனைத் தருகிறேன்:

திராவிடம் பிரிந்தால் பொருளாதாரத்துக்கு என்ன செய்வீர்கள் என்று அவர்கள் கேட்டு நம்மைத் திகைக்கவைக்க நினைக்கிறார்கள். பொறுப்பான பதவியில் இருப்பவர்களுக்குப் பொருளா

தாரத்தின் அடிப்படைகூடத் தெரியவில்லையே, ஐயகோ! அவர்களின் கதி என்ன கதியோ என்று வருத்தப்படுவதைத் தவிர, அவர்களுக்குப் பதில் சொல்லத் தயாராக இல்லை.

இங்குள்ள ஆந்திர கேரள கருநாடக தமிழ் மாநிலங்களிலிருந்து வரிப்பணம் டெல்லிக்குப் போகிறது. இது அவர்களுக்குத் தெரியும். டெல்லியிலிருந்து எவ்வளவு பணம் இங்கு திரும்புகிறது என்பதும் அவர்களுக்குத் தெரியும். எப்போதாவது சுயமரியாதை உணர்ச்சி பிறிட்டு வரும் போது, அவர்களே டெல்லியைப் பார்த்துக் கேட்கிறார்கள்—பணம் ஒதுக்கியது குறைவு என்று. அடுத்த கணமே டெல்லிக்குத் தாசராகிவிடுகின்றனர்.

வாங்கி வாங்கிச் செலவிட்டுப் பழக்கப்பட்டவர்கள், பெருந்தனம் கிடைத்தால், மேலும் வாங்கத்தான் எண்ணுவார்கள். பிச்சை எடுத்துப் பழக்கப்பட்டவன் வாழ்நாள் முழுவதும் பிச்சை எடுக்கும் எண்ணத்தை விடமாட்டான். பிச்சைக்காரன் ஒருவனுக்குத் திடீரென்று ஆயிரம் ரூபாய் புதையல் கிடைத்ததாம்; அதைக்கொண்டு அவன் தங்கத்தாலான **திருவோடு** வாங்கினனும். ஆயிரம் ரூபாய் கிடைத்தாலும் அவனுடைய **திருவோட்டுப் புத்தி** அவனை விட்டுப்போகவில்லை. அதுபோல இங்குள்ள காங்கிரஸ் அமைச்சர்களுக்குத் திருவோட்டுப் புத்திதான் இன்னமும் இருக்கிறது. (31—10—59)

இவ்வளவு வேகமாகப் பேசியவர்கள் பிறகு என்ன ஆனார்கள்? திராவிட நாடாவது மண்ணாங்கட்டியாவது, அதைக் கேட்பவர்களை ஒழித்துக்கட்டாமல் விடமாட்டேன் என்கிறார்கள்; அதைக் கேட்கும் காங்கிரஸ்காரர்கள், தமக்கு, முன்பு கிடைத்த!

ஒதியமரம்
திருவோட்டுப்புத்தி

போன்ற அர்ச்சனைகளை மறந்துவிட்டு, அந்த அடியைத் துடைத்துக்கொண்டு, திராவிடநாடு கேட்பவர்களை ஒழித்துக் கட்டுவதாக முழக்கமிடுவோரைக் கட்டித் தழுவி, அப்படிச் சொல்லடா என் சிங்கக்குட்டி! என்று பாராட்டுகிறார்கள்.

இந்தப் புத்தி என்னவகையோ, எனக்கென்ன புரிகிறது.

தம்பி! வண்டி ஒன்று நாம் வாடகைக்குவிட வைத்திருந்தால், அதிலே, அவ்வப்போது கிடைக்கும் சரக்குகளை ஏற்றிக்கொண்டு போகமாட்டோமா? ஒரு சமயம் அந்த வண்டியிலே கற்பூரம் இருக்கும், பிறிதோர் சமயம் கருவாடு இருக்கும்! கற்பூரம் இருந்த இடத்திலா, கருவாடு என்று யோசித்தால், வண்டிக்கு வாடகை கிடைக்குமா! நா வாணிபம் நடாத்துவோர், இதே போக்கினரே! வேகமாகப் பேசுவேன், திரமாகத் தாக்குவேன், எதைப் பேசினாலும் சரி! என்று கூறுகின்றனர்.

நாம் 'திராவிட நாடு' குறித்துப் பேசுவது, நமது ஆழ்ந்த நம்பிக்கையைக் காட்டுவதாக இருக்கவேண்டுமேயன்றி, நமது நாவினால் எப்படியெல்லாம் சுடமுடியும் என்பதைக் காட்ட அல்ல!

எனவே, தம்பி! உனக்குக் கொள்கைப் பிடிப்பும், நம்பிக்கையும், ஆர்வமும் இருக்கட்டும், அதேபோது அதைக் காட்டக் கடுமொழியும் இழிமொழியும் பேச வேண்டும் என்று எண்ணற்க!

அதுபோலவே, முன்பு திராவிட நாடு குறிக்கோளை ஆதரித்தவர்கள், இன்று அக்கொள்கையையும் குறிக்கோளைக் கொண்ட கழகத்தை நடத்திச் செல்ல அனுமதிக்கப்பட்டிருப்பவனாக உள்ள என்னையும், முன்பு அமைச்சர்கள்மீது உமிழ்ந்த இழிசொற்களை வீசித் தாக்கினால், கவலை கொள்ளவேண்டாம். கற்பூரம் எடுத்துச் சென்ற வண்டியிலே இப்போது கருவாடு என்று எண்ணிக்கொள்! அது தேவை என்று எண்ணுபவர்கள் அதைத் தாராளமாக வாங்கிக் கொள்ளட்டும்; நீங்கள் அதற்குக் குறுக்கே நிற்கவேண்டாம்; கற்பூரம் இருந்ததே, அதை எண்ணிக் கொள்ளுங்கள்.

கழகத்தையும், அதிலே ஈடுபாடுகொண்டவன் என்பதால் என்னையும், வரைமுறையற்ற போக்கிலே, காங்கிரசார் கடிந்துரைத்தபோது, வரிந்து கட்டிக்கொண்டு என் பக்கம் வந்து நின்று வருபவனெல்லாம் வரட்டும் ஒரு கை பார்த்துவிடுகிறேன் என்று முழக்கமிட்டவர்களிலே சிலர்தானே இன்று, என்னை ஏசுகிறார்கள்; அதனால் என்ன நட்டம்!!

அன்று ஏசியவர்களுக்கு இன்று ஏசுபவர்கள் தந்த பதில் இருக்கிறதே, அதை ஒரு முறை படித்துப் பார்! உன் கோபம் பஞ்சு பஞ்சாகப் பறந்தே போகும்; அவர்களிடம் இரக்கமே எழும்—இவர்களுக்கென்ன, தமக்குள்ள வேகத்தை, தாக்கும் திறத்தை, எவர் பேரிலாகிலும் வீசிக்கொண்டே இருக்கவேண்டும் எனும் இயல்பா! அன்று அப்படிப் பேசினார்கள்; இன்று இப்படிப் பேசுகிறார்களே! இது என்ன நாக்கு? இது என்ன போக்கு? என்று கேட்கத்தோன்றும்.

என்னை எவரோ ஏசிவிட்டார்கள்; இன்று என்னை ஏசும் ஒருவருக்குக் கொதிப்பும் கோபமும் பீறிட்டுக் கொண்டு அப்போது வந்தது; எடுத்தார் பேனா, தொடுத்தார் பாடல்! கேட்கிறாயா அந்தப் பாடலை!!

எட்டுத் திசையிலும் நாம் வளர்ந்தோம்—நமை
எத்திப் பிழைப்பவர் சீறுகின்றார்—அண்ணன்
சுட்டுவிரற் கடை தூக்கிவிட்டால்—அவர்
தூளுக்கும் தூளெனக் கூவிடடா!

பட்ட வடுக்களைக் காட்டிடடா! அதிற்
பாடும் துணிவினைக் கூறிடடா—இனித்
துட்டர்கள் பின்புறம் தாக்கவந்தால்—அவர்
தோளெங்கள் தாளுக்கென்றே திடடா!

வானில் பறப்பது நம்கொடிதான்—மொழி
வண்ணமடைந்ததும் நம்வழிதான்—அந்தப்
பூனைகளும் கொஞ்சம் புத்தியடைந்திடப்
போதனை செய்ததும் நம்மவர்தான்!

ஆனைநிகர்த்த நம் சேனைபலம்—தனை
ஆறறிவுள்ளவர் ஒப்புகின்றார்—உடல்
கூனிய காங்கிரஸ் கோமகனார் மட்டும்
குக்கல் மதியினைக் காட்டுகின்றார்.

தாயைப் பிரிந்தவர் சிங்களத்தில்—அண்ணன்
தன்னைப் பிரிந்தவர் புட்பகத்தில்—இளஞ்
சேயை மனைவியை வீட்டைப் பிரிந்தவர்
தேம்பி அழுவது சாவகத்தில்!

தூய இவர்கள் பிறந்ததெல்லாம்—வெறும்
சோற்றுக்கடா! வெறும் சோற்றுக்கடா!—தெரு
நாயிலிழிந்தவர் வாடுகையில்—வட
நாட்டவர் எங்கணும் வாழுகிறார்.

அன்னைத் திராவிடப் பொன்னாடே!—உன்
ஆணை! தமிழ்மொழி மீதாணை!
மண்ணைப் பிரிந்தவர் மீண்டுமிங்கே—வரும்
மார்க்கத்தைக் காண முயன்றிடுவோம்!

அன்னையுன் நாட்டைப் பிரித்திடுவோம்—இல்லை
ஆவியழிந்திடக் கண்டிடுவாய்!
கண்ணையும் காலையும் வெட்டியபின் இந்தக்
காயமிருந்தென்ன போயுமென்ன!

எப்படித் தம்பி! சுவைமிக்கதாக இல்லையா!! ஆம்! என் பாய், நம்மால் இதுபோலப் பாடவரவில்லையே என்றுகூட ஆயாசப்படுவாய். ஆனால், தம்பி! உனக்கு இதுபோலப் பாடத் தெரியாவிட்டால் பரவாயில்லை, இப்படியும் பாடி விட்டுப், பிறிதோர்நாள் என்னை இழித்துப் பாடவும் தூய தமிழை, கவிதைத் திறனைப் பயன்படுத்தாது இருந்தால் போதும். எனக்காகச் சொல்லவில்லை—தமிழுக்காக — கவிதைத் திறனுக்காக — மரபின் மாண்புக்காக!

பொங்கற் புதுநாளன்று பொன்னான கருத்துகளை மனதிலே பதியவைத்துக்கொண்டு, தென்னகம் பொன்னகம் ஆகவேண்டும், அதனைச் செய்து முடித்திடப் பயன்படாமல், இந்தத் தேகம் இருந்தொரு லாபமில்லை, என்ற உறுதியைக் கொண்டிடு! உத்தமனே! உன் உழைப்பால் ஏற்றம்பெற்ற கழகம் இன்று எத்துணையோ இன்னலையும் இழிமொழியையும் தாங்கிக்கொள்ள வேண்டி இருக்கிறது. எனினும், பாதை வழுவாமல், உறுதி தளராமல் பணிபுரிகிறது.

பாற்பொங்கல் சமைத்திட உன் பரிவுக்கு உரியாள், பார்த்தனையா, தீய்த்திடும் தீயினைக்கண்டு அஞ்சாமல், வெப்பம் தாங்கிக்கொண்டு, புகை கிளம்பிக் கண்களைக் கெடுத்திட்டாலும் ஈடுகொடுத்துக்கொண்டு, அளவறிந்து, முறையறிந்து, நேரமறிந்து, பண்டங்களைச் சமைத்திடும் செயலில் ஈடுபட்டிருக்கிறாள். இன்னலை ஏற்றுக்கொண்டு, ஏற்றி இறக்கிய பிறகல்லவா, நீ கூவி மகிழ்கிறாய், பொங்கலோ! பொங்கல்! என்று.

நாடு மீட்டிடும் நற்காரியம் வெற்றிபெற, நாமும் தம்பி! அறிவுடைமை, துணிவுடைமை, பொறையுடைமை, எனும் பண்புகளைப் பேணி வளர்த்துக் கொள்ள வேண்டும்.

திருநாளில் திருவிடத்துக்கு விடுதலை பெற்றளிக்கும் ஆர்வம் உன் உள்ளத்தில் பொங்கட்டும்!

திருவிட விடுதலைக்கு நாடு பக்குவப்பட்டு இருக்கிறது என்பதனை உலகறியச் செய்யும் முறைகளிலே மிக முக்கியமான ஒன்று, மக்களின் ஆதரவு நமக்கு உண்டு என்பதனை எடுத்துக்காட்டும் வாய்ப்பான பொதுத் தேர்தலில், நாம் நல்ல வெற்றி ஈட்டிக் காட்டுவது.

இவ்வாண்டு, பொங்கற் புதுநாள், இந்த எண்ணத்தை உறுதியை நமக்கு அளித்திடல் வேண்டும்.

## அடுத்த இதழ்

★

பொங்கல் திருநாளையொட்டி நமது அலுவலகத்துக்கு விடுமுறை தரப் படுவதால் 'திராவிட நாடு' 4—2—62 முதல் தொடர்ந்து வெளியிடப்படும் என்பதனை விற்பனையாளர்களுக்கும், படிப்பகங்களுக்கும், சந்தாதாரர்களுக்கும் தெரிவித்துக்கொள்கிறோம்.

பொறுப்பாளர்
திராவிட நாடு.

நாடு நமது ஆகி, நல்லாட்சி அமைத்து, மக்களுக்கு நல்வாழ்வு பெற்றளிக்க முனைவோமாக! அந்நிலைதான், தேனில் தோய்த்த பழம்போல இனிக்கும்.

தேன்! பழம்! என்று நான் கூறுகிறேன், நீயோ, தம்பி! உன் பாசம் நிறை பார்வையை, எங்கோ செலுத்துகிறாய்! உம்! விருந்துக்கான அழைப்புப் பெற்றுவிட்டாய்! விட்ட கணையைத் தடுத்திடவா இயலும், போ! போ. பொன்னான நாள் இது! பொற்கதிர் பரப்பும் கதிரவனைப் போற்றிடும் திருநாள்! இல்லம் இன்பப் பூங்காவாகும் நன்னாள்! இந்நாளில், எந்நாளும் நாம் இன்புற்றிருக்கும் நிலைகாண அடிகோலும், பொதுத்தேர்தல் வெற்றிக்குக் கழகம் உன்னைத்தான் நம்பி இருக்கிறது. உருட்டல் மிரட்டலையும் காட்டிப், பணம் கொட்டி நமை மாற்றார் மிரட்டும்போதும் மருளாமல் கழகம் தேர்தலில் ஈடுபட்டிருப்பது உன் ஆற்றலைப் பெரிதும் நம்பித்தான், என்பதை மறவாதே!!

அண்ணன்,

அண்ணாதுரை

# கதையும் கருத்தும்

அழகிய அரசிளங்குமரி — அரண்மனை உப்பரிகை மீது அந்திசாயும் வேளையில் நின்று கொண்டிருக்கிறாள் — வீதி வழியே செல்கிறான் ஓர் கட்டழகன் — கணைகளைக் கண்கள் கவ்வின — காதற் கடிதம் தீட்டினாள் கன்னி, விரைவாக — அவன் காணக் கீழே விடடெறிந்தாள் — திகைத்தான், சிந்திததான், எடுததான், சென்றான் — அவள் அகமகிழ்ந்தாள், அவன் சென்ற வழிமீது விழி வைததிருந்தாள் — உருவம் மறைந்தது — உள்ளே சென்றாள்

கடிதத்தில் கன்னி, இன்ன இடத்திலே ஓர் பாழ்மண்டபம் உண்டு, அங்கு நான் வந்து காண விழைகிறேன், என்று தீட்டியிருந்தாள்.

கடிதத்தைக் கண்டெடுத்த காளை, கட்டழகன்; ஆனால் கல்வி அறிவற்றவன் — எனவே, வழியே கிடைத்த ஒரு வறியவனிடம் காட்டிக் கேட்டான், இதிலே என்ன குறிததிருக்கிறது என்று! வறியவன் மட்டுமல்ல அவன், வஞ்சகன் — குட்டம் குடிகொண்டிருந்தது அவனிடம்! என்ன செய்வான்! ஐயோ, மகனே! ஆபத்து உனக்கு! இன்றிரவு உன் தலையை வெட்டிவிட அரசர் உத்தரவாம்! ஓடி உயிர் பிழைத்துக்கொள், என்று கூறினான்; அந்த அறிவற்றவனும் தலை தப்பினால் போதும் என்று ஓடிவிட்டான்,

ஒய்யாரி குறித்த இடம் வந்தாள் — குரல் ஒலி கேட்டாள், குதூகலமடைந்தாள் — அன்பே என்றாள் — இன்பமே! என்றான் — இருள் அவனுககுத துணை செய்தது! குடட நோயின் கொடிய வாடை அவனைக் காட்டிக்கொடுத்தது, பதறினாள்; பாவி! என்றாள்; அழுதாள், அலறினாள், ஆவி பிரிந்தது.

கதைதான்! கருத்தற்ற காவலர்களும், கன்னியர்களும் அரண்மனையில இருந்த நாளையக் கதைதான்!! எனினும், இதன் ஊடே உண்மையும் ஒன்று புதைந்திருக்கிறது,

கிடைத்தது காதற் கடிதம் என்பனதயும் அது இன்ப விருந்துக்கு அழைபபு என்பதையும் அறிந்துகொளள முடியவில்லை — கல்வி அறிவு இல்லாததால்!

வஞ்சகன், கல்வி கற்றிருந்தான்; எனவே, அவன் அந்த இன்ப விருந்தைப் பெறச் சூது செய்தான் — பெற்றான் என்று கதை கூறுகிறது.

அதுபோலத்தான், இயற்கைவளம் மிகுந்த நாட்டிலே, அந்த இயற்கை வளத்தைத தொழில துறைக்கு இணைத்து, பெரியதோர் பலனைப் பெறறு மககளுக்கு இன்ப வாழ்வு அளிக்கத் தெரியாத — அளிககும் அறிவாற்றலற்ற ஆடசி இருக்குமானால், அந்த இன்பவாழ்வு தரத்தக்க இ[illegible]ற்கை வளம் வஞ்சகத்திலே தேர்ந்த முதலாளிமார்களிடம் சிககிச் சீரழியும் — கன்னிமாடத்துக் கட்டழகி பாழ்மண்டபத்தில் குட்டம் கொண்ட குணக்கேடனிடம், சிக்கிச் சீரழிந்ததுபோல!

இங்குள்ள ஆட்சியாளர்கள், ஏறத்தாழ, கடிதத்தைக்கண்டெடுத்து, அதன் பொருள் தெரியாது விழித்த கட்டழகன் போன்றே உள்ளனர்.

தங்கம் இருக்கிறது இங்கு — கட்டழகியின் மேனி அழகையும [illegible] மிஞ்சும் விதமான வனப்புடன் — ஆனால் அந்தத் தங்கத்தை எடுத்துப் பயன் பெற்று வருபவர்கள், யார்? ஆட்சியாளர்கள் அந்த இயற்கை வனப்பையும் வளத்தையும், மக்கள் பெறவா செய்துள்ளனர் — இல்லை, இல்லை.




# முடிவில்லை!

**ப. வாணன்**

"அத்தான்! ஏனிந்தக் கலக்கம்?" என்று கேட்டுக் கொண்டே அவனருகில் அமர்ந்தாள் பூங்கொடி நீலா.

ஊருக்கு வெளியில் 'அமில உற்பத்தி நிலையம்' வைத்திருக்கும் முத்துவேலு, சமுதாயத்தை விட்டு அப்பால் வாழும் அதிசயப் பிறவி. அவனுடைய வாழ்க்கையில் குறுக்கிட்ட ஒரே பெண் நீலா—அந்த ஊரின் 'அபிவிருததிக் குழு''வின் தலைவர் சச்சிதானந்தத்தின் அருமை மகள்.

"நகரசபைத் தலைவரும், ஊர்ப் பெரியவர்கள் சிலரும் உங்களை வந்து சந்தித்தார்களாமே, அதன் காரணம் என்ன?" என்ருள், நீலா மறுபடியும்.

முக்துவேலு ஒ'ந பெருமூச்சு விட்டானே தவிர, பதில் ஏதும் கூறவில்லை.

நீலாவுக்குக் கோபம் வந்தது......

"என்னிடம் கூற விருப்பமில்லாவிட்டால், நான் வருகிறேன்!" என்று சொல்லிக்கொண்டே எழுந்தாள்.

அப்பொழுதுதான் முத்துவேலுவுக்கு சுய உணர்வு வந்தது. திடுக்கிட்டு, நீலாவின் கையைப் பிடித்து இழுத்து, அவளை மறுபடியும் தன்னருகில் அமர்த்திஞன.

"கண்ணே! ஊர்ப் பெரியவர்கள் கூடி என் மனச்சாட்சிக்கு விரோதமான காரியத்தைச் செய்யச் சொல்கிருர்கள்! 'பூமி தேவி' குளத்தில் இருக்கும் தண்ணீரில் ஏராளமான அசுத்தக் கிருமிகள் இருக்கின்றன என்று நான் ஆராய்ச்சி செய்து வைத்திருக்கிறேனல்லவா? அந்த ரிப்போர்ட்டைச் சுகாதார அதிகாரிகளுக்கு அனுப்பக் கூடாதாம்! அப்படிச் செய்தால், சுகாதார அதிகாரிகள் வந்து, குளத்தைக் தூர்த்துவிடுவார்கள். தண்ணீர் இல்லாத குளத்திற்கு வியாதியஸ்தர்கள் யாத்திரை வரமாட்டார்கள். ஆகவே, நமது நகரத்திற்கு வருமானம் குறைந்துவிடும் என்று வாதாடுகிருர்கள், பெரியவர்கள். சன்மார்க்க சங்கத் தலைவர் சுவாமி கைலைநாதர் "பக்தர்களை ஏமாறவிடாதே!" என்று எச்சரிக்கை செய்கிருர்! நானே என்ன செய்வது என்று தெரியாமல் குழம்பிக் கிடக்கிறேன்! இந்த நேரத்தில் நீயும் என்னை வெறுத்துவிடாதே!" என்ருன் முத்து. அவனுடைய கலங்கிய முகத்தைத் தன்னுடைய பட்டுக் கரங்களால் தடவிக் கொடுத்த நீலா, "அன்பரே, கலங்க வேண்டாம்! கவலை விடுங்கள்!! என் தந்தையிடம் கூறித் தங்கள் மனதிற்குத் திருப்தி ஏற்படும்வண்ணம் இந்த விஷயத்தை முடிவு செய்வோம்!" என்ருள்.

அவள் தந்தை சச்சிதானந்தம் சைவப்பழம். அவர் நகர அபிவிருத்திக்கு, "பூமிதேவி" குளத்தின் மகாத்மியம் ஒரு முககிய காரணம் என்று எண்ணிக்கொண்டிருப்பவர். அவரா முத்துவுக்காகப் பரிந்துபேசப் போகிருர்?

"உன்னுடைய ஆறுதலுக்கு நன்றி!" என்று கூறிஞன் முத்து சோகத்துடன்.

பிரியா விடைபெற்று நகர்ந்தாள், நீலா.

அந்த ஊர்க் குளத்தின் அடியில் பூமாதேவி சயனித்து இருப்பதாயும், அந்தக் குளந்து நீரை மூன்றுமுறை குடித்து நூற்றெரு தடவை சுற்றி வலம் வந்தால், எந்த வியாதியும் குணமாகும் என்றும் பிரச்சாரமான நாள் முதல், இலாபம் சம்பாதிப்பவர் பஸ் முதலாளி பரமசிவம்தான்! நாளுக்கு நாலு டிரிப்பாக இருந்தது, பதினலு டிரிப்பாக



...கலங்குகிறுன் முத்துவேல்...

மாறியதுமாத்திரமல்ல; பஸ்சுக்குப் பத்துப்பேர்கூட இல்லாமல் போய்க்கொண்டிருந்த டிரிப், நாற்பது, ஐம்பது பேர்களை ஏற்றிக்கொண்டு ஓடிக்கொண்டிருந்தது. நாள் தவருமல் நூற்றுக்கணக்கில் பணம் வந்தது, பெரிதல்ல. அதில் பெரும் பகுதியை வருமான வரிக் கணக்கில் சேர்க்கவேண்டிய அவசியமில்லாத நிலையும் இருந்ததுதான்!

இலாபத்தில் கொழுத்துக்கொண்டிருந்த பரமசிவம் பிள்ளைக்கு இடி விழுந்ததுபோலிருந்தது, நகரசபைத் தலைவர் கொடுத்த செய்தி. “முத்துவேலு என்ருெருவனும்! அவன் ஆராய்ச்சியில் பூமிதேவி குளத்தில் மலேரியாக் கிருமிகள் இருக்கின்றனவாம்! ஆகவே, குளத்தைத் தூர்க்க அதிகாரிகளுக்கு எழுதப்போகிருனும்!” என்று அவர் கூறியதைக் கேட்ட ஊர்ப் பெரிய மனிதர்கள் என்ற நிலைக்கு உயர்த்தப்பட்டவர்கள் பதறிப்போயினர்.

“அடி மடியிலேயே கைவைத்துவிட்டானே பாவி!” என்று கதறிஞர், வருகின்ற யாத்திரிகனுக்கு தேங்காயும், பழமும் விற்றுப் பணக்காரஞக மாறிய இராமலிங்கம்.

“கடவுள் சக்தியைச் சந்தேகிக்க இவன் யார்?” என்று கோபாவேசத்தோடு கதறிஞர், நகர கடைத் தெருவில் காபி ஹோட்டல் வைத்திருக்கும் சுப்புசாமி.

யாத்திரீகர்கள் ஆயிரக்கணக்கில் வர ஆரம்பித்ததால், இலாபமடைந்து பெரிய மனிதர்களான அவ்வளவு பேரும் சேர்ந்து, முத்துவேலுவின் ஆராய்ச்சிக்கு ஒரு முடிவு கட்டுவதென முடிவு செய்தனர். அந்த வேலையைச் செய்துவிட்டுத்தான் அமருவேனென ஆவேசம் கொண்டவர்தான் பஸ் முதலாளி பரமசிவம். பூமிதேவியின் கடாட்சத்தால் அவர்தான் அதிக இலாபத்தைக் கண்டவர்! ஆகவே நியாயப்படி அவருக்குத்தான் அதிக கோபம் வரும்!

“மிஸ்டர் முத்துவேல்! ஒரு சந்தோஷ சமாச்சாரத்தைக் கூறவே வரச்சொன்னேன்!” என்று ஆரம்பித்தார், பரமசிவம் பிள்ளை.

“மிகவும் நன்றிங்க...!” என்று கூறிக்கொண்டே வணக்கம் செலுத்திஞன், முத்துவேலு.




...பக்தர் வருகிஞர்...

"நண்பரே! நகரத்திலே நல்ல மருத்துவமனை ஒன்று கட்டத் திட்டம் போட்டிருக்கிறோம். அந்தக் குழுவில் தாங்களும் இருக்கவேண்டும்!'' என்றார், பரமசிவம்.

"நன்றி! ஆனால் எனக்கு நேரமில்லை என்பதை பணிவன்போடு தெரிவித்துக்கொள்கிறேன்!'' என்றான் முத்து.

இதைக் கேட்டதுமே பரமசிவம் பிள்ளைக்குக் கோபம் வந்துவிட்டது. "நீர் எதற்குக் கூறுகிறீர் என்று எனக்குத் தெரியும். முத்துவேல்! உம் ஆராய்ச்சியை நிறுத்தப் போகிறீரா இல்லையா? ஒரே கேள்வி......ஒரே பதிலை எதிர்பார்க்கிறேன்!'' என்றார் பரமசிவம்.

"அப்படிக் கூறும், வந்த விஷயத்தை!'' என்று சிரித்துக்கொண்டே எழுந்த முத்து. நான் அறிந்துள்ள உண்மையைத் தெரிந்தும் மறைத்துவைக்க என் மனம் இடம் கொடுக்காது!'' என்று கூறினான்.


பரமசிவம் சில நிமிடங்கள் அவனையே உற்றுப் பார்த்துக்கொண்டிருந்தார். பிறகு, "ஊர் மக்களுக்கு ஏற்படும் இன்னல்களைப் பேசுகிறாயே ஒழிய, இந்தக் குளத்தைத் தூர்த்துவிட்டால் மாத்திரம் எப்படி அந்த இன்னல் ஒழியும் என்று உனக்கு விளங்க வில்லையே! நாட்டில் மலேரியாக் கிருமிகள் அந்த ஒரு குளத்திலேதான் இருக்கின்றனவா? நாடு பூராவும் எங்கு பார்த்தாலும் அசுத்தம் இருக்கத்தான் செய்கிறது. அங்கெல்லாம் கெட்ட கிருமிகள் இருக்கத்தான் செய்கின்றன. வியாதிகள் பரவிக்கொண்டுதான் இருக்கின்றன. ஆகவேதான் மேலும் மேலும் சுகாதார நிலையங்களையும், மருத்துவ மனைகளையும் சர்க்கார் கட்டிக் கொண்டிருக்கிறது. ஆகவே இந்த ஒரு குளத்தைத் தூர்த்துவிட்டால் மாத்திரம் நாட்டின் உடல்வளம் வளர்ந்துவிடும் என்று நீயாகக் கனவு கண்டுகொண்டு இருக்கிறாயா என்ன? மாறாக இந்தக் குளத்தைத் தூர்த்தால், இந்த ஊரே நாசமாகி விடும்! எத்தனையோ தொழிலாளிகளுக்கு வேலை போய்விடும். வியாபாரம் அழிந்து போகும்...!'' என்று அவர் சொல்லிக்கொண்டிருக்கும்போதே "பஸ்கள் ஓடாது!'' என்று முடித்தான் முத்துவேலு!

பரமசிவம் பிள்ளைக்குக் கோபம் தாங்க வில்லை. தன்னை ஏளனம் செய்யுமளவுக்கு வளர்ந்துவிட்டவனா இவன் என்று அவருக்கு ஆத்திரம் வந்தது. இனி எது கூறியும் அவனைத் திருத்தமுடியாது என்று நன்றாகத் தெரிந்தது அவருக்கு. அவனை ஒரு தடவை முறைத்துப் பார்த்தார்.

"முத்துவேலு! நீ யார் உன்னுடைய பூர்வோத்திரம் என்னவென்பது இந்த ஊரிலே எனக்கு ஒருவனுக்குத் தான் தெரியும். உன்னுடைய ஆராய்ச்சியை இதோடு நிறுத்திக்கொண்டு, ஊர் விஷயத்தில் தலையிடாமல் இருந்தால் நீ பிழைத்தாய்! இல்லையேல், ஞாபகமிருக்கட்டும்......மூன்று ஆண்டுகள் சிறைத் தண்டனை! அதற்குப்பின் ஊரார் உன்னைத் திரும்பிப்பார்க்கமாட்டார்கள்; உன் நீலாவும் உனக்குக் கிட்டமாட்டாள்!! நான் வருகிறேன்!! என்று கூறிக்கொண்டே வேகமாக எழுந்தார், பரமசிவம்.

முத்துவேல் அப்படியே கல்லாக உட்கார்ந்துவிட்டான். அவனுக்கு உலகமே சுற்றுவது போலிருந்தது. மக்களின் நலனுக்கு ஒருகாரியத்தைச் செய்ய ஆரம்பித்தால், அதனால் அவனுடைய சொந்த வாழ்க்கையில் புயலை வீசச் செய்கிறார்கள் பொல்லாதவர்கள். ஆனால் அவர்கள்தானே இன்றைய பெரிய மனிதர்கள்!

இருபது ஆண்டுகளுக்கு முன் நடந்த சம்பவம். அவன் தாய் தந்தையர் குடிசை வாழ்வோர் கும்பலில்



...பஸ் முதலாளி முறைத்தார்...

இருவர். அந்தக் காலத்தில் முத்துவேலுவுக்கு முத்து என்ற சிக்கனப் பெயர்தான். பத்து வயதில், படிக்காத இளைஞர்களோடு பழகி அவர்களுக்கிருந்த தீய பழக்கங்களுக்கு இரையாகி இருந்தான் முத்து. அந்தக் காலத்து முத்து பிக்பாக்கெட் அடிப்பதில் பலே கெட்டிக்காரன்!

ஒரு நாள் அவன், தன் தொழிலைச் செய்யும்போது போலீஸ்காரனிடம் பிடிபட்டான். வழக்கு மன்றத்தில் குற்றவாளிக் கூண்டில் முத்து ஏற்றப்பட்டான். தன்னிடமிருந்த பணம் தன் தந்தை கொடுத்தது என்று கூறினான். உடனே அவன் தந்தை கோர்ட்டிற்கு அழைக்கப்பட்டார். நீதி மன்றத்திலே உண்மையை மறைத்துத்தானே பணம் கொடுத்ததாகக் கூறுமாறு

அவரை அவர் மனைவி முத்துவின் தாயார்—எவ்வளவோ கெஞ்சினுள்!

தான் பெற்ற பிள்ளையை எந்த நேரத்திலும் எப்படியாவது காப்பாற்ற முயற்சிப்பவள் தாய்தானே! அவரோ, ஒரேயடியாக மறுத்துவிட்டார். தனக்குப் பிறந்தவன் ஜோபடி அடித்துப் பிழைக்கக் கற்றுக் கொள்வதைவிட ஜெயிலிலேயே கிடந்து சாகட்டும் என்று கூறிவிட்டு நீதிமன்றம் சென்ருர். அங்கே உண்மையைத் தவிர, வேறெதுவும் சொல்லவில்லை. அதன் பலன் முத்துவுக்கு மூன்று மாதச் சிறை தண்டனை கிடைத்தது. அந்த நீதிமன்றத்திலே வேருெரு வழக்குச் சம்பந்தமாக வந்திருந்த பரமசிவம் பிள்ளை அன்று அவனைச் சந்திக்க நேர்ந்தது. அதை அவர் இன்றும் மறக்கவில்லை!

மூன்று ஆண்டுகள் அவன் அனுபவித்த சிறை வாழ்க்கை, அவனை அடியோடு மாற்றிவிட்டது.





...வக்கீல் வேசமாகப் பேசினுர்...

சிறைப் பள்ளிக்கூடத்திலே அவன் கல்வி கற்ருன். ஆசீர்வாதம் என்ற கிறித்துவப் பாதிரியாரின் பார்வையிலே அவன் விழுந்ததின் பயனுக, அவனுக்குச், சிறையை விட்டு வெளியே வந்த பின்னும் கல்வி கற்கும் பேறு கிடைத்தது. படிக்கும்போதே விஞ்ஞான ஆராய்ச்சிகளில் அதிக அக்கரை செலுத்தினன். படிப்பு முடிந்த பின் சுய முயற்சியினுல் நகருக்கு வெளியே "அமில உற்பத்தி நிலையம்" ஒன்றை நிறுவினுன். அவன் பட்ட சிரமங்களுக்குப் பலன் கிடைக்காமல் போகவில்லை. வாழ்க்கையில் நிம்மதி ஏற்பட்டது. அனுதையான முத்துவேலுவுக்குப் பூங்கொடி நீலாவின் அன்பும் கிட்டியது! வாழ்க்கையில் இன்பம் பொங்கும்போதுதான் இந்தத் துன்பச்சுழல்வீசஆரம்பித்தது.

கடந்துபோன காலங்களில் நடந்தவைகளை நினைத்துக் கொண்டிருந்த முத்துவின் மேல் சில துளிகள் விழுந்தன. அப்பொழுதுதான், தான் மழையில் நிற்கிருேம் என்று உணர்ந்து உள்ளே ஓடினுன்.

அவனுடைய மேஜைமேல் "பூமிதேவி" குளத்தின் தண்ணீரைப்பற்றிஅவன் தயாரித்த ரிப்போர்ட் கவரில் போடப்பட்டுத் தயாராக இருந்தது. அதைத் தபாலில் போட்டுவிட்டால், அவனுடைய பழங்கால வாழ்க்கை ஊருக்கு ஒலிபரப்பப்படும். அதனுல் அவன்மானம் பறிபோகும்; அவன் காதல் தோல்வியடையும்!

சில வினாடிகள் அந்தக் கவரையே பார்த்துக்கொண்டிருந்தான் முத்து. அவன் மனக்கண் முன்னால் அவன் தந்தையின் உருவம்தான் வந்து நின்றது. எது நடந்தாலும் உண்மைக்கு மதிப்புக்கொடுத்துச், சொந்த மகனைக்கூடப் பொய்கூறிக் காப்பாற்றிட மறுத்த அவருடைய மேலான குணம்தானே, இன்றைக்கு அவன் மேதாவியாக இருப்பதற்குக் காரணம்? ஆகவே உண்மையைக் கூறிட அஞ்சுவது கோழைத்தனம் என்பது மாத்திரமில்லை; மக்களுக்கு செய்யும் மகத்தான துரோகம் என்று பட்டது, முத்துவுக்கு. மக்களைப்பற்றிய எண்ணம் வந்தவுடன் காதலைப்பற்றிய எண்ணம் அவன் மனதில் எழவே இல்லை. நீலாவின் கொஞ்சு மொழி கேட்பதற்காக, மூடநம்பிக்கை கொண்ட மக்களைச் சூறையாடும் மதோன்மத்தர்களை விட்டுவைக்க அவன் தயாராக இல்லை. ஊரே கூடி எதிர்த்தாலும், ஆண்டவனைத் துணைக்கழைத்துக்கொண்டு, அவனை அழிக்க முற்பட்டாலும், அஞ்சப்போவதில்லை என்ற முடிவுக்கு அவன் வந்தான். வெளியில் பார்த்தான். மழைநின்று வெயில் அடித்துக்கொண்டிருந்தது. உறையைக் கையிலெடுத்தான், நடந்தான். தெருக்கோடியிலிருந்த தபால் பெட்டியில் அதைப் போட்டான்!

“பூமிதேவியின் குளத்திற்கு இனிமேல் யாரும் செல்லக்கூடாது; அதில் இருக்கும் நீரை இறைத்துக் குளத்தைத் தூர்க்கும்வரை ஓயமாட்டேன்!” என்று சபதம் எடுத்தான் முத்துவேலு.

அதற்கு அவனுக்குக் கிடைத்த பரிசு “பழைய பிக்பாக்கெட்”; “ஜெயில் சென்று வந்த திருடன்” என்பதெல்லாம்தான். அதற்காக அவன் அஞ்சவில்லை. தனி ஆளாகக் கையில் பலகையேந்திக் குளக்கரையில் நின்று “இந்தக் குளத்தில் யாரும் குளிக்காதீர்கள்...... இந்தத் தண்ணீரை யாரும் குடிக்காதீர்கள்!” என்று கத்தினான்.

ஊர்ப் பெரியவர்கள் சர்க்காரின் உதவியை நாடினர். போலீசு வந்தது. கடவுள் நம்பிக்கைகொண்ட மக்களுடைய மனம் புண்படும்படியாகத் துவேஷப் பிரச்சாரம் செய்ததிற்காக முத்துவேலு கைது செய்யப்பட்டான்!

நீதிமன்றத்திலே சர்க்கார் தரப்பு வக்கீல், இப்படிப்பட்ட சமூக விரோதிகளுக்கு எவ்வளவு அதிக தண்டனை கொடுக்கலாம் என்று வேகமாகப் பேசினார். கடவுளையே சந்தேகிக்கும் இவனுக்கு மூன்றாண்டுகள் சிறைத்தண்டனை கொடுக்கப்பட்டது!

இரண்டாவது தடவையாகச் சிறைக்கூடம் சென்றான் முத்து. முதல்தடவை பிக்பாக்கெட் செய்த சமுக விரோதி! இரண்டாவதுதடவை மத நம்பிக்கையைக் கேலிசெய்ததற்காக!

சிறைக் கூடத்திலே முத்து அவதிப்பட்டுக்கொண்டிருக்கும்போது, ‘பூமிதேவி’யின் குளத்திலே தண்ணீர் குடித்துப் போனவர்களும் அவதிப்பட ஆரம்பித்தனர். தொடர்ந்தாற்போல் வாந்தியும், பேதியும் ஆக ஆரம்பித்தது, அந்த வட்டாரத்திலே ஒரே பயங்கர நிலை ஏற்பட்டது. பல இடங்களிலே சாவுகளும் ஏற்பட்டன. இப்பொழுதுதான் சர்க்கார் கண்விழிததுக்கொண்டது. பல நாட்களுக்கு முன் வந்துகிடந்த ‘ரிப்போர்ட்’ ஒன்றை எடுத்துப் பார்த்தார், சுகாதார தலைமை அதிகாரி. அதில் குறிப்பிடப்பட்டிருந்த உண்மைகளைக் கண்டு வியப்படைந்த அவர், அந்த ரிப்போர்ட்டைத் தயார்செய்த ஆராய்ச்சியாளன் யார் என்று விசாரித்தார்.



துளசி மாட மகிமை பேசுகிறார்.

“சிறையிலிருக்கும் முத்து......!” என்றனர்.

இந்த விஷயத்தை வெளியே சொல்லாதே! சொன்னால் அவனைத் தண்டித்த நீதி மன்றத்திற்கு அவமானம் என்றனர் சர்க்காரின் நேர்மையை நிலைநிறுத்துவதில் அக்கரை கொண்டோர் சிலர். ஆகவே, முத்துவின் பெயரை இழுக்காமலேயே பூமிதேவியின் குளம் தூர்க்கப்பட்டது, சர்க்காரால்!

அந்த இடத்திலே துளசி மாடத்தைக் கட்டி அதை நூறு தடவை சுற்றிவந்தால், எந்த மலடியும் கருத்தரிப்பாள் என்று பிரச்சாரம் செய்ய ஆரம்பித்தார் பாகவதர். அவருக்குத் துணை, பஸ் முதலாளி பரமசிவம் பிள்ளை, தேங்காய்க் கடை இராமலிங்கம், காபி ஒட்டல் சுப்பு எல்லோரும்! இந்தக் கூட்டம் நினைத்தால் வெற்றி கிட்டாமலா போகும். சில நாட்களில் மறுபடியும் மக்கள் திரளாக வர ஆரம்பித்துவிட்டனர். மந்திரிகள் கூடத் தங்கள் மனைவிமார்களோடு வந்து போனார்கள்! இலாபக் கணக்கு எல்லோருக்கும் சரியாகத்தான் இருந்தது!!

ஆனால், முத்து மாத்திரம் சிறையில் இருக்கிறான். இப்பொழுது அவனை யாராவது சந்தித்தால், துளசிச் செடிக்கும் கருத்தரிப்பிறகும் என்ன சம்பந்தம் என்று கேட்கிறான்!

இந்தக் கேள்விகளுக்கும் முடிவில்லை—முத்துவேலுகள் ஜெயிலில் வாடுவதற்கும் முடிவில்லைபோலிருக்கிறது!

# ஆரோக்கியசாமி...!

கனகு

“அப்பா, அப்பா!” என்று கூப்பாடு போட்டுக் கொண்டு அலறினாள் கட்டிலின் பக்கத்தில் நின்ற பன்னிரண்டு வயதுச் சிறுமி.

அந்தக் கூப்பாடு கட்டிலில் மயக்கம் போட்டுக் கிடந்த ஆரோக்கியசாமியின் காதில் விழுந்திருக்க முடியாது. திரும்பத் திரும்ப அந்தச் சிறுமியும் அலறிக் கொண்டே இருந்தாள். பக்கத்தில் வேறு யாருமில்லை.

அந்தச் சின்னக் கிராமத்தில் ஊருக்கு ஒதுக்குப் புறமான, தன்னந் தனிமையான அந்தக் கொட்டகையில் ஆரோக்கியசாமியையும், அவர்தம் அன்பு மகள் பேபியையும் தவிர வேறு யாருமில்லை. அந்தக் கொட்டகை ஆரோக்கியசாமியின் நிரந்தரமான இருப்பிடமல்ல. அந்தச் சின்னக் கிராமத்தில் ஆரோக்கியசாமியின் உறவினர் யாரும் கிடையாது.


நெடு நேரம் சிறுமி ‘அப்பா, அப்பா’ என்று அலறிக்கொண்டேயிருந்த பிறகு, ஆரோக்கியசாமி மெல்லக் கண்களைத் திறந்து பார்த்தார். சிறுகச் சிறுக அவருக்கு நினைவு வந்துகொண்டிருந்தது. அவர் தன் நினைவு பெறப் பெறப் பேபியின் கூப்பாடு இறங்கிக் கொண்டுபோயிற்று.

“அம்மா, பேபி!” மெல்ல முனகினார் ஆரோக்கியசாமி.

“ஏனப்பா?” என்று பேபி தந்தையின் முகத்தருகே குனிந்து ஆவல் பெருக வினவினாள்.

“கொஞ்சம் வெந்நீர் கொண்டு வர்றியா அம்மா!”

“இதோ!” என்று பக்கத்திலிருந்த வெந்நீரை எடுத்து, அது குடிப்பதற்கு அளவான சூட்டோடு இருக்கின்றதா என்று விரலால் தொட்டுப் பார்த்துவிட்டுத் தந்தையின் வாயருகே குவளையைக் கொண்டுபோனாள் பேபி.



படுத்தபடியே வெந்நீரைக் குடிக்க முடியவில்லை அவரால். மெல்ல அவருடைய முதுகைத் தாங்கித் தூக்கி, தலையணைகள் இரண்டையும் கட்டிலின் பின் சட்டத்தில் சாய்வாக வைத்து, சற்றே அவரை நிமிர்த்திச் சாய்வாகப் படுக்கவைத்தாள் பேபி. பிறகு வெந்நீர்க் குவளையை வாயருகிற் கொண்டு போனாள்.

வெந்நீரை இரண்டு மிடறு மெல்ல உறிஞ்சினார் ஆரோக்கியசாமி. உறிஞ்சிவிட்டுத் தன் அருமை மகளை உற்று நோக்கினார். நோக்கிக்கொண்டே சிறிதுநேரமிருந்தார். ‘இந்தப் பிஞ்சு உள்ளத்திற்கு எவ்வளவு பெரிய துன்பம்! இந்த வயதுக்குள் எவ்வளவு பெரிய கடமை!’ அவரால் பெருமூச்சுவிட முடியவில்லை. சற்றே கனத்த உயிர்ப்பொன்று வெளிப்பட்டது.

“அம்மா, என்னைத் திரும்பவும் நன்றாகப் படுக்க வைத்துவிடு. என்னால் சாய்ந்துகொண்டிருக்க முடியவில்லை.” என்று காற்றுக் குரலில் முனகினார் ஆரோக்கியசாமி.

திரும்பவும் முதுகைத் தாங்கிப் பிடித்துத் தலையணைகள் இரண்டையும் சரியாக வைத்துப் பழையபடி நன்றாகப் படுக்கவைத்தாள் பேபி.

ஆரோக்கியசாமியின் பலவீனம் மிகுந்த உடலுக்குள் அடங்கிக்கிடந்த ஆற்றல் மிகுந்த உள்ளம் கடந்த காலத்தைப்பற்றி எண்ணத் தொடங்கியது.

இரண்டாண்டுகளுக்கு முன்புவரை அந்த ஊரில் ஆரோக்கியசாமி எவ்வளவு தடபுடலாக வரவேற்கப் பட்டிருக்கிறார்! எத்தனை உபசாரங்களைக் கண்டிருக்கிறார்! அந்த நிலையையும், இன்றைய ஆதரவற்ற, சீந்துவாரற்ற அவலத் தன்மையையும் அவரால்கூட நினைத்துப்பார்க்க முடியவில்லை. அவ்வளவு வியப்பும், நம்பமுடியாமையும் அவற்றில் உள்ளடங்கிக் கிடந்தன.

அம்மாப்பட்டி சிறியதொரு இனும் கிராமம். எப்போதோ, யாருக்காகவோ, யாராலோ இனுமாக அளிக்கப்பட்டிருந்த அந்தக் கிராமம், இப்போது இனும் கிராமம் என்ற பெயரை மட்டும்சுமந்துகொண்டிருந்தது. அதன் நிர்வாகப் பொறுப்பு முழுவதையும் மாவட்டக் கழகம் ஏற்றுக்கொண்டிருந்தது. அதன் நிலவரி உட்பட அனைத்தையும் வசூலிக்கும் பொறுப்பும் மாவட்டக் கழகத்தையே சார்ந்திருந்தது. அம்மாப்பட்டி மக்கட் தொகை அளவில் சிறிய கிராமமாக இருந்தாலும்,

பயிர் செய்யப்படும் நிலத்தின் அளவிலும் சிறிய கிராமமாக இருந்தாலும், வருமானத்தில் மற்றக் கிராமங்களை விடப் பெரியது என்றே சொல்லவேண்டும். அதோடு அந்தக் கிராமத்து நாட்டாண்மைக்கார வெங்குசாமிக்கு மற்ற நாட்டாண்மைக்காரர்களைவிட ஒருபடி அதிகமான மதிப்புக்கூட. காரணம், அந்தக் கிராமத்தைச் சார்ந்து அமைந்திருந்த சிறிய காடுதான். இனும் கிராமத்தைச் சேர்ந்த காடு என்ற முறையில் அந்தக் காட்டு நிர்வாகமும் மாவட்டக் கழகத்தையே சார்ந்திருந்தது. அதன் பொறுப்பு முழுவதும் வெங்குசாமியின் வசப்பட்டிருந்தது.

அம்மாப்பட்டியில் வாழ்கின்ற மக்களுக்கெல்லாம் வெங்குசாமி இனும்தாரர். வெங்குசாமியே வெளிப்படையாகச் சொல்லிக்கொள்ளாவிடடாலும், உள்ளுக்குள் ஆரோக்கியசாமியையே அதன் இனும்தாரராக எண்ணி இயங்கிக்கொண்டுவந்தார். ஆமாம், அம்மாப்பட்டியின் நிர்வாக வேலைகளைக் கவனிப்பதற்கென மாவட்டக் கழகத்தால் தனியாக நியமிக்கப்பட்டவர்தான் ஆரோக்கியசாமி.

தம் அலுவலகத்திலிருந்தவண்ணமே எல்லாக் காரியங்களையும் கவனிககவேண்டியவர்தான் ஆரோக்கியசாமி. கிராமத்தைப் போய்ப் பார்த்துவிட்டு வருவதற்கும், வரிவசூல் வேலைகளைப்பற்றிய தகவல்களை அப்போதைக்கப்போது கொடுப்பதற்கும், லோகல்பண்ட் இன்ஸ்பெகடர் என்ற கீழ்மட்ட அதிகாரியொருவர் இருக்கத்தான் இருந்தார். இருநதாலும எல்லாவற்றையும் அவரிடம ஒப்படைத்துவிட்டுத் தாம் உண்டு, தம் அலுவலகக் கடமைகள் உணடு என்று சும்மா கை கட்டிக்கொணடு பார்த்திருப்பதற்கு ஆரோக்கியசாமி அப்படியொன்றும் முழுக்க முழுக்க வெறும் அப்பாவியல்ல. அம்மாப்பட்டியைப் பொறுத்த வரையில் ஒவ்வொன்றையும் அவரே நேரடியாகப் பார்வையிட் விழைந்தார். குறைந்தபட்சம் மாதம் இரண்டுமுறையாவது அம்மாப்பட்டிக்கு ஆரோக்கியசாமி வருகை தராமலிருப்பதில்லை. அவர் எப்போது அம்மாப்பட்டிக்கு வந்தாலும் அடுத்துவரும் நாள், அல்லது நாட்கள் விடுமுறை நாட்களா எனறு பார்த்துக்கொண்டுதான் வருவது வழக்கம். சில சமயம் வாரக்கணக்கில்கூடக் கிராமததில் முகாம்போட்டுவிடுவார் அவர். அப்பப்ப, அப்போதெல்லாம் ஆரோக்கியசாமிக்குக் கிடைக்கினற வரவேற்பு!—அதை எப்படிச் சொல்வது! இராஜோபசாரம் என்று எதையாவது சொல்ல வேண்டுமெனருல், அது ஆரோக்கியசாமிககு வெங்குசாமியால் செய்யப்படும் உபசாரததைத்தான் சொல்ல வேண்டும். வெங்குசாமி ஆரோக்கியசாமிக்கு உபசாரம் செய்வதில் ஒருநாள்கூடச் சலித்ததுகிடையாது. மாருக நேற்று நடநததைவிட இனறு அதிகம் என்று எண்ணத்தக்க, வியக்கத்தக்கவகையில்தான் அது பெருகிக்கொண்டிருந்தது. ஆரோக்கியசாமியும் தமக்கு அளிக்கப்படும் வரவேற்பை ஏற்றுக்கொள்வதில் கொஞ்சங்கூடக் கூச்சமோ, தயக்கமோ காட்டியது கிடையாது.



'இன்னும் கொடு, இன்னும்கொடு; இன்னும் செய், இன்னும் செய்' என்ற தோரணையில்தான் அவர் ஒவ்வொன்றையும் ஏற்றுக்கொண்டு வந்திருக்கிருர்.

ஒவ்வொருதடவையும் ஆரோக்கியசாமி ஊருக்குக் கிளம்பிப் போகையில் தம் சட்டைப்பையைத் தொட்டுத் தொட்டுப் பார்த்துக்கொண்டுதான் பூரிப்போடு செல்வார். ஒவ்வொரு தடவையும் அவரை வழியனுப்பி வைக்கும்போது எங்கோ மலையோரத்திலிருக்கும் துண்டு நிலத்தையோ, பெரிய நிலத்தையோ உள்ளத்தில் மதிப்புப்போட்டுக்கொண்டுதான் மகிழ்ச்சி பொங்க வழியனுப்புவார் வெங்குசாமி.

ஆரோக்கியசாமிக்குச் சட்டபூர்வமாகக் கிடைக்கின்ற சம்பளம் ரூ. 150–அவர் குடும்பம் அப்படியொன்றும் பெரியது அல்ல. நாலு குழந்தைகள் பிறந்து, நாலும் இரண்டாண்டுகளிலும், மூன்ருண்டுகளிலுமாகப் போய்விட்டன. இதோ ஐந்தாவதாகப் பிறந்த கைக்குழந்தை பேபி. குழந்தை நல்ல ஆரோக்கியத்தோடுதான் இருக்கின்றது. முன்னவற்றைப்போல் நைநையென்று நோயில்கிடந்து நலியவில்லை. ஆனுல், அதைப்பெற்ற மாரியம்மாள் — ஆரோக்கியசாமியின் மனைவி நாளுக்கு நாள் நலிவடைந்துகொண்டு வந்தாள்.

வாரத்தில் இரண்டுதடவையாவது ஆரோககியசாமியை அவர் வீடடில்வந்து பார்த்துவிட்டுப்போகும் வெங்குசாமி மரியம்மாளின் உடல்நிலை மோசமடைவதை ஒருதடவை பார்த்துவிட்டுப் பதறிப்போனவர்போல் காட்டிக்கொண்டார். "இப்போதே ஆஸ்பத்திரிக்குக் கொண்டுபோகணும்!" என்று அவர் பரபரப்போடு, பேசியதோடு, செயலிலும் ஈடுபட்டார். டாக்சி ஒன்றைக் கொண்டுவந்து வீட்டெதிரில் நிறுத்தினுர்.

"வேண்டாம். ஆஸ்பத்திரிக்குக்கொண்டுபோக வேண்டியதில்லை. இங்கேயே இருக்கட்டும். நல்ல டாக்டராகப் பார்த்து வைத்தியமபண்ணச் செய்யலாம்" என்று ஆரோக்கியசாமி மிகவும் அமைதியாகப் பதில் சொன்னபோது அவர்மீது கோபமே கொண்டுவிட்டவர் போல் வெங்குசாமி துடித்து நின்ருர்.

"இல்லை ஆஸ்பத்திரிக்குக் கொண்டுபோய்த்தான் ஆகணும். அங்கே ஸ்பெஷல் வார்டிலே வைத்து விடலாம்!" என்று மாரியம்மாளை டாக்சியில் ஏற்றி ஆஸ்பத்திரியில் கொண்டுபோய் ஸ்பெஷல் வார்டில் சேர்க்கும்வரை அவர் காட்டிய பதட்டம், அவர் நடந்துகொண்ட மும்முரம்! அதை ஆரோக்கியசாமியால் எப்போதுமே மறக்க முடியாது. அங்கே ஒவ்வொரு செலவுக்கென்றும் கொஞ்சங்கூடத் தயங்காமல் அவர் எடுத்து நீட்டிய நோட்டுக்கள் கொஞ்சமா? வெங்குசாமி காட்டிய அந்த ஆர்வத்தைப் பார்த்துவிட்டு "அவர் என்ன உங்களுக்கு மிகவும் நெருங்கிய உறவா? உங்கள் மனைவியின் அண்ணனு?" என்று எத்தனை பேர் கேட்டிருப்பார்கள் ஆரோக்கியசாமியை!

அடடா, சாப்பாட்டு வேளையில் சாப்பிடாமல், ஊருக்குப் போகவேண்டுமென்ற எண்ணங்கூட இல்லாமல் எத்தனைநாள் ஆஸ்பத்திரிக்கும், ஆரோக்கிய சாமியின் வீட்டுக்குமாக அவர் அலைந்துகொண்டே இருந்திருக்கிறார்!

ஆரோக்கியசாமி எப்போதுமே ஓட்டைக்கைகாரர் என்று பேர் பெற்றவர். மொத்தமாக ஆயிரம் ரூபாய் அவர் கையிலிருந்தால் எதையுமே இலட்சியம் இல்லை என்று எண்ணக்கூடியவர் இல்லையென்றாலும், தன்னை விடப் பெரும் பணக்காரன் எவனுமே இல்லை என்ற போக்கில் செலவில் ஈடுபடுவதில் கெட்டிக்காரர் அவர். "பணம் என்னய்யா பெரிசு! பணம் இன்னிக்கு வரும். நாளைக்குப் போகும். மனுசன் வருவானா, மனுசன்? என்ற பொன்மொழி அடிக்கடி அவர் நாவிற் புரண்டு கொண்டிருக்கும். அவர் வீடே ஒரு விருந்துக்கூடமாக —அல்லது ஓட்டல் அறையாக—இரவு பகல் எந்நேரமும் காட்சியளித்துக்கொண்டிருக்கும். உறவினர் என்றும், நண்பர்கள் என்றும் தினம் தினம் யார்யாரோ அவர் வீட்டுக்கு வந்துபோய்க்கொண்டே இருப்பார்கள். "என்ன, இப்படிச் செலவு செய்கிறீர்களே! கிடைக்கின்ற சமயத்தில் ஒரு வீடுவாசல், அல்லது தோட்டம், துரவு என்று எதையாவது வாங்கிப் போட்டால்தானே பிற்காலத்துக்கு உதவும்?'' என்று நெருங்கிப் பழகுவோர் யாரேனும் சொல்ல வாயெடுத்துவிட்டால் போதும், ஒரேயடியாகக் கோபம் வந்துவிடும் ஆரோக்கியசாமிக்கு.

"எனக்கு எதுக்குத் தோட்டமும், துரவும்? நான் என்ன கிராமத்திலே போய்க் குடியிருக்கப்போகிறேனா? எனக்கு எதுக்குச் சொந்தத்திலே வீடும், வாசலும்? நகரத்திலே வாடகை வீடே கிடைக்காத நிலை வந்துவிட்டதா? ஐம்பது என்ற இடத்தில் எண்பதைக் கொடுத்தால் மணியான வாடகை வீடு கிடைக்கிறதே! பணம் வேணும் என்கிறபோதெல்லாம் நூற்றுக்கு இருநூறாக, ஆயிரத்துக்கு ஆயிரத்து ஐந்நூறாக எடுத்துக் கொடுக்க வெங்குசாமி இருக்கிறார். எனக்குப் பணமுடை ஏன் வரப்போகுது? இப்படியெல்லாம் இருக்கிறப்போ நான் ஏன் வேண்டாததைப்பத்தி வீண்



கவலைப்பட்டுக்கொண்டு கிடக்கணும்? பணத்தைச் சேர்த்துச் சேர்த்து, வைத்து வைத்துக் கடைசியிலே, போற காலத்திலே எதை வாரிகிட்டுப் போகப்போறோம்? என்னமோ இருக்கிற காலத்திலே முடையில்லாமல் இருந்தா போதாதா? எப்படியோ பணம் கிடைக்குது! அதைப் பெட்டியிலே பூட்டிவைச்சோ, பாங்கிலே போட்டுவைச்சோ அழகு பார்க்கிறதிலே யாருக்கு, என்ன இலாபம் — என்கிட்டேயும் பணம் இருக்குது ஏன்கிற வீண் பெருமையைத் தவிர?''

உண்மையில் ஆரோக்கியசாமியின் ஊதாரிக் குணமும், செயலும் வெங்குசாமியைப் பெரிதும் கவர்ந்துதான் இருந்தன. அவை தனக்கு எவ்வளவு பெரிய உதவியாக அமைந்திருக்கின்றன என்பதைச் சில சமயம் அவர் நினைத்துப் பார்ப்பதுண்டு. அந்த எண்ணம் சில சமயம் ஆரோக்கியசாமி மீது மட்டில்லாக் கனிவை உண்டாக்கிவிடுவதும் உண்டு. அந்தக் கனிவு காரணமாகத்தான் அவர் சற்றே தாராளமாகவும் நடந்துகொண்டு வந்தார் என்றாலும் என்றென்றும் அந்தத் தாராளப் போக்கைக் காட்டிக்கொண்டு போகவேண்டிய நிர்ப்பந்தத்தில் அவர் இருப்பதாக என்றுமே அவர் எண்ணியது கிடையாது. ஏதோ ஆரோக்கியசாமியின் அலுவல் காலத்தில் கிராமத்தில் இனாம் கணக்கில் — யார் பேரிலும் பட்டா இல்லாமல் கிடைக்கும் துண்டு நிலங்களும், பெரிய நிலங்களும் தம் பெயருக்குப் பட்டாவாகிவிடுவதற்குச் சிரமமில்லாத வாய்ப்பிருக்கிறது. அந்த வாய்ப்பு இருக்குமட்டும் தன்னுடைய தாராளத் தன்மையுமிருக்கட்டும் என்றுதான் அவர் உள்ளத்தில் முடிவு பண்ணிக்கொண்டிருந்தார்.

நீண்ட நாள் உடல்நலமில்லாமற் கிடந்த மரியம்மாள் திடீரென்று ஒருநாள் இறுதிப் பயணம் கிளம்பிவிட்டாள். அப்போது பேபிக்கு வயது மூன்றுதான். மூன்று வயதுக் குழந்தையை வைத்துக்கொண்டு தன்னந் தனியராகக் காலம் கடத்துவது ஆரம்பத்தில் சிரமமாகத் தோன்றியது ஆரோக்கியசாமிக்கு. அந்தச் சிரமம் இல்லையென்று ஆக்குதற்கு—அவர் பசையோடிருந்த காரணத்தால்—உற்றார், உறவினர் எனப்பட்டு, அவர் வீட்டிலே குழுமி வளைய வளைய வந்தோர் நான் முந்தி, நீ முந்தியென்று வந்தனர்; உதவினர். எல்லாவற்றிற்கும் மேலாக வெங்குசாமியின் ஆறுதல் மொழி அவரைக் கவலையில்லாத மனிதராகவே ஆக்கிற்று.

நாட்கள் வருடங்களாகி ஓடிக்கொண்டிருந்தன. மாதம் இரண்டு முறை தம் அருமை மகளோடு அம்மாப்பட்டிக்குப் போய்வந்துகொண்டிருந்தார் ஆரோக்கியசாமி. அங்கே வெங்குசாமி தன் தடபுடலான வரவேற்புகளையும், வழியனுப்புகளையும் நிகழ்த்திக்கொண்டேயிருந்தார். அவற்றைக் குறைத்துக்கொள்ளவும், நிறுத்திக் கொள்ளவும் வேண்டிய நிர்ப்பந்தம் இன்னும் ஏற்படவில்லை.

பேபிக்கு இப்போது பத்து வயது. ஒருநாள் பிற்பகல் நேரத்தில் ஆரோக்கியசாமி வீட்டுக்குத் திரும்பி வந்தார். "ஏனப்பா, வேலையோடு திரும்பிவிட்டீர்கள்?'' என்று கேட்ட பேபியின் குரல்கூடக் காதில் விழாதது போல் படுக்கையிற் போய்ப் படுத்துக்கொண்டார் அவர். முதலில் தலைவலி என்று சொன்னார். அன்று முழுதும் தலைவலிக்கான வைத்தியந்தான் செய்துகொண்டார். மறுநாள் அந்தத் தலைவலி இல்லை. உடலெங்கும் வலியாக இருந்தது. காய்ச்சல் வந்துவிட்டது. அன்று காய்ச்சலுக்கு மருத்துவம். அடுத்த நாளும் அப்படியே. நாலைந்து நாட்களில் காய்ச்சல் போய்விட்டது. என்றாலும் ஆரோக்கியசாமி எழுந்து நடமாடவில்லை. படுக்கையிலே கிடந்தார். வேறு ஏதோ வேதனை. இன்னதென்று தெரிந்துகொள்ள முடியாத நோய். டாக்டரை வீட்டுக்கழைப்பது மாறிற்று. ஆரோக்கியசாமியே மருத்துவமனைக்குப் போகும்படி நேரிட்டுவிட்டது!



"டாக்டர் சார், எனக்குஎன்னநோய்?' என்று கட்டிலில் படுத்தவண்ணம் அவரைச் சோதித்துப் பார்க்கவந்தவெவ்வொரு டாக்டரையும் கேட்கத் தொடங்கினர்ஆரோக்கியசாமி. எந்த டாக்டரும் இன்ன வியாதிதான் என்று அறுதியிட்டு ஒரு தடவைகூட — மறந்தாற்போலேனும்—கூறுவதற்கு முன்வரவில்லை. என்ன விந்தை! டாக்டர்களாலேயே சொல்லமுடியாத புதுவிதமான வியாதி ஆரோக்கியசாமியை வந்து பிடித்துக்கொண்டு விட்டதா?

வாரங்கள் மாதங்களாயின. முதலில் யார் யாரோ வந்தவர்கள் ஆரோக்கியசாமியைப் பார்ப்பதற்கு; திமுதிமுவென்று வந்தார்கள். நாள் போகப் போக வந்து பார்ப்போரின் தொகை அருகிக்கொண்டே போயிற்று. இவ்வேளை பார்த்துத்தானு வெங்குசாமியின் நடவடிக்கையிலும் பெரியதொரு திடீர் மாற்றம் ஏற்படவேண்டும்? அவர் ஒரு தடவைகூட வரவில்லை பார்ப்பதற்கு. 'நோய்ப் படுக்கையில், ஆஸ்பத்திரியில் கிடக்கிறேன்' என்று நாலைந்து கடிதங்கள் எழுதினர் ஆரோக்கியசாமி. ஒன்றுக்கும் பதில் கிடையாது. நாலைந்து தடவை ஆட்களை அனுப்பிப் பார்த்தார். ஆட்களிடம் 'இதோ வருகிறேன். முன்னல் போய்ச் சொல்' என்று செய்தி என்னவோ சொல்லியனுப்பப் பட்டது. ஆனல், அந்த மனிதர் வரவேயில்லை. 'ஒரு வேளை ஏதாவது பெரிய இக்கட்டிலோ, சிக்கலிலோ வெங்குசாமி மாட்டிக்கொண்டிருக்கிருரோ? அதனல் தான் அவரால் வந்து போக முடியவில்லையோ? என்ன இக்கட்டோ! எப்படிப்பட்ட சிக்கலோ! நோய்ப்படுக்கையில் நான் கிடப்பதால், அதை வெளியிடுவதற்குத் தயங்கிக்கொண்டு, இதோ வருகிறேன், இதோ வருகிறேன் என்று அவர் சொல்லியனுப்பிக்கொண்டிருக்கிருரோ என்னவோ! என்ன இருந்தாலும், ஒரு நடை இப்படி வந்துவிட்டுப் போவதற்குக்கூடவா அவரால் முடியாமற் போய்விட்டது?' என்று மனங்குழம்பினர் ஆரோக்கியசாமி. அவரால் எதையும் நம்பமுடியவில்லை.

கடைசியாக, இப்போதுதான் பணமுடையைக் கண்டார் ஆரோக்கியசாமி. மாதங்கள் ஆறு கடந்துவிட்டிருந்தன. 'எனக்கு நெருங்கிய சொந்தம்; எனக்கு நெருங்கிய உறவு' என்று சொல்லிக்கொண்டு அவர் வீட்டில் இரவு பகல் எந்நேரமும் வளைய வளைய வந்து நிரம்பிக்கிடந்த கூட்டத்தில் ஒரு குஞ்சுகூட இப்போது அங்கு இல்லை. அந்தக் கூட்டம் பறந்துபோய்விட்டது. வேறு பழுத்த மரத்தை நாடி ஓடிவிட்டது. பேபி மட்டும் எஞ்சினுள் வீட்டில்—சிறுமி பேபி.

கையில் பணம் இல்லை. பெருமுடை வந்துவிட்டது. உதவிக்கு ஒரு ஆள் கிடையாது.

படுக்கையிற் படுத்தவாறே தம் அலுவலகத்து நண்பர் தாமோதரனிடம் பேபியை அனுப்பிவைத்தார் ஆரோக்கியசாமி கடிதம் எழுதிக்கொடுத்து. தாமோதரன் ஆரோக்கியசாமியின் நெருங்கிய நண்பர் அல்லர். ஆனல், நல்ல உள்ளங் கொண்டவர். ஆரோக்கியசாமியின் ஊதாரித்தனத்தை அப்போதைக்கப்போது குத்திக் காட்டிக்கொண்டு வந்துள்ளவர். அதன்பின் விளைவு எப்படி, எப்படியெல்லாம் இருக்குமென்று முன்கூட்டி அறுதியிட்டுச் சொல்லியிருப்பவர். அவரிடம் பண உதவியை எதிர்பார்க்கமுடியாது. பரம ஏழை அவர். மன உதவி வேண்டுமட்டும் தருவார். மன உதவி யாருக்கு வேண்டும்?

எப்படியோ அந்த மன உதவிக்காரரின் ஒத்தாசையால், அம்மாப்பட்டி வெங்குசாமியிடம் பேபியை ஒரு ஆளோடு அனுப்பிவைத்தார் பணத்துக்காக.

பேபி வெற்றியோடு திரும்பிவந்தாள். அப்படியே வெங்குசாமி செய்தியும் சொல்லியனுப்பியிருந்தார். "முன்னைப்போல் என் கையில் இப்போது ஓட்டமில்லை. ஏதோ இருந்தது இந்த முந்நூறுதான். இனியும் என்னிடம் பணத்தை எதிர்பார்க்க வேண்டாம். பணத்துக்காக வரவேண்டாம் என்று சொல்லிவிடு" என்றது அவர் செய்தி. அந்தச் செய்தி ஆரோக்கியசாமியின் தலையில் பேரிடியாகவோ, பெரு வலிவுடைய வெடிகுண்டாகவோ விழவில்லை. அவற்றையெல்லாம்விடப் பயங்கரமான வேருென்ருக வந்து விழுந்தது. உடலைச் சிதைத்துச் சின்னுபின்னப்படுத்தும் வேலையைப் பின்னுல் வைத்துக்கொண்டு உள்ளத்தைப் பொசுக்கிக் கருக்கும் தன் பேராற்றலை அது முன்னுல் காட்டியது. மலைபோன்ற நம்பிக்கைக்கு இடமாக இருந்த வெங்குசாமி தம்மையொரு மண்ணுங்கட்டி நிலைக்குக் கொண்டு வந்து காட்டிவிடுவார்—அதுவும் தாம் நோய்வாய்ப்பட்டு ஆதரிப்பார் யாருமில்லாமல், கையிலொரு தம்பிடிக்கும் வழியில்லாமல் அலமந்து நிற்கும் நிலையிலென்று ஆரோக்கியசாமி எதிர்பார்க்கவேயில்லை. உடல்நோய் இப்போது அற்பமாகத் தோன்றியது. உள்ளத்து நோய் பெருகி வளரத் தொடங்கியது.

நாட்கள் இப்போது நகர்ந்தன. பேபியைத் தவிர அவர் அருகில் வந்து வாய்திறந்து பேசுவார் யாருமில்லை. பேபியைத் தவிர அவருக்கு உதவுவார் யாருமில்லை. வெங்குசாமி கடைசிமுறையாகஅனுப்பித்தந்த முந்நூறு ரூபாயை மிகமிகச் செட்டாக—பேபி மூலம் செலவு செய்தார் ஆரோக்கியசாமி. எவ்வளவு சிக்கனத்தைக் கடைப்பிடித்தும் மூன்று மாதங்களுக்குமேல் அந்தத் தொகை கையில் நிற்கவில்லை. மேலும் இரண்டு மாதங்களை எப்படி எப்படியோ கழித்தார்கள் அவர்கள். வீட்டி

லிருந்த, விலைபோகக்கூடிய பொருள்களையெல்லாம் விற்று விற்றுச் செலவு செய்துகொண்டு வந்தார்கள். முடிவில் ஆஸ்பத்திரிப் படுக்கையிலேயே மேலும் அவர் படுத்துக்கிடக்க வேண்டுவதில்லை. இனி வீட்டுக்குப் போகலாம் என்று டாக்டர் உத்தரவு போட்டுவிட்டார். "ஐயோ, வீட்டுக்குப் போய் இனி நான் என்ன செய்வேன்? கையில் தம்பிடியில்லை. உதவி செய்வார் யாருமில்லை.'' என்று கலங்கி நிலைகுழம்பினார் ஆரோக்கியசாமி. அவ்வேளை பேபிதான் அவருக்கு ஆறுதல் சொன்னாள்.

"நீங்கள் கவலைப்படாதீங்க அப்பா! இந்த ஆஸ்பத்திரி நாத்தத்திலே கிடக்கிறதைவிட வீட்டுக்குப் போனா ரொம்ப நல்லது. யார்கிட்டேயாவது நான் பணம் வாங்கிக்கிட்டு வந்துடறேன். எப்படியோ உங்கள் உடம்பு தேறிப்போயிட்டா, திரும்பவும் நீங்க வேலைக்குப் போயிடுவீங்க! நீங்க ஆபீசுக்குப் போயிட்டா, பிறகு நமக்குக் கவலையே இல்லே!''

உலகம் தெரியாத சிறுமி பேபியின், மாசு, மருவில்லாத சின்னஞ் சிறு உள்ளத்தின் ஆறுதல் மொழியும், தைரிய வார்த்தையும். ஆரோக்கியசாமியின் உள்ளத்தையும், உடலையும் சிலிர்க்க வைத்தன.

"கண்ணே, என் செல்லமே, இந்த வயதிலேயே எவ்வளவு பெரிய துன்பச் சுமையை உன்மீது ஏற்றி வைத்துவிட்டேன் நான்! எவ்வளவு கொடிய பாவி நான்!'' என்று ஆரோக்கியசாமி கதறவே தொடங்கி விட்டார்.

"ஆமா, யார் கிட்டேயாவது கடன் வாங்கலாமினு சொன்னியே, நமக்கு யாரம்மா இந்த நிலைமையிலே கடன் தருவாங்க?'' என்று தம்முடைய தேம்பலுக்கிடையே வினா எழுப்பினார் ஆரோக்கியசாமி.

"ஏனப்பா—அன்னிக்கு வெங்குசாமிகிட்டே ஆள் அனுப்பலே ஆபீஸ் மாமா, அவர் தரமாட்டாரா அப்பா?''

தாமோதரனின் ஏழ்மை நிலை பேபிக்குத் தெரியாது. என்றாலும் அவள் ஆபீஸ் மாமா என்று சொன்னபிறகுதான் புதியதொரு யோசனை கிளம்பியது ஆரோக்கியசாமிக்கு.

தாமோதரன் மூலம் தம் ஓய்வுகால ஊதியத்துக்கு ஏற்பாடு பண்ணலாம் என்று அவர் முனையவிழைந்தார். "சரிம்மா, அப்படியானா வீட்டுக்கே போகலாம்!'' என்று அப்போதே எழுந்து கிளம்பினார்.

ஆரோக்கியசாமி ஓய்வுகால ஊதியம் பெறுதற்கான காலம் இன்னும் வரவில்லை. அதற்கு மேலும் மூன்றாண்டுகளிருந்தன. அந்த மூன்றாண்டுகளும் அவர் அலுவல் செய்து தீரவேண்டும். எப்படிப் போவார் அவர் அலுவலுக்கு? உடல் இன்னும் தேறவில்லை. அது தேறுவதற்கு இன்னும் ஆறு மாதங்களாவது வேண்டும். உள்ளமோ திரும்பவும் அலுவலுக்குப் போகும் பக்குவத்தையே இழந்துவிட்டது; உடைந்துபோய்க் கிடந்தது. என்ன செய்வது இதற்கு? அலுவலகச் சம்பந்தப்பட்ட வேலைகளில் தீவிரமாகச் சிந்தித்து நறுக்குத் தெறித்தாற்போல் திட்டம் போட்டுச் சிறப்பான வெற்றிகள் எத்தனையோ கண்டிருப்பவர்தான் அவர். ஆனால், இன்று தமக்கு இன்றியமையாததொரு பிரச்சினையில் சிந்தித்துப் பார்க்கவே ஆற்றலற்றதொரு நிலையில் குழம்பி நின்றார்.

"தாமோதரன், என்னால் இனி அலுவலகத்துக்கு வந்து பணிபுரிய முடியுமென்று நான் எதிர்பார்க்கலே! அந்த நம்பிக்கையே எனக்குக் கிடையாது. இனி என்னால் அலுவல் செய்யமுடியாது என்றுதான் நினைக்கிறேன். மேலே என்ன செய்வது என்பதே தோன்றவில்லை. இனி எல்லாத்துக்கும் நீதான்! உன்னைத்தான் நம்பியிருக்கிறேன். உன்னைத்தான் எதிர்பார்க்கிறேன்'' என்று ஒரேயடியாகத் தாமோதரத்தின் தலையில் பாரத்தைப் போட்டார் ஆரோக்கியசாமி.

தாமோதரன் திகைத்தார். நல்லது செய்வதற்கு நான் முந்தி, நான் முந்தி என்று வரும் மிகமிகச் சிலரில் அவரும் ஒருவர்தான். அவரைப் பொறுத்தமட்டில் எடுத்துக்கொண்ட காரியத்தை முடிக்காமல் விடுவதுமில்லைத்தான். ஆனால், பாவம்—அவர் என்ன செய்வார்? ஆரோக்கியசாமியின் அந்தியகால வாழ்க்கையை நிர்ணயிக்கும் வேலை அவர் ஆற்றலுக்கு அப்பாற்பட்ட பெரிய வேலையாயிற்றே!

ஒரு நாள் பேபி கைப்பிடியாக வெங்குசாமியை அழைத்துக்கொண்டு வந்து தன் தந்தை எதிரில் நின்றாள். ஆரோக்கியசாமி தன் கண்களையே நம்பவில்லை. அவர் வெங்குசாமியை அதிசயப் பொருள் ஒன்றைப் பார்ப்பதுபோல் உற்று உற்று நோக்கினார். படுத்தே கிடப்பவர் புதுப்பலம் பெற்று எழுந்து உட்கார்ந்தார்.

வெங்குசாமியோ அசந்து நின்றார்.

"அடடா, இவ்வளவு மோசமான நிலையிலா இருக்கிறீர்கள்?'' என்று உரத்து வினவிப் பச்சாதாபப்பட்டார். உண்மையில் அவர் ஆரோக்கியசாமியை நேரில்பார்த்ததும்—அப்போதைக்குக்—கழிபேரிரக்கமே கொண்டுவிட்டார்.



"ஆமாம், நீங்கள்தான் என்னை நிர்க்கதியாக்கிவிட்டீர்கள். ஒரு நடை என்னை வந்து பார்த்துவிட்டுப் போகக்கூட நீங்கள் விரும்பவில்லை. உங்களை நான் மலையாக நம்பிக் கொண்டிருந்தேன். கடைசியில் என்னை ஏமாற்றங்கொள்ளச் செய்துவிட்டீர்கள். இப்போது என் உயிர் இந்த உட

லோடு ஒட்டிக்கொண்டிருப்பது இதோ இந்தக் குழந்தை ஒன்றுக்காகத்தான். அலுவலுக்குப்போக முடியவில்லை. பென்சனுக்கும் வழி ஏற்படவில்லை. இன்னும் சிலநாள் போனால்—இன்னும் சிலநாள் என்ன, இப்போதே வந்துவிட்டது—நானும் குழந்தையும் தெருவோரத்தில் நின்று இரந்துதான் உயிர்வாழவேணும்!'' தழு தழுத்த குரலில் பேசினார் ஆரோக்கியசாமி.

வெங்குசாமி மேலே வாய்திறக்காமல் நின்றார். 'இவருடைய ஆடம்பர ஆர்ப்பாட்டங்கள் எங்கே போயின? கெடுபிடியான பேச்சு எங்கே போயிற்று? அதிகாரக்குரல் எங்கே? வாழ்க்கையை அலட்சியமாக எண்ணும் போக்கு எங்கே?' என்று தமக்குள் எண்ணிக் கொண்டார் அவர். சிறிதுநேரம் அங்கே மூச்சொலி கூட எழவில்லை.

"வந்ததே வந்தீர்கள், என்னை நேரில் பார்த்துவிட்டீர்கள். என் நிலைமையை நான் மேலே விவரித்துச் சொல்லி நீங்கள் தெரிந்துகொள்வதற்கு ஒன்றுமில்லை. எங்களை உங்கள் கிராமத்துக்கே அழைத்துச் சென்று விடுங்கள். அங்கே எங்களுக்கொரு வீடுபார்த்துத் தந்துவிடுங்கள். இனி உங்கள் கிராமந்தான் எங்களுக்குப் புகல்!'' என்று தாழ்ந்துவேண்டினார் ஆரோக்கியசாமி. அந்த வேண்டுகோளை வெங்குசாமியால் மறுக்க முடியவில்லை. பயணத்துக்கு வேண்டிய ஏற்பாடுகள் உடனே செய்யப்பட்டன.

ஊருக்கு ஒதுக்குப்புறமாயிருந்த வெங்குசாமியின் கீற்றுக்கொட்டகை இப்போது ஆரோக்கியசாமியும், பேபியும் உறையுமிடம். அவ்விடத்திற்கு ஆரம்பத்தில் இரண்டொருமுறை வெங்குசாமி வந்ததோடுசரி. வெளியில் நின்றவாறே அவசர, அவசரமாக ஏதாவது சொல்லிவிட்டோ, வினவிவிட்டோ போனதோடு சரி.

அந்த ஒதுக்குப்புறமான கீற்றுக்கொட்டகையில் ஒதுக்கப்பட்டவர்களாகவே ஆரோக்கியசாமியும், பேபியும் உறைந்து வந்தார்கள். யாரோ தீண்டத்தகாதவர்களாகவோ, பயங்கர நோய் கொண்டுகிடப்பவர்களாகவோ அவர்கள் அந்த ஊராரால் கருதப்பட்டார்களோ என்னவோ, யாருமே அந்தப்பக்கம் தலைகாட்டுவதில்லை. தப்பித்தவறி யாரேனும் வந்தால்கூடத், தொலைவில், வெளியில் நின்று பார்த்துவிட்டோ, பேசிவிட்டோ போய் விடுவார்கள்.

கிராமத்தின் அமைதியான சூழ்நிலையும், தூய்மை நிறைந்த காற்றும், கண்ணுக்குக் குளர்ச்சிதரும் சூழலும், செயற்கை என்பதை எங்குமே காணமுடியாத இயற்கையான அமைவும் ஆரோக்கியசாமியின் உடல் நலிவைப் போக்கும் என்றுதான் அவர் எதிர்பார்த்தார்.

ஆனால், அங்குள்ள நடைமுறை அவர் உள்ளத்து நலிவைப் பெரிதாக்கவே உதவிற்று. நாளும், நாளும் நோய் பெருகிக்கொண்டே வந்தது. அதே நோய்க்கு மருந்து தேட அவர் விழையவில்லை. பேபிக்கு அதைப் பற்றி நினைத்துப் பார்க்கக்கூடத் தெரியவில்லை. நோய் தீர்க்கும் மருந்தைப்பற்றியே எண்ணாதபோது, பத்தியத்தை யாரால் நினைக்க முடியும்? மருந்தில்லை. பத்தியமில்லை. நலிவு, நலிவு; பெருகிவரும் நலிவு! துன்பம், துன்பம்; எல்லையில்லாத் துன்பம். அடிக்கொரு தடவை மயக்கம்போட்டு விழுவது ஆரோக்கிய



சாமியின் வாடிக்கையாகிவிட்டது. அவர் ஒவ்வொரு தடவையும் மயக்கம் போட்டுக் கிடக்கும்போது, அதோடு அவர் முடிந்துவிட்டார் என்று எண்ணியோ என்னவோ தேம்பித் தேம்பியழுவது பேபியின் வழக்கமாகிவிட்டது.

அதோ இன்றும் அப்படித்தான் ஆரோக்கியசாமி மயக்கப்போட்டு விழுகிறார்- பேபி தேம்பியழுகிறாள். சற்று நேரத்தில் வழக்கம்போல் மயக்கம் தெளிந்து ஆரோக்கியசாமி பேசுகிறார். குடிப்பதற்கு வெந்நீர் கேட்கிறார். அவர் நிமிர்ந்து உட்காருவதற்கு உதவுகிறாள் பேபி. திரும்பவும் நன்றாகப் படுக்கவைக்கிறாள். அதோ திரும்பவும் வருகிறதே மயக்கம்! சட்டென்று வருகின்றதே! மயக்கமா? கையும், காலும் இழுத்துக் கொள்கின்றனவே! விழி பிதுங்குகின்றதே! ஐயோ, அதோ தலை சாய்ந்துவிடுகிறது. இனி அவ்வளவுதான் பேபி, நீ அழுதுகொண்டே இருக்கவேண்டியதுதானா? —தாமோதரன் வரும்வரை அழுதுகொண்டே இருப்பது தான் வழியா?

# ஆப்பிரிக்காவில் திராவிட நாடு

சேலம் க. இராசாராம், பி. ஏ.,

வெடிகுண்டு வீசப்பட்டது, பல இளைஞர்கள் தூக்கு மேடைக்கு இழுத்துச் செல்லப்பட்டனர், தாய்க் குலம் வீறுகொண்டுஎழுந்தது; இராணுவப்புரட்சி ஏற்பட்டது; பலர் சுட்டுக்கொல்லப்பட்டார்கள், ஆயிரக்கணக்கானோர் சிறைபடுத்தப்பட்டனர். பயங்கரத் திட்டங்கள் போடப்பட்டன! சதி நடந்தது!, என்பன போன்ற சேதிகள் எதுவும் வெளிவராமலேயே ஒரு நாடு விடுதலை பெற்றது என்ருல், அது உலக அரங்கில் எவ்வளவு தூரம் பாராட்டப்பட்டிருக்கும் என்பதை நாம் எண்ணிப் பார்த்திடல் வேண்டும். அதுவும் ஏழே ஆண்டுகளுக்கு முன்னுல் தோன்றிய ஒரு இயக்கம் 'கத்தியின்றி இரத்தமின்றி'த் தனது நாட்டின் சுதந்திரத்தை வாங்கிற்று என்ருல், மேலும் நமக்குத் திகைப்பை அல்லவா அளிக்கிறது! தினசரி பயங்கரச் சேதிகளையே உலகுக்கு அளித்துக்கொண்டிருக்கும் ஆப்பிரிக்கக் கண்டத்திலே தான் இந்த மாதிரி பலாத்காரமற்ற முறையில் போராடி, மக்கள் மனத்தில் 'விடுதலை வேட்கையை' வளர்த்தது. ஏழே ஆண்டுகளில் தனது இயக்கத்தில் எட்டு இலட்சம் உறுப்பினர்களைச் சேர்த்து, அவர்களை அமைதியான முறைகளில் பயிற்றுவித்து இன்று அனைவரையும், பிரிட்டனின் பிடியில் இருந்து மீட்டு, உலக அரங்கில் தன் நாடு இடம்பெறவும், காமன்வெல்த்தில் அங்கம் வகிக்கவுமான தன்மையை உருவாக்கியவர் மிக்க இளைஞர் ஒருவர் என்ருல், நாம் மேலும், மேலும் ஆச்சரியப்படுவோம் அல்லவா? நாம் மட்டுமல்ல இன்றைய உலகமே, 'தங்க நீகா,' என்ற நாட்டை விடுவித்த முப்பத்தெட்டே வயது நிரம்பிய ஜூலியஸ் நியர்ரீ என்ற இளைஞனை வெகுவாகப் பாராட்டுகின்றது.

இந்த நாடு கடந்த நாற்பதுஆண்டுகளாகப் பிரிட்டனின்கீழ் அடிமையாகக் கிடந்தது. ஆப்பிரிக்கா கண்டத்தின் கிழக்குப் பகுதியில் கென்யாவுக்கு தெற்கேயும், நயாசாலாந்திற்கு வடக்கேயும், பெல்ஜியின் காங்கோவிற்குக் கிழக்கேயும் உள்ள சிறிய காடுகள் அடர்ந்த நிலப்பகுதிதான் 'தங்கநீகா' என்கிற பிரதேசமாகும். இதன் கிழக்கெல்லையாக இந்துமகா சமுத்திரம் அமைந்துள்ளது.

தங்கநீகா நாட்டைத் தட்டி எழுப்பியவர், மிக மிகச் சாதாரணமானவர். சிரித்த முகத்துடன், தந்தப் பிடிபோட்ட கருப்புக் கைத்தடியுடன் அவர் நடைபயில்வதை அந்த நாட்டு மக்கள் அடிக்கடி கண்டு வருகின்றனர். அவரது எளிய தோற்றமும், சலியாத உழைப்பும், அந்த மக்களை விடுதலைக் கிளர்ச்சிக்குத் தயாராக்கி உள்ளது.

ஜூலியஸ் நியர்ரீ என்ற அவர், விக்டோரியா என்ற ஏரிக்கரையில் அமைந்துள்ள சிற்றூரில் உள்ள நிலச்சுவான்தாரர் ஒருவர் வீட்டில் பிறந்தார். சிறுவயதில் தனது கிராமத்தில் இருந்து நாற்பது கல் தொலைவிலுள்ள முசோமா என்ற ஊரில் உள்ள கத்தோலிக்கப் பள்ளியில் பயின்ருர். தனது இருபதாவது வயதில் அண்டை நாடான யுகாந்தரவில் உள்ள மகரேர் என்ற ஊரில் ஆசிரியராகப் பயிற்சி பெற்ருர்.

மூன்று ஆண்டுகள் தங்கநீகாவில் உள்ள டபோரா என்ற ஊரில் ஆசிரியராகப் பணியாற்றிய பிறகு, அந்த நாட்டிலிருந்து மேல் படிப்புக்காக எடின்பர்க் பல்கலைக் கழகத்தில் சேர்ந்து படிப்பதற்காகப் பிரிட்டனுக்குச் சென்ருர். தங்கநீகா நாட்டிலிருந்து பிரிட்டனுக்குச் சென்ற முதல் மாணவர் இவர்தான். ஆயிரத்துத் தொளாயிரத்து நாற்பத்து ஒன்பதாம் ஆண்டு முதல் மூன்று ஆண்டுகள் ஜூலியஸ் நியர்ரீ, எடின்பர்க் பல்கலைக் கழகததில் பயின்று சரித்திரத்திலும், பொருளாதாரத்திலும் பட்டம் பெற்ருர்.

தாய்நாடு திரும்பிய ஜூலியஸ் நியர்ரீ, புகு என்ற ஊரில் உள்ள கத்தோலிக்கப் பள்ளியில் ஆசிரியராகப் பணியாற்றினர். ஆனுல் அவரது வாழ்வில் ஒரு சிறு திருப்பம் ஏற்பட்டது. தங்கநீகா நாட்டில் அரசியல் கலப்பற்ற "தங்கநீகா ஆப்பிரிக்கர்கள் கழகம்" என்ற நிறுவனத்திற்கு ஆயிரத்துத் தொளாயிரத்து ஐம்பத்து மூன்ரும் ஆண்டு தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அந்தக் கழகத்தையே, "தங்கநீகா ஆப்பிரிக்கர் தேசியக் கழகம்" என்ற அரசியல் இயக்கமாக மாற்றி அமைத்தார்.

நாட்டின் சூழ்நிலைகளை நன்கு உணர்ந்து செயலாற்றுவதில் மிகச் சிறந்தவராகக் காணப்பட்டார். அரசியல் கூட்டங்களை அவர் அடர்த்தியான பசுமரக் காடுகளிடையே நடத்திவரலானார். இந்த விந்தை மனிதர் நடப்பதில் சளைத்ததே கிடையாது. மக்களைத் தட்டிஎழுப்பும் ஆர்வம் அவரைத் தினசரி பல மைல்கள் நடக்கும்படி தூண்டிற்று. அவர் பசுமரக் காடுகளிடையே ஒவ்வொரு அடியெடுத்து வைக்கும்போதும், மக்கள் அவரது வழிநடக்கத் தங்களது பாதங்களை அவருடன் எடுத்துவைக்கத் தலைப்பட்டனர். அரசியலை அவர் மாணவர்கள் மத்தியில் எடுத்துரைத்தார்.

அந்த நாடு விடுதலை அடைய வேண்டியதன் அவசியத்தை அனைவரிடமும் வலியுறுத்தினார். எளிமையான தோற்றமும் கடுமையான உழைப்பும் அவரை அந்த நாட்டிற்கு அறிமுகப்படுத்திற்று. சாதாரண ஆசிரியராக இருந்துகொண்டே தன் நாட்டு மக்களைத் தட்டி எழுப்பும் வேலையில் அமைதியாக, ஆனால் அவர்கள் மனதில் ஆழப் பதியும்வண்ணம் எடுத்துச்சொல்லி, தன்பால் இலட்சக்கணக்கான மக்களை வசப்படுத்தினார்.



அறியாமையிலும், அநாகரிகத்திலும், வறுமையிலும் மூழ்கிக்கிடந்த மக்கள் இவர் பாதையிலே வளம் காணமுடியும் என்று நம்பினர். இவர் வகுத்த வழியிலேயே நடக்கத் தலைப்பட்டனர். தங்கனீகா ஆப்பிரிக்கர் தேசியக் கழகத்தை உருவாக்கியபோது அவருக்குத் தான் வகித்துவந்த ஆசிரியத் தொழிலை விட்டுவிடும் எண்ணமே ஏற்படவில்லை.

அரசியலின் நிலையற்ற தன்மையை எண்ணி, ஆசிரியத் தொழிலில் இருந்துகொண்டே, இந்த இயக்கத்தைத் தோற்றுவித்தார்கள். நாட்கள் செல்லச்செல்ல அரசியலில் ஏற்பட்ட வேலை மிகுதியின் காரணமாக அவர் தமக்கு விருப்பமான ஆசிரியத் தொழிலை தொடர்ந்து நடத்த இயலவில்லை. இவரது இயக்கம் பரவுவதைத் தடுக்கவும், இவரது திறமைகளைத் தனது ஆட்சிக்குப் பயன்படுத்தவும் எண்ணிப் பிரிட்டிஷ் கவர்னர் இவருக்கு நல்லதொரு பதவியை அளிகக முன் வந்தார்கள். ஐந்து குழந்தைகளைக்கொண்ட பெரிய குடும்பத்திற்குத் தலைவனான ஜூலியஸ் இதில் எந்த விதமான சபலத்திற்கும் ஆட்படாமல் அந்தப் பெரும் பதவியை ஏற்க மறுத்தார்.

தன்னுடைய நாட்டு மக்களுக்கு விடுதலை வாங்கித் தருவதுதான் தனது முதல் வேலை என்ற எண்ணத்திலேயே சற்றும் அயராது பணியாற்றி வந்தார்.

தங்கனீகா ஆப்பிரிக்கா தேசியக் கழகம் ஏராளமான இளைஞர்களைத் தனது வழியில் ஈர்த்தது. 92 இலட்சம் மக்களை மட்டுமே மக்கட் தொகையாக உள்ள சிறிய நாடான தங்கனீகா நாட்டில் ஜூலியஸ் எழுப்பிய அரசியல் உணர்ச்சி காட்டுத் தீபோல் நாடெங்கிலும் பரவிற்று. தேசியக் கழகத்தில் சுமார் எட்டு இலட்சம் மக்கள் உறுப்பினர்களானார்கள். ஆண்டுதோறும் ஆறு ஷில்லிங் சந்தா வசூலிக்கப்பட்டது. நுழைவுக் கட்டணமாக இரண்டு ஷில்லிங் வேறு வசூலிக்கப் பட்டது. நுழைவுக் கட்டணமாக இரண்டு ஷில்லிங் வேறு வசூலிக்கப்பட்டது. நாடு முழுவதும் கிளைகள் ஏற்படலாயின. ஜூலியஸ் பெரிய அளவுக்குக் கட்சியை வளர்த்த பிறகும் மிக்க எளிமையான தன்மையில் தனக்காக எதுவுமற்றவராக வாழ்ந்து வந்தார்.

இந்த இயக்கத்தின்வளர்ச்சியைக் குறைப்பதற்காக இந்தப் பகுதியை நிர்வகித்து வந்த கவர்னரான வின்னிங் பிரபு பெருமுயற்சி எடுத்துக்கொண்டார். தங்கனீகா கூட்டுக் கட்சியினரை, கவர்னர் மிகவும் பாராட்டி வளர்க்க முயன்றார். அதைப்பற்றி எந்தவிதமான கவலையும் இல்லாமல் தனது பணியிலேயே ஜூலியஸ் ஈடுபாடு கொண்டிருந்தார். இந்த கவர்னரின் காலம் முடிந்து, கென்யாவிலிருந்து சர். ரீச்சர்ட்டர்ன் புல் கவர்னராக நியமிக்கப்பட்டார்.

அவர் கென்னியாவிலிருந்தபோது கையாண்ட முறைகளை அறிந்த தங்கனீகர்கள் தங்களது வெறுப்பைக் கண்டனத்தின் மூலம் வெளிப்படுத்திக் கொண்டார்கள். புதுக் கவர்னர் வந்தபோது ஜூலியஸ் தேசத்துரோகக் குற்றம் சாட்டப்பட்டு அபராதம் அல்லது சிறை என்று தண்டனை விதிக்கப் பெற்றிருந்தார்.

ஜூலியஸ் தனது நண்பர்களின் விருப்பத்துக்கு மாறாக அபராதத்தைச் செலுத்திவிட்டு வந்தார். அப்போது அவர் அப்படி ஏன் செய்தார்? என்று வினவிய நண்பர்களுக்கு, 'வந்துள்ள புதுக்கவர்னருக்கு எடுத்தவுடனேயே தொல்லைதர விரும்பவில்லை. அவர் நம்மை புரிந்துகொள்ள அவகாசம் அளிப்போம்'' என்று கூறினார். அவரது வாசகங்கள் பொய்த்துப் போய்விடவில்லை. அடுதது நடைபெற்ற இரண்டு தேர்தல்களிலும் ஜூலியஸின் இயக்கமே பெருத்த வெற்றியைப் பெற்றது. இந்த இயக்கத்தின் சார்பில் நிறுத்தப்பட்ட ஆசியரும், வெள்ளையரும் வெற்றி பெற்றனர். தேர்தல்களின் மூலம் இந்த இயக்கத்தை ஆசியாக்காரர்களும், வெள்ளையரும் ஆதரிக்கின்றனர் என்பது தெரிய வந்தது. இந்த

வெற்றிகளின் காரணமாகக் கவர்னர் ஜூலியசையும் அவரது இயக்கத்தையும் வெகுவாக மதிப்பளித்துத் தீரவேண்டி ஏற்பட்டது. தேர்தலுக்குப் பிறகு நிறுவிய அரசாங்க நிர்வாக சபையில் மூன்று ஆப்பிரிக்கர்களும், ஒரு ஐரோப்பியரும், ஒரு ஆசியாக்காரரும் இடம் பெற்றனர். ஜூலியஸ் மட்டும் எந்தப் பதவியும் ஏற்க மறுத்துச்சாதாரணமாகவே இருந்துபணிபுரிந்து வந்தார்.

நாடு முழுவதும் கூட்டுறவு முறையில் பல முன்னேற்றங்களைச் செய்துள்ளார். படிப்படியாக நாட்டைப் பிரிட்டனிடம் இருந்து விடுவித்து 1961ம் ஆண்டு டிசம்பர் மாதம் 9ந் தேதி அந்த நாட்டுக்கு விடுதலை வாங்கித் தந்தார். இன்று அந்த இளைஞர் அந்த நாட்டின் பிரதமராக உள்ளார்.

தனது நாட்டை விடுவித்துவிட்ட அந்த இளைஞர் தனது எண்ணத்தில் முழு வெற்றி பெற்றுவிட்டாரா? என்றால் இல்லை என்றே கூறலாம். தனது தாய்நாடான தங்கனீகா விடுதலைபெறும்போதே, தனது இனமக்கள் வாழும் நாடுகளான கென்யாவும், யுகாந்தாவும் விடுதலை பெற்று,மூன்று நாடுகளும் இணைந்த கிழக்குஆப்பிரிக்கக் கூட்டாட்சியை அமைக்கவேண்டும் என்பதில் அவர் இன்னமும் சளைக்காது பாடுபட்டு வருகின்றார். எப்படி இன்றைய தினம் நாம் திராவிடக் கூட்டாட்சி அமைக்கப் பாடுபடுகின்றோமோ, அதே தன்மையில் ஜூலியஸின் மனமும் இயங்கிவருகின்றது. "மூன்று நாடுகள் இணைந்து இருக்கலாம் என்று கருதும் ஜூலியஸிடம், அகில ஆப்பிரிக்காவும் ஒன்றாக இருக்கலாம்' என்று கனா நாட்டுப் பிரதமர் நுக்ருமா அவர்கள் கருத்துத் தெரிவித்துத் தன்னுடன் சேரும்படி அழைத்தார். அந்த அழைப்பை ஜூலியஸ் ஏற்றுக்கொள்ளவில்லை. தன் இனமக்கள் தனி வாழ்வுதான் நடத்த இயலும் என்று திட்டவட்டமாக அறிவித்தார். சமீபத்தில் கென்யா நாட்டின் விடுதலை வீரரான ஜோமோ கென்யாட்டாவைச் சந்தித்து இருவரும் பொதுக்கூட்டத்தில் கலந்து கொண்டு, கிழக்கு ஆப்பிரிக்கக் கூட்டாட்சியை ஏற்படுத்த வேண்டியதன் அவசியத்தை வற்புறுத்தியுள்ளனர். ஆப்பிரிக்கக் கண்டத்தில் புதிய திராவிடநாடு மலரப் போவதை விரைவில் உலகம் காணப்போகின்றது. இதை நன்றாக உணர்ந்த பலர் நம்முடைய நாட்டில் உள்ளனர். ஆனால் அவர்கள் நான்கு மாநிலங்கள் எப்படிச் சேரும்? எப்படி அது கூட்டாட்சியை அமைக்கும். ஆந்திரம் கேட்டதா? என்று பழைய கேள்வியை திருப்பித் திருப்பிக் கேட்டவண்ணம் உள்ளனர். அரசியலில் உள்ள அந்தப் பரிதாபமிக்க தோழர்களுக்கு ஜூலியஸ் நியர்ரியின் முயற்சியையும், அங்கே ஓர் திராவிடம் அமைக்க முயற்சிப்பதையும் நாம் எடுத்துக் காட்டுவோமாக!!

# தமிழர் விழா!

—[ புதுவைச் சிவம். ]—

சீர்மிகு வாழ்வில் சிறந்தநற் றமிழர்
சீர்த்தியை யறிந்திட வேண்டின்,
பார்தனில் அன்னார் படைத்துள விழவின்
பான்மையை யறிந்திடு தோழா!

செறிந்திடும் நல்ல அறிவினுக் கேற்பச்
சிறந்ததோர் பெருவிழாக் கண்டார்!
அறிவுளோர் எல்லாம் அவ்விழாப் போற்றி
அகத்தினில் மகிழ்வே கொண்டார்!

பயன்மிக வளிக்கும் அவ்விழா வதனைப்
பகர்ந்தனர் பொங்கல் எனவே!
வியனுறு திருநாள் தமிழருக் கதுவே
வேறிலை எனநீ அறிவாய்!

மக்களின் அறிவை மாய்த்திட வேண்டி
மாண்பிலாக் கதைபல கூறி,
மிக்கிருள் வாழ்வை யளித்திடும் மற்றவை
வெம்பகை தந்ததென் றறிவாய்!


வீறுகொள் தமிழர் கோள்நிலை யறிந்தார்
என்பதை விளக்கிடும் நன்னாள்!
மாறிடும் பருவம் வாழ்வினிற் புதுமை
மலர்ந்திடச் செய்திடும் பொன்னாள்!

புதியநல் வாழ்வு பூத்திடச் செய்யும்
பொங்கலை வாழ்த்திடு தோழா!
அதிவிரை வாகத் தோன்றிடும் திராவிடம்!
ஆர்ந்தநல் வாழ்வினிற் களிப்போம்!

# இளமைக்கு வேண்டுகோள்!

சி. பி. சிற்றரசு.

குற்றமற்ற டிரைபஸ் டெவில்ஸ் தீவில் பிரான்சு இராணுவ நீதிமன்றத்தில் தீர்ப்பால் தள்ளப்பட்ட போது—நீதிமான்கள் கலங்கினர். நீதி நிலைமாறிவிட்டதே என்றேங்கினர். நிரபராதிகள் இனி நீதிமன்றம் செல்லத் தேவையில்லை. மக்களுக்கிருந்த கடைசிப் பாதுகாப்புக்கோட்டையின் கபாடக் கதவுகள் இழுத்துச் சாத்தப்பட்டுவிட்டன. அவன் செய்த குற்றம் என்ன? பிரான்சின் தன்மானத்திற்கான போர்க்களத்தில் இரத்தம் சிந்தினான். இது ஒரு குற்றம், உயர்தர இராணுவ வீரனாக இருந்தான், இது இரண்டாவது குற்றம். தன்னையீன்ற தாய்த்திருநாட்டுக்காகத் தலைபோகுமே என்றஞ்சாமல் போர்க்களம் சென்றான். இது மூன்றாவது குற்றம். எல்லாவற்றையும்விட மிகப் பெரிய குற்றம், அவன் யூத குலத்திலே பிறந்தவன். இதுதான் அவன் செய்த எல்லாவித குற்றங்களைக் காட்டிலும் மிகப் பெரிய குற்றம். இவைகளெல்லாம் குற்றமில்லை என்கிறீர்களா—அன்று குறிப்பாக ஐரோப்பாவிலும் சிறப்பாக ஸ்பெயின் பிரான்சு நாடுகளில் உலவி வந்த யூத எதிர்ப்பு இயக்கத்தாரால் (Anti Semitist) மிகப் பெரிய குற்றமாகக் கருதப்பட்டன. பிரான்சின் இராணுவ இரகசியங்களை ஜெர்மனிக்குச் சொல்லிவிட்டுத் தன்னைப் புனிதவான் என்று காட்டிக் கொண்ட கொடியவன் எஸ்டெரெஸி என்பவன்தான் இவ்வளவு பெரிய பயங்கரமானகுற்றத்தைக் குற்றமற்ற டிரைபஸ் மேல் சுமத்தித் தண்டனை வாங்கித் தந்துவிட்டான். டிரைபஸ் அலைக்கடல் நடுவே, கொடுமையாளன் எஸ்டரெஸி இராணுவ உடையில் கம்பீர நடைபோட்டுத் திரிகின்றான். நீதி தனக்குக் கிடைத்த ஆதாரங்களைக்கொண்டு தண்டனை கொடுத்துவிட்டது. நீதி சிலநேரம் மதியைத் தீண்டுவதில்லை. மதி நீதிக்கு முன்னால் பேச அஞ்சுவதும் உண்டு. இரண்டும் சில வழக்குகளின் போது சரியாசனத்திலமர்ந்து விடுவதுமுண்டு. இந்தச் சிக்கலிலே சிக்கித் தவித்தவன்தான் டிரைபஸ்.



பலம் பொருந்திய இராணுவ நீதிமன்றத்தின் தீர்ப்பை எதிர்த்து எவர் பேசுவார். எனினும் நீதி தன் பாதையை விட்டு விலகியபோது "நீதியே! நில். வழிதவறிவிட்டாய். வழி தவறுவது யாருக்கும் இயற்கை. தவறை உணர்ந்து திருத்திக்கொள்வதுதான் பெருந்தன்மை. அந்தப்பெருந்தன்மையை நான் இந்தஇராணுவ நீதிமன்றத்தாரிடம் எதிர்ப்பார்க்கவில்லை. ஆனால் உன்னிடம் உறுதியாக எதிர்ப்பார்க்கின்றேன். உன் மகிமையை நீ அறிவாயோ இல்லையோ; ஆனால், நான் நன்றாக அறிவேன். ஆயுதத்தால் தன்னைக் காப்பாற்றிக் கொள்ளுகின்றான் வீரன். அறிவால் தன்னைக் காப்பாற்றிக்கொள்கின்றான் அறிஞன். படையால் தன்னைக் காப்பாற்றிக்கொள்கிறான் பார்த்தீபன், செல்வத்தால் தன்னைக் காப்பாற்றிக்கொள்கிறான் சீமான், இவைகள் ஒன்றுமே இல்லாதவனை நீதான் காப்பாற்ற வேண்டும்! அப்படியும் இன்று டெவில்ஸ் தீவிலே வாடும் டிரைபஸ் தன்னை வாளாலும் காப்பாற்றிக் கொள்ளவில்லை. காரணம், அவன் வாள் எடுத்தது அவனைக் காப்பாற்றிக்கொள்ள அல்ல; இந்த நாட்டைக் காப்பாற்ற. அவன் மாசு மருவற்றவன் என்று உனக்குப் பரிபூரணமாகத் தெரிந்திருந்தால், அவனை இவ்வளவு கொடுமைக்காளாக்கியிருக்கமாட்டாய். அவனை உனக்குக் கொடியவனாக அறிமுகப்படுத்திவிட்டார்கள். ஆகவேதான், உன்னை நேரில் சந்திப்பதற்கு முன்னால், அந்தக் கொடியவர்களை நடுத்தெருவுக்கிழுக்கிறேன். அதனால்தான் அரோரி பத்திரிக்கையிலேயும், பிகாரி பத்திரிக்கையிலும்எழுதுகிறேன்!

குடியரசுத் தலைவரின் பரிசீலனைக்குப் பிரஸ்தாப விஷயத்தை வைக்கிறேன்! இளமையை எழுப்புகிறேன். நின்றுகொண்டே தூங்கும் கொடிய பழக்கத்தை விட்டுவிடும்படி தாய்நாட்டின் முதுகில் தட்டுகிறேன். என் ஒருவனால் முடியும் என்பதல்ல. ஆனால் என்னைத்தான் இதைச் செய்யும்படி என் மனம் தூண்டுகிறது. விளக்கை ஏற்றுபவன் ஒருவன்தான், வெளிச்சம் பலருக்கல்லவா. ஆகவே, இருண்டு கிடக்கும் என் தாயகத்திற்கு விளக்கேற்றி வைக்கிறேன் என்று எடுத்தான் எழுதுகோலை. இருள் ஒழிந்தது. நீதி குளித்துவிட்டுக் கரையேறிய கட்டழகன்மேல் பொலிவுபெற்ற முகத்தோடு வெளியே வந்தது. டிரைபஸ் விடுதலை பெற்றான். பிரான்சு தான் செய்த தவறுக்காக எழுத்து வேந்தன் எமிலிஜோலாவின் கல்லறைமுன் கண்ணீர் கொட்டி நின்றது. இது நடந்த வரலாறு.

இளமைக்குவேண்டுகோள்: என்று அறிஞர் அண்ணா எழுதினால்:—

சாவது எப்படி உறுதியோ, அப்படியேதான் திராவிடம் பிரிவதும் உறுதி. இந்த வேண்டுகோள் உடல் தளர்ந்து நெற்றியில் சுருங்கல்கள் நிறைந்த எங்களைப் போன்றவர்களுக்குள்ள—

சாவின் சன்னிதானத்திற்கு வெகுதூரத்திலிருக்கும் உங்கள் கையிலே திராவிடமிருக்கும், நீங்கள் மிதிக்கும் மண்ணும், குழவிப்பருவத்தில் உண்ட மண்ணும், நீங்கள் வாரியிறைத்து விளையாடிய மண்ணும் திராவிடந்தான். எனினும், நாம் அதில் நடமாடுகிறோம். வேற்றூர்கள் போல—இந்த இழிநிலை போகவேண்டுமென்பதே நமது எண்ணமுமல்ல, ஆலோசனையுமல்ல, தீர்ந்த முடிவு.

வயோதிகப் பருவத்தின் முதல்விளிம்பிலே கால் வைக்கும் எங்களைப்போன்றோர் பெறும் உற்சாகமும், நம்பிக்கையும், ஒருகணம் திரும்பிப்பார்க்கும்போது மலைபோல் குவிந்திருக்கும் இளமைதான். நான் உங்களை எதையும் இழக்கச்சொல்லவில்லை. அவ்வளவு கல்மனதுடையவனா நான் — இல்லை. ஒருகால் விடுதலைப் போரிலே ஒரு மறவன் பெறவேண்டிய கல்மனதைப் பெற்று உங்களை ஏதாவது இழக்கச் சொன்னாலும்; நீங்கள் என்ன வைத்துக்கொண்டிருக்கிறீர்கள் இழக்க. செந்நீர், கண்ணீர், வெப்பநீர் என்பவைகள்தவிர வேறென்ன.

நாம் கேட்கும் திராவிடம் இந்த மூன்றையும் சிந்திய பிறகுதான் கிடைக்குமென்றால், நீங்கள் என் கட்டளையையேற்றல்ல. உங்கள் பிறவியிலேயே ஊறி விட்ட விடுதலை உணர்ச்சி மிகுதியால் நீங்கள் சிந்துவீர்கள் என்று நான் அறிவேன். ஆனால் இளமையே! இந்த மூன்றைமட்டும் கேட்கும் என்றெண்ணாதே—

நீங்கள் கேட்டும் திருவிடம் அதோ, அந்தத் தூக்கு மேடையில்தான் இருக்கிறது. அங்கு சென்று பெற்றுக் கொள்ளுங்கள் என்றால், எவ்வளவுபேர் தயாராக இருக்கிறீர்கள் என்றறியவே இந்த வேண்டுகோள்விடுகிறேன். நீங்கள் கேட்கும் திருவிடம், அதோ அந்த இரத்தத் தடாகத்தில்தான் உண்டென்றால், அதில் நீந்திச் சென்று தாயகத்தைப்பெற எவ்வளவுபேர் தயாராயிருக்கிறீர்கள் என்பதை அறியவே இந்த வேண்டுகோள் விடுக்கின்றேன்.

பிணக்குவியலினிடையில் மயான அமைதியில், எலும்புக்கூடுகளில், வெந்த சாம்பலின் இடையில் எத்தனைபேர் கைகோர்த்து நிற்கப்போகிறீர்கள் என்பதற்காகவே இந்த வேண்டுகோள் விடுக்கின்றேன்.

நீங்களனைவரும் எதிர்காலத்தின் கர்த்தாக்கள் என்ற காரணத்தினால்தான் உங்களை அழைத்திருக்கின்றேன்.

வரலாற்றை உணர்ந்தவர்களும், வரலாற்றை மாற்றியமைக்கக் கூடியவர்களும், அயராதுழைக்கும் ஆற்றலை இளமை உங்களுக்குத் தந்திருக்கிறது என்ற காரணத்தாலும், இதுவரை நீங்கள் காட்டிய ஆர்வத்தின் நம்பிக்கையாலும் உங்களை அழைக்கின்றேன். வெறும் உடலும், அதிலும் ஊசலாடும் உயிர்தான் வாழ்க்கை என்றால், அந்த வாழ்க்கைத் தத்துவத்தின் ஆசானாக வடவர் இருப்பதும், நாம் அதற்கு அடிமைப் பட்டுக்கிடப்பதும் அனுமதிக்கமுடியாது என்ற ஒரே ஒரு அறைகூவல்தான் திராவிடநாடு திராவிடருக்கே என்பது.

அன்று உயர்தர இராணுவ நீதிமன்றத்தை, குடியரசுத் தலைவரை, அநீதியை எதிர்த்துப் போரிட்டு வெற்றிக்கண்டான் ஒரே ஒரு ஜோலா.

நீங்கள் ஒவ்வொருவரும் ஜோலாக்களானால், அவன் அருமைத் தோழன் செசானேவாக நானிருக்கின்றேன்-அவன் டிரைபசுக்கு வாழ்வளித்தான்! அதைப்போல் நீங்களும் நானும், அவனும் என்று இருண்ட திராவிடத்திற்கு வாழவளிக்கக் கிளம்புவீர் என்பதுதான் இளமைக்கு வேண்டுகோள்! என்று முடிக்கிறேன். ★

## மனிதப் பண்பு

தான் பெறும் பேறு எதுவாயினும் அதைப் பிறருடன் கலந்துகொள்ளவேண்டும் என்னும் அவா பாராட்டத்தக்கது. எல்லார்க்கும் அத்தகைய பரந்த மனப்பான்மை அமைவதில்லை. தனியாகத் தனக்கென்று பொருளையோ சுகத்தையோ நாடுபவரைத்தான் நாம் உலகில் பெரிதும் காண்கிறோம். அது மிகக் கீழான இயல்பாகும். தனக்குக் கிடைத்ததை மற்றவர்களுடன் பங்கிட்டுக் கொள்ளவேண்டும் என்று தானாக உள்ளத்தில் எழுவதுதான் மனிதப் பண்பு.

# மண்மகள் தரும் செல்வம்

"அருப்பை கிழார்"

பிறந்தது மண்மேல்; வளர்ந்தது மண்மேல்; வாழ்வது மண்மேல்! மடிவது மண்மேல்; என்று கூறுவது வேதாந்தமல்ல. வாழ்க்கைத் தத்துவம்!

மனிதகுலம் தோன்றி ஒடுங்குவதுபற்றிக் கூறவந்த வேதாந்திகள், பழம்பெரும் வாழ்க்கைத் தத்துவத்தையே 'வேதாந்தம்' என்று மேற்பூச்சுக் கொடுத்துவிட்டார்கள்!

"இலமென்று அசைஇ இருப்பாரைக் காணின்
நிலமென்னும் நல்லாள் நகுமே"

என்பது வள்ளுவன் வாக்கு.

எம்மிடம் ஒரு பொருளும் இல்லை என்று எண்ணி வறுமையால் சோம்பி இருப்போரைக்கண்டால் அத்தகையோருடையஅறியாமையை எண்ணி நிலமகள் தனக்குள்ளே சிரிப்பாள் என்பது இதன் பொருள். வள்ளுவர் இவ்வாறு கூறியது வேதாந்தமா? இல்லை! வேதாந்தம் கூறுவது வள்ளுவருக்கு வழக்கமில்லை. வாழ்க்கையின் முழுமையான தத்துவத்தையே அவ்வாறு கூறினர்.

மனித குலம் உண்பனவும் உடுப்பனவும் பூண்பனவும் பொருந்துவனவும் மண்மகள் தந்த செல்வமேயன்றி வேறில்லை!

எனவே, என்னிடம் ஒரு பொருளும் இல்லையே என்று எண்ணி இருப்போரை 'சோம்பேறிகள்---நில மகளின் பெருமையை உணராதவர்கள்' என்று குறிப் பிட்டார் வள்ளுவர்!

தமிழகம் இன்று வறுமையின் நிலைக்களனாகி வாடு கிறது. வாழ்விழந்தோரெல்லாம் மதியிழந்தோராகி, பல்வேறு வகையில் மாய்வதைக் காணுகின்றோம். இத்தகைய வாட்டமும் கேடும் வரக் காரணம்தான் என்ன?

அந்நியர் ஆதிக்கத்தில் நீண்ட நெடுங்காலமாகத் தொடர்ந்து சுரண்டப்பட்டு வருவது ஓர் காரணம்; என்றாலும்கூட, அதுவே முழுமையான காரணம் என்று சொல்லிவிட முடியாது!

வள்ளுவர் கூறியதுபோல நம்மவர்கள் நிலமென்னும் நல்லாளைக் கூர்ந்து நோக்கவில்லை.

நிலம் என்றவுடனே மா, பலா, வாழை, கரும்பு, தென்னை, நெல், கம்பு, சோளம் ஆகிய விளைபொருட் களே மிகப் பலருக்கு நினைவில் தோன்றும்.

காரணம்; இடைக்காலத்தில் நம்மவர்கள் உழவுத் தொழில் புரிகிற அளவோடு சிந்தனையை நிறுத்தி விட்டதே!

பூமியில் கிடைக்கும் பல்வேறு பொருட்களையும் எவ்வாறு பயன்படுத்தலாம் என்று, அவர்கள் சிந்திக்கவே இல்லை. மேலை நாட்டு அறிஞர். பெருமக்கள் வாழ்க்கை யில் புதியன புகுத்துவதையே கலையாக---பொழுது போக்காகக் கொண்டிருப்பதால், அவர்கள் நிலமகளின் செல்வத்தை நன்கு அனுபவிக்கக் கற்றுக்கொண்டு விட்டனர். அதன் பயனாக மனிதகுலம் அடைந்து வரும் பயன்கள் ஏராளம்---ஏராளம்!

அந்தப் புதிய அனுபவங்கள் மூலமாக மேலை நாடு களில் பல்வேறு தொழில் முறைகள் தோன்றி வளர் கின்றன.

நாமோ நமது பூமியில்--நாம் பிறந்த மண்ணகத்தில் ---என்ன என்ன புதுமைகள் உள்ளன என்று சிந்தித்ததே இல்லை! சிந்தியாததுகூட அதிசயமில்லை. கொஞ்ச நஞ்சம் கண்டறிந்த அனுபவங்களைக்கூட விரிவுபடுத்தாமல் மறந்துவிட்டிருக்கிறோம்!

எடுத்துக்காட்டாக, குடைந்த கல் மாடங்களில் பண்டை நாட்களில் தீட்டி இன்றுவரை உருக்குலையாமல் இருக்கும் சித்திரவண்ணங்களைக் கூறலாம். சித்தன்ன வாசல் குடைமாடத்தில்---கற்பாறையில், வெயிலும் மழையும் தாக்குகின்ற இடத்தில்---அழகிய வண்ண ஓவியங்கள் தீட்டப்பட்டுள்ளன. அந்த ஓவியத்தில் பயன்பட்ட வண்ணங்கள் இன்றைய அறிவாளர்களின் சிந்தனையைக் கிளறிவிடுகின்றன. காரணம்; பல நூறு ஆண்டுகளாக மழையையும் வெயிலையும் தாங்கிக் கொண்டு, அந்த வண்ணங்கள் மறையாமல் கலையாமல் இருப்பதுதான்!

அந்த வண்ணத்தின் செய்முறை என்ன? எவருக்குமே தெரியாது!

இதுமட்டுமா? வெட்டுண்ட காயங்களில் உடனே வைத்துக் கட்டினால், மறுநாளே காயமெல்லாம் ஆறிப் போகக்கூடிய சதையொட்டிப் பூண்டு என்று ஒன்று இருக்கிறதாம். அந்தப் பூண்டுகளை அக்காலத்தில் போர்க் களங்களில் காயம்பட்ட வீரர்களுக்குப் பயன்படுத்தினர் களாம்! இந்த விவரங்களை ஏட்டுச் சுவடிகள் சிலவற்றில் காண முடிகிறதே தவிர, அந்தப் பூண்டு எங்கே கிடைத்தது---அந்தப் பூண்டின் நிறம், தன்மை என்ன--- என்ற தொடர்ந்த அடையாளம் காணக்கூடியவர்கள்--- இன்றைக்கு அதை அனுபவத்தில் கொண்டுவரக் கூடியவர்கள் ஒருவர்கூட இல்லை!

இதுபோல் மங்கி மறைந்து---மறந்துவிட்ட மண் மாதாவின் செல்வம் கொஞ்சநஞ்சமல்ல!

காளான் என்பது ஒரு உணவுப் பொருள். அடை மழை காலங்களில் காடுகரம்பு வரப்பு வாய்க்கால் கொல்லைப் புறங்களில் தானாக முளைக்கக்கூடியது என்று எல்லாரும் அறிவோம்.

காளானை ஒருமுறை தின்று சுவை கண்டவர்கள் மீண்டும் அதனை விரும்பாமல் இரார், அத்தகைய சுவை மிக்க உணவுப் பொருள் தமிழகத்தில் மழை காலத்தில் தற்செயலாகக் கிடைத்தாலன்றி அதைப் பெற முடியாது.



ஆனுல், ஜப்பானில்செயற்கை முறையில் குறிப்பிட்ட இடத்தை மழைக்காலம்போல் இருக்கச்செய்து, அங்கே காளான் பயிராக்கி எல்லாக் காலங்களிலும் சந்தைகளில் கடை வீதிகளில் கொணர்ந்து விற்பனே செய்கிருர்களாம்!

தமிழகத்து மண்மாதாவின் மாபெரும் செல்வ வனப்புப்போல் மேற்குத்தொடர்ச்சி மலே இருக்கிறது. அந்த மலே மேனியில் எண்ணற்ற பூண்டுகள் தற்செயலாகப் பயிராகின்றன. அவற்றில் கொடியைவிடப் பூண்டுகளிலிருந்து, தேடரிய அமுதம் போன்றவை உள்ளன. அவற்றை எவ்வகையில் பயன்படுத்தலாம் என்று கண்டறிந்தால் இவ்வையகத்தையே விலேக்கு வாங்கலாம்!

'சர்ப்ப கந்தா' என்ற ஒருவகைப் பூண்டின் வேர், அண்மைக் காலத்தில் கப்பல் கப்பலாக அமெரிக்காவுக்கு ஏற்றுமதி செய்யப்பட்டது.

அந்த வேர் இரத்த அழுத்த நோய்க்கு மிக்க பயனுடைய மருந்து செய்ய உதவுகிறதாம். ஆகவே, அதனே அமெரிக்கா ஏராளமாக இறக்குமதி செய்கிறது.

அந்த வேர், மேற்குத்தொடர்ச்சி மலேயில் தன்னிச்சையாகப் பயிராவதால், வியாபாரிகள் கூலி ஆட்களே ஏவி வேர்களேச் சேகரித்துச் சிறிது பணம் தேடினர்கள்---அவ்வளவுதான்!

இன்னும் பூமிக்கடியில் என்னென்ன உள்ளன என்று ஆராயவே வழியில்லே. சில இடங்களில் அப்பிரேகம் தென்படுகின்றது. குறிப்பாக இராமநாதபுரம் மாவட்டத்தில் வத்திராயிருப்புப் பகுதியில் மலேயடிவாரத்தில் தற்செயலாகக் காணக் கிடைக்கின்றது.

காவேரியாற்றங்கரையில் மண்நெய் இருப்பதாகக் கூறுகிருர்கள். திருவாங்கூர் பகுதியில் வெள்ளேக் களிமண் ஏராளமாகக் கிடைக்கிறது. போகர் 7000 என்ற சித்தர் ஏட்டில் தமிழகத்தில் தங்கம் செம்பு முதலியவை இருக்குமிடங்களேப்பற்றிய சில குறிப்புகள் உள்ளன. இன்னும் எங்கெங்கு என்னென்ன கிடைக்கும் என்றெல்லாம் ஆராய்ந்தால், ஏதாவது புதிய தொழில்களும் அதனுல் புதிய வருவாயும் ஏற்படலாம்!

வயிற்றுப் பிழைப்புக்காக அயல்நாடு சென்று கூட்டம் கூட்டமாகச் சாகிற துர்ப்பாக்கிய நிலேமை தமிழகம் தவிர, உலகில் எந்த மூலேயிலும் இருப்பதாகத் தெரியவில்லே.

நிலமே! மண்மகளே! வாழ்வாயாக! ஒன்று நாடாகுவையோ! ஒன்று காடாகுவையோ! ஒன்று அவலநிலே அடைகுவையோ! ஒன்று மேம்பாடு எய்துவையோ, உன்மீது உலவும் ஆடவர் எவ்வழியில் சிறந்தவரோ அவ்வழியே நீயும் இருப்பாய்! என்ருர் ஒளவையார்.

ஆடவர் நல்லறிவும் முயற்சியும் உடையாராயின் நீயும் நாடாகிச் சிறந்த மேம்பாட்டுடன் இருப்பாய். அவ்வாறின்றி அவர் அறிவிலியாய் கீழ் மக்களாய் இருப்பின் நீயும் காடாகி அவல நிலேயடைவாய் என்பது இதன் கருத்துரை.

தமிழகத்து மக்கள் வள்ளுவனும் ஒளவையும் கூறியதுபோல் மண்மகளின் செல்வத்தை ஆராய்ந்து வளம் பெருக்கி வாழும் நாள் எந்நாளோ!

★

சிறுகதை

# ஒரு நாள்!

கோவை. க. இரத்தினம்.

சதிராடும் நங்கையைப்போல சுழன்று சுழன்று வீசியது. பேய்க்காற்று!

சாலையில் நடந்துகொண்டிருந்தாள் சகுந்தலா. வாழ்க்கைப் பாதையைப்போல முடிவற்று நீண்டு கிடந்தது அது.

பேய்க்காற்று வெளியேமட்டுமல்ல; அவள் வாழ்விலும்கூடத்தான்! அதில் சிக்கிய அவள் இல்லறப்பூங்கா, காங்கிரசுக்காரர்கள் கையில் கிடைத்த ஆட்சியைப் போலச் சீரழிந்து போயிற்று!

என்ன செய்வாள் அவள்?

கட்டிய கணவன் வெஞ்சிறையில்.

பெற்ற குழந்தைகள் பட்டினியின் மடியில்!

வாழ்க்கை அவளுக்குக் கசந்தது. வாழ்வை முடித்துக்கொண்டால்......?

தற்கொலையா?

ஐயோ, அது பாவமல்லவா?

எவனோ சாகப்பயந்த கோழையின் வாய்வேதாந்தம் அது.

துன்பத்திலிருந்துவிடுபடச்சாவைப்போல இனிமையானது வேறு என்ன உண்டு?

வயிறு, உணவு வேண்டும் என்று புரட்சி செய்தது.

புரட்சியைப்பற்றி அவளுக்கு ஒன்றும் தெரியாது! ஆனல், பசிக்கும் வயிறுக்கு எதையாவது போட்டு நிரப்பவேண்டும்! அதுமட்டும் அவளுக்குத் தெரிந்திருந்தது! முதுகுடன் ஒட்டிக்கிடக்கும் தனது வயிற்றைத் தடவிப்பார்த்துக்கொண்டாள்.

"கொஞ்சநேரம் பொறு. உனக்கும் விடுதலை; எனக்கும் விடுதலை'' — தன் வயிற்றுடன் பேசினுள் அவள்.

"சாவு!''

ஆகா! எத்தனை இனிமையானது?

ஓடும் இரயில்!

ஒருதுளி நஞ்சு!

பாயும் கார்!

சகுந்தலாவின் நினைவில் இப்படி எத்தனையோ வந்து மோதின. வாழ வழியில்லாவிட்டாலும், சாவதற்காவது வழியிருக்கிறதே! அவளுக்கு ஒரு மகிழ்ச்சி!

அவளது முடிவை எவனாவது வேதாந்தி கேட்டால், சீறி விழுவான். "ஆண்டவன் கொடுத்த இந்த உடலை, அவனே எடுத்துக்கொள்ளும்வரை சும்மா இருப்பது தான் நாம் அவனுக்குச் செலுத்தும் நன்றி. நம்மை நாமே அழித்துக்கொள்வது படைப்புத் தொழிலையே பழிப்பதாகும்!'' என்பான்.

அவள் நிலையில் அவன் இருந்தால்......நிச்சயம் அவனும் அவள் முடிவுக்குத்தான் வருவான்!

உலகமே அப்படித்தான்!

உழைக்க அவள் தயாராக இருந்தாள், உணவு கிடைக்கத்தான் வழியில்லை. ஆளுவது அண்ணல் காந்தியடிகளின் சீடர்களாம்! இவர்கள் ஆட்சியின் இலட்சணமே இப்படித்தான் இருக்குமோ?

"உம்!...இன்னும் சற்று நேரத்தில் சாகப்போகும் எனக்கு ஏன் இந்தச் சிந்தனைகள்?''—முணுமுணுத்தாள், அவளுக்குத் தன் குழந்தைகளை எண்ணும்போதுதான் அழுகை வந்தது.

அழுவது கோழைத்தனம் என்கிறார்களே!

கிடக்கிறது முட்டாள் உலகம். அவளையும், அவள் குழந்தைகளையும்பற்றிக் கவலைப்படாத இந்த நாட்டையும், ஆட்சியினரையும்பற்றி அவள் ஏன் அஞ்ச வேண்டும்?

சகுந்தலா ஒரு தாய்! அழத்தான் செய்வாள்! தாய்மையின் தத்துவமே அதுதான்!

காங்கிரசுக்காரர்களைப்போல, சகுந்தலாவும் ஒரு சுயநலவாதிதான். இல்லையேல் தன் குழந்தைகளின் எதிர்காலம் எப்படியோ போகட்டும் என்று சாகத் துணிவாளா?

ஆசை அவளை வாழத்தான் சொல்கிறது. ஆனல் துன்பம் சாவுப் பாதைக்கு இழுத்துச் செல்லும்போது அவள் என்ன செய்வாள்?

நாலுபேரைப்போலச் சகுந்தலாவும் நன்றாக வாழ்ந்தவள்தான். அவள் கணவன் நல்லசிவம், ஒரு மில் முதலாளியிடம் காரோட்டியாக இருந்தான். முதலாளிக்காகப் பாண்டிச்சேரியிலிருந்து கள்ளத்தங்கம் கடத்திக் கொண்டு வரும்போது சுங்க இலாகாவினால் பிடிபட்டான் நல்லசிவம், முதலாளியோ மூச்சுவிடாமல்

அடங்கிவிட்டார். விளைவு......? நல்லசிவத்துக்கு நான்கு வருடக் கடுங்காவல் தண்டனை! வெஞ்சிறை வாசம்!

சகுந்தலாவும் குழந்தைகளும் வாழவழி?

எப்படியோ சில நாட்களைக் கழித்தாள் சகுந்தலா! வீட்டிலுள்ள தட்டுமுட்டுச் சாமான்கள் எத்தனை நாளைக்குச் சோறுபோடும்?

பொங்கல் வேறு வந்துவிட்டது! சிலருக்கு மகிழ்ச்சியையும் பலருக்குத் துன்பத்தையும் தரத்தான் பண்டிகைகள் வருகின்றனவோ? யாரிடம் போய் கையேந்துவது?

குழந்தைகளுக்கு அன்றைக்காவது வயிறுர உணவுபோட முடியுமா? "அம்மா எனக்குப் புதுச் சட்டை" என்று கேட்கும் அந்த உலகமறியாப் பிஞ்சுகளுக்கு எப்படிப் பதில் சொல்வது?

விடை.........?

பள்ளிக்கூடம் பல பல கட்டினோம்; பாங்காய் அணைகள் நிறையக் கட்டினோம் என்கிறார்களே ஆள வந்தோர்கள்; பசிக்கும் வயிற்றை நிரப்ப ஏதாவது செய்தார்களா?



படி அரிசி ஒரு ரூபாயாம்! ஐயோ அநியாயமே!!

சகுந்தலா இப்போது ஒரு முடிவுக்கு வந்துவிட்டாள்!

அந்த வழி......மரணம்!

துன்பத்திலிருந்துவிடுபட அவள் கண்டுபிடித்த முடிவு!!

வேறு என்ன செய்யமுடியும் அந்தத் தாய்? சாவை நோக்கி நடந்து கொண்டிருக்கிறாள் அவள்.

மறுநாள்... பொழுது புலர்ந்தது! பொங்கல் திருநாள் மலர்ந்தது! குழந்தைகள் அனைவரும் குளித்துப் புத்தாடை அணிந்து சிரித்து மகிழ வேண்டியவர்கள் அழுது நின்றனர்.

அவளோ............

"கொள்ளைக்காரன் தேர்தலில் நிற்கிறான்; அவனுக்குத் துதிபாடுகிறார்கள் நாட்டை ஆளுவோர்! என் கணவர் உத்தமர்; அவர் வஞ்சிக்கப்பட்டுச் சிறையில் கிடக்கிறார். ஆகுமா இது? அடுக்குமா இச்செயல்?"—என்று உரக்கக் கத்திக் கொண்டு ஓடினாள்.

எங்கே......?

சாவை நோக்கியா?

அல்ல, அல்ல! "துரோகிகளுக்கு துணைபோகும் காங்கிரசு ஆட்சியைத் தேர்தலில் தோற்கடிப்போம்! வாரீர்! துன்ப இருள் கிழிக்கும் உதய சூரியன் பட்டொளிவீசிப் பரவ உழைப்போம் வாரீர்! காங்கிரசுக்கு ஓட்டுப்போட்டு, நாட்டை சுடுகாடு ஆக்கிவிடாதீர்கள்!" என முழக்கமிட்டுச் செல்கிறாள் சகுந்தலா!

தன் கணவனின் கனவை நனவாக்கும் இலட்சியப் பெண் அவள் இன்று!

✻

# பால் பொங்கிற்று!

—[வடவைக் குரல்]—

**பொங்கல்!**

ஒரு சொல்; ஆனுல், பல பொருள்!

அது கேட்பதற்கு இனிமை! படிப்பதற்கு இனிமை! சுவைப்பதற்கு இனிமை!

அந் நந்நாள் தமிழர் திருநாள்! தமிழகத்தின் நன்னுள்! உழவர் பெருநாள்! ஆதலின் உலகிற்கோர் நாள்! உழைப்பிற்கு உயர்வு தரும் ஒப்பற்ற புனிதநாள்! ஆம்; அனைவருக்கும் பெருமை தரும் நன்னுள்! பிறந்த நாட்டில் பெருமைகொள்ளும் நாள்! அது இந்நாள்! பெயர் பொங்கல் பெருநாள்!

'பொங்கல்' என்ற ஒரு சொல்லில் புதைந்து கிடக்கும் பொருட்களும் பல; அதன் விளைவுகளும், வகைகளும் பலபல.

தித்திக்கும் தேன் கரும்பையும், வயிறு புடைக்க உண்ண அறுசுவை உண்டியையும், எண்ணும்போது பசி தீர்க்கவந்த உண்ணும் பண்டிகையென்றும்; உழவனின் உழைப்பின் பெருமையால் பொங்கல் சிறப்புறுவதை வைத்து அதை உழவர் பெருநாள் என்றும்; வெயில், மழை, காற்று, பனி ஆகிய நிலை குறைய இயற்கை பெரும் துணைசெய்வதன் வாயிலாக செந்நெல் விளைந்து, கரும்பு முற்றி, மஞ்சள் மலர் பூத்துப் பொங்கல் விழாவிற்கு வேண்டிய பொருட்களைச் சேகரிக்க உதவுவதால்அதை இயற்கைத் திருநாள் என்றும், உப்புக் கடலையும் உண்ணும்நீராக்கி, வானம் பொழிந்து; வையம் செழிக்கச் செய்து, உலகிற்கு உணவிடும் வானத்திற்கும், பொங்கலிட அறுவடை செய்ய ஒத்துழைத்த மாடு, மேழி முதலியவற்றிற்கும் நன்றியையும், கடமையையும் காட்டுவதால் நன்றியறிதல் விழா என்றும் அழைக்கப்படுகிறது.



இத் தைத் திங்களில் தமிழர்களின் வீட்டில் வளம் நிறைகின்ற மாதம்! விதைத்ததை எல்லாம் அறுவடை செய்து, உழைப்பின் பயனை உழவர்கள் இல்லத்திலே சேர்க்கின்ற மாதம்! ஆகவே, அங்காடிகளில், சரக்குகளின் விலைவாசி மலிகின்ற காலம்! குளம், குட்டை, ஆறு, கிணறு மற்றும் எல்லா நீர்நிலைகளும் தண்ணீர் நிறைந்து காணுகின்ற காலம்! எங்கும் செழுமை என்று தொழிலாளி மன நிறைவுடனும், மகிழ்வுடனும் உலவும் காலம்! "தை மழையோ நெய் மழை" "தைப் பிறந்தால் வழி பிறக்கும்" என்ற பழமொழிகளுக்கு உயிர்கொடுக்கும் காலம்.

இந்தத் தைத்திருநாள் — தமிழர் திருநாள். இது ஐந்து நாட்கள் தொடர்ந்து கொண்டாடப்பட்டு வருகிறது.

1. போகிப் பண்டிகை:— இது பொங்கலுக்கு முதல் நாள், அதாவது மார்கழி மாதம் கடைசி நாள் கொண்டாடப்படுவதாகும். இப் பண்டிகையை பலர் பல கருத்துப் படக்கூறுவர். "போகி" என்பது சமஸ்கிருத மொழியில் "மகிழ்ந் திருக்க" என்பதாகும். இந்திரனுக்குப் 'போகி' என்று ஒரு பெயர் இருக்கிறபடியால், இது இந்திரனுக்குரிய விழாவென்றும் கூறுவர்.

ஆனுல், 'போகிப் பண்டிகை' என்று சொல்வதைவிடப் "போக்கிப் பண்டிகை" என்றுகூறுவது சிறப்பாக இருக்கும் என்று ஒரு விளக்கம் தருகிருர்கள். அதாவது

அன்றைய தினம் வீடுகளில் உள்ள பழைய, தேவையற்ற பொருள்களையும், அழுக்குகளையும், தீயிட்டுப் பொசுக்கித் தண்ணீர்விட்டு கழுவி, அசுத்தம் போக்குவதால் "போக்கிப்" பண்டிகையாகும் என்பதே.

புதியன புகுமுன் பழையன கழியும் நாள் என்று கொண்டால் இவ்விளக்கம் முற்றிலும் பொருந்துவதாகும்.

2. பொங்கல்:— மேழி பிடித்து உழுது, விதைத்து, நீர்பாய்ச்சி, நாற்று நட்டு, களை பிடுங்கி, நெல் அறுத்து, அந்தப் புதிய நெல்லின் பச்சரிசியில் பால் ஊற்றி, பக்குவமாகப் புத்துருக்கு நெய்யும், மலைத்தேன், பழம், தேங்காய், வெல்லமும் சேர்த்துப் பொங்க; அந்தப் புதுப் பானையில் மஞ்சளையும், இஞ்சியையும் மாலையாகச் சூடி, கரும்பும், கமுகும், வாழையும் பந்தலில் நாட்டி, அதில் சுற்றம் சூழ இருந்து, பக்குவமாகப் பானையில் கொதித்துக்கொண்டிருக்கும் பொங்கலை உதயசூரியன் உதித்து வரும் வேளையில் வடித்து, ஆகாயத்தை நோக்கிப் படைத்து உண்டுகளிக்கிறோம். அதைத்தான் பொங்கல் என்கிறோம். அன்றுதான் அவன் அறுவடை செய்த பலனை அனுபவிக்கிறான்—ஓர் ஆண்டு கழனியில் பட்ட கஷ்டத்தை மறக்கிறான். "நீ கஷ்டபட்டு விதைத்து அறுவடை செய்தவை எல்லாம் வீடுவந்து சேர்ந்து விட்டனவா? நீயும் பொங்கலைச் சிறப்பாகக் கொண்டாடினாயா" என்னும் பொருள்பட, அன்று நண்பர்கள் ஒருவரை யொருவர் காணும்போது "பால் பொங்கிற்றா?" என்று மகிழ்ச்சி பொங்கக் கேட்டுக்கொள்வர்.

சுமார் 2000 ஆண்டுகளுக்கு முன்பு மேல் நாட்டிலும் பொங்கலை, அறுவடை தினம் (Harvest Day) என்று கொண்டாடினார்கள் என்பதற்கு விவிலிய நூலில் சான்று இருப்பதைக் காணலாம்.

3. மாட்டுப் பொங்கல்:— ஆண்டு முழுவதும் உழவனுடன் சேர்ந்து, உழைத்து, தோளோடு தோள் நின்று, அறுவடை செய்ய உதவிய ஆவினங்களை மகிழ்விக்கும் நாளாகவும்; பால் சுரந்து நம்மையும் குழந்தைகளையும் வளர்க்கும் பசுக்களுக்கு நன்றிகூறும் நாளாகவும் கொண்டாடப்படுகிறது. காளையும், பசுவும் இல்லாவிட்டால் கழனி வாழ்வே இல்லை. எருது இல்லை என்றால் ஏர் பிடிக்கவோ, எரு அடிக்கவோ முடியாது. ஆம், பசு தாயாகவும், காளை ஊழியனாகவும், தோழனாகவும் இருப்பதால், உழவன் வாழ்கிறான் என்னும் பேருண்மையை அறிந்திருப்பதினால்தான், அவன் கால் நடைச் செல்வத்தை வணங்கி, மதித்து, வாழ்த்தி, நன்றி தெரிவிக்க மாட்டுப் பொங்கலைக் கொண்டாடுகிறான்.

அன்று மாட்டைக் குளிப்பாட்டி, கொம்புகளில் குப்பி மாட்டி, மாலை கட்டி, உடலில் வண்ணம் பூசி, மஞ்சள் பொட்டிட்டு, கரும்பை உண்ணக் கொடுத்து வீதிகளில் பவனிவரச் செய்வதும், சாலைகளில் சல்லிக் கட்டு விளையாடுவதும் நடைபெறும். தான்மட்டு மில்லாது, தனது தொண்டனும், தோழனுமான மாடு கவலையற்று, உற்சாகமாய் இருக்கவேண்டும் என்பது தான் மாட்டுப் பொங்கலின் கருத்தாகும். உலகில் மிருகத்தையே தன் தோழனாகக் கொண்டு விழாக் கொண்டாடும் பண்பு தமிழனைத் தவிர வேறு எவருக்கும் இருந்ததில்லை.

4. கன்னிப் பொங்கல்:— இதை, பூப்பொங்கல் என்றும் குறிப்பிடுவதுண்டு. இது பெண்களுக்கே தனிச் சிறப்பாக உரிய நாள்! அன்று இளங்கன்னியர் பூப் பறித்துச் சூடி, வண்ணச் சிற்றாடை உடுத்தி, ஊரை உலா வந்து, கும்மியடித்து ஆரவாரம் செய்வதும், அதில் வயதுமுதிர்ந்த மங்கையரும் கலந்து மகிழ்வதும் உண்டு. திருமணமாகாத பெண்களுக்கு இம்மாதத்தில் தான் முகூர்த்தம் செய்வது பெரும்பாலும் வழக்கம். ஆகவேதான், 'தை பிறந்தால் வழி பிறக்கும்' என்னும் பழமொழி இதன் காரணமாகப் பிறந்தது என்று கூறப்படுகிறது.

5. காணும் பொங்கல்:— நான்கு நாட்களையும் சிறப்பாகக் கொண்டாடி, மகிழ்ச்சி, நன்றி, கடமை ஆகிய பண்புகளைக் காட்டிய பிறகு நட்பைப் பெருக்கும் நாளாகக் 'காணும் பொங்கல்' என்னும் பெயரில் ஐந்தாவது நாளாகக் கொண்டாடப்படுகிறது. அன்று ஒருவருக்கொருவர் உறவினர், நண்பர்கள் வீடுகளுக்குச் சென்று, கண்டு, உண்டு, மகிழ்ந்து வணக்கம் தெரிவித்துத் தொடர்பை வலிவுபடுத்துவதோடு; அறுந்து



போன தொடர்பும், முறிந்துபோன உறவும் மீண்டும் இணைந்து வலுப்பெற இந்தப் பண்டிகையை ஓர் அரிய வாய்ப்பாக ஆக்கிக்கொள்வர். எனவே, அன்புக்கும் நட்புக்கும் உறவுக்கும், ஒற்றுமைக்கும், உறுதுணையாக அமையும் அந்நாளைக் 'காணும் பொங்கல்' என்று பெயரிட்டிருப்பது மிகவும் பொருத்தமுடையதாகும்.

இவ்வாறு மார்கழி இறுதி நாளில் போக்கிப் பண்டிகை கொண்டாடி, தை முதல் நாள் கதிரவனுக்கு பொங்கலிட்டு, அடுத்த நாள் மாடுகளுக்கு நன்றி காட்டி, நான்காம்நாள் பூவையரின் புது வாழ்விற்கு வழிகாட்டி, ஐந்தாம் நாள் நட்பையும், உறவையும் பெருக்கும பண்பு விழாவாகக் கொண்டாடுவதால் இப் பெருநாளை பொங்கல் நாள் என்று கூறுது, பொங்கல் வாரம் என்று அழைப்பதுவே முறையாகும்.

நாடு சிறக்கக் கொண்டாடப்படும் இப்பொங்கல் விழாவில், தோழனே! உன் இல்லத்தில் பால் பொங்கிற்றா? ★

# தர்மவான்

"உன் மகன், என்ன செய்யவேண்டும் என்று விரும்பு கிருய்" என்று கேட்டார், பாதிரியார், ஒரு தாயைப் பார்த்து."

"வணங்கத்தக்கவரே! என் மகன் தானதருமம் செய்யும் சீலஞக விளங்கிட வேண்டுமென விழைகிறேன்" என்று பதிலளித்தாள், தாய்.

பாதிரியாருக்கு மிகுந்த களிப்பு. தாம் செய்து வைத்திருந்த 'இதோபதேசம்' இந்த மாதின் மனதிலே, இப்படிப்பட்ட நற்கருத்தை ஏற்றித் தன் மகன், தான தருமத்தில் சிறந்த சீலன் ஆகவேண்டும் என்ற எண்ணத்தைக் கொடுத்ததல்லவா, என்று நினைத்து, விடிய விடிய விழித்திருந்து கர்த்தரின் பெருமைபற்றிப் படித்ததும் எழுதியதும் வீண்போகுமா! கேட்போர் மனதை ஈர்க்கத்தக்க, சுவையும் பயனும்மிக்க, உபதேசம்' செய்வதில் வல்லவர் இந்தப் பாதிரியார் என்று பலரும் பாராட்டியது தவறல்ல என்பதற்குத் தக்கதோர் சான்று கிடைத்திருக்கிறது, என்று எண்ணியபடி, அந்த மாதிடம் கனிவுகாட்டி,

> "அம்மா! உன் மகன் தானதருமத்தில் சிறந்த சீலன் ஆகவேண்டும் என்று ஏன் விரும்புகிருய்"

என்று கேட்டார். அந்த மாது,

> "மதிப்பு மிக்கவரே! மிகுந்த செல்வம் உள்ளவர்கள்தானே, தானதருமம் செய்கிருர்கள். என் மகனும் தானதருமம் செய்யக் கூடிய நிலை பெறுவதானல், நிரம்பப் பணம் சேர வேண்டுமல்லவா! கர்த்தர் என் மகனுக்கு நிரம்பச் செல்வத்தைத் தரவேண்டும் என்பதனை மனதிலே கொண்டுதான், நான் என்மகன் தானதருமத்தில் சிறந்தவனக, விளங்கவேண்டும் என்று பிரார்த்தித்துக் கொண்டேன்"

என்று பளிச்செனப் பதிலளித்தாள். பக்தி உள்ளத்தில் பதிந்ததால், மாது தானதருமம்பற்றிப் பேசினள் என்று எண்ணி ஏமாற்றமடைந்த பாதிரியார், பக்திமிக்கவள் போலக் காட்டிக்கொண்ட அந்த மாது கேவலம் பணத்தாசையைத்தான் வேறு முறையிலே வெளிப்படுத்திக் கொண்டாள் என்றெண்ணி வெதும்பினர். வெள்ளிக் குத்துவிளக்குகள்! வேலைப்பாடு மிகுந்தது! என்று மகிழ்ச்சி பொங்கக் கூறிக்கொண்டே, பாதிரியாரின் பணியாள்---இரண்டு குத்துவிளக்குகளைக் கொண்டு வந்து கொடுத்தான். அந்தக்குத்துவிளக்குகளுக்குப் பயன்பட்ட வெள்ளி, கர்த்தருக்குக் காணிக்கையாக வேருேர் 'தர்மவானல்' தரப்பட்டிருந்த தங்கக் கிரீடத்தைத் தயாரிக்கும்போது 'களவாடிய' பொன்னில் நூற்றில் ஒரு பகுதியைச் செலவிட்டு வாங்கப்பட்டது!

வெள்ளிக் குத்துவிளக்குகளை ஏற்றிவைத்து, விசேஷ உபதேசம் நடத்தினர் பாதிரியார்.

காலம் எவ்வளவு கெட்டுப்போயிருந்தாலும், இப்போதும் 'தர்மவான்கள்' இருக்கத்தான் செய்கிருர்கள் என்று மக்கள் பேசிக்கொண்டனர்.

மறுநாள், ஊரே அதிர்ச்சி அடையத்தக்க, நிகழ்ச்சி நடைபெற்றது.

பாதிரியார், தமது வேலையைவிட்டு விலகிவிட்டார்.

கைகூப்பியபடி, பணியாள் கேட்டான், காரணம் என்ன என்று.

தானதருமத்தில் சிறந்த சீலன் ஆகப்பாகிறேன் என்று பாதிரியார் பதிலளித்தார்!! பணியாளுக்கு அது புரியவில்லை! பத்து ஆண்டுகளுக்குப்பிறகு, கர்த்தருக்குப் புதிய ஆலயம் மிகப்பெரும் செலவிலே, அமைத்துத் தந்த, ஜெகம்புகழும் மகத்துவம் வாய்ந்த ஜெபமாலை கம்பெனியின் உரிமையாளரான, பிரபுவுக்குப் பிரத்யேக வாழ்த்தளிக்கப் பக்தர்கள் கூட்டம் நடைபெற்றது.

ஜெகம்புகழும் மகத்துவம் வாய்ந்த ஜெபமாலை வியாபாரி, சீமான், பலத்த கைதட்டுதலுக்கிடையில், மணிமண்டபம் நுழைந்தார்!

நரைத்துப்போன நிலையினனை பணியாள், மணியை, 'பக்தியுடன்' அடித்தான்----பக்தர்களுக்கு பூஜைநடக்க இருப்பதைத் தெரிவிக்க.

தர்மவானைத் தெரிசிக்க விரும்பினன்.

மணியை அடித்தபடியே, அலங்காரப் பலகணி வழியாக எட்டிப்பார்த்தான்.

தர்மவான், வந்து அமர்ந்தார். அவர் வேறு யாருமல்ல, அவனுடைய பழைய எசமானன்; தர்மவான் ஆவதற்காகப் பாதிரி வேலையைவிட்டு விலகியவர்!

அவருடைய ஜேபியில், எல்லா உண்மைப் பக்தர்களும், ஜேகோப் ஜெபமாலையைத்தான் உபயோகிக்க வேண்டும் என்று உலக பக்தர்கள் சங்கம் நிறைவேற்றிய தீர்மானம் கொண்ட காகிதமும், ஆறு இலட்சம் புதிய ஜெபமாலைகளை ஆப்பிரிக் காவுக்கு அடுத்த கப்பலிலேயே அனுப்பிவிட்டுப் பணத்தை இந்த ஏழையிடம் பெற்றுக் கொள்ளவும் என்று அமெரிக்கக் கோடீஸ்வரர் ஒருவர் எழுதிய கடிதமும் இருந்தது. ★



# ஏழை

### ....அண்ணாதுரை....



அவன் ஓர் ஏழை — ஏளனத்துக்கும் ஆளானவன். தொட்டது துலங்காது, கெட்டது நல்லது புரியாது, மாடுபோல் பாடு படுவான், புத்தி கிடையாது என்று நண்பர்களே நையாண்டி செய்வார்கள். சில வேளைகளில்தான் அவனுக்குக் கோபமும் துக்கமும் பீறிட்டுக்கொண்டு வரும், பொதுவாகச் சிரித்தபடிதான் இருப்பான்—உள்ளூர அவனுக்கே, தனக்குப் போதுமான அளவு அறிவுக்கூர்மையில்லை என்ற எண்ணம்போலும்! ஆகவே உள்ளதைத்தானே சொல்கிறார்கள், இதற்காகக் கோபித்துக் கொள்ளலாமா, என்று எண்ணித் தனக்குத்தானே சமாதானம் தேடிக் கொள்வான்.



அவன் ஏழை! ஆனால் ஏழை என்ற நிலையிலிருந்து விடுபட்டாக வேண்டும் என்ற எண்ணம் எப்போதும், குடைந்துகொண்டிருக்கும் மனம் கொண்டவன். எதையாவது செய்து எந்தப் பாடாவது பட்டுப் பொருள்

எல்லப்பன்

பெறவேண்டும், எழ்மையை விரட்டிடவேண்டும், செல்வ வான் ஆகவேண்டும் என்று எண்ணுவான்; கூறுவான்·

வேலேயில் சுறுசுறுப்பு இல்லே, செய்வதிலே தவறு கள் ஏற்பட்டுவிடுகின்றன, சுட்டிக் காட்டினல் இளிக் கிருன், அல்லது கெஞ்சுகிருன், தொலேத்துவிடலாம் என்ருலோ பார்க்கப் பரிதாபமாக இருக்கிறது என்று முதலாளி கூறுவதுண்டு; பலமுறை; அப்போதெல்லாம், ஏழை எல்லப்பன், எப்படிப் பணக்காரனுவது என்று திட்டமிட்டுக்கொண்டு இருந்தான் என்பது பொருள்! அதை எப்படி அவன் கூச்சத்தைவிட்டு வெளியே கூறமுடியும்? முட்டாள் என்றுகூட ஏசுவார்கள் — கோபித்துக்கொள்வதிலே பயன் இல்லே என்று மன துக்கு ஆறுதல் கூறிக்கொள்வான்.

முயற்சியைக் கைவிடக் கூடாது என்று ஒவ்வோர் தோல்வியின்போதும் எண்ணிக்கொள்வான். ஏனெ னில், அவன் பார்த்துமிருக்கிருன், கேள்விப்பட்டும் இருக்கிருன், பணக்காரர் ஆன பலர், ஆவதற்கு முன்பு அறிவுத் திறமையுள்ளவர்கள் என்று புகழ் பெற்றவர் கள் அல்ல என்பதனே!

பணத்திலே புரளுகிருன்! சேமியா வியாபாரத்தில் ஆரம் பித்து, செயற்கை வைர வியாபாரம் நடத்தி, இப்போது, செல்லப்பா கம்பெனி ஏற்றுமதி இறக்குமதி ஏஜண்டு என்ற பட்டம்பெற்று, பத்து இலட்சத்துக்கு அதிபதி யாகிவிட்டான். வீட்டுக் கணக்குக்கூட அவனுக்கு, எல்லப்பன்தான் போட்டுக் கொடுப்பான். இப்போது செல்லப்பனுக்கு, அடுத்த வருஷம் அமெரிக்காவில் எத்தனே இலட்சம் பன்றிகள் இருக்கும் என்ற கணக்கி லிருந்து, அவைகளுக்கு எத்தனே டன் சோளமும் உருளேக்கிழங்கும் தேவை என்பதுவரையில் கணக்குத் தெரியும் என்கிருர்கள்.

எப்படித்தான் இவ்வளவு கணக்கையும் கற்றுக் கொண்டானே, 'மக்கு' என்று பெயர் வாங்கிய செல் லப்பன், என்று எல்லப்பன் வியப்படைகிருன்; விளங்கவே இல்லே.

"எல்லாம் நான் கொடுத்த தகவல்; அதைப் பயன் படுத்திக்கொண்டு எனக்கு உரிய பங்கு கொடுப்பதாகச் சொல்லி நம்பவைத்து, முறைகளே எல்லாம் கேட்டுத் தெரிந்துகொண்டு, கடைசியில் எல்லாவற்றையும் அவனே சுருட்டிக்கொண்டு என்னே விரட்டியேவிட்




மாடுமேய்க்கக்கூடப் பயன்படமாட்டாய்! மண்டை முழுதும் களிமண்தான் உனக்கு! — என்று கணக்கு ஆசிரியர், ஒவ்வொரு நாளும் சொல்லிச் சொல்லித் தலேயிலே குட்டுவார், செல்லப்பன் என்பவனே. எல்லப்ப னுடன் படித்தவன். இன்று செல்லப்பன் பெரிய புள்ளி!

டான், ஈவு இரக்கமற்ற பாவி! — என்று முணுமுணுத்த படி முடங்கிக் கிடக்கிருன் கந்தப்பன். அவனுடைய கந்தலாடையையும் தள்ளாடும் நடையையும் காண்ப வர்கள், என்னமோ பிதற்றுகிருன் என்று எண்ணிக் கொள்கிருர்கள்—நம்ப மறுக்கிருர்கள்.

கந்தப்பன், தகவல்களைத் துருவித் துருவிக் கண்டறிபவன், கணக்குப் போடுபவன். புதுப் புதுத் தொழில்கள் குறித்த திட்டமெல்லாம் போடுவதில் வல்லவன். அதை விளக்குவதிலும் திறமை மிக்கவன். ஆனால் தானாகக் காரியமாற்றுவதற்குத் துளியும் வசதியற்றவன். எனவே செல்லப்பன் போன்றவர்களிடம் சென்றுதான் அவன் தன் திட்டங்களைக் கூறமுடியும். அப்படி அவன் தந்த திட்டங்களிலே ஒன்றினால்தான் செல்லப்பன் சீமானானன் என்று துவக்கத்திலே பலமாக வதந்தி உலவிற்று. செல்லப்பன் மறுக்கவுமில்லை, ஒப்புக்கொள்ளவுமில்லை. ஆமாம் என்றுதான் வைத்துக்கொள்ளேன் என்று கூறிவிட்டுச் சிரிப்பான். அவனுடைய அலட்சியப் போக்கு ஒன்றே, கந்தப்பனின் பேச்சை எவரும் நம்பமுடியாதபடி செய்துவிட்டது. எல்லப்பனிடம் இரண்டொரு முறை கந்தப்பன் புகார் கூறிப் பார்த்தான், நம்பாதது மட்டுமல்ல, எல்லப்பன் எரிச்சல் காட்டி ஏசித் துரத்தினான்.

புதிது புதிதாகப் பணக்காரர்களானவர்கள் என்னென்ன செய்து பொருள் ஈட்டினார்கள் என்பதைக் கேட்டுக்கேட்டுச் சுவைப்பது எல்லப்பனுக்கு வாடிக்கை. கந்தப்பன் அந்தவிதமான பேச்சுப் பேசும்போதுமட்டும், எல்லப்பன் அக்கரை காட்டுவான்; கால் அரை பணம் கூடக் கொடுப்பான்.

"இவ்வளவு தூரம் பேசுவானேன்—இஞ்சிமுறப்பாவில் ஒரு புதுமுறை இருக்கிறது. இருளப்பன் கம்பெனி சரக்கு வெறும் குப்பை என்பார்கள், அவ்வளவு தரமுள்ளதாகச் செய்யக்கூடிய முறை எனக்குத் தெரியும். தெரிந்து? வசதி வேண்டுமே?"

"வசதி என்றால் எவ்வளவு தேவைப்படும், சொல்லேன்."

"சொன்னால், நீ என்ன எடுத்துக் கொடுக்கவா போகிறாய்! உன்னிடம் ஏது?"

"ஏது எப்படி என்பதுபற்றி உனக்கென்ன கவலை. தொழிலை ஆரம்பிக்க எவ்வளவு பணம் வேண்டும், அதைச் சொல்லு. எப்படியோ பணத்துக்கு வழிசெய்து கொள்கிறேன்."

"எப்படி என்றுதான் கேட்கிறேன். ஆசை காட்டிவிட்டு அதை நம்பி நான் புது முறையை உனக்குச் சொல்லியான பிறகு, நீ கையை விரித்துவிட்டால் என்ன பிரயோசனம்."

"எவருக்கும் சொல்லாமல் உன் மனதோடு அந்த முறையைப் போட்டுப் பூட்டி வைப்பதிலே என்ன இலாபம்?"

"வீணாக ஏன் வம்பு. உன்னால் மூன்றாயிரம் ரூபாய் முதல் போட முடியுமா; அதைச் சொல்லு."

"போட்டால், என்ன இலாபம் கிடைக்கும்."

"முதல் வருஷத்திலேயே பத்து ஆயிரம்"

"மூன்றாயிரம் முதலீடு. பத்தாயிரம் இலாபமா! எந்த மடையன் நம்புவான்?"

"நம்பமாட்டான், உன்னைப் போன்றவன். செல்லப்பனிடம் ஒரு பேச்சுச் சொல்லு, உடனே விவரம் கேட்டுக்கொண்டு காலத்தை ஓட்டமாட்டான். பணத்தை எடுத்துக் கொடுப்பான், வேலையை மளமளவென்று ஆரம்பிக்கச் சொல்லுவான். தெரியுமா!"

"உன்னைத்தான், உபயோகமற்றவன் என்று ஏசி விரட்டிவிட்டானே, இன்னும் எதற்காக அவனுடைய பேச்சு. விட்டுத் தள்ளு. மூன்றாயிரம் வேண்டும், அவ்வளவுதானே. நாலு நாள் பொறுத்துக்கொள்."

"சரி! உன் பேச்சிலே எனக்கென்னவோ, பலமான நம்பிக்கை ஏற்படுகிறது. இதோ பார், இது ஒரு பிரபலமான அமெரிக்க நிபுணர் தயாரித்த முறை. ஒரு முறை, மகாபலிபுரத்துச் சிற்பங்களைப் பார்க்க அந்த அமெரிக்கர் வந்தபோது, தற்செயலாக அங்கு போயிருந்த நான், அவருக்கு மெத்த உதவியாக இருந்தேன். அப்போது, அவர் கொடுத்த முறை இது."

"அமெரிக்காக்காரன், ஏன் அந்த முறையைப் பயன்படுத்தித்தானே அந்தத் தொழிலை நடத்தி இலாபம் தேடிக் கொள்ளாமல் உன்னிடம் கொடுத்தான்? காரணம்?"

"காரணமா! போன ஜென்மத்தில் அவனும் நானும் ஒரே தாய் வயிற்றுப் பிள்ளைகள், போயேன். கிளறிக் கிளறித் தேவையற்றதைத்தானே நீ கேட்பது வாடிக்கை. பிழைக்கத் தெரிந்தவன் செல்லப்பன்! உனக்கு எதற்கெடுத்தாலும் சந்தேகம் குழப்பம். அமெரிக்க நிபுணர் ஆண்டர்சன் முறை என்று கூறினால் போதும் ஒரு கேள்வியும் கேட்கமாட்டான்; தொழிலை நடத்தத் தூண்டுவான். அது செல்லப்பன்!! அவன் என்ன உன்னைப் போலவா! பிழைக்கத் தெரிந்தவன்."—இந்த உரையாடல் நடைபெற்று, கந்தப்பன் கூறிடும் திட்டம் கவைக்குதவாது என்று சொல்லி அனுப்பிவிட்டான் எல்லப்பன். செல்லப்பனிடம் பேசச் சென்றான், தொழில் விஷயமாக அல்ல; பழைய மாணவர் சங்க ஆண்டு விழாவுக்குத் தலைமை தாங்க அழைக்கச் சென்றபோது பேச்சின் இடையிலே, கந்தப்பன் கூறியதையும் சொன்னான்.

"ஆண்டர்சன் முறையா? அமெரிக்க முறை! ஆமாம் அந்த முறை எங்கள் கம்பெனிக்கல்லவா சொந்தமாகிவிட்டிருக்கிறது. இருக்குமே ஆறுமாதம், ஒப்பந்தம் ஏற்பட்டு. கந்தப்பன் எப்படி உரிமை கொண்டாட முடியும். பாவம்! வழக்குப் போட்டால், வம்பிலே மாட்டிக்கொள்வானே! இப்படித்தான் விவரம் தெரியாமல், எதிலாவது 'எக்கச்சக்கமாக' மாட்டிக்கொண்டு, பிறகு திருதிருவென்று விழிப்பான். அவன் வாடிக்கை அது" என்று செல்லப்பன் கூறினான்; எல்லப்பனுக்குக் கோபமே ஏற்பட்டது கந்தப்பன்மீது. வீடு சென்று பார்த்து, ஏசினான். கந்தப்பனுக்கே சந்தேகம் வந்துவிட்டது. ஆர்வத்திலே, முன்பே கூறிவிட்டிருப்போம், நேரிடையாக ஆண்டர்சனுக்குக் கடிதம்

எழுதி ஒப்பந்தம் செய்துகொண்டிருக்கக்கூடும் சகல தந்திரமும் தெரிந்த செல்லப்பன், என்று எண்ணினன்; ஏக்கம் கொண்டான். மறுநாளே, ஒரு எச்சரிக்கை விளம்பரம், நாளிதழ்களில் வெளிவந்தது. ஆண்டர் சனின் அபூர்வ அமெரிக்க முறை எமக்கே முழு உரிமை யுடையது. வேறு எவரேனும் ஆண்டர்சன் முறை யைத் தமக்கும் உரியது என்று கூறினல், சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும். எச்சரிக்கிருேம்—என்ற முறையில் விளம்பரம் வந்தது. கந்தப்பனே கலங்கிப் போனன்.

"உன் பேச்சை நம்பிக்கொண்டு, மூன்ருயிரம் முதல் போட்டிருந்தால், நான் என்ன கதிக்கு ஆளாகி யிருப்பேன்? நல்ல வேளையாகச் செல்லப்பன் நமக்கு நணபன், நிலே உயர்ந்தாலும் கட்புடன் இருக்கிறவன், சரியான சமயத்திலே எச்சரித்து என்னேக் காப்பாற்றி னன். இல்லேயென்ருல் ஆபத்தாக அல்லவா போயிருக் கும்.'' என்று கூறி எல்லப்பன் கண்டித்தான். கந்தப்ப னுடைய கோபம், செல்லப்பன்மீதுகூடச் செல்லவில்லே. நம்பவைத்து மோசம் செய்தானே, ஆண்டர்சன். நமக் கும் கொடுத்தான் அந்த முறைக்கான உரிமையை, செல்லப்பனுக்கும் அதே உரிமையைக் கொடுத்திருக் கிருனே; பேராசைதானே இதற்குக் காரணம்? சே! பார்த்தால் 'பெரிய மனுஷன்' போலக் காணப்பட்டான்; காரியமோ இப்படி மோசமாக இருக்கிறது. நல்லவேளே, செல்லப்பன் முன்கூட்டியே சொல்லிவிட்டான். நாம், மூலதனம் போட்டுத் தொழிலே ஆரம்பித்துச் சில மாதங் கள் கழிந்த பிறகு, வழக்குத் தொடுத்திருந்தால், எனக் கல்லவா தலேவலியும் காய்ச்சலுமாக ஏற்பட்டுவிடும், என்று எண்ணிக்கொள்கிருன். செல்லப்பனே, அமெரிக்க நிபுணர் முறை என்ன? அதனல் கிடைக்கத் தக்க ஆதாயம் எவ்வளவு? என்று விசாரித்தபடி இருக் கிருன். மற்றவர் அம்முறையினேப் பெற்றிட ஒட்டாது தடுத்திடவே, வேருேர் ஆண்டர்சனே அலுவலகத்தில் அமர்த்தி, அவனிடம் ஒரு அமெரிக்க முறை இருப்ப தாக எழுதிப் பெற்றுக்கொண்டிருக்கிருன்!

பெரிய இடம், எனவே மோதிக்கொள்ள எவருக்கும் துணிவு இல்லே! அதிலும் கந்தலாடைக் கந்தப்பன் எங்ஙனம் துணிவு பெறமுடியும்.

பெரிய இடம் என்பதற்கு எடுத்துக்காட்டாகச், செல்லப்பன் பெற்ற பல வெற்றிகள் விளங்கிக்கொண் டிருந்தன. பட்டமரம் துளிர்விடச் செய்பவன், பாழ் வெளியைப் பழமுதிர்ச் சோலேயாக்குபவன் என்று ஒரு வனேக் கூறினல், அவன் ஓர் மாயாவி என்று அல்லவா கருத்து இருக்கிறது என்று பொருள். கெட்டுவிட்டது விட்டுவிட்டேன் என்று எவரேனும் ஒரு தொழிலேக் குறித்துச் சொல்லிவிட்டால், அந்த இடத்திலே செல் லப்பன் இருப்பான் — நான் நடத்திக்கொள்கிறேன் என்று கூறிட! நடத்தியும் காட்டுவான். அது எந்த வகையிலேயோ அவனுக்கு இலாபமாகத்தான் முடியும். என்ன செய்வானே தெரிவதில்லே, கணக்குப் பார்க்கும் போது இலாபம் இருக்கும். யாராரைப் பிடிப்பானே, எப்படியெப்படித் திட்டமிடுவானே எவருக்கும் விளங் காது, ஆனல், இறுதியில் வெற்றிபெற்றுக் காட்டுவான். இந்தமுறை தொலேந்தான்! இதிலே சரியாகப் போய்ச் சிக்கிக்கொண்டான் மீளமுடியாது!! — என்று ஊரே பேசும், நண்பர்கள் எச்சரித்துப் பார்ப்பார்கள், ஆனல் அவர்கள் யாவரும் முகத்தைத் தொங்கப்போட்டுக் கொள்ளும்விதமான முறையில் வெற்றிபெற்றுக் காட்டுவான்.

ஆறுமுகம், ஜாதகம் பார்த்து, முகூர்த்த வேளேயில் 'கடைக்கால்' போட்டு அமைச்சர்களின் ஆசீர்வாதத் துடன் ஆரம்பித்த இரும்புப் பட்டறை ஆறே மாதத்தில் மூடப்பட்டுவிட்டது. தாங்கமுடியாத நஷ்டம் மட்டுமல்ல, ஊர் எதிர்ப்பு அவ்வளவு ஏற்பட்டுவிட்டது. ஊராட்சி மன்றம் ஒருமனதாகத் தீர்மானம் நிறைவேற்றிவிட்டது, இங்கு கிடைக்கும் இரும்புச் சத்துக் கலந்த மண்ணே வெளிநாடுகளுக்கு அனுப்புவதுதான் நல்ல இலாபம் தருமேயொழிய, இரும்புப் பட்டறை அமைத்துவிடுவது தனிப்பட்ட ஆறுமுகம் இலாபம் அடிக்கத்தான் பயன் படும், ஆகவே ஊராட்சி மன்றம் இந்த ஏற்பாட்டை வன்மையாகக் கண்டிக்கிறது என்று ஒரு தீர்மானமும், இரும்புப் பட்டறை ஏற்படுத்தியதால், இதுவரையில் உழவுத் தொழிலிலே ஈடுபட்டிருந்தவர்கள் அதைவிட்டு விட்டுத்தொழிற்சாலேயில் சேர்ந்துவிடுகிருர்கள், உழவுத் தொழிலுக்கு ஆட்கள் கிடைப்பது கடினமாகிவிட்டது, உழவுத் தொழிலே நாசமாகி ஊரார் சோற்றுக்கே திண்டாடவேண்டி நேரிடும் என்று எச்சரிப்பதுடன், ஊர் மக்களின் நல்வாழ்வை எண்ணி ஆறுமுகம் தமது ஆலேயை மூடிவிடவேண்டும் என்று வற்புறுத்திக் கேட்டுக்கொள்கிருேம் என்று மற்ருேர் தீர்மானமும், ஊராட்சி மன்றம் நிறைவேற்றிற்று.

## குபேர குடும்பங்களின் மொத்த முதலீடு

| | |
|---|---|
| டாடா | 290 கோடி |
| பிர்லா | 291 கோடி |
| மார்டின்பர்ன் | 88 கோடி |
| டால்மியா | 50 கோடி |
| மபட்லால் | 28 கோடி |
| வால்சந்த் | 20 கோடி |
| மகேந்திராஸ் | 14 கோடி |

அடிக்கிறான் கொள்ளை!
அகப்பட்டதைச் சுருட்டுகிறான்!
நாம் இளித்தவாயர்கள்

நமது பூமியில்தானே இருக்கிறது இரும்பு மண். நாம் கொடுத்தால்தானே அவன் வெட்டி எடுக்க முடியும்,

நிலத்தை விற்காதே!

என்றெல்லாம் பேச்சு, முழக்கம், சுவரொட்டிகள். ஆலைக்கான கட்டிடம் மட்டும் இரண்டு இலட்சம் ரூபாயை விழுங்கிவிட்டது. ஆறுமுகத்தால் சமாளிக்க முடியவில்லை.

இரும்பு கலந்த மண்ணைத் தோண்டி எடுக்கும் தொழிலாளருக்குப் புதுவிதமான நோய் கண்டுவிடுவதாக ஒரு டாக்டர் பலமாகப் பிரச்சாரம் செய்யத் தொடங்கினார். நோய் வராமலிருக்க வேண்டுமானால், தொழிலாளர்களுக்குச் சுகாதார முறைப்படி விடுதிகளைக் கட்டிக்கொடுக்க முதலாளி முன்வரவேண்டும் என்ற கிளர்ச்சியும் தொடங்கப்பட்டது. தொல்லைகள் தாங்க முடியாத அளவுக்கு ஏற்பட்டுவிட்டது கண்டு, பணம் போனால்போகட்டும், மன நிம்மதியாவது இருக்கட்டும் என்று எண்ணி ஆறுமுகம், இரும்பு ஆலையை மூடிவிட்டார்.

அடுத்த ஆறுமாதத்துக்குள் அந்த ஆலையை மிகக் குறைந்த விலைக்குச் செல்லப்பன் வாங்கினான். ஆறுமுகமே அகப்பட்டுக்கொண்டு விழித்தான், விட்டால் போதும் என்று ஓடிவிட்டான். இவனுக்கென்ன கெடுமதி, விலைகொடுத்துச்சனியனை வாங்கிக் கொள்கிறானே என்றனர், பலரும். செல்லபபன் முதலில், ஆலைக்கட்டிடத்தின் வண்ணத்தை மாற்றினான். கண்ணுக்குக் குளிர்ச்சியான பச்சை நிறம்!

எப்படி! பார்க்கக் குளுகுளு என்று இருக்கிறதல்லவா?

என்று கேட்டான், ஆமாம் என்றனர். ஊர் இது பற்றியே பேசலாயிற்று.

என்ன இருந்தாலும் செல்லப்பன் கெட்டிக்காரன். முன்பு அந்தக் கட்டிடத்தைப் பார்த்தால் ஜெயில்போல இருக்கும், காவிக்கலர் அடித்திருக்கும். உள்ளே நுழைகிற தொழிலாளிக்குப் பயமாகவே இருக்கும். இப்போதுதான் 'பார்வையாக' இருக்கிறது. கிளிப்பச்சை நிறம்!''

"அதுமட்டுந்தானா? முன்பு ஒவ்வொரு ஆளாகத்தான் உள்ளே போகலாம்; வாயிற்படி அவ்வளவு குறுகல். இப்போது பாரேன், யானை நுழையலாம் தாராளமாக! அப்படித் திருத்தி அமைத்துவிட்டான்.''

"ஆறுமுகம் கஞ்சன். செல்லப்பன் அப்படி அல்ல, தாராளமாகச் செலவு செய்வான், வருகிற இலாபம் மெதுவாக வரட்டும் என்று இருப்பான். இந்த ஆறுமுகம் அப்படி அல்ல. ஒட்டக் கறந்து பசுவை ஓடாக்கி விடுவான்.''

இப்படி ஊரார் உரையாடல். செல்லப்பனிடம் ஆலை வந்ததும் ஏதோ புதிய மாறுதல், நல்ல நிலைமை ஏற்பட்டு விடுகிறது என்ற எண்ணம் பரப்பப்பட்டது. வண்ணம் புதிதாக அமைக்கவும், வாயற்படியைப் பெரிதாக்கவும் செலவு அதிகம் ஆகவில்லை. வண்ணம் அடிக்கும் கூலி நூறு ரூபாய்தான், வண்ணத்துக்குச் செலவு இல்லை. புதிதாகத் துவக்கப்பட்ட வண்ணக் கம்பெனி செல்லப்பன் தயவை நாடித் தங்கள் சரக்குக்கு ஏஜண்டாக இருக்கும்படி கேட்டுக்கொண்டது. பார்க்கலாம், ஆனால் முதலில் உங்கள் வண்ணம் எப்படி இருக்கிறது என்பது எனக்கும் தெரியவேண்டும்; ஊருக்கும் விளங்கவேண்டும். ஆகையினால் ஏதாகிலும் ஒரு பெரிய கட்டிடத்திற்கு முதலில் வண்ணம் அடித்துக் காட்டுங்கள் என்று செல்லப்பன் கூறினான். கம்பெனிக்காரர் பெரிய கட்டிடம் எங்களுக்கு எங்கிருந்து கிடைக்கும்; தாங்கள்தான் அதற்கும் ஏற்பாடு செய்யவேண்டும் என்று கெஞ்சிக் கேட்டுக்கொண்டனர், 'பெரிய மனது வைத்து' செல்லப்பன் ஆலைக் கட்டிடத்தைக் காட்டினான். வண்ணம் செலவின்றிக் கிடைத்த விதம் அது.

ஆலையை வாங்குவது என்ற முடிவுக்குச் செல்லப்பன் வந்தபோதே, தன் உறவினரில் சற்றுச் சரியானவராக உள்ளவரைப் பிடித்து, ஊராட்சி மன்றத்தைக் 'கண்ட பயல்களிடம்' விட்டுவிட்டீர்கள். அது பெரிய ஆபத்தாக முடியும். யாராரோ ஊராட்சிமன்றத்திலே நுழைந்துகொண்டு கண்டதெற்கெல்லாம் வரிபோடுவார்கள். நத்தம் புறம்போக்கு பஞ்சாயத்துக்கு என்பார்கள். காலாகாலமாக உம்முடையமேற்பார்வையில் புறம்போக்கு இருக்கிறது. மானவாரி பயிர் செய்து ஏதோ கிடைக்கிறது. அது அவ்வளவும் பாழாகும். ஆகவே, ஊராட்சிமன்றத்தை விட்டுவிடாதீர்கள். நம்மவர்களாகப் போட்டுக் கைப்பற்றவேண்டும். இந்த ஊருக்கு ஒரு கலெக்டர் வருகிறார், கவர்னர் வருகிறார் என்றால், ஊராட்சிமன்றத் தலைவரைக் கூப்பிட்டுப் பேசுவாரா, உம்மைக் கூப்பிடுவாரா? ஓரத்தில் ஒதுங்கி நீர் நிற்கவேண்டும்; உம்மிடம் கடன்பட்டவன், கவர்னருடன் கைகுலுக்குவான். செச்சே! இப்படி இருக்கலாமா? என்ன பிரமாதமான செலவாகிவிடப்போகிறது! உமக்கு மனம் இல்லாவிட்டால், என்னிடம் விட்டுவிடும் நான் பார்த்துக் கொள்கிறேன் செலவு அவ்வளவும்''— என்று தூண்டினான்; ஊராட்சிமன்றம் செல்லப்பன் கைக்கு அடக்கமாகிவிட்டது. பழைய தீர்மானம் போட்டவர்கள், வெளிநாட்டு வியாபாரிகளிடம் கைக்கூலி வாங்கிக்கொண்டவர்கள் என்ற புகார் கிளப்பப்பட்டது; பத்தே ரூபாய்தான் செலவு இதற்கு! தீர்மானங்கள் 'ரத்து' செய்யப்பட்டன. ஆலைக்கு ஏற்பட்ட ஊர்

எதிர்ப்பு ஒழிந்துபோய்விட்டது. அடிக்கடி புதிய புதிய ஆட்களுடன் செல்லப்பன் ஆலேப்பக்கம் வரலானன்; ஆலே பெரிதாகப் போகிறது—குறைந்தது பத்தாயிரம் பேருக்காகிலும் வேலேகிடைக்கும் என்ற பேச்சுப் பரவலாயிற்று.

"விடுதிகள் கட்டத்தான் வேண்டும், டாக்டர் குறிப்புப்படி. தொழிலாளியின் உழைப்புதானே உண்மையான மூலதனம். பணம் என்னசெய்யும்? மண்ணைத் தோண்டுமா, இரும்பை உருக்குமா, சம்மட்டி கொண்டு அடிக்குமா, சக்கரத்தைச் சுற்றுமா! உழைப்பிஞல்தானே இது முடியும். தோழிலாளர்கள் திடகாத்திரமாக இருந்தால்தானே உழைப்பின் பயன் முழுதும் கிடைக்கும்."

"விடுதி கட்டுவது என்ருல் ஏராளமாகச் செலவு ஆகுமே?"

"செலவு செய்தால் என்ன? வாடகை ஈடுசெய்துவிடுகிறது. நிலத்திற்காவதுசெலவு இருக்கிறது, பலவிதமான செலவு. வீட்டுக்கு என்னய்யா! கட்டிப்போட்டால், வாடகை தானுக வருகிறது, மாதாமாதம்"

"தொழிலாளர்கள் ஒழுங்காக வாடகை கொடுப்பார்களா?"

"அவர்களே ஏன் கேட்கிருய். அதற்கு நான் இருக்கிறேன். வாடகையை நான் கட்டிவிட்டு, அவர்களின் கூலியில் பிடித்துக்கொண்டு கணக்கைச் சரிசெய்துகொள்கிறேன்."

"அப்படி ஏற்பாடு இருந்தால் மோசமில்லே."

"மோசமில்லேயா! பெரிய ஆளய்யா நீ! போட்ட முதலுக்குச் சரியான இலாபம் கிடைக்கும் என்பதைக் கூறக்கூட மனம் இல்லேயா, பெரிய அழுத்தக்காரராச்சே."

"ஐயோ, அப்படி எல்லாம் இல்லே. உங்கள் யோசனேயின்படியே......"

"எத்தனே வீடுகள் கட்ட உத்தேசம்? ஏனென்ருல்,இடம்கிடைப்பதுசற்றுச்சிரமம்."

"இடத்துக்கு நான் எங்கேபோவேன்? ஆலேக்குப்பக்கத்திலேயே, நீங்கள்தான் நிலம் தரவேண்டும்."

"போச்சுடா! என் அடிமடியிலேயே கை வைத்துவிட்டீர்களா! சரிதான்! ஆலேக்குப் பக்கத்து நிலத்தை நான் உம்முடைய பணத்துக்கு ஆசைப்பட்டுக்கொண்டு விற்றுவிட்டால், நாளேக்கு ஆலேவிரிவாகவேண்டுமாஞல், இடத்துக்கு நான் எங்கே போவது?"

"அப்படிச் சொல்லிவிடக் கூடாது. 200 ஏக்கர் அளவு இருக்கிறது உமக்கு இங்கு. எனக்கு அதிகம் வேண்டியதில்லேயே 20, 30 ஏக்கர் இருந்தால் போதும்."

இந்த உரையாடல், செல்லப்பனுக்கு ஆலே வாங்கச் செலவிட்ட பணத்திலே சரிபாதி கிடைக்க வழி செய்துவிட்டது.

தொழிலாளர்களுக்கான ஓட்டல் நடத்த ஒருவன் வந்தான்—ஐயாயிரம் அதன்மூலம்.

சினிமாக் கொட்டகை நடத்திஞல் ஏராளமான இலாபம் வரும் என்ற ஆசையில் போட்டி போட்டுக்கொண்டு இடம் கேட்க வந்தார்கள் — பத்தாயிரம் அதிலே!

இப்படிப் பல வழிகளில் ஆலே ஆரம்பிக்காமலேயே, ஆலேக்காகச் செலவிட்ட பணத்தைப்போல இரட்டிப்பு மடங்கு பணம் செல்லப்பனுக்குக் கிடைத்துவிட்டது.

விடுதி கட்டச் சாமான்கள் சேகரம் செய்துகொண்டிருந்தார் வில்வம்.

சினிமா துவக்க, கட்டிட அமைப்புக்கான வேலேயில் ஈடுபட்டார் பாட்சா சாயபு.

பணம் செல்லப்பனிடம் சேர்ந்துவிட்டது.

செல்லப்பன் ஏற்படுத்திய பரபரப்பினேக் கண்டு, வண்ணக் கம்பெனிக்காரனுக்கே 'சபலம்' தட்டிற்று.

இருவரும் கூட்டாக ஆலேயை நடத்தலாம் என்று பேச்சைத் துவக்கிஞன்.

வேண்டாம். நீயே நடத்து. எனக்கு இதுவரை ஆகியிருக்கிற செலவுடன் ஏதோ ஒரு அளவு இலாபம் கூட்டிக் கொடுத்துவிடு. எனக்கு எதற்காகஅதிகமான தொழில் பலரும் தொழிலில் ஈடுபடவேண்டும்.முதல் நாள்


காங்கிரஸ் ஆட்சியில்!

ஏழைமீது விழப்போகுது ஆண்டு ஒன்றுக்கு 7 கோடி ரூபாய் புது வரி

★

'மாதிரி' சோஷலிசம் என்கிருர்கள் இதனே!

எதிர்த்துத் தடுக்க வழி காணீர்!

உன்னைப் பார்த்தபோதே எனக்கு உன்னை மிகவும் பிடித்துவிட்டது''.

ஆலை, கைமாறி விட்டது! இலாபம் செல்லப்பன் பெட்டிக்குச் சென்றது.

விடுதி கட்டுபவனும், கொட்டகை நடத்துபவனும், நடையாய் நடக்கிறார்கள், வண்ணக் கம்பெனி முதலாளியிடம், எப்போது ஆலை துவக்கப் போகிறீர்கள்? உங்களை நம்பி நாங்கள் நிறையப் பணம் செலவழித்து விட்டோம். கடன்பட்டுவிட்டோம். கைகொடுக்க வேண்டும், என்று கேட்கிறார்கள். வண்ணக் கம்பெனி முதலாளி வாய் திறக்கவில்லை! காரணம், இரும்புப் பட்டறை நடத்த, டில்லி 'உத்தரவு' தர மறுத்துவிட்டது. 'பார்க்கலாம், போய் வாருங்கள்' என்று மட்டுமே அவரால் கூற முடிகிறது.

செல்லப்பனாக இருந்தால், இந்நேரம் ஆலை ஓடிக் கொண்டல்லவா இருக்கும். அவன் கெட்டிக்காரன். நடத்தியிருப்பான். நடுவிலே இந்த ஆசாமி நுழைந்து, பேராசைகொண்டு ஆலையை வாங்கிக்கொண்டான். பெரிய மனிதன் கேட்கிறானே என்று செல்லப்பன் ஆலையை விற்றுவிட்டான். வகை இருந்தால்தானே நடத்த. இவனால் நமக்கெல்லாம் நஷ்டம், என்று மற்றவர் பேசிக்கொள்கிறார்கள். செல்லப்பன், ஆலை நடத்துவதாக முன்னேற்பாடுகள் செய்ததன் பலனாகக் கிட்டத்தட்ட இலட்ச ரூபாய் சம்பாதித்துக்கொண்டான்.

*

''எல்லப்பா! வீணாக ஏன் புதுப்புதுத்தொழிலிலே ஈடுபடுகிறாய்? தனியாகத்தொழில் நடத்துவது கடினம். என் யோசனையின்படி நடந்துகொள்.'' என்று செல்லப்பன் கனிவுடன்பேசுகிறான். கேட்கும்போதே எல்லப்பனுக்குத் திகில் ஏற்படுகிறது. பயத்துடன், நடுங்கும் குரலில், ''ஆபத்தான காரியம்! பாபம்கூட!!'' என்கிறான் எல்லப்பன்.

''பைத்தியம், பயப்படாதே! நான் எல்லா ஏற்பாடுகளையும் செய்துவைக்கிறேன். ஒரு ஆபத்தும் வராது.''

''பழக்கமற்ற காரியம். மனம் இடம் கொடுக்கவில்லை. கள்ளக் கடத்தல் பெருங்குற்றம்...''

''பிடிபட்டால்தானே! பீதிகொள்ளாதே! நீ செய்ய வேண்டியதெல்லாம், என்ன? நான் குறிப்பிடும் இடத்துக்குச் செல்லவேண்டும்; சரக்குக் கொண்டுவருவார்கள்; பெற்றுக்கொள்ளவேண்டும்; நான் குறிப்பிடும் இடத்தில் வைத்துவிடவேண்டும். அவ்வளவுதானே.''

''அதிகாரிகளின் கழுகுப் பார்வையிலிருந்து என்னால் தப்பமுடியாதே.''

''கழுகுகளுக்கு இறைச்சித் துண்டுகள் போடப்படும். என்ன விழிக்கிறாய்! ஏற்பாடு இருக்கிறது அதற்கெல்லாம். நிலைமை மோசமாகாது. சிறிதளவு துணிவும் புத்திக்கூர்மையும் வேண்டும். உனக்கு, மேங்கா தெரியுமல்லவா?''

''போலீசில்கூடத் தனிப் பதக்கம் கொடுத்தார்களே, கள்ளக் கடத்தல் பற்றிய துப்புக் கண்டுபிடித்து

வேலை வாய்ப்புப் பெற்றோர் எண்ணிக்கை

1 மணி நேரம் வேலை செய்பவர்கள்
270 இலட்சம் பேர்

2 மணி நேரம் வேலை செய்பவர்கள்
200 இலட்சம் பேர்

4 மணி நேரம் வேலை செய்பவர்கள்
450 இலட்சம் பேர்

●

பாரதத்தில் இருப்போர்
40,00,00,000

அதிகாரிகளிடம், கயவனைக் காட்டிக்கொடுத்துக் கடமையைச் செய்த காரிகை என்று! அவர்களைத் தானே சொல்லுகிறாய்.''

''அதே ஆசாமிதான்! அடேயப்பா! பத்திரிகைகளிலே படங்கள்! பாடல்கள், பாராட்டி...''

''துணிந்து கடமையாற்றினார்களே! அறுபது கடிகாரங்களாமே கள்ளக் கடத்தல்காரன் கொண்டு வந்தவை.''

''ஆமாம்! அறுபதுதான் கொண்டுவரச்சொல்லியிருந்தேன்; பறிமுதல் செய்துவிட்டனர். மூன்றாயிரம் ரூபாய் நஷ்டம்...''

''என்ன சொல்லுகிறாய்? கள்ளக் கடத்தல், உன் ஏற்பாடா?''

''விவரமாக இதுபோன்ற விஷயங்களைப் பேசக் கூடாது. என்றாலும், உனக்குத் துணிவு பிறக்க வேண்டும், என்னிடம் நம்பிக்கை எற்படவேண்டும் என்பதற்காகக் கூறுகிறேன்; கேள். மேங்கா, காட்டிக் கொடுத்துப் பதக்கம் பரிசாகப் பெற்றாளல்லவா, கடிகாரம் கள்ளக் கடத்தல் செய்தவனை. பெயர் சிங்காரம். அவன் என் ஆள்தான்! என் ஏற்பாட்டின்படிதான் அவன் கடிகாரங்களைக் கள்ளத்தனமாகக் கொண்டு வந்தான். மேங்காவுக்கும் அது தெரியும். அவளும் என் அலுவலகப் பணியில் ஈடுபட்டவளே. இருந்துமா, சிங்காரத்தைக் காட்டிக்கொடுத்தாள் என்றுதானே கேட்கத் துணிகிறாய். அதுவும் என் ஏற்பாடுதான். திகைப்பா? விவரம், தெளிவளிக்கும். இருவரும் என்னால் அனுப்பிவைக்கப்பட்டவர்கள். என் திட்டப்படி, செயலாற்றி! சிங்காரம் கடிகாரம் கடத்துவது! அதனை மேங்கா, அதிகாரிகளிடம் பிடித்துக்கொடுப்பது என்பது என் ஏற்பாடுதான். இருவரும் சிலோன் போகும் போதே, அதிகாரி ஒருவர் தொடர்கிறார் என்பது எனக்



[சிங்காரம்]

குத் தெரியும். அதற்காகவே, இலங்கை ஓட்டல் ஒன்றில், சிங்காரத்திடம் சச்சரவு இடும்படி மேங்காவிடம் கூறி இருந்தேன். தேனெழுகப் பேசுகிருளல்லவா, மேங்கா! அன்று தேளாம் அவள் பேச்சு! சிங்காரமே ஒரு கணம் திகைத்துப் போயிருக்கிருன். அதிகாரி இதனைக் கவனித்திருக்கிருர்.''

''இருவரும் பகைவர் என்று எண்ணிக்கொண்டு விட்டார்.''

''ஆமாம்! எவருக்கும் அந்த எண்ணம்தானே தோன்றும்! சிங்காரம் கைத்தடியை ஓங்குகிருன் மேங்காவைத் தாக்க. அந்தப் போக்கிரிப் பெண்ணே காலணியைக் கழற்றினுள், அவன்மீது வீச! அதிகாரி என்ன முடிவுக்கு வருவான்? பகை என்ற முடிவுக்குத் தானே! நான் சொல்லியனுப்பியபடி, அவரவருக்கிட்ட வேலையை முடித்துக்கொண்டு கப்பலில் கிளம்பினர். இங்கு வந்து இறங்குமுன்னம், மேங்கா, பரபரப்புடன் அதிகாரியை அணுகி, இரகசியம் கூறுகிருள். சிங்காரத்தின், கைத்தடியில் கடிகாரங்கள் மறைத்துவைக்கப் பட்டுள்ளன. கள்ளக்கடத்தல். கண்ணுல் கண்டேன். என் காலணியால் அடிபட்டிருக்கவேண்டிய கயவன்! கள்ளக்கடத்தல் பேர்வழிக்கு, வாய்த்துடுக்கு எவ்வளவு தெரியுமா! நீங்கள் பார்த்திருக்க முடியாது. தற்செயலாக, ஓட்டல் சென்றேன் சாப்பிட! வெறியன் என்னிடம் நெருங்கி வந்தான், சரசமாட! சீறினேன்! தடியை ஓங்கினுன்! மரியாதையைக் கெடுத்துவிடத் திட்டமிட்டேன், பயல் தப்பித்துக்கொண்டான். கொஞ்ச நேரத்துக்கு முன்புதான், கப்பல் தட்டிலே ஒரு ஒதுக்குப்புறமான இடத்தில் அவன், கைத்தடியிலே ஏதோ திருகு இருக்கும்போல் தெரிகிறது, அதைக் கழற்றி கடிகாரங்களை நுழைத்தான். சொல்லிவிட வேண்டும் என்ற ஒரே துடிப்பு எனக்கு. பயல், பழி தீர்த்துக்கொள்வானே என்று வேறு பயம். துணிந்து கடமையைச் செய்வோம் என்று சொல்லிவிட்டேன், என்று கூறினுள். மேங்காவிடம் நீ பேசினதில்லையே. மஞ்சளைக் கருப்பு என்று அவள் சொன்னுல், நம்பித்தான் தீரவேண்டும், அவ்வளவு கனிவும் குழைவும் இருக்கும். இசைபோலக் குரல்! தாளம் தவருத பாட்டுப்போல இருக்கும் வாதங்கள்! அதிகாரி பூரித்துப் போனுன்! மூன்று மாதங்களாக ஒரு பறவைகூட அவன் விரித்த வலையில் விழவில்லை. வலைவீசத் தெரியவில்லை என்று மேலதிகாரி சீறுகிருர். நல்லவேளை, ஒரு பறவை கிடைத்தது என்று எண்ணினுன்; சிங்காரம் பிடிபட்டான்; சீறியதைப் பார்க்கவேண்டுமே! மேங்காவுக்கு போலீஸ் பாதுகாப்பு! போலீஸ் வண்டியிலேயே ஏற்றிக்கொண்டு அவளை விடுதிக்குக் கொண்டுபோய் விட்டுவிட்டு வணக்கம் கூறிவிட்டு வந்தார்கள் பெரிய அதிகாரிகள். பத்திரிக்கைக்காரர்கள் படம் எடுத்தார்களாம், புன்னகையுடன் இருங்கள் என்று கூறிவிட்டு. பைத்யக்காரர்கள், மேங்கா எப்போதுமே புன்னகையுடன்தான் இருப்பாள்! போட்டோவுக்காகவா இருக்க வேண்டும்! அதிகாரிகள், சென்ற பிறகு, மேங்கா, தன் காலணியைக் கழற்றி, பேழையில் வைத்து எனக்கு அனுப்பிவைத்தாள்.



[மேங்கா]

திகைக்கிருய் அல்லவா. பைத்யக்காரா, மேங்காவின் காலணி சாமான்யமானது என்ரு எண்ணிக் கொண்டாய்! இலட்ச ரூபாய் பெறுமான முள்ள வைரம் அதிலே ஒளித்து வைக்கப்பட்டிருந்தது. கள்ளக் கடத்தல்! அதற்காகவே அவள் அனுப்பி வைக்கப்பட்டாள் — என்னுல். சிங்காரத்தைப் பிடித்துக் கொடுத்ததன் காரணமாக, அதிகாரியின் நல்லெண்ணத்தை நேசத்தைப்பெறமுடிந்தது. அதனுல் மேங்காவிடம் நம்பிக்கை அதிகாரிகளுக்கு. எவளைப் பிடித்து, கள்ளக்கடத்தல் வைரத்தைக் கைப்பற்றியிருக்க வேண்டுமோ அதே மேங்காவுக்கு போலீஸ் பாதுகாப்பு, உபசாரம்!! ஒரு இலட்சம் பெறுமானமுள்ள வைரம், காலணியில்! கடிகாரம் பறிமுதலானதால் மூவாயிரம் நஷ்டம்! இலாபம், ஒரு இலட்சம்! எனக்கு!! மேங்காவுக்கு, பாராட்டு, பதக்கம், பத்திரிகையில் படம்!! பார்த்தாயா நமது ஏற்பாடு எவ்வளவு நேர்த்தியானதாக இருக்கிறது! இனியும் என்ன பயம் உனக்கு! இந்தா இதோ, முகவரி! இது குறிச்சொல்! சரக்கு வரும், பெற்றுக்கொள், சமாராதனை நடக்கும் இடம், காய்கறிகள் தேவை! அல்லவா! பூசுணியிலும் சுரைக்காயிலுமாக, வைரம் வைத்தனுப்பப்படும்! சங்கரமடத்துச் சாதுக்களுக்குச் சமாராதனை! என் தர்மம்! காய்கறியைப் பெற்றுக்கொண்டதும், சமயலறையில், என் ஆள், வைரத்தைப் பத்திரப்படுத்திவிடுவான்! பஜனை நடந்தபடி இருக்கும், நான் 'தெரிசனம்' செய்யவருவேன். என் கழுத்திலே, உருத்திராட்ச மாலைகள் போடுவார், பெரிய சாமியார்! கருப்பையன் என்று போலீஸ் ரிகார்டு! காவியுடையில், பெரியசாமியார் என் பது பெயர்!! இந்த வேலையைச்செய்; மாதம் ஆயிரம் உனக்கு,

சம்பளம் என்று கூறமாட்டேன், அன்பளிப்பு என்று வைத்துக்கொள்ளேன். நீயும், இந்த நாலுவருஷத்தில் எட்டு இடம் மாறிவிட்டாய், வேலைசெய்வதில். ஒரு இடத்திலும் நிலைத்து இருப்பதில்லை என்ற கெட்ட பெயர் வேறு உனக்கு......''

"அதுமட்டுமல்ல, செல்லப்பா! நான் தொட்டது துலங்குவது இல்லை என்று கெட்டபெயரும் எனக்கு ஏற்பட்டுவிட்டது. எட்டு இடத்திலும் குட்டுப்பட்டு விட்டேன்.''

"இங்கே வெற்றிதான் உனக்கு. இந்தத் தொழிலில் வெற்றி கிடைத்தே தீரும்.''

"அப்படிச் சொல்வதற்கு இல்லையே! கெட்டுவிட்டதே இப்போதே.''

"கெட்டுவிட்டதா! எது? ஏன்? என்ன சொல்கிறாய்?''

"வைரம் கடத்திவரச்சொல்லி என்னை அனுப்ப ஏற்பாடு செய்கிறாயே, அது கெட்டுவிட்டது என்றுதான் சொல்கிறேன். எனக்கு வேலை கொடுக்கத்தான் நீ விரும்புகிறாய்! எனக்கும் இலாபகரமான ஏதாவது ஒரு தொழிலில் ஈடுபடத்தான் விருப்பம். பொன்னான வாய்ப்பு அளிக்கிறாய் என்று எண்ணிப் பூரித்தேன்...... ஆனால்......''

"ஆனால் என்ன, ஆனல்...!''

"இருவருக்குமே வேறுவேலை வந்துவிட்டதே! உன்னைக் கைதுசெய்யும்வேலை எனக்கும், உள்ளதை உள்ளபடி ஒப்புக்கொண்டு போலீசில் சரண் அடையும் வேலை உனக்கும்! திகைக்காதே செல்லப்பா! நான் இந்த வட்டாரத்தில் பணியாற்றும், துப்பறியும் மேலதிகாரி! அதுதான் என் நிரந்தரமானவேலை!! அதற்குத் துணையாக, அவ்வப்போது சில வேலைகளிலே ஈடுபடுவதுண்டு. எட்டு இடங்கள் என்றாயே உண்மை! அவைகளிலே இருந்து அறிந்துகொள்ளவேண்டிய தகவல்கள், நிரம்ப! தகவல்கள் கிடைக்கும்வரையில்தானே அந்த வேலையில் ஈடுபடவேண்டும். பிறகு ஏன்? தொட்டது துலங்காது என்று கூறினாய் அல்லவா; உண்மை என்ன தெரியுமோ? என் நிரந்தரவேலை, துப்பறிதல், தீயோரைக் கைப்பிடியாகப் பிடித்தல். எட்டு இடங்களிலும் இதேதான் வேலை! எழுந்திரு, தகராறு செய்யாமல் போலீஸ் வண்டி தயாராக இருக்கிறது. மேங்காவும் அதிலேதான்!!''

செல்லப்பன், அதிர்ச்சியுற்றான். அப்பாவிபோல நடித்துவந்த எல்லப்பன், எவர் வலையிலும் விழாமல் தப்பித்துக்கொண்டு வந்த தன்னைச் சிக்கவைத்துவிட்டானே என்ற அதிர்ச்சி.

இந்த வேலையையும் இழந்துவிட்டான்! வேறு ஊருக்கே போய்விட்டான்! எவன் இந்தத் 'தூங்கு மூஞ்சியை நம்பி வேலைகொடுப்பான்? என்னமோ பாவம் ஏழையாக இருக்கிறானே என்று இரக்கம்காட்டி வேலை கொடுத்தோம், கொஞ்சமாவது சுறுசுறுப்பு, புத்திக் கூர்மை இருந்தால்தானே!—என்று பேசிக்கொள்கின்றனர், மூட்டை முடிச்சுகளுடன் வேற்றூர் கிளம்பும் எல்லப்பன்பற்றி தொழிலகத்தில்.

'ஏழை' எல்லப்பன் வேறு ஊரில், வேறுவேலையில் அமர்ந்து கொள்ளச்செல்கிறான். சீவல் பாக்குக் கம்பெனிக்கு விளம்பர அலுவலாளராக!

சீவல் பாக்குக் கம்பெனி சிவராமன், பெரிய அளவில் அபின் கள்ளக்கடத்தல்செய்து வருகிறான் என்பது தகவல்! கண்டறியச் செல்கிறான் எல்லப்பன், ஏழைக்கோலத்தில்!!


## எப்படி வாழ முடியும்!

வருமானம்

| | |
|---|---|
| 20 கோடி மக்கள் | 8 அணவுக்குக் குறைவு |
| 6 கோடி மக்கள் | 5 அணவுக்குக் குறைவு |
| 5 கோடி மக்கள் | 4 அணவுக்குக் குறைவு |
| 4½ கோடி மக்கள் | வேலையற்றோர் |


திட்டம் தீட்டினர்!

செழுமையான சமுதாயம் மலர்ந்ததா?

வாட்டம் நீங்கி வாழ்வு மலர்ந்ததா?

# பூங்காவில் புலவர்





பூங்கா உலவிடவும் ஏழைப் புலவர்க்கு நேரம் உண்டோ? என்பாரும், கண்டிடப் பூங்கா எங்குளது? எனக் கேட்பாரும், உளர்; உணர்கிறேன். நான் கூறும் புலவர், தமிழகமே பூங்காவாக இருந்த காலத்தவர், புகழ் ஈட்டி வாழ்ந்தவர், அறநெறி அறிவித்து அரசர்களை நல்வழிப் படுத்திடும் உரிமை பெற்றவர், உயர்வு பெற்றவர்.

தமிழகமே ஓர் பூங்காவாகத் திகழ்ந்த நாட்களை ஏடுகளில் காண்கின்றோம். இடநெருக்கடி, தொழில் நெருக்கடி, மக்கட் பெருக்கம், வறுமை ஆதிக்கம் அற்ற நாட்களுக்கு அழைக்கிறேன் — காண— எண்ணிப்பார்த்திட. எழிலார் பொழில் நிரம்பிய இந்நாடு இனிய மணம் பரப்பிவந்த நாட்கள்! அருவிகளின் அரவணைப்பிலே பொழில்கள் வளம்பெற்ற நாட்கள்! அன்னமும் மயிலும் அழகு நடைபயிலக்கண்டு, ஆரணங்குகள் கன்னத்தில் கை வைத்து வியந்த நாட்கள்! வானம்பாடியின் இசைகேட்டு இன்புற நேரமும் நினைப்பும் கொண்ட நிலையில் மக்கள் இருந்த நாட்கள். உழவும் தொழிலும் வாழ்க்கைக்குப் போதுமான வளம் அளித்து, வறியர்

அண்ணாதுரை

என்பார் இங்கு இலர் என்ற நிலை இருந்த நாட்கள். தமிழகம், தமிழகமாக இருந்த நாட்கள். தமிழ்மொழியி னின்றும் தெலுங்கும் கன்னடமும் மலையாளமும் பிரிந்து, அம்மொழி பேசுவோர், தமிழகத்தில் ஓர் பகுதியை ஆந்திர மென்றும், கருநாடகமென்றும், கேரளம் என்றும் பெயரிட் டழைத்துத் தனி அரசு முறைகளை மேற்கொள்ளாத நாட்கள்! வடபுலத்தவர் வல்லமையாலோ வஞ்சகத்தாலோ தென் புலத்தை அடிமைப்படுத்த முடியாத நிலையிருந்த நாட்கள்! அந்த நாட்களிலே தமிழகமே ஓர் பூங்கா!

புவியாள்வோரும் புரவலர்களும், புலவர்களுக்கு ஏதேனும் ஈந்தால் மட்டுமே தமது கரம் மணம் பெறும் என்று எண்ணியிருந்தனர். புலவர்களும் பொன்னைப் பொருளைத் தேடிடமுனையாது, தமிழ் இனிமையை எவரும் நுகர்ந்திடச் செய்யும் தொண்டினிலே முனைந்து நின்றனர்.

புலவர்கட்கு, புவியாள்வோர் அவையிலும் புரவலர் மாடங்களிலும் உலவி மகிழ்ந்திடுவதைக் காட்டிலும் மலையும் மலைசூழ் இடமும், காடும் காடடுத்த இடமும், கடலும் கடலோரமும், பூங்காவும் புனலாடுமிடமும் இங்கெல்லாம் சென்று உலவுவதில், கண்டு மகிழ் வதில், இயற்கையின் எழிலை வியந்து நிற்பதில்தான் அதிகமான விழைவு இருந்திருக்கிறது என்பது அவர் கள் நமக்குக் கருவூலமென விட்டுச்சென்ற கவிதை களின்மூலம் விளக்கமாகத் தெரிகிறது.

தாம் கூறவேண்டிய எண்ணங்களை, ஏற்பாடுகளை, நிலைகளை, பொருளை, விளக்குவதற்காகப் புலவர் பெரு மக்கள், உவமை கூறுவது மரபு. பொருட்செறிவுமிக்க உவமைகளைப் புலவர்கள் தந்துள்ளனர். பூமணக்கும் இடம், புகழ்மணக்க வாழ்ந்த புலவர்கட்கு, பெருமகிழ்வு பெறத்தக்க இடமாக மட்டுமல்ல, தமது கவிதைகட்குச் சுவை சேர்த்திடத்தக்க கருத்தளிக்கும் இடமாக இருந் திருக்கிறது.

இதோ ஒரு புலவர்—உடன் செல்வோம். தந்தா லன்றி தாமாகப் பொருள் ஏதும் தரச்சொல்லிக் கேளார், தயக்கமின்றி உடன் செல்லலாம்.

கண்களிலே களிப்பொளி! ஏன்இராது! கவிதைக்கு மக்களிடம் நல்ல மதிப்பு! மன்னன், இவர் வருகைக்குக் காத்திருக்கும் அளவுக்கு, இவர்க்குச் செல்வாக்கு. இயற்கையின் கோலத்தைக் காண்கிருர் பேருவகை அடைகிருர்.

அதோ தாமரை! அழகு மலர்! புலவர்களின் பாமாலையை நிரம்பப்பெற்ற மலர்!! அதைத்தான் பார்க் கிருர், புலவர்.

அழகு தாமரையே
அணியே பணியே

என்று பாடத் தொடங்குவார், இவரல்ல, இற்றைநாள் கவிவாணர்கள். இவர் தாமரையையும் பார்க்கிருர், அதன் அருகே உள்ள பகன்றைப் பூவையும் பார்க்கிருர். அந்தப் பூ தாழ்ந்து காணப்படுகிறது; தாமரையை நோக்கி.

சரி! இது தாமரை! அது பகன்றை! இருவேறு மலர்கள், ஆனல் அருகருகே! அவ்வளவுதான்; நமக்கு தெரிகிறது. புலவர்க்கு அப்படி அல்ல.

தாமரை! பகன்றை! இரு மலர்கள்—பக்கத்துக்குப் பக்கம்; தாமரைக்கு அருகே, நெருங்கிச் செல்லும் நிலை யில் அல்லவா, பகன்றைப் பூ இருக்கிறது! என்ன நேர்த்தி! என்ன அழகு!!

தாமரை, வெளிர் கலந்த செந்நிறமுடையது!
பகன்றைப் பூ வெள்ளை நிறமுடையது.

தாமரையின் அருகே, நெருங்கி, தாழ்ந்து நிற் கிறது பகன்றை! காண்கிருர், கவிதை சுரக்கிறது! ஏன்? தாமரையின் அருகே பகன்றைப் பூ, தாழ்ந்து நெருங்கிக் காணப்படுவதின் வனப்பு விளங்கத்தக்க விதமாக மக்களுக்கு எடுத்துக்கூறிட வேண்டும் என்று புலவருக்குத் தோன்றுகிறது.

தாமரைக்கருகே பகன்றை! ஆலுக்குப் பக்கம் வேல்! இப்படிப் பல உள. நிரம்ப உள புலவர், இதனை மட்டும் ஏன் குறிப்பாகக் கவனிக்கிருர்?

புலவர்கள், மலர் கண்டால் பாடிடுவது மரபு என்று கொண்டிடினும், இரு மலர்களைக் கண்டதால், இரண்டு கவிதைகள் இயற்றட்டும்—தாமரைக்கு ஒன்று—பகன் றைக்கு மற்ருென்று! அவ்வளவுதானே! ஏன் இப்புலவர், இந்த இரு மலர்களையும், இவ்வளவு உன்னிப்பாகக் கவனிக்கிருர்? காணக்காண இவர் முகமே மலராகிவிடு கிறதே, ஏன்? கேட்போமா?

“புலவரே! தாமரை பகன்றை எனும் இரு மலர்களையும் நெடு நேரமாகப் பார்த்துக் கொண்டே இருக்கிறீர்களே! ஏன்?”

“இளைஞனே! அந்த அழகினைக் கவனித் தனையா?”

“தாமரை, அழகு மலர்!”

## நேர்மையற்ற காங்கிரஸ் கட்சி

“விடுதலைப் போராட்டத் தின்போது காந்தியார் வலி யுறுத்தி வந்த நேர்மையை யும், நாணயத்தையும் காங் கிரஸ் கட்சி அசைக்க முடி யாத தனது பதினுன்கு ஆண்டு ஆட்சிக்காலத்தில் இழந்துவிட்டது. இன்றைய காங்கிரசின் பொருளாதாரத் திட்டங்களில் காந்தியத் தத்துவங்கள் இல்லை என்ருலும் இந்த நாட்டில் காந்தி யாரின் பெயர் மட்டும் புனிதமானதாகப் பேசப் பட்டு வருகிறது. எதற்கும் அவரது பெயரையே பயன் படுத்தி வருகிருர்கள்.”

திரு. ராமராவ்,
முன்னுள் ரிசர்வ் பாங்க் கவர்னர்.

"பகன்றையும்தான்! மலரே அழகு வடிவங்கள்! இயற்கை மாந்தர்க்குத் தரும் அன்பளிப்புகளல்லவா!! தம்பி! தாமரையும் கண்டிருக்கிறாய், பகன்றைப் பூவையும் பார்த்திருக்கிறாய்—ஆனால், இரு மலர்கள் மட்டுந்தானா உன் கண்களுக்குத் தெரிகின்றன?"

"ஏன்! இலைகள்கூடத் தெரிகின்றன."

"அட, அனுபவமற்ற வாலிபனே! இலை தெரிகிறதா, கொடி தெரிகிறதா என்றா கேட்கிறேன். ஒரு மங்கையின் முகம் தெரியவில்லையா, உனக்கு?"

"செந்தாமரை முகத்தாள் என்பார்களே, அதைச் சொல்கிறீர்களா?"

"நினைத்தது சரியாகத்தான் இருக்கிறது. செந்தாமரை முகத்தழகி என்று அழைத்து மகிழ்ந்திட வாய்ப்பற்ற வறியவன் நீ. கிடக்கட்டும்! செந்தாமரையைக்கண்டதும், எழில் மங்கையின் முகம் தெரியும். தெரிகிறது. உற்றுப்பார்! வேறு என்ன தெரிகிறது?"

"எங்கே? எதைக் கேட்கிறீர்கள். ஓ அந்தப் பூவையா? அது, பகன்றை. அதுவும்தான் தெரிகிறது."

"தெரியாமலென்ன! கண் இருக்கிறதே! கருத்துக் கனியவில்லை உனக்கு. கேள்—தாமரையைக் காணும்போது அழகு முகம் தெரிகிறது. அதுபோல, பகன்றைப் பூவைப் பார்க்கும்போது என்ன தெரிகிறது?"

"பகன்றைப்பூ, தெரிகிறது?"

"பரவாயில்லை! அதாவது தெரிகிறதே! மதியிலி! மதியிலி! உற்றுப் பார்! பகன்றை, தாமரையை நெருங்கி, தாழ்ந்து இருக்கிறது. வெண்ணிறக் கோப்பைபோலத் தெரிகிறதா? பார்!"

"ஆமாம்! வெள்ளை நிறம்! கோப்பை போலத்தான் தெரிகிறது."

"பகன்றை, எதனை நெருங்கித் தாழ்ந்து நிற்கிறது?"

"தாமரை மலரினை!"

"அழகிய மங்கையின் முகத்தருகே, வெண்ணிறக் கோப்பை! நான் காணும் காட்சி என்ன என்கிறாய்! வெண்ணிறக் கோப்பையில் தேன் பெய்திருக்கிறது. தாமரையாள், பருகப்போகிறாள். கோப்பை, நெருங்கித் தாழ்ந்து இருக்கிறது."

"ஆமாம்... ஒரு இள மங்கை ஏந்திடும் வெண்ணிறக் குவளை போலத்தான் காட்சி இருக்கிறது."

புலவர் இதுபோலவா ஒவ்வொருவரிடமும்கூறிடஇயலும். கண்ட காட்சி கிளறிய கருத்தினைக் கவிதை வடிவாக்கித் தருகிறார்.

அகன்துறை அணிபெறப்
புதலொடு தாழ்ந்த
**பகன்றைப் பூவுற நீண்ட**
பாசடைத் **தாமரை**
கண்பொர ஒளிவிட்ட
**வெள்ளிய வள்ளத்தால்**
தண்கமழ் நறுந்தேறல்
உண்பவள் முகம்போல!
வண்பிணி தளைவிடும்.

அந்தத் தமிழகம் இன்று இல்லை! அந்தத் தாமரை


## காங்கிரசு ஆட்சியில் கைத்தறி

**ஏற்றுமதி**

| | | | | |
|---|---|---|---|---|
| 1952 | .... | .... | 54102000 | கெஜம் |
| 1953 | .... | .... | 63206000 | ,, |
| 1954 | .... | .... | 57285000 | ,, |
| 1955 | .... | .... | 60395000 | ,, |
| 1956 | .... | .... | 59868000 | ,, |
| 1957 | .... | .... | 38309000 | ,, |
| 1958 | .... | .... | 35170000 | ,, |
| 1959 | .... | .... | 35584000 | ,, |
| 1960 | .... | .... | 16630000 | ,, |

**தென்னவர் தொழில் கைத்தறி!**

**மீண்டும் 'இவர்களே' ஓட்டு கேட்கிறார்கள்!!**

**என்ன நடக்கும் 'இவர்களை' நம்பினால்? எண்ணிப்பாரீர்!!**

யும் பகன்றையும் என்றோ போய்விட்டன. புலவரும் புகழுடல் பெற்றார். ஆனால் கவிதை இருக்கிறது, தமிழ் உள்ள மட்டும் நமக்கு அந்தக் காட்சியைக் காட்டிட!!

செந்நெல் வயலினிலே உள்ள செழுமை எத்தகையது எனில், ஆங்கு, தாமரையே பூத்திருக்கிறது!!

கதிர் முற்றிவிட்டது. காற்றால், மணிகள் உதிர்க்கப்படுகின்றன! கீழேயே செந்நெல் மணிகள் உதிர்கின்றன? சே! செந்நெல் மணி என்ன அவ்வளவு சாமான்யமானதா? தாமரை மலரிலே விழுகிறது!

நினைவிலே கொண்டுவந்தால் நேர்த்தி விளங்கும்.

தாமரை மலர், விரிந்து இருக்கிறது! அதன் இதழில், செந்நெல் மணி வீழ்ந்திருக்கிறது! செந்நெல் மணியின் நிறம்? பொன் நிறம்! என்ன தெரிகிறது கண்ணுக்கு? தாமரை! அதன்மீது செந்நெல்!! அவ்வளவு தானே? அவ்வளவுதான் நமக்குத் தெரியும். புலவர் காண்பது என்ன தெரியுமோ?

ஓர் ஆடலழகி! அவள் நெற்றியிலே வயந்தகம் எனும் அணி பூட்டப்பட்டிருக்கிறது.

கொடி அசைகிறது, தாமரை ஆடுகிறது! ஆடலழகியைக் காண்கிறார்.

செந்நெல் சிதறி வீழ்ந்திருக்கிறது, மலரில்! பொன் நிறம்! ஆடலழகியின் நுதலில் வயந்தகம் சூட்டப்பட்டிருப்பதாகத் தெரிகிறது, புலவருக்கு.

புகழ் அரங்கின்மேல்
ஆடுவாள் அணு நுதல்
வகைபெறச் செருகிய
**வயந்தகம்** போல் தோன்றும்.

மலர்களைக் காண்பதும், களிப்படைவதுமேகூட, இன்று, நாம் மேற்கொள்ள முடியாத, பழக்கமற்றுப்போன காரியமாகிவிட்டது. மலர்வகைகண்டு, அழகினை நுகர்வோர் மிகச்சிலரே! அதுகுறித்துப் பாடிடுவோர் அதிகம் இலர்! பாடிடினும், அந்நாள் வாழ்ந்த செந்நாப் புலவர்போல, கருத்தமைந்த உவமை நயத்துடன், அக்காட்சிகளை என்றென்றும் நாம் காணத்தக்கவிதத்தில் கவிதை வடிவம் தரத்தக்கவர் எவருமிலர்.

நெய்தல் மலர் காண்கிறார், புலவர். நெய்தல், நீல நிறம்!

புன்னை காற்றால் உதிர்ந்து விழுகிறது; வேறெங்கும் விழவில்லை, நீலநிறமுள்ள நெய்தல் மலரில் விழுகிறது.

புன்னை பொன்நிறம்! நெய்தல், நீலநிறம்! அழகாகத்தானே இருக்கும்! ஆம்! புலவர் அருமையையும் அதிலே காண்கிறார். இருமலர்கள்! வெவ்வேறு வண்ணம் என்ற அழகு மட்டுமல்ல அவர் காட்டுவது.

நீல மணியினால் இழைக்கப்பட்ட பேழையில், பொன்வைத்திருப்பதுபோலத் தெரிகிறது புலவருக்கு. கவிதை பிறக்கிறது.

**புன்னை** நுண்தாது உறைத்தரு **நெய்தல்**
பொன்படு மணியின் பொற்பத்தோன்றும்.

கவிதையைப் படிக்கும்போது அன்று புலவர் கண்ட அருங்காட்சியே தெரிவதுபோலல்லவா இருக்கிறது! அத்துணை அருமைமிகு படப்பிடிப்பு, அந்நாள் புலவர் தம் பாக்கள்.


# காங்கிரசு ஆட்சியின்
## அரிய சாதனை

**டில்லி அரசும், மாநில அரசுகளும் விதித்த வரிகள்**

1951-52ல்
**159 கோடி ரூபாய்**

1961-62ல்
**1291 கோடி ரூபாய்**
புது வரிகள்

1962-67ல்
**1710 கோடி ரூபாய்**
புது வரிகள்

**ஆக, காங்கிரசு ஆட்சியில்**
# 2842
**கோடி ரூபாய் புது வரிகள்.**

**ஏழை கண்டதென்ன?**
**காணப்போவதென்ன?**


முசுண்டை எனும் பெயருடைப்பூ, வெண்ணிறம் கொண்டது. இரவுக் காலத்திலேதான் முசுண்டை பூத்திடும். மலையோரத்தில் காணப்படுவது.

நட்ட நடுநிசியில் வானில் தோன்றும் நட்சத்திரங்கள் என்றார் புலவர், இந்தப் பூக்களை!

தேம்படு சிமயப் பாங்கர்ப் பம்பிய
குவையினை முசுண்டை
வெண் பூக்குழைய
வானெனப் பூத்த பானாள் கங்குல்

வானத்தில் தோன்றி மறைகிறதல்லவா வானவில். அதனைப் புலவர் வாவியிலே காண்கிறார்! ஆனால் வானவில் மேலே இல்லை!! வாவியில் மட்டும் இருக்கிறது. வானவில் அரக்குச் சிகப்பு வண்ணம், நீலம், முதலிய பல வண்ணங்கள் கொண்டதல்லவா? அவ்வளவும் தெரிகிறது, குளத்தில். எங்ஙனம்? குளத்திலே, நீலமலர் பூத்திருக்கிறது! குவளைமலரும் இருக்கிறது! வானவில் போல் தோன்றுதா!

அகலிரு வானத்துக் குறைவில் ஏய்ப்ப
அரக்கிதழ்க் **குவளை**யொடு **நீலம்** நீடி.

இருப்பதைக் காட்டுகிறார்.

கோமகள் கோபம்கொண்டிருந்தால், பணிப்பெண் என்ன செய்வாள்? குழைந்து கும்பிட்டு, கோமகள் எதிரே நிற்பாளல்லவா? பிழை பொறுத்திடுக! பெரு மாட்டி! இனி ஓர்முறை பிழைபுரியேன்!! என்று இறைஞ்சி நிற்பாளல்லவா? அதைக் காண்கிருர், புலவர்! எங்கு? குளத்தில்!!

தாமரை காண்கிருர்! பக்கத்தில் ஆம்பல் பூத்திருக்கிறது. காற்று அடிக்கிறது; ஆம்பல், தாமரை இருக்கும் பக்கமாக வளைந்து காணப்படுகிறது. தாமரை கோமகள்! ஆம்பல், பணிப்பெண்! காற்று, கோபம்! வளைந்து காணப்படுவது, இறைஞ்சி நிற்பது! தவரு!!

ஆமாம்! அப்படித்தான் இருக்கிறது, தாமரையின் பக்கம் ஆம்பல் வளைந்து நிற்கக்காணும்போது, என்று கூறத்தோன்றுகிறது. எப்போது? வாவியிலே ஆம்பலையும் தாமரையையும்பார்க்கும்போதா?இல்லை! அப்போது எழவில்லையே மனதிலே அந்த அழகோவியம், சுவை சேர் உவமை! கவிதையைப் படிக்கும்போதல்லவா, காட்சி பளிச்செனத் தெரிகிறது.

சுடர்த்தொடிக் கோமகள்
சினந்தென அதனெதிர்
மடத்தகை ஆயம் கை
தொழுதா அங்கு
உறுகால் ஒற்ற ஒல்கி ஆம்பல்
தாமரைக்கு இறைஞ்சும்.

மாதரின் முகத்தினை, செந்தாமரைக்கு ஒப்பிட்டுக் காட்டுதல் கவிமரபு. அதனைப் புலவர்கள் நிரம்பச் செய்திருக்கிருர்கள். ஆனல் தமிழ்ப்புலவர்கள், மாதரின் மன நிலைக்கு ஏற்ப முகத்தின் ஒளியும் வண்ணமும் மாறித் தோற்றமளிக்கும் என்பதனை மறவாமல், அந்நிலையின் போது, முகம் உள்ளவிதத்தைக் காட்டிட அதற்கு ஏற்ற மலரையே உவமையாக்கிப் பாடியுள்ளனர்.

தலைவனைப் பிரிந்ததால் தலைவியின் முகம் வெளுத்தல்லவா காணப்படும். வெளுத்திருக்குமேயொழிய, அழகு அறவே அற்றுப்போயிருக்கும் என்று எண்ணக் கூடாது. மகிழ்ச்சியுடன் உள்ளபோது முகம் செந்தாமரையாக இருக்கும்; பிரிவாற்ருமையினல் முகம் வெளுத்திருப்பினும், அந்நிலையிலும், முகம் வேருேர் மலர் போல் இருக்கிறதேயன்றி, வனப்பே அற்றுப் போன நிலையில் இல்லை.

பிரிவாற்ருமையின்போது மாதரின் முகம் பீர்க்கு மலர் போன்றிருக்குமாம்; வெளுத்துப்போய் காணப் படும்.

புலவர்கள் பூங்காவினில் உலவி, உவகை கொண்டதுடன், என்றென்றும் படித்து இன்புறத் தக்க, இயற்கையோடு ஒட்டிய உவமை நயமிகு நல்ல கவிதைகளை இயற்றி அளித்துள்ளனர்.

நலிவுற்ற நிலையினிலே நாடுள்ள நாட்களில், மீண்டும் நாடு எழிற்கூடமாதல் வேண்டும் என்ற எண்ணத்தால் உந்தப்பட்டு, ஆக்கித் தீருவோம் என்ற உறுதி பூண்டு பணியாற்றிடும் ஆர்வமிக்கோர், புலவர் கண்ட பூங்காவினைக் கவிதைகளின் துணைகொண்டு கண்டால், புதியதோர் இன்பமும் எழுச்சியும் பெற்றிடலாம், நாடு மீட்டிடும் நற்காரியத்தில், மேலும் உறுதியுடன் பணியாற்றிட ஆர்வம் பிறந்திடும்.

நிலைகெட்ட இந்நாளிலேயும், இஞ்சியும் மஞ்சளும் இன்னபிறவும் மாவுடன் பலாவும் வாழையும் தெங்கும், கொடியிற் கிடைப்பனவும் கொத்தி எடுப்பனவுமான, பல்வேறு பண்டங்களைத் தமிழகம் தரத்தான் செய்கிறது. பொங்கற் புதுநாளன்று நமது இல்லங்களில் காணப்படும் மலரும் கனியும், தமிழகம் இன்றும் தன் மக்களுக்குத் தரும் அன்பளிப்புகள்.

புலவர் கண்ட பூங்கா கண்டு வியந்து பாராட்டியது போன்றே, தமிழகம் கண்ட பிற நாட்டவர், நமதரும் நாட்டினையே பூங்கா என்று புகன்றனர்.

புலவர்கள் பெண்களைப் பூவை என்று அழைத்திடுவது மரபு.

பூ போன்ற எழிலும் மணமும் கொண்டவர் மாதர் எனும் கருத்துடன் ஒரு சமயம், மாதர்களைப் பூவையர் என்று கூறினரோ என்று கூடத் தோன்றுகிறது. கண்களைக் குவளை மலருக்கும், நாசியை, எட்பூவுக்கும், காதினை வள்ளைப் பூவுக்கும், வாயினை முருக்கு இதழுக்கும், கைவிரல்களைச் செங்காந்தள் பூவுக்கும் ஒப்பிட்டுக் காட்டிடும் புலவர்கள், மொத்தமாகவே மாதர்களை மலருக்கு நிகர் என்று கூறிடும் கருத்துடன், பூவையர் என்று கூறியிருந்திருப்பின், முற்றிலும் பொருத்த முடைத்தே என்று கூறலாம்; தவறில்லை.

புலவர் கண்ட பூங்காவிலே சிறிதளவு உலவிடும் போதே, தமிழின் இனிமையை மட்டுமல்ல, தமிழகம் எத்துணை வளம் கொஞ்சும் நிலையிலே இருந்திருக்கிறது என்பதறிந்து மகிழ்ச்சி பெறுகிருேம்.

பொங்கற் புதுநாளன்று பல்வகைச் சுவைகளைப் பெற்று மகிழ்கின்றனர்—பெரும்பாலான இல்லங்களில். எல்லாச் சுவைகளையும்விட, பழந்தமிழக எழிலும் ஏற்றமும் விளங்கிடத்தக்க, இன் கவிதைகளை ஓரளவேனும் படித்து இன்புறுவது, தக்கதோர் சுவை தருவதாக அமையும். தொழிலகத் தொல்லைகள், வயல்வெளி வாட்டங்கள், அங்காடி மூட்டிவிடும் அல்லல்கள், அரசு ஏற்படுத்திவிட்டுள்ள சிக்கல்கள் இல்லங்களிலே புகுந்து குடையத்தான் செய்கின்றன—மறுத்திட இயல வில்லை. எனினும், தொல்லை நிரம்பிய இந்நிலையிலேயும், தொல்புகழ் பெற்று விளங்கிய திரு இடத்தவர் நாம் என்ற உணர்வும், அதன் இன்றைய நிலையினைத் திருத்தி அமைத்திடும் கடமை நம்முடையது என்பதனையும், நாம் அறிதல் வேண்டுமன்ருே. நமக்கு கடமை உணர்வு எழ, கவிதை காட்டும் தமிழகம் வழி அமைக்கும். புலவர் கண்ட பூங்காவும், அறவோர் கண்ட அரசும், உழவர் கண்ட வளமும், மக்கள் கண்ட வாழ்வும், நமது நினைவிற்குக் கொண்டு வரப்படுவதற்கு ஏற்ற நன்னுள், பொங்கற் புதுநாள்.

தம்பி கடித்துக் கடித்து சாறு உண்டு சுவைக்கிருனே, கரும்பு, அதனை, அவனிடம் தராமல், சாறு பெற வேறு முறையும் தேடாமல் விட்டுவைத்தால் என்னுகும்? சின்னுட்களிலே சாறு சுண்டிப்போய் விடும்—வெறும் சக்கையாகிவிடும்! பிறகோ, சுவைச் சாறும், அதனினின்றும் சீனி சர்க்கரையும் தரத்தக்க கரும்பு, அடுப்புக்கு விறகாகும்.

அஃதேபோல, புலவர் கண்ட பூங்காவினிலே நுழைந்து வியந்து, புத்துணர்வு பெறுகிருேம் எனினும், அந்த உணர்வினைத் தக்கமுறையிலே பயன்படுத்தாது போயின், புலவருடன் பூங்கா சென்று வந்தது பொருளற்றதாகிவிடும். வீண் வேலையாகிப் போகும். புத்துணர்வு பெற்றவர், தமிழகம் பூங்காவாகத் தக்க நிலை பெற வழி என்ன? முறை யாது? என்று சிந்தித்துச் செயலில் ஈடுபடவேண்டும்.

❋

# அந்திக்கலம்பகம்

ஏண்டியம்மா பொன்னி! ஒரே அடியாகப் போய் உட்கார்ந்து கொண்டாயே ஊரிலே. எங்கள் எல்லோரையும் அடியோடு மறந்தேபோய் விட்டாயா?

என்னமோ, இப்போதாவது வந்தாளே, அதைச்சொல்லு, வத்சலா!

எப்படியும் பொங்கலுக்கு வந்தாகவேண்டுமல்லவா? உன்னையும் என்னையும் பார்க்க வந்ததாக எண்ணிக்கொண்டு விடாதே!

தீர்ந்ததா, இன்னும் ஏதாவது சொல்லவேண்டியது மிச்சம்மீதி இருக்கிறதா? நான் ஊருக்குப்போனபோது அம்மாவுக்குச் சீககிரம் குணமாகிவிடும் என்றுதான் நினைத்தேன். மாதம் நாலு ஆனபிறகு தான், உயிருக்குப் பயம் இல்லை என்று ஏற்பட்டது. இப்படி அப்படி நகர நேரம் இல்லை......

ஆமாம், பாவம். தாயாரைப் படுக்கப்போட்டுவிட்டு ஊருக்கு வந்துவிட எப்படி மனம்தான் இடம் கொடுக்கும்.

இங்கே எங்களுக்கெல்லாம் போனவ வரவில்லையே வரவில்லை யேன்னு ஒரே ஏக்கம்தான். ஆனு, உன் பேரிலே தவறு இல்லை. இவ்வளவு நாள் நீ எடுத்துக்கொண்ட கஷ்டம் வீண்போகாதது ஒன்றே போதும், போ! அம்மாவுக்கு வர இருந்த ஆபத்து நீங்கிவிட்டதல்லவா, அதுபோதும்.

ஆபத்து இல்லையே தவிர, எழுந்து நடமாட முடியாது. ஆறு மாதமாகுமாம். டாக்டர் சொல்கிறுர்.

பிராண பயம் இல்லையானு மாதம் ஆறு என்ன, வருஷம் ஒன்று ஆனுத்தான் என்ன? இப்ப, அம்மா எழுந்து ஓடி ஆடி வேலை செய்யவா போறுங்க. நோயினுலே கஷ்டப்படாமல் இருந்தாப் போதும்.

என்னதான் நோய் — டாக்டர் என்ன சொல்லி மருந்து கொடுத்தார்?

ஏதோ பயங்கரமான வியாதியோட பேர் சொன்னுங்க சில பேர். நான் நம்பவில்லை.



கான்சர்னு சொல்லி இருப்பாங்க.

ஆமாம்டி! நீ வருத்தப்பட்டுக் கொள்ளுவயோ என்னமோன்னு நான் மறைச்சிப் பேசினேன்.

உள்ளதை மறைப்பது நமக்குத்தானே கெடுதல். நம்மவர்களிடம் அது ஒரு கெட்ட பழக்கம். நோய் இன்னது என்று வெளியே தெரியக்கூடாது என்று மூடிமூடிவைக்கிறது. தலைக்குமேலே ஆபத்துன்னு ஏற்படுகிறபோதுதான், வெளியே சொல்வாங்க. இதற்குள்ளே, எந்த மருந்துக்கும் கட்டுப்பட முடியாதபடி நோய் முற்றிப் போய்விடும். முன்னாலேயே சொல்லக் கூடாதான்னு டாக்டர் கேட்பார். மூலையிலே உட்கார்ந்து விடுவார்கள் கதற.

நோயினுடைய பயங்கரத்தைச் சொன்னா, நோயாளிக்கே திகில் ஏற்பட்டு, அதனாலே வேறே கெடுதல் ஏற்படும்னு சொல்லி இருக்கா, சிலபேர்; அது இந்த டாக்டர் மனோன்மணிக்குத் தெரியாது போலிருக்கு......

நோயாளிக்கு வேண்டுமானா பயப்படவேண்டிய வியாதி அல்ல இது என்று சொல்லலாம். டாக்டரிடம் கூடவா மறைப்பது.

நீ சொல்வது சரியான பேச்சு. உள்ளதை உள்ளபடி சொன்னால்தானே, டாக்டர்கள் தங்களால் முடிந்ததைச் செய்யமுடியும்.

நம்ம நாட்டு மக்களிடம், எதையும் மூடி மறைக்கிற பழக்கம், பழைய நாளிலிருந்தே. சாதாரண தேள் கடி, பாம்புக் கடிக்குப் பச்சிலை கொடுக்கிறவர்கள்கூடப் பச்சிலையின் பெயரைச் சொல்ல மாட்டாளே! பெயரைச் சொல்லிவிட்டா, பலிக்காதாம்! மற்ற நாடுகளிலே அப்படி இல்லையே! அணுவையே பிளந்துகாட்டி விட்டார்களே, அதைக்கூட மூடி மறைத்துவைக்கவில்லையே. மருந்துச் சீசாபேரிலேயே, தெளிவாகத்தகவல்களை அச்சடித்து ஒட்டி அனுப்பி இருக்குது, பார்க்கிறோமே. இதிலே, இன்னின்ன மருந்து இன்னின்ன அளவு, சேர்த்திருக்கிறோம். இதனாலே இன்னின்ன வியாதிகள் தீரும். இதை இந்த இந்த வயதுள்ளவர்கள், இந்த அளவுதான் சாப்பிடணும்னு தெளிவா அச்சடித்து ஒட்டித்தான், விற்பனை ஆகிறது. கண்ணை மூடிக்கொள்ளு என்று சொல்லிவிட்டுத்தானே, பறித்து வந்த பச்சிலையைக் கசக்கிச் சாறு எடுத்துத், தடவி விடுகிறார் நம்ம வைத்யர்!

இப்ப பரவாயில்லை, எவ்வளவோ மாறிக்கொண்டிருக்குதே. முன்பு போலவா எல்லாவற்றையும் மூடு மந்திரமா வைத்திருக்கிருங்க. எவ்வளவோ தெளிவு ஏற்பட்டுத்தான் இருக்குது. அதுசரி! கான்சர்னு நான் கேள்விப்பட்டது, தப்புத்தானே?

முதலிலே, கான்சர்னு ஒரு சந்தேகம் இருந்தது. நாங்கள்கூடப் பயந்துதான் போனோம். பிறகுதான் அது குடல் புண் முற்றி முற்றி வாய்ப் புண்ணாகிவிட்டது என்று தெரிந்தது. அப்போதுதான் மனசு நிம்மதியாச்சி.

அதைச் சொல்லு. கான்சர்னு சொன்னாலே 'கபீர்'னு இருக்கும். என்ன காரணமோ தெரியவில்லை, இப்ப இந்தக் கான்சர் என்கிற நோய், ஏகமாப் பெருத்துப் போயிருக்குது. இதோ இருக்காளே டாக்டர் மனோன்மணி; இவளுக்குத் தெரியுமே கணக்கு.

ஆமாம். நார்வே நாட்டிலே நூற்றுக்கு ஒருவருக்குத்தான், கான்சர். டென்மார்க்கிலே நூற்றுக்கு இரண்டுபேருக்கு; அமெரிக்காவிலே நாலுபேருக்கு; இங்கிலாந்திலே ஆறுபேருக்கு; நம்ம சென்னையிலே நூற்றுக்கு 34 பேருக்குக் கான்சர்.

இப்படி இருக்கு நிலைமை. ஆனா, என்ன துணிவா, நீட்டி முழக்கிப் பேசிக்கொண்டிருக்கிரு தெரியுமா, காங்கிரஸ்காரா.

காங்கிரஸ்காரர்னு சொல்வதிலே அவ்வளவு பொருத்தமில்லை. காங்கிரசிலே சேர்ந்தவான்னு சொல்லணும்.

ஆமாமாம்! ஆனா, பழைய காங்கிரஸ்காரர்கூடப் பக்குவமாக, மட்டுமரியாதையுடன், அடக்க ஒடுக்கத்துடனே பேசிக்கொண்டிருக்கா, இந்தப் புதுசுகள் இருக்கே, இதுகள்தான் பொரிந்துதள்ளுகிரு! அவனுக்கு என்னதெரியும், இவனுக்கு என்னதெரியும்? இவனால் என்ன ஆகும்? அவன் என்ன செய்தான்? என்று ஒரே இடிமுழக்கம்தான், போயேன்.

ஏன் பேசமாட்டா? ஆத்திரப்பட்டவா, ஒரு வார்த்தை எதிர்த்துப் பேசினா உடனே போலீசைவிட்டு, இழுத்துக்கொண்டுபோய் மூடு, இல்லையானா எங்க மந்திரிக்குத் தந்தி பறக்கும் என்று மிரட்டிப் பேசுகிரு...

போலீஸ்காரருக்கு மட்டும் உண்மை தெரியாதா? அவர்கள் வீட்டுக்கு மட்டும் என்ன, ரூபாய்க்கு நாலு படியா அரிசி கிடைக்குது. அங்கேயும் வாட்டந்தான், வீட்டிலே பெண்கள் கேட்கிற கேள்விக்குப் பதில் சொல்ல முடியாமல் திண்டாடுவது எனக்கல்லவா தெரியும.

அது எப்படிடி பொன்னி, உனக்குத் தெரியும்?

எங்க பக்கத்து வீட்டிலே ஒரு சப்-இன்ஸ்பெக்டர் குடிவந்திருக்கிருர். அவர் வீட்டுப் பேச்சுத்தான் எனக்கு இந்த விளக்கம் அளித்தது. சலித்துக்கொள்வார் சப்-இன்ஸ்பெக்டர், கூட்டம் கூட்டம்னு போட்டு நம்ம பிராணனை வாங்கருனுங்க என்று. அந்தப் பெண் இருக்கே, தங்கமானவ; மரியாதையா, மெதுவாத்தான் கேட்பா. கூட்டம் போட்டு என்ன பேசிக்கொண்டிருக்கிருங்கன்னு...

சப்-இன்ஸ்பெக்டர் என்ன பதில் சொல்வார்?

ஒவ்வொருவேளை ஒவ்வோர் பதில் இருக்கும், அந்த நேரத்துச் சுபாவத்தின்படி. நம்ம வீடுகளிலே இல்லையா அதேபோலத்தான் இருக்கும். போலீஸ்காரர் வீடு என்றால் என்ன? அங்கேயும் பொங்கி வடிக்கணும், போட்டுச் சாப்பிடணுமே...

என்ன பதில்தான் சொன்னார், அதைச் சொல்லேன்.

ஒருநாள் சொன்னதுதான் என் காதிலே விழுந்தது; ஆனா அதை நான் வெளியே சொன்னா பாவம், ஆசாமிக்கு வேலையே போய்விடும்.

மந்திரிகளைப்பற்றி ஏதாவது கண்டித்துப் பேசினாரா? பொதுக்கூட்டத்திலே, அரசியல் கட்சி மேடைகளிலேதான் போலீசார், பொதுவா சர்க்கார் சிப்பந்திகள் பேசக்கூடாதே தவிர, மற்றப்படி, அவர்களுடைய எண்ணத்தை வீட்டிலே எடுத்துப் பேசலாமே, தாராளமாக. அதற்காக வேலையைவிட்டு நீக்கமுடியாது. சட்டம் இடம் கொடுக்காதே.

ஆமாண்டிம்மா! அவருக்கு வேலை போனபிறகு, இவ இருக்காளே, வக்கீல் பட்டு, இவளிடம் 'கேஸ்'

## வடக்கும் - தெற்கும்

### விவசாயத் துறை வருமானம்

| | | | |
|---|---|---|---|
| உத்தரப் பிரதேசம் | ... | 1146·5 | கோடி |
| மத்தியப் பிரதேசம் | ... | 565·9 | ,, |
| பீகார் ... | ... | 564·7 | ,, |
| பம்பாய் ... | ... | 518·1 | ,, |
| பஞ்சாப் ... | ... | 498 8 | ,, |
| மேற்கு வங்கம் | ... | 427·4 | ,, |
| சென்னை ... | ... | 345·3 | ,, |

கொடுத்து, இவ வாதாடி, பேர் எடுக்கணும். கேஸ் ஜெயிக்குதோ தோற்குதோ இவபாடு, கேஸ் நடக்கிற வரையிலே கொண்டாட்டம். பேசரு பார், சட்டம். பாவம், வேலைக்கு ஆபத்துன்னு, பயமாத்தானே இருக்கும். குழந்தைகள் உணடோ?

கிளிபோல, மூணு!

பயம் இல்லாமல் எப்படி இருக்கும் பொன்னி! பட்டு பேசருளே, நான் பார்த்துக்கொள்றேன், கோர்ட்டிலேன்னு......

என்ன பேசினர் சப்-இன்ஸ்பெக்டர்?

வார்த்தைகளைப் பக்குவமாக்கிச் சொல்லட்டுமா? என்ன கூட்டம்னு அந்தப் பெண் கேட்க, இவர் கழகக் கூட்டம்னு சொன்னர். காங்கிரஸ் கழகமான்னு அவ கேட்டா. இவருக்குக் கோபம். எப்பபார்த்தாலும் பேப்பரும் கையுமா இருக்கறியே தவிர, காங்கிரஸ் வேறு கழகம் வேறு என்பதுகூடவா தெரியவில்லை என்று கேலி பேச, அந்தப் பெண், விடவில்லை, நான் ஒண்ணும் விவரம் தெரியாமல் பேசவில்லை, காங்கிரஸ் கழகம்னு நான் சொல்றது திராவிடர் கழகத்தை; ஏனென்ருல், அந்தக் கழகம் இப்ப காங்கிரசாகத்தானே வேலை செய்கிறது, ஓட்டு கேட்குது! அதனலே காங்கிரஸ் கழகம்னு சொன்னேன், தப்பான்னு கேட்க, அவர் சிரித்தார்.

இளம் வயசுக்காரா போலிருக்குது. அப்படித்தான் சிரிச்சிப் பேசிக்கொண்டு சந்தோஷமா இருக்கணும். சதா, சிடுசிடுன்னு இருந்தா, குடும்பம், அடுப்பிலே ஏத்திவைத்த தோசைக்கல் மாதிரியாக அல்லவா இருக்கும்.

வத்சலா வீட்டிலே, என்ன ஏதாவது 'சிடுசிடு' நடந்ததா?

நீ பேசாம இருடிம்மா வக்கீல்! என் வாக்குமூலத்தை வாங்கிக்கொண்டு, அவருக்கு 'சம்மன்' அனுப்பிவிடப் போறே... பொன்னி! நீ சொல்லு... மேலால் என்ன நடந்தது?

விலை குறைந்தாகணும், அப்போதுதான் வீடும் நாடும் சுகப்படும்னு, முன்னேற்றக் கழகம் கூட்டம் போட்டு ஒவ்வொரு நாளும் சொல்கிருங்க என்ருர்; அந்தப் பெண் முன்னேற்றக் கழகம் ஒவ்வொரு நாளும் சொல்லியாச்சி; ஆட்சி நடத்துகிற காங்கிரஸ் கட்சி தான், விலையைக் குறைக்கமுடியாதுன்னு சொல்லுதே. முடியாத காரியத்தைச் செய்யச் சொல்லி மூச்சைப் பிடித்துக்கொண்டு பேசின, என்ன பலன்? என்று கேட்டா. என்ன பதில் சொன்னர் தெரியுமோ சப்-இன்ஸ்பெக்டர். வெளியே தெரிந்தால் வேலைகூடப் போய்விடும். விவரம் தெரியாதவர்களெல்லாம் எப்படியோ 'ஓட்டு' வாங்கிக்கொண்டு உள்ளே உட்கார்ந்து கொண்டு உயிரை வாங்கித் தொலைக்கிருர்கள்-நாலு நாள் விடச்சொல்லு நம்மிடம் இந்த ராஜாங்கத்தை, ரூபாய்க்கு மூன்றுபடி அரிசி போட்டுக் காட்டுகிறேன் என்று பேசுகிருர்.

இருக்காதா கோபம்! நமக்கு மட்டும் இல்லையா? நேற்று நடந்ததைக் கேளு பொன்னி! நம்ம பூக்கார வீட்டு சின்னம்மா தெரியுமே உனக்கு...

சின்னம்மாதானே! கன்னத்திலே மச்சம் இருக்குமே...

கன்னத்திலேயா மச்சம் இருக்குது சின்னம்மாவுக்கு?

கேள்வி கேட்கிரு பார், பட்டு! கன்னத்திலே மச்சம் இருக்கப்படாதோ? உனக்கு இருப்பதுபோல மூக்கின் பேரில் இருக்கணுமா மச்சம்?

மூக்கின்மீது மச்சம் இருப்பவர்கள் முன்கோபிகளாக இருப்பார்களாம்.

வைத்திய சாஸ்திரத்திலே அப்படி ஒரு ஆதாரமும் கிடையாது. சொல்லப்போனு, நரம்புகளுக்கும் சுபாவத்துக்கும் சம்பந்தம் இருக்கலாம்; மச்சத்துக்கும் மனசுக்கும் என்ன சம்பந்தம்?

நரம்புகளைக் கூட முறுக்கேத்தருளாம், மாத்தி அமைக்கிருளாம்...

வைத்திய சாஸ்திரத்திலே புதுப் புது விந்தைகள் கிடைத்தபடி இருக்குதே இப்போதெல்லாம்.

ஆமாம் மனேன்மணி! ரஷியாவிலேயோ எங்கேயோ, ஒரு நாய்க்கு இரண்டு தலையாமே! இயற்கையாக இருந்த தலையுடன், வேருெரு தலையை ஒட்ட வைத்துவிட்டார்களாம், இப்போது அந்த நாய்க்குத் தலை இரண்டு இருக்குதாம்...

நானும் ஏதோ பேப்பர்லே பார்த்தேன். எங்களுக்கு அதுபற்றிச் சரியான தகவல் இல்லை. ஆனு, கேட்டதும் ஆச்சரியத்தால் மூர்ச்சையாகிவிடத்தக்க அற்புதமான புதுமுறைகள் கண்டுபிடித்தபடி இருக்கிறது தெரிகிறது...

அது கிடக்கட்டும், மனேன்மணி! சிரசாசனம் செய்கிருளே, நல்லதா கெட்டதா?

சரியான முறையிலே சிரசாசனம் செய்தா, நல்லதுதான்...

சின்னம்மாவிலே ஆரம்பித்து சிரசாசனத்துக்கு வந்தாச்சா? சின்னம்மாவைப்பத்தி என்னமோ சொல்ல ஆரம்பித்து வேறு எங்கேயோ போய்விட்டீர்களே...

எங்கேயும் போய்விடவில்லை. சின்னம்மா வந்தாளா — வாம்மா வாம்மா சின்னம்மான்னு கூப்பிட்டேன்...

பாட்டா பாடினீர்கள் சின்னம்மாவை அழைக்க...

என்னடி இது பைத்யக்காரக் கேள்வி?

அதெல்லாம் இல்லை. வாம்மா வாம்மா சின்னம்மான்னு ஒரு பாட்டு இருக்குது, சினிமாப்பாட்டு, அதனலே பட்டு அப்படிச் சொல்ரு...

பாட்டு ஒண்ணுதாண்டி எனக்குக் குறைச்சல். நல்லவேளை, பாட்டோடுவிட்டீர்களே ஆட்டம் ஆடினயான்னு கேட்காம...அதுவரையில் சந்தோஷம்...

சரி! சின்னம்மா வந்தா. வாம்மா வாம்மா சின்னம்மான்னு கூப்பிட்டதற்கு...?

எதையோ ஒரு பொட்டிலத்தை வைத்திருந்தா சின்னம்மா. அதைக் கண்டதும் கேட்டேன், வாங்கிவந்தது என்னம்மான்னு.

வாங்கிவந்ததைப்பார் வத்சு! வயித்தெரிச்சலைக் கேள் வத்சுன்னு சின்னம்மா ஆரம்பித்தா பேச...... வட்டிக்குப் பணம்வாங்கி எடுத்துகிட்டு வாங்கப் போனேன் சேலை, கடைத்தெருவுக்கு. மாப்பிள்ளை வீட்டுக்கு வருவதாலே மகளுக்குப் புதுச்சேலை வாங்கப் போனேன். போனமாதம் பதினெட்டு என்ருர்கள், இருபத்து ஆறு இப்பவிலை, என்று சொன்னு...

நூல் சேலையா, பட்டுச்சேலையா?

முந்தானையிலே மாங்கா போட்டிருக்கு சரிகையிலே, நல்ல காஞ்சிபுரம் பட்டுச்சேலைடிம்மா, டாக்டர்! கேட்கரு, பாரு பொன்னி! பட்டுச்சேலையா, நூலான்னு. இருவத்தாறு ரூபாய்க்குப் பட்டுச்சேலை கொடுக்க, கடைக்காரன் என்ன உன்னோடை அண்ணனு? நூல் சேலைதான். அறவதாம் நம்பர் சேலை. ஏழுகெஜம். கெட்டிச் சாயம்னு எழுத்து அச்சடித்து இருக்குது, அந்த எழுத்தே கலைந்துபோய் கெட்ட சாயம்னு விழுந்திருக்குது.

கெட்டிச்சாயமே இப்ப எங்கே கிடைக்குது? சாயப் பவுடர் விலைதான் ஒன்றுக்குப் பத்தாக உயர்ந்து விட்டதே.

டாக்டர் மனோன்மணிக்கு, எப்படிச் சாயப்பவுடர் விலை ஏறிவிட்டது தெரியும்...

ஒருவேளை; சாயப்பவுடர் வாங்கித் தண்ணீரிலே கலந்து மருந்துன்னு கொடுக்கருபோல இருக்கு...

போடி போக்கிரி! டாக்டர்களென்ருல் அவ்வளவு கேவலமான எண்ணமா உனக்கு. வண்டி வண்டியா இருக்கு வக்கில்களைப்பற்றிச் சொல்ல...

உங்க தொழில் தகருருகளைக் கேட்கவா வந்திருக்கிரேம். வத்சலாவைப் பேசவிடுங்கள். வம்புப் பேச்சுப் போதும். சேலைவிலை இருவத்தாறு. ஒரே மாதத்திலே எட்டுரூபாய் விலைஏற்றமாகிவிட்டது. அதைச் சொன்னு சின்னம்மா, நீங்க...?

நானு? அநியாயமாகத்தாண்டி விலை ஏறுது, அரசாங்கம் பார்த்துகிட்டுத்தானிருக்குது; ஊரூராய் வந்து போகும் மந்திரிமாரு, தாறுமாருய் ஏறும்விலை தடுக்கலையே! ஏழை மக்கள்மீது பாசம் காட்டலையே, ஏறுதே விலைகளெல்லாம் விஷம்போலே, ஏனென்ற காரணமும் சொல்லவில்லையேன்னு சொன்னேன். நூல்விலை ஏறினதால் சேலைவிலை கூடுதென்று கடையிலே உள்ளவரு சொன்னருன்னு சின்னம்மா கூறிடவே, நான், அடி! நூலுவிலை ஏறிவிடக்காரணம் என்ன? பேருபெத்த மந்திரிமார் கேட்கக் கூடாதோன்னு கேட்டேன்.

சரியான கேள்விதான். நன்ருகத்தான் மடக்கி இருக்கிறீர்கள்.

சின்னம்மா சோகமாக, விலைவாசி விஷம்போல ஏறிவிட்டதைப்பற்றி ஏன் மந்திரிகள் கேட்கவில்லை என்ற என் கேள்விக்கு, என்ன பதில் சொன்னுள் தெரியுமோ. கேட்க என்ன கூச்சமோ, அச்சமோ அக்கா! ஒரு பேச்சும் அதுபற்றிப் பேசக்காணுேமே என்று ஆச்சரியத்துடன் கூறினுள்.

நீ என்னபதில் சொன்னுயோ!

சூட்சமம் இருக்குதடி! கேட்கமாட்டாங்க. கேட்டுவிட்டா மில் லுக்காரன் நோட்டுவராதுன்னு சொன்னேன்.

விழுந்து விழுந்து சிரித்திருப்பா; சின்னம்மா!

இல்லே! இல்லே! காசு பணம் காங்கிரசுக் கட்சிக்கெதற்கு? காந்தி மகான் பேரிருக்கப் பயம் எதற்கு? என்று திருப்பிக் கேட்டா.

யாரு? சின்னம்மவா? உலகம் போகிற போக்கு அவளுக்குப் புரியாததாலே, காசு பணம் எதற்கு காங்கிரஸ் கட்சிக்குன்னு ஆச்சரியத்தோடு கேட்டிருக்கா.

அது தெரிந்துதான், நான் சற்று விவரமாகவே விளக்கம் சொன்னேன். ஓட்டுகளை வாங்கி மீண்டும் ஆட்சிக்கு வர, நோட்டுக் கத்தை வேண்டாமோடி காங்கிரசுக்கு! ஓட்டுதானே நம்மிடம் எல்லாம் இருக்குது; நோட்டுக் கத்தை உள்ள இடம் மில்லுகள்தானே!! அந்த நோட்டுகளைக் கையில் வாங்கிவிட்ட பிறகு, நம்ம வாட்டம் போக்கக் காங்கிரசு வருமோ சொல்லுன்னு கேட்டேன்.

சரியான, நியாயமான கேள்வி—ஆனு, சின்னம்மாவைக் கேட்டு என்ன பிரயோஜனம்! ஓட்டு கேட்க வருகிற காங்கிரசாரைக் கேட்கவேண்டிய கேள்வி.

ஓட்டுக்கேட்க வருகிறபோது இதைக்கேட்டா, காங்கிரசாருக்கு கோபம் பொத்துக்கொண்டல்லவா வரும்! சின்னம்மா என்ன சொன்னு?

அவளுக்கும் ஆத்திரந்தான். அப்ப, அடிக்கிற கொள்ளையை நீ அடித்துக்கொள்ளு, அதிலே எனக்குக் கொஞ்சம் பங்கு தள்ளு, அடக்கிவைக்கிறேன் நாடடு மக்களை, அதிகாரம் கைப்பற்றியவுடனே, அதிகாரம் கைப்பற்ற ஆகும் செலவு, ஆலை முதலாளிகளே தாரும் எமக்கு எனக் கேட்டு வாங்கிடக் கூட்டுச்சதி நடை

## டில்லிப் பேரரசின்
# வருமானம்

| | | | |
|---|---|---|---|
| பாதுகாப்புத்துறை | 1951-52ல் | 196.45 | கோடி |
| | 1960-51ல் | 310.00 | ,, |
| கஸ்டம்ஸ் துறை | 1946-47ல் | 89.22 | ,, |
| | 1955-56ல் | 164.50 | ,, |
| எக்சைஸ் துறை | 1946-47ல் | 43.03 | ,, |
| | 1955-56ல் | 132.27 | ,, |

ஆனுல்

ஏழை பாட்டாளியின்
வருமானம் பெருகிற்ரு?

உத்தமர்கள் வாழ்வில்
நிம்மதி பூத்ததா?

பெற்று வருகிறது, விளங்குகிறது. ஏழை பாழை பாடு பட்டு உழலுது! என்று சொன்ன, ஆமாம்! ஊரறிந்த இரகசியம் இதுவாச்சே, கேட்டதில்லையா தி. மு. கழகப் பேச்சை, புட்டுப் புட்டுக் காட்டுறாங்க காங்கிரஸ் புரட்டை, புது வழி நாமும் வாழக் காட்டிவாராங்க என்று சொன்னேன்......

பலே! பலே! தேர்தல் பிரசாரமே நடத்தினே கழகத்துக்கு.

ஆமாம், இதிலே என்ன தப்பு! 'உதய சூரியன்' சின்னம் நம்ம சின்னம், ஓட்டுகளை அதற்குப் போட்டுக் கேட்டை நீக்கணும், பொதுத் தேர்தல் வருகிறது, நன்மை பொங்கணும்னு சொல்லிவிட்டேன்; சின்னம்மா வுக்கும் அதே எண்ணம்தான்.

விலைவாசி ஏற்றத்தாலே வேதனைப்படுவது நாம் தானே. நமக்குத்தான் முழு உரிமை, காங்கிரசு ஆட்சியை வீழ்த்த! சர்க்காரை நடத்துகிற காங்கிரஸ் கட்சி, வெட்கமில்லாமல் ஒப்புக்கொள்கிறது விலை ஏறி விட்ட உண்மையை. ஆனல் விலையைக் கட்டுப்படுத்த வக்கில்லை, வழியில்லை.

ஆமாம், இது தெரியுமா உங்களுக்கு. ரூபாய்க்கு நாலுபடி அரிசி மூன்றுபடி அரிசி என்று விலையைக் குறைத்தால், விவசாயிகள் கோபிப்பார்களாம், எதிர்ப் பார்களாம். சொல்கிருரே, மந்திரி பக்தவத்சலம், பேப்பர் பார்க்கலையா?

அதாவது, ரூபாய்க்கு மூன்றுபடி நாலுபடி என்று விலை இருந்தா விவசாயிகளுக்குக் கட்டுப்படியாகாது என்று பேசியிருக்கிருர் பக்தவத்சலம்.

பேசுவார், பேசுவார்! எதிரிலே இச்சகம் பேசுவோர் இருந்தால், ஏன் பேசமாட்டார் மந்திரி. அரிசி விலையைத் தான் குறைக்கச் சொல்லி எல்லாக் கட்சிகளும் பேசு கின்றன; விவசாயி வேதனைப்பட வேண்டும் என்ரு? விவசாயிக்கு, கட்டுப்படியாகக்கூடிய அளவு விலை தரத் தான் வேண்டும். ஆனல், விற்கிறபோது, குறைந்தது ரூபாய்க்கு மூன்றுபடி அரிசி தரவேண்டும்; இதிலே எழக்கூடியநஷ்டத்தைச் சர்க்கார் ஈடுசெய்து, விவசாயி யைக் காப்பாற்ற வேண்டும் என்று தான் யோசனை கூறினர்கள் எதிர்க்கட்சிக்காரர்கள் அனைவரும்.

அதை மந்திரி சொல்லக் காணுேமே?

வேறு எதைத்தான் முழுவதுமாகக் கூறிவிட்டார்? எதிர்க்கட்சிகள் கேட்பதெல்லாம் இருக்கட்டும். நாம் கேட்பதற்கு மந்திரி என்ன பதில் சொல்லுகிருர்?

இது சரியான பேச்சடி பொன்னி! இந்தக் காங் கிரஸ் ஆட்சி வந்ததிலிருந்து நானும் பார்க்கிறேன், அணைகட்டி விட்டோம், தேக்கம் திறக்கிருேம், விதைப் பண்ணை வைக்கிருேம், உரம்தருகிருேம், ஜப்பான்முறை புகுத்துகிருேம், அறுவடை அதிகமாக்கி இருக்கிருேம் என்று பேசியபடி இருக்கிருர்களே தவிர, அரிசி விலையைக் குறைத்தோம், புளி மிளகாய் விலை குறைத் தோம், எண்ணெய் விலை குறைத்தோம் என்று சொல் லக்காணுேம்......

திறப்புவிழாக்களுக்கு மந்திரிகள் போவது வீண் செலவு, நேரக்கேடு என்று வக்கீல்கள் சங்கத்திலே கூடப் பேசினர்கள்.

திறப்பு விழாவுக்குப் போகட்டும்—மாலைமரியாதை கிடைக்கிறது — போட்டோ எடுக்கிருர்கள் — புதுச் சந்தோஷம் ஏற்படும் மந்திரிமார்களுக்கு. அதனை ஏன், பட்டு, கெடுக்கிருய்?

சட்டப்படி அது குற்றமல்ல, ஆனாலும், நாமாக ஒரு கட்டுத் திட்டம் வரைமுறை ஏற்படுத்திக்கொள்வது நல்லதல்லவா? தேர்தல் நேரத்திலாகிலும், திறப்பு விழா துவக்க விழா என்றெல்லாம் பேர் போட்டுக்கொண்டு மந்திரிகள் நடமாடுவதை நிறுத்திக்கொள்வது தர்மமாக இருக்கும். தேர்தல் சமயத்திலே, மந்திரிகள் பாலம் திறப்பது பள்ளிக்கூடம் திறப்பது என்று வைத்துக் கொண்டால், மக்களுக்கு ஆசைகாட்டி மயக்குவதாகத் தானே அர்த்தப்படும். டிசம்பர் மாதம் செய்திருக்கக் கூடாதா? தேர்தல் முடிந்த பிறகு, வருகிற மந்திரி மார்ச்—ஏப்ரலில் திறந்தால் போதாதா? ஓட்டுக்கேட்கிற சமயமாகப் பார்த்துத்தான இந்த விழாவும் வைபவமும் வைத்துக்கொள்ளவேண்டும்?

பொன்னி என்னமோ சொல்ல வாயெடுத்தாளே... என்ன பொன்னி! சொல்லு.

பட்டு பேசிக்கொண்டு வந்தபோது எனக்கு ஒரு சம்பவம் கவனம் வந்தது. எனக்குத் தெரிந்த இடம், நெருங்கிய சொந்தக்காரர்; அவர்கள் வீட்டுப் பைய னுக்குப் பெண் பார்க்கப் போயிருந்தோம்.

பெண் பார்க்க எங்கே போயிருந்தீர்கள்?

வத்சலா கேட்கிற கேள்வியைப் பாரேன்! பெண் பார்க்க, எங்கே போவார்கள்? பெரிய மார்க்கட்டுக்கா போவார்கள்? பெண்ணுடை வீட்டுக்குப் போயிருப்பா பொன்னி! எங்கே போனீர்கள் என்றுகூட ஒரு கேள்வியா!!

மனேன்மணி! வத்சலா கேட்டதிலே என்ன தப்பு? நம் நாட்டிலே பெண் பார்ப்பது, ஒரு முறையாகவா இருக்கிறது. சந்தைக் கடையிலேகூடத்தான் பெண் கண்ணுக்குத் தட்டுப்பட்டால், இது நம்ம மகனுக்குப் பொருத்தமாக இருக்கும் என்று பேசிக்கொள்கிருர்கள்.

சொல்லு, பொன்னி! மணி எதையோ பேசுவா. பெண்பார்க்கப் போயிருந்தே...... என்ன நடந்தது, அங்கே?

நாங்க உள்ளே உட்கார்ந்து கொஞ்ச நேரம் பேசிக் கொண்டிருந்தோம். ஒரு நகைக்கடைக்காரர், பெட்டி நிறைய நகை கொண்டுவந்தார் காட்ட. வைர வளை யல், கம்மல், நெக்லெஸ், இப்படிப்பட்ட நகைகள். பெண்ணுடை தாயார் ஒவ்வொன்றையும் குறை சொல்லி வைரத்திலே பூரிப்புப்போதாதது, வளையல் புது மாடலாக இல்லே, நெக்லெசிலே பச்சைக்கல் இல்லாததாலே பார்வையே இல்லே, என்று பேசினள். பேசிவிட்டு, நாங்கள் தேவையான நகைகளைத் தேவிகா விலாசிலே ஆர்டர் கொடுத்துவிட்டோம், என்று தெரிவித்தாள். மலைத்துப்போய்விட்டோம், பெரிய இடம் போல இருக் கிறது என்று. அதனுலே பெண்ணுக்கு நகை என்ன போடுகிறீர்கள் என்று கேட்பதிலே கண்டிப்புக் காட்ட முடியவில்லை. கலியாணத்திற்குப் பிறகுதான் தெரிந் தது, இடம் சாதாரணம் பேச்சுத்தான் பிரமாதம் என்ற உண்மை. அதுபோலத்தான், தேர்தல் சமயத்திலே மந்திரிகள் கல்நாட்டுவதும் விழா நடத்துவதும் வைப வத்திலே ஈடுபடுவதும் மக்களுக்கு ஆசையும் மயக்க மும் கொடுக்கும்.

அதைத்தான் சொல்கிரு நம்ம பட்டு......

பட்டு சொன்ன கேட்பார்களா? நீதிபதிகள் சொன்னதையே கேட்கவில்லையே காங்கிரஸ் தலைவர்

கள். பட்டு வெறும் வக்கீல்தானே, இவளோட பேச்சைக் கேட்பார்களா?

நீதிபதிகள் என்ன சொன்னு பொன்னி காங்கிரஸ் மந்திரிகளிடம்.

தீர்ப்பு எழுதினதிலேயே சொல்லிவைத்தா வத்சலா. டாட்டா பிர்லா போன்ற பெரிய பெரிய முதலாளிகளோட கம்பெனிகளிடம் காங்கிரஸ் கட்சி இருபது இலட்சம் பத்து இலட்சம்னு தேர்தல் நிதி வாங்குவது தர்மம் அல்ல என்று சொல்லியாச்சி. சட்டப்படி குற்றமாக இல்லாதிருக்கலாம், ஆனுலும் தர்மம், ஒழுங்கு முறைப்படி பார்த்தா, இப்படிப் பணம் பெரிய புள்ளிகளிடம் ஆட்சி நடத்துகிற கட்சி வாங்குவது தவறு என்று கண்டனம் தெரிவித்திருக்கிறுர்களே. அதையே மதிக்கவில்லையே காங்கிரஸ் தலைவர்கள்...

அப்படியானு, அதர்மத்தைத் துணிஞ்சி நடத்திக் கொண்டிருக்கா காங்கிரஸ்காராள் என்றுதானே அர்த்தம்.

கைப்புண்ணுக்குக் கண்ணுடியா? இப்போதெல்லாம் காங்கிரசிலே, யார் இருக்கிறதைப் பார்க்கறேம். பெரிய பெரிய முதலாளிகள், இலாபம் கோடி கோடியாக இலட்ச இலட்சமாகச் சம்பாதிக்கிற சீமான்கள்; இவர்கள்தானே நிறைய இருக்கிறுர்கள். அவர்கள், ஏழைகள் வாங்கித்தீரவேண்டிய பண்டங்களின் விலையை, ஒண்ணுக்குப் பத்தாக ஏற்றிவிடுவது, ஏழை தலையிலே அடிப்பது, வயிற்றிலே அடிப்பது, இலட்ச இலட்சமாகப் பணம் இலாபம் பெறுவது, அதிலே ஒரு துண்டு, ஒருபாகம், காங்கிரசுக் கட்சி தேர்தல் நிதிக்குக் கொடுப்பது. இதுதானே நடைபெறுகிறது இப்போது.

பழைய காலத்திலே தீவட்டிக் கொள்ளைக்காரனுங்ககூட, கொள்ளையடித்துக்கொண்டு போகிற பொருளிலே கொஞ்சம் காட்டுத்தேவதை கோயிலுக்குக் காணிக்கையாத் தருவார்களாமே.

அது காட்டு விஷயம் வத்சலா! நான் சொல்றது நாட்டு நடப்பு! நீ சொல்றது நடுராத்திரியிலே நடப்பது. நான் சொல்ற விஷயம் பட்டப்பகலிலே நடப்பது.

அதனுலேதான், எந்தச் சாமானுடைய விலையை எந்த முதலாளி எவ்வளவு ஏற்றிவிட்டாலும், காங்கிரஸ் தலைவர்களாலே, ஏன் என்று கேட்க முடிவதில்லை, தடுக்க முடிவதில்லை.

அப்படின்னு, முதலாளிகளுக்கும் காங்கிரஸ் ஆட்சிக்கும் ஒரு இரகசிய ஒப்பந்தம் இது என்று சொல்லு.

ஒப்பந்தம் இருப்பதுதான் ஊரறிந்த இரகசிய மாச்சே!

என்னமோடி அம்மா! ஏழை எளியவர்களெல்லாம் இந்த விலைவாசி ஏற்றத்தாலே படுகிற தொல்லையைக் காணச் சகிக்கிறதில்லை...

ஏகப்பட்ட விலை ஏற்றம் ஏழைகளுக்குத் திண்டாட்டம் என்றுகூட யாரோ நோட்டீஸ் போட்டுக்கொடுத்தார்களாமே.

இருக்கும், இருக்கும். ஏன்! சர்க்காரே அறிக்கை போட்டிருக்குதே, விலைகளெல்லாம் ஏறிவிட்டிருக்கிற விஷயமாக.

என்ன போட்டிருக்கா அறிக்கை? விலை ஏறவே இல்லை என்று?

## வடக்கும் - தெற்கும்!

**தொழிற்சாலைகள் வருமானம்**

| | |
|---|---|
| பம்பாய் | — 272·8 கோடி |
| மேற்குவங்கம் | 197·9 ,, |
| பீகார் | — 90·0 ,, |
| சென்னை | — 66·0 ,, |

முடியுமா முழுப் பூசுணைக்காயைச் சோற்றிலே மறைக்க. விலை ஏறிவிட்டிருப்பதை ஒப்புக்கொண்டுதான் அறிக்கை வெளியிட்டிருக்குது, சர்க்காரு— எனக்கு ஒரு கேஸ் விஷயமாக அந்தத் தகவல் தேவை, அதனுலே எடுத்துவைத்திருக்கறேன், படிக்கட்டுமா?

படித்துக்காட்டு பட்டு! இங்கே ஒருதடவை படித்துப் பழகமானு, கோர்ட்டிலே படிக்கிறபோது தட்டுத் தடுமாருமல் படிக்கலாம்...

வத்சலாவோட கேலிப்பேச்சைக் கவனித்தயா, பொன்னி.

இருக்கட்டும், விளையாட்டாச் சொல்வதுதானே. நீ அறிக்கையைப் படித்துக்காட்டு, கேட்கட்டும்...

கெட்டிக்காரிடி பொன்னி நீ! படித்துக்காட்டு கேட்கட்டும்னு சொல்றதிலிருந்து, எனக்கு ஏற்கனவே தெரியும் நீ ஒண்ணும் எனக்குச் சொல்லவேணும்னு குத்திக்காட்டறே, அவ்வளவுதானே! அதனுேட அர்த்தம்.

ஏண்டி பட்டு! கோர்ட்டிலே காட்டவேண்டிய சாமர்த்தியத்தை வீணுக இங்கே கொட்டிக்கொண்டு இருக்கறே. ஒத்தை ரூபா தரப்போறமா, நாங்க.

ஒருகப் காப்பியாவது கொடுக்கமாட்டிங்களா?

காப்பிக்கொட்டை விலை என்ன அநியாயமாக ஏறிப்போயிருக்கு தெரியுமோ...

காப்பிக்கொட்டையா? விலை 586 சதம் உயர்ந்துவிட்டிருக்கிறது.

அதென்னடி அம்மா, 586 சதம்? விளங்கச் சொல்லேன்.

வத்சலா! போன தேர்தல் நடந்ததே, ஐந்து வருஷத்துக்கு முன்பு, அப்போது இருந்த விலைக்கும் இப்போது இருக்கிற விலைக்கும் ஒப்பிட்டுக் காட்டுகிற முறை இது. அதன்படி முன்பு இருந்ததைவிட எத்தனை சதம் உயர்ந்துவிட்டிருக்கிறது என்ற கணக்கு இது. படிக்கிறேன் கேளேன்.

| | | |
|---|---|---|
| அரிசி | 625 | சதம் |
| கேழ்வரகு | 582 | ,, |
| துவரம்பருப்பு | 522 | ,, |
| காய்கறி | 456 | ,, |
| மீன் | 290 | ,, |

| | | |
|---|---|---|
| இறைச்சி | 477 | ,, |
| தேங்காய் | 600 | ,, |
| பால் | 380 | ,, |
| உப்பு | 149 | ,, |
| மிளகாய் | 645 | ,, |
| புளி | 680 | ,, |
| கொத்தமல்லி | 596 | ,, |
| கடுகு | 500 | ,, |
| பூண்டு | 457 | ,, |
| நல்லெண்ணெய் | 468 | ,, |
| தேங்காயெண்ணெய் | 601 | ,, |
| நெய் | 442 | ,, |
| சர்க்கரை | 480 | ,, |
| வெல்லம் | 348 | ,, |
| காப்பிக்கொட்டை | 583 | ,, |
| டீ | 589 | ,, |
| விறகு | 720 | ,, |
| கரி | 677 | ,, |
| மண்ணெண்ணெய் | 286 | ,, |
| தீக்குச்சி | 359 | ,, |
| வேட்டி | 579 | ,, |
| சட்டைத்துணி | 608 | ,, |
| மேல்துண்டு | 419 | ,, |
| புடவை | 862 | ,, |
| வீட்டு வாடகை | 294 | ,, |
| பாக்கு | 500 | ,, |
| வெற்றிலை | 467 | ,, |
| வாய்ப் புகையிலை | 1542 | ,, |

போதும்டிம்மா, பட்டு, போதும்! ஒரு சாமான் விலைகூடக் கைக்கு எட்டாதபடி மேலே உயர்ந்து கொண்டேதான் போய்விட்டிருக்கிறது.

பட்டு! விலைகளின் விஷயமாக, சதவிகிதம் என்ற கணக்கைக் கொடுப்பதைவிட, முன்பு என்ன விலை இப்போது என்ன விலை என்று விளக்கமாகச் சொன்னால்தான் நல்லது.

அதுவும் உண்மைதான். ஐந்நூறு ஆறுநூறு சதம்னு சொன்னா பலபேருக்கு விளங்காது.

பிசுவுவிடாமல் பேசுவதைப் பார்த்தாயா பட்டு! தனக்கு விளங்கிவிட்டதாம், மற்றவர்களுக்குத்தான் விளங்காதாம்.

பொன்னி! போக்கிரித்தனமாகப் பேசுவதுதானே உன் வாடிக்கை. பேசு, எனக்கும்தான், பட்டு சொன்ன சதம் விகிதம் என்பது விளங்கவில்லை............இதிலே வெட்கம் என்ன, ஒப்புக்கொள்வதிலே.

இது சரியானபேச்சு, வத்சலா! நான் விளங்கும்படியாகச் சொல்றேன், கேட்டுக்கொள்ளேன். என்னிடமும் ஒரு கணக்கு இருக்குது. மகளிர் மன்றத்தார் நோட்டீஸ் போடவேண்டும் என்பதற்காகக் குறித்துவைத்திருக்கிறேன். ஆனால், 1959-ம் வருஷத்து விலைதான் கணக்கு எடுத்திருக்கிறேன். அதற்குப்பிறகுகூட விலை ஏறி இருக்குது, ஏறிக்கொண்டே இருக்குது.

அரிசி, 1936-ம் வருஷத்திலே படி 16-பைசா, 1959-ம் வருஷத்து விலை 94-பைசா! கிட்டத்தட்ட, ரூபாய்க்கு 6-படி அரிசி கிடைச்சுது 1936-லே, 1959-ம் வருஷத்திலே அரிசி கிட்டத்தட்ட ஒரு ரூபாய். ஒரு ரூபாய்க்கு 6-பைசாதான் குறைவு. புளி 1936-லே வீசை 24-பைசா, கிட்டத்தட்ட 5-வீசை, ரூபாய்க்கு; 1959-லே புளி விலை என்ன தெரியுமோ? வீசை இரண்டு ரூபாய். இப்ப, இன்னும் ஏறிவிட்டிருக்குது புளிவிலை. மிளகா வீசை 54-பைசா, அரைரூபாய், அப்போது. இப்போது விலை, வீசை மூன்றுரூபாயும் 65-பைசாவும், மூணரை ரூபாய்னு வைத்துக்கொள்ளேன். பருப்பு அப்போது ரூபாய்க்கு நாலுபடி, 1959-லே விலை என்ன தெரியுமோ? படி பருப்பு 1-ரூபா 40-பைசா. சக்கரை? ரூபாய்க்குக் கிட்டத்தட்ட இரண்டுவீசை கிடைச்சுது. சர்க்கரைவிலை, வீசை ஒண்ணுக்கு கிட்டத்தட்ட இரண்டு ரூபா, 1959-லே, காப்பிக்கொட்டை, முதல்தரம் இல்லே, இரண்டாம் தரம், 1959-லேவிலை 7-ரூபா 55-பைசா. முன்னே அதே காப்பிக்கொட்டை ஒண்ணரை ரூபா வீசை.........

பொன்னி! இதை எல்லாம் எண்ணிக்கொண்டா, பொங்கற்பண்டிகை ஒரு கேடான்னுகூடத் தோணுது. இப்படி விலைகளெல்லாம் ஏறிக்கொண்டேபோனா, ஏழைகள் என்னசெய்ய முடியும்? மலைபோல வருதே பொங்கல், நல்லநாளிலே வீடு சந்தோஷமாக இருக்க வேணுமே, பணம்போதாதே, எங்கே கடன் வாங்குவது, என்ன செய்வதுன்னு திண்டாட்டமாக இருக்குமே...

அதை எண்ணிக்குமுறிக்கொண்டு இருந்து என்ன பிரயோஜனம்? இதைமாற்ற வழி என்ன என்று முயற்சி செய்யவேண்டாமா?

நாம் என்னடி செய்யமுடியும், பெண்கள்.

பெண்களுக்குத்தானே தெரியும் விலைவாசி ஏறினதாலே வந்திருக்கிற கொடுமை. ஊராள்கிற கட்சிக்காரர்கள் ஓட்டுக் கேட்கவருகிறபோது, துணிஞ்சி சொல்லணும்; இப்படி அநியாயமாக விலையை ஏற்றிவிட்டுவிட்ட உங்களுக்கு எங்க ஓட்டு கிடையாது போன்னு சொல்லணும். பிரான்சு நாட்டிலே, புரட்சியை நடத்தினவங்க, துவக்கினவங்க ஆண்கள் என்று எண்ணிக்கொண்டிங்க. பெண்கள் படைதான் புறப்பட்டுது முதன்முதலிலே.

பெண்கள் படை கிளம்பி என்ன செய்தது?

தெருவெல்லாம் ஊர்வலம், முழக்கம். விலையைக் குறைக்கவேண்டும், ரொட்டி கிடைக்கவேண்டும் என்று கிளர்ச்சி. கிடுகிடுத்துவிட்டதே ஆட்சி......

## வடக்கும்-தெற்கும்!

### தனி நபர் வருமானம்

| | | |
|---|---|---|
| பஞ்சாப் | 406·4 | ரூபாய் |
| மேற்கு வங்கம் | 398·4 | ,, |
| ஆசாம் | 323·5 | ,, |
| மத்திய பிரதேசம் | 318·8 | ,, |
| பம்பாய் | 313·1 | ,, |
| உத்தரபிரதேசம் | 287·4 | ,, |
| சென்னை | 269·3 | ,, |

அதைப்போல இங்கே நாமும் செய்யலாம் என்று யோசனை சொல்கிறயா, பொன்னி.

பொன்னிக்கு என்ன, செய்யலாம்னு தாராளமா, தைரியமாச் சொல்லிவிடுவா. படைகூடத் திரட்டி விடுவா? ஆனா, அதிலே எவ்வளவு கஷ்டம், தொல்லை...

அதைப்பார்த்தா, குடும்பம் குடும்பமாக குமுறிக் கொண்டு கிடக்கிறதே! அதுமட்டும் கஷ்டம் இல்லையா?

ஊர்வலம் நடத்துவதிலே கஷ்டம் இல்லை; உற்சாக மாகக்கூட நடத்தலாம். ஆனா, இந்தக் காங்கிரசாட்சியை நம்பி இந்தக் காரியத்திலே ஈடுபட்டா, ஆபத்து ஏற்படுமே......

இதிலே என்னடிம்மா ஆபத்து? நாம என்ன சொல்லப்போறோம். வயித்துச் சோத்துக்கு வழி காட்டு; விலைவாசியைக் கட்டுப்படுத்து, அப்பத்தான் ஓட்டுப் போடுவோம் என்று சொல்லப்போறோம்.

அதற்குக் காங்கிரஸ் ஆட்சி என்ன பெயர் சொல்லும் தெரியுமா? கிளர்ச்சி, புரட்சி, கலகம், பலாத்காரம் என்றெல்லாம் பயங்கரமான பேர்களிட்டு, தடியடி கொடுக்கும், துப்பாக்கியாலே சுட்டுச் சாகடிக்கும். இதுவரையிலே, உரிமைக்காக, விலைவாசி குறைவதற்காகக் கிளர்ச்சி செய்த மக்கள் பேரிலே துப்பாக்கிப் பிரயோகம் செய்ததிலே, காங்கிரசாட்சி எத்தனை பேர்களைக் கொன்றுவிட்டிருக்கிறது தெரியுமா?

சொல்லு, அந்த அக்ரமத்தை. அநியாயத்தை....

இரண்டு வருஷத்துக்கு முன்பு வரையிலே, காங்கிரசாட்சி துப்பாக்கியாலே சுட்டுக்கொன்ற மக்களுடைய தொகை **4104!**

அநியாயம்! அநியாயம்! எப்படி மனசு வந்ததோ? இரும்போ, கல்லோ அவர்களோட மனசு? எப்படியெப்படி துடிதுடித்துச் செத்தார்களோ அந்த மக்களெல்லாம். குண்டுகள் எங்கெங்கு பாய்ந்ததோ. மகனை இழந்த தாய்மார்களும், கணவனை இழந்த பெண்களும் மாரடித்து எப்படி எப்படி அழுதார்களோ! என்னென்ன சொல்லி அழுதார்களோ? அந்நியன் அக்ரமக்காரன் ஆங்கிலேயன். அவனை ஓட்டி அருமையான சுயராஜ்யத்தை நிலைநாட்டிவிட்டா, பிறகு நாடு சுகப்படும் வீடுசுகப்படும் என்று சொன்னார்களே, இப்போது இப்படிச் சுட்டுக் கொன்று குவிக்கிறார்களே! இவர்களைக் கேட்பார் இல்லையா! எங்கள் கதியைப் பார்ப்பவர் இல்லையா? பிள்ளை குட்டி பெற்றலர்களே! எங்களை இந்தக் கதிக்கு ஆளாக்கினவர்களை, ஒரு வார்த்தை கேட்கக் கூடாதா! வீட்டை விட்டு வெளியே போகும்போது, சிரித்த முகத்தோடு சென்றாரே; இப்போது செத்துக் கிடக்கிறாரே! இவர் என்ன குற்றம் செய்தார்? கதவைப் பெயர்த்தாரா, கரத்தை உடைத்தாரா? உழைக்கிறோமே மாடுபோல. ஓடாகிப் போகிறோமே, விலைகளோ விஷமாகி எம்மை வாட்டி வதைக்கிறதே, மலைமலையாக இலாபம் கிடைக்கிறதே எமது உழைப்பால், மனம் இரங்கி எமக்குக் கொஞ்சம் கூலி கூட்டித் தருவீர்கள், குழந்தைகள் அரைப்பட்டினி, குடும்பத்தில் வறுமை, ஐயா! இப்படியே எத்தனை நாள் சித்திரவதைபடுவோம்! கண் திறந்து பாருங்கள்! காது கொடுத்துக் கேளுங்கள்! கைதூக்கி விடுங்கள்!--என்றுதானே கேட்டார்கள். அதற்கா குண்டடி? அதற்கா சாவு, அவர் கேட்டது வாழ்வு, கிடைத்தது சாவு!!---என்றெல்லாம் எத்தனை மாதர்கள் அழுது புரண்டனரோ, எத்தனை பேர்களுக்குத் தாலி அறுந்ததோ!....

செ! என்ன ஆட்சி இது! வத்சலா சொல்லச் சொல்ல, எனக்கு அழுகையை அடக்கமுடியவில்லை..,.

அழுதால் என்ன, பட்டு பலன்? செத்தவர்கள் பிழைத்தெழுந்தா வரப்போகிறார்கள். இனிச் செய்ய வேண்டியது என்ன என்றல்லவா பார்க்க வேண்டும். இதுவரை *4104!* இனியும் பலபேர் சுட்டுக் கொல்லப் படாமல் இருக்க வழி தேடவேண்டாமா?

ஈவு இரக்கமற்றவர்களா பொன்னி! நாமெல்லாம். பெத்த வயிறு பத்தி எரிய எரிய, பல ஆயிரம் பேர்களை இவர்கள் சுட்டுக் கொல்வது, பிறகு வந்து கும்பிடு போட்டு, ஓட்டுக் கேட்பது, நாம் மதிமயங்கிப்போய் ஓட்டுப் போடுவதா? நமக்கென்ன இருதயமே கிடையாதா?

வாய் கிடையாதே! மனம் இருக்கிறது, மனம் நிறைய அன்பு இரக்கம், தர்மம் என்ற பண்பு இருக்கிறது. ஆனால், மனதிற்குச் சரியென்றுபட்டதைத் தைரியமாக வெளியே எடுத்துச் சொல்லி நியாயம் கேட்க நமக்கு வாய் கிடையாது என்றுதானே, *4104* பேர்களைக் கொன்றுவிட்டு, விலைவாசிகளை விஷம்போல ஏறச்செய்து விட்டு, முதலாளிகளுடன் கூடிக் குலவிக்கொண்டு, கூச்சமில்லாமல் அச்சமில்லாமல், நம்மையே பார்த்து, காங்கிரசு, ஓட்டு கேட்கத் துணியுது. ஒரு வீட்டிலாவது. **குடித்த இரத்தம் போதாதா? அழித்த குடும்பம் போதாதா?** என்று கேட்பவர்கள் இருந்தால் ஓட்டுக் கேட்கிற துணிவு வருமா காங்கிரசுக்கு.

பொன்னி! என் சொந்தச் செலவிலே ஆயிரம் போஸ்டர் போடப் போகிறேன், **குடித்த இரத்தம் போதாதா? அழித்த குடும்பம் போதாதா?** என்று.

பொதுப்படையாகப் போட்டால் புரியாதே,

போஸ்டர் போடுவதானால், நான் சொல்லுகிறேன், பொறுத்தமாக.

கட்டாயம் போடப்போகிறேன் பொன்னி! சொல்லு எப்படிப் போடலாம்?

எவ்வளவு ரூபாய் அதற்குச் செலவாகும்?

செலவு கிடக்கட்டும் மணி! **4104** உயிர்களைவிடவா, பெரிது! சொல்லு, பொன்னி! போஸ்டர் எப்படி இருக்க வேண்டும்.

அதுதான் யோசித்துக்கொண்டிருக்கிறாள்.

இப்படி இருக்கலாமா போஸ்டர்? சொல்லுங்கள் பார்ப்போம்.

**இரத்தப் பொங்கல் படையலிட்ட**
**இரக்கமற்ற காங்கிரசே!**

## குடித்த இரத்தம் போதாதா?


## அழித்த குடும்பம் போதாதா?

போதும்டி, பொன்னி! விளக்கமாகவே இருக்குது விஷயம்.

இந்தப் போஸ்டர்போட்டு ஊரெல்லாம் ஒட்டி, மக்களுக்கு உண்மையைத்தெரியப்படுத்தினால்தான் பொன்னி! நம் வீட்டிலே பால் பொங்கியதாக இருக்கும்.

புறப்படு பொன்னி! அச்சகத்துக்கு.
வா, போவோம், எல்லோருமே. . . .

★



# ஆடியபாதம்

## அண்ணாதுரை

[ஆவலூரான் சர்க்கரை ஆலையின் அலுவல்குழு ஆலைப்பொறுப்பாளர் சோலையப்பர், தலைமையில், ஆலை மாளிகை மாடியில் கூடுகிறது.

பங்குதாரர்களான, அம்பலவாணர், கோடிலிங்கம், செங்காட்டார், மந்திரமூர்த்தி மரகதம்மாள், டேவிட், தாமன் ஆகியோர், குழுக்கூட்டத்தில் கலந்துகொண்டுள்ளனர்.

பணியாட்கள், பலகாரத்தட்டுகளையும், கோப்பைகளையும் கொண்வந்து வைக்கின்றனர்.

சற்றுத் தொலைவிலே, ரேடியோ இசை எழுப்பிக் கொண்டிருக்கிறது.

ஆலை பொறுப்பாளர், சோலையப்பர், சிறிதளவு மகிழ்ச்சியுடன் காணப்படுகிறார், மற்றவர்கள் முகத்தில் மலர்ச்சி காணப்படவில்லை.

இரண்டொருவர், தங்கச் சங்கலியுடன் கூடிய கடிகாரம் வைத்துக்கொண்டுள்ளனர். இரண்டொருவர், வைரக்கடுக்கன் அணிந்துகொண்டுள்ளனர்.

அனைவரும் பணம் படைத்தவர்கள், என்பது தோற்றத்தாலேயே தெரிகிறது.

பலகாரங்களைத் தொட்டும் புட்டும் வைத்துவிடுகிறார்கள்.

பணியாட்கள், தட்டுகளை அப்புறப்படுத்திவிடுகிறார்கள்

ஒருவருக்கொருவர், மெல்லிய குரலில் பேசிக் கொள்கிறார்கள்.

சோலையப்பர், ஒரு குறிப்பேடு எடுத்து, ஏதோ படிப்பதும், குறிப்பெடுப்பதுமாக இருக்கிறார்.

ஒருவர், கடிகாரத்தை எடுத்துப்பார்க்கிறார்.

இன்னொருவர், கனைத்துக் காட்டுகிறார்.

சோலையப்பர், குறிப்பேட்டை மூடிவைத்து விடுகிறார்.]

**கோடி:-** பயல்களுக்கு மண்டைக்கர்வம் நாளுக்கு நாள் வளருகிறது. காரணம் என்ன? கண்டிப்பான நடவடிக்கை எடுப்பதில்லை, தக்க சமயத்தில்.

**சோலை:-** எடுக்கப்படும் நடவடிக்கைகள் மிகக் கண்டிப்பாக இருப்பதாக அல்லவா, அவர்கள் சொல்கிறார்கள்.

**கோடி:-** ஓஹோ! எப்படி உன்னைச் சாகடிப்பது? இரும்புத் தடியாலா? மூங்கிற் கழியாலா? பலதடவை அடித்தா? ஒரே அடி கொடுத்தா என்றெல்லாம் கேட்டுக்கொண்டுதான், பாம்பை அடிப்பீர்கள் போலிருக்கிறது.

**சோலை:-** பாம்பா பாடுபடுபவர்கள்?

**கோடி:-** ஏன், படமெடுத்து ஆடியதைப் பார்த்ததில்லையா? போன வெள்ளிக்கிழமைதானே, பெரிய ஆர்ப்பாட்டம் செய்தார்கள், ஆலைவாசலில்! ஆணவம் பிடித்த முதலாளி அடியோடு ஒழிக ஒன்று.

**அம்ப:-** கல்வீசிக் கலகம் செய்ததாகக்கூடக் கேள்விப்பட்டேன்.

**செங்காட்:-** கத்தியோடு தான் வந்திருக்கிறார்கள், பயல்கள்.

**கோடி:-** நாலுபேர் பிணமாகக் கீழே விழுந்தபிறகுதானே கும்பல் கலைந்தது,

**அம்பல:-** கலைந்து? மறுநாளே கண்டனக் கூட்டம் போட்டார்கள்

**கோடி:-** ஆமாம்! மறுபடியும் பழைய கூச்சலேதான்! ஆணவம் பிடித்த முதலாளி அடியோடு ஒழிக!

**சோலை:-** ஆணவம் பிடித்த முதலாளி அடியோடு ஒழிக என்று கூச்சலிட்டது, தவறுதான். முதலாளியின் ஆணவம் ஒழிக என்று முழக்கமிட்டிருக்கலாம்.

**கோடி:-** கேட்டீர்களா, இவருடைய அருமையான

பேச்சை! இப்படிப்பட்ட, இடிப்பொடிந்ததுகள், எதையும் கண்டு நடுக்கமெடுக்கும் பேர்வழிகள், நிர்வாகம் நடத்துகிற வரையில், அதுகளுக்குத் தலை கால் தெரியப்போவதில்லை. கெஞ்சினால் மிஞ்சுவார்கள்! மிஞ்சினால் கெஞ்சுவார்கள்! பஞ்சைகளின் போக்கே, அப்படித்தான் இருக்கும்.

**சோலை:-** பஞ்சைகளாக இருக்கலாம்! இருக்கிறார்கள். ஏன்? நாம் அவர்களை அப்படி வைத்திருக்கிறோம்! எதனால்? நாம், இப்படி இருப்பதற்காக!!

**கோடி:-** போதுமா, இவர் அவர்களுடைய 'வக்கீல்' ஆகி விட்டார் என்பதற்குச் சாட்சி. அதுகள் மேடையிலே பேசுவதை, அழகுபடுத்தி, ஒழுங்குபடுத்தி இவர் பேசுகிறார். இதற்கு இவருக்கு இங்கு பதவி, பட்டம், பணம்! செ! என்ன முட்டாள்தனம்!! இவர் இருக்கிற மட்டும், முறைமாறாது. முறை மாறாவிட்டால், அவர்களின் கொட்டம் அடங்காது. அவர்களின் கொட்டம் அடங்காவிட்டால், பிறகு, நாம், ஆளுக்கொரு திருவோடு தூக்கிக்கொண்டு தெருத்தெருவாக அலைய வேண்டியதுதான்!

**அம்ப:-** ஏன் இவ்வளவு வெறுப்பு நம்மீது, அவர்களுக்கு?

**செங்கா:-** ஏனா? இலட்ச இலட்சமாகப் பணத்தைக் கொட்டித், தொழில் நடத்தி வேலை கொடுத்துக், கூலி கொடுத்து, இதுகளை வாழவைக்கிறோமல்லவா, அதனால், நன்றிகெட்டதுகள்!

**சோலை:-** கேலி அல்லவா பேசுகிறீர்கள்! ஏன் வெறுப்பு ஏற்பட்டது என்றல்லவா கேட்கிறார்? அதற்கென்ன பதில்? தெரிந்தாகவேண்டுமே! அப்போதுதானே நிலைமையைச் சீராக்கமுடியும்.

**கோடி:-** வெறுப்புக்குக் காரணம், பொறாமை!

**சோலை:-** பொறாமைக்குக் காரணம்?

**அம்பல:-** பச்சென்று இருக்கிறோமே நாம், அதுதான்!

**சோலை:-** அதுமட்டுமல்ல! அவர்கள் வாழ்க்கை இருண்டு கிடக்கிறதே, அதுவும்தான்!

**கோடி:-** அழித்துவிடச் செல்லு தொழில் நடத்துபவர்களை — தொழிலே அழிந்து. தெருத்தெருவாக அதுகள் அலையட்டும்...

**சோலை:-**இது தெரியுமல்லவா அவர்களுக்கு? அப்படி இருந்தும்,ஏன்வெறுப்பு?

**கோடி:-** அழிவுக்குத்தான், வேறென்ன!

**அம்ப:-** நாமும் நமது முறையும் அல்லவா, அழியப் போவதாக அவர்கள் பேசுகிறார்கள்.

**கோடி:-** அழிக்கப்போவதாக...

**சோலை:-** ஆமாம்! அந்த அளவு ஆத்திரம் ஏற்படக் காரணம், நாமேதான்! நாம் அவர்களை நடத்தும் போக்கு, பழகும் விதமும், மிகமோசமாக இருக்கிறது. சிடுசிடுவென்று இருப்பது, முகத்தைக் கடுகடுப்பாக்கிக் கொள்வது, கேவலமாகப் பேசுவது...

**செங்கா:-** கொஞ்சச் சொல்கிறாரா அவர்களிடம்!

**சோலை:-** மனிதர்களாக நடத்தச் சொல்கிறேன். அன்பாக மரியாதையாக நடத்தவேண்டும் என்கிறேன். அவர்களை, ஏனோதானோ என்று எண்ணுவது, எடுத்தேன் கவிழ்த்தேன் என்று பேசுவது; இவை கூடாது. இந்தப் போக்குத்தான், அவர்கள் மனதிலே அந்த அளவுக்கு வெறுப்பை உண்டாக்கிவிட்டது.

**கோடி:-** பலே! பலே! ஆலையை எப்படி நடத்துவது, பணம் போட்டவர்களுக்கு எப்படி இலாபம் தேடிக் கொடுப்பது என்பதைவிடத், தத்துவ ஆராய்ச்சியிலே, மெத்தத் திறமை காட்டுகிறார்...

**சோலை:-** கூலிக்காரனாக இருந்தாலும் மனிதத்தன்மையோடு நடத்தவேண்டும்.

**கோடி:-** (கேலியாக) சமத்துவம்! சகோதரத்துவம்!

**சோலை:-** ஆமாம்! அதுதான், கைகண்ட மருந்து!

**கோடி:-** கொடுத்துப் பாருங்கள் பலன் தெரியும்...

**சோலை:-**அதுதான் என் தீர்மானம். வேலை செய்பவர்களை...

**கோடி:-** அண்ணா தம்பி என்று அழைக்கப்போகிறீர்! கைகுலுக்குவீர், தோளின்மீது கைபோட்டுத் தோழமை காட்டுவீர்...

**சோலை:-** தவறு என்ன? வேலை சரியாக நடக்கிறதா என்று பார்த்துக்கொள்ள வேண்டும்—அதிலே கண்



சோலையப்பர் ஆலோசனை

டிப்பாக இருக்கவேண்டியதுதான்! ஆனால் அதற்காக, நம்மைப்போலத்தான் அவனும் என்பதை மறந்துவிட வேண்டியதுதானா? சரியா... கோடீஸ்வரன், இலட்சாதிகாரி, ஆலை முதலாளி இவர்களெல்லாம் தனி இனமா? மனித இனம்தான்! பாட்டாளி? அதே மனித இனம்தான்! பிறகு, ஏன் அவனைக் கேவலப்படுத்த வேண்டும்? கேவலமாக நடத்துவதுதான், அவர்களுக்கு, நம்மீது அவ்வளவு வெறுப்பை உண்டாக்கிவிட்டது. அந்த வெறுப்பைப் போக்கியாகவேண்டும்! செய்கிறேனா இல்லையா, பாருங்கள்...

**அம்ப:-** பார்ப்போம்...... ஆனால் இந்த ஆராய்ச்சியிலே முழுகி, போட்ட முதலுக்கு மோசம் வந்துவிடக் கூடாது—கவனமிருக்கட்டும்.

*[கடிகாரத்தைப் பார்த்தபடி, அம்பலவாணர் எழுந்திருக்கிறார்.*

*மற்றவர்களும் புறப்படுகிறார்கள்.*

*சோலையப்பர், அவர்களுக்கு வணக்கம்கூறி அனுப்புகிறார். தனியாக உட்கார்ந்து கொண்டு யோசிக்கிறார்.*

*பேனாவை எடுத்து, ஜேபியில் செருகிக்கொள்கிறார்.*

*மூக்குக்கண்ணாடியை உறையில்போட்டு, ஜேபியில் வைத்துக்கொள்கிறார்.*

*மேஜைமீது இருந்த 'மணி'யைத் தட்டுகிறார்.*

*சிறிது நேரம் பார்த்துவிட்டு மீண்டும், மணியைத்தட்டுகிறார், சற்று வேகமாக. எழுந்து நின்று, கோட் பொத்தான்களைச் சரிப்படுத்திக்கொள்கிறார்.*

*மீண்டும், அதிக வேகமாக மணியைத் தட்டிக் கொண்டே, "ஏய்! யாரங்கே." என்று அழைக்கிறார்.*

*பணியாள் ஓடோடி வருகிறான்.*

*அவனைக்கண்டதும்]*

**சோலை:-** கந்தசாமிதானே, உன் பெயர்? மணிச் சத்தம் கேட்கவில்லையா......?

*[மணியை எடுத்துச் சரிபார்த்துவிட்டு]*
ஆமாம், இது சரியாக வேலை செய்யவில்லை...... அதனால்தான் இவ்வளவு நேரங்கழித்து வந்தாய்...... உம்! சரி! புறப்படப்போவதை, டிரைவரிடம் சொல்லித், தயாராக இருக்கச் சொல்லு......

**கந்த:-** வண்டி வரக்காணோமே?

**சோலை:-** வரவில்லையா......வீட்டிலிருந்து டெலிபோன் வந்ததே, வண்டி புறப்பட்டு முக்கால் மணி நேரமானதாக......

**கந்த:-** ஆமை வேகத்திலே வந்தாக்கூட, இன்னேரம் வந்திருக்கணுமே......

**சோலை:-** ஆமாம்......வந்திருக்கணும்.

**கந்த:-** அந்த டிரைவர் ஒருமாதிரிதானுங்க......சோம்பேறி ......,வேறே எங்காவது சுத்தப் போயிருப்பான்......

**சோலை:-** இருக்காது, இருக்காது......எவ்வளவு வேலை செய்கிறான்,......பாவம்! இரண்டு ஆள் வேலையை அவன் ஒருவனே பார்க்கிறான்.....என்னமோ பாபம்!

## ஆட்சியாளரின் அறியாமை

"ஆளும் கட்சியினர் என்று சொல்லிக்கொள்பவர்கள், 1947-ஆம் ஆண்டுவரை ஊழியர்களாக இருந்தார்கள். அவர்கள் பணிவாக நடந்து கொள்வதற்கும், சேவா மனோபாவம் கொண்டவர்களாகவும் இருப்பதற்குத் தெரிந்துகொள்ளவேண்டும். கல்வி பொருளாதாரம் ஆகிய இதுபோன்ற துறைகளில் தாங்கள் குழந்தைப் பிராயத்திலேயே இருப்பதாக அவர்கள் எண்ணவேண்டும்."

மதுரை — இராமனதபுரம் வர்த்தகர் கூட்டத்தில் ஏ. எல். முதலியார்.

தலைவலியாக இருக்கலாம், வயற்றுவலி ஏற்பட்டிருக்கலாம்......குடும்ப வேலைத் தொந்திரவு, எதிர்பாராதது, ஏதாவது ஏற்பட்டிருக்கலாம்......

**கந்த:-** 'டாக்சி' அழைத்துக்கொண்டு, வரட்டுங்களா......

**சோலை:-** வேண்டாம்......மாலை நேரம், அழகான நேரம்... ...நடந்தே போகிறேன்......பொழுது போக்காக..... வண்டி எதற்கு! வெய்யிலா என்ன......அவசர வேலையா...? வீட்டுக்குத்தானே போகிறேன்...... மெதுவாக நடந்துபோகலாம்......மனதுக்கு நிம்மதி! உடலுக்கும் நல்லது......

*[குறிப்பேட்டை, பீரோவில் வைத்துப் பூட்டிவிட்டு, சோலையப்பர், வெளியேசெல்கிறார்.*

*அவர் நடந்து போவதைக் கண்டு, கந்தசாமி. ஆச்சரியத்தால், வாயைப் பிளந்துகொண்டு நிற்கிறான்.*

*பெரும் பணக்காரர் ஆலைமுதலாளி சோலையப்பர் நடந்துபோவதைப் பலரும் பார்த்து, ஆச்சரியப்படுகிறார்கள். கண்டதும் பலர், கும்பிடுகிறார்கள், மரியாதை காட்டுகிறார்கள்.*

*சோலையப்பர், முகமலர்ச்சியுடன் இருக்கிறார்.*

*தன்னிடம் மரியாதைகாட்டுபவர்களுக்கு, பதில் மரியாதை காட்டுகிறார், கனிவுடன்.*

*தரகுமண்டிக்காரர், சோலையப்பர் நடந்துசெல்வது கண்டு, பதறிப் போகிறார்.*

*அவரிடம் சென்று, பணிவாகவும், குழைவாகவும், பேசுகிறார்.]*

**தரகு:-** என்னங்க இது, நடந்து? எங்கே, கார்?

**சோலை:-** காரா? வரவில்லை......டிரைவர் கொண்டுவர வில்லை......

**தரகு:-** தடிக்கழுதை! அதைவிட என்ன வேலை அவனுக்கு ...நடக்கவைக்கிறனே......என்ன கேடு அவனுக்கு?

**சோலை:-** அவனை ஏன், பாவம், திட்டுகிறீர், என்னமோ வேலையாக இருக்கும்......ஒருசமயம் உடம்புக்கு ஏதாவது......

**தரகு:-** ஒருகேடும் இல்லிங்க......நான் பார்த்தனே, மூணு மணிக்கு. ஆளு, சாண்டோ மாதிரி இருந்தான்......

**சோலை:-** பரவாயில்லை......நான் இதோ போயிடுவேன்,.... உங்க வேலையைக் கெடுத்துக்கொண்டு, என்னேடு வரவேண்டாம்......

[தரகுமண்டிக்காரர் கும்பிட்டுவிட்டு, வேறு பக்கம் செல்கிறுர்.

சோலையப்பர், ந ட மா டு ம் மக்களைப்பார்த்து மகிழ்கிறுர்.

சிரித்துப் பேசிக்கொண்டு போகும் மக்கள், ஓடி ஆடி விளையாடும் சிறுர்கள், ஆகியோரைக் காண்கிறுர்.

பல இடங்களிலிருந்து ஓசைகளும், இ சை யு ம் கலந்துவரக் கேட்கிறுர்.
தனக்குள் கூறிக்கொள்கிறுர்.]

நல்லவர்கள்......மிக நல்லவர்கள்! அன்புக்கு, யாராக இருந்தாலும் கட்டுப்படுகிறுர்கள்...எவ்வளவு மரியாதை காட்டுகிறுர்கள்......உம்!......இவர்களைச் சரியாக நடத்தாததால்தானே, சச்சரவு, சண்டை, வருகிறது......தெருக்கள், இவ்வளவு குறுகலாகவா இருப்பது......இடநெருக்கடி....என்ருலும், சிரித்துப் பேசிக்கொண்டு சந்தோஷமாகத்தான் வாழ்கிறுர்கள் ......போதுமென்ற மனமே பொன் செய்யும் மருந்து ......அது என்ன? ஓஹோ! நாட்டியக் கச்சேரி நடக்கிறதோ!

[எதிரே வருபவரைப் பார்த்து]

**சோலை:-** என்னப்பா, அதோ அந்த வீட்டிலே......?

**அவர்:-** கலியாணம், கச்சேரி நடக்குது......

**சோலை:-** யார் வீடு, அது?

**அவர்:-** ஆலை ஆபீசிலே வேலை பார்க்கருரு, ஆடிய பாதம்......அவரு, மக கல்யாணம்.........

**சோலை:-** ஆடியபாதமா! அடடே, ஆமாம்......அழைப்புக் கடிதம் வந்ததே, மறந்து போய்விட்டேன்.

[அந்த ஆள் போன பிறகு; தனக்குள்]

ஆடியபாதம், அடக்கமானவன்......சம்பளம் அதிகம் இராதே......அறுபதோ, எழுபதோதான். கலியாணமா, மகளுக்கு. சந்தோஷமாக இருப்பான்...விருந்து, கச்சேரி,......போகலாமே நாமும்...... எதிர்பார்த்திருக்க மாட்டான்......ஏழை குமஸ்தா வீட்டுக் கல்யாணத்துக்கு முதலாளி வருவாரான்னு, எண்ணிக்கொள்வான்......... அழைப்புக் கொடுத்தபோதுகூடக், கட்டாயம் வரவேண்டும்னு சொல்லலே......எப்படிச் சொல்லுவான், பாவம்... போகிற வழக்கம் கிடையாதே......போனுல் என்ன!...... துள்ளுவான் சந்தோஷத்தாலே......ஆமாம் ...... விருந்தாளிகளெல்லாமேகூட ஆச்சரியப்படுவாங்க......குமஸ்தாவா இருந்தாலும், ஆடியபாதம் விஷயத்திலே, முதலாளிக்கு அவ்வளவு மதிப்பு என்று பேசிக்கொள்வாங்க......அவனுக்கும் பெருமை, பூரிப்பு! கலியாணத்துக்கே தனிச்சிறப்பு. முதலாளி வந்திருந்தாரு! முதலாளியே வந்திருந்தார் என்று எல்லோரும் பேசுவார்கள். ஆடியபாதத்துக்கு மகிழ்ச்சிதானே, பெருமை தானே......ஏற்படட்டுமே ...... அனுபவிக்கட்டும்...போக வேண்டியதுதான்.........

[சோலையப்பர், கலியாணவீடுநோக்கிச் செல்கிறுர்.

வாசற்படி அருகே, சிறிய அலங்காரப் பந்தல் போடப்பட்டு, வாழை மரங்கள் கட்டப்பட்டுள்ளன.

சிறுவர்கள், மணலில், குதித்து விளையாடிக் கொண்டிருக்கிறுர்கள். சிலர் உள்ளே செல்வதும், சிலர் வெளியே வருவதுமாக உள்ளனர்.

வாசற்படியில், ஒருபக்கம், சந்தன தாம்பூலத் தட்டுகளுடன் இருவர், நின்றுகொண்டுள்ளனர்.

மற்றேர்புறம், ஒரு தட்டிலே ரோஜாப்பூக்களை வைத்துக்கொண்டு, இரண்டு பெண்கள் நிற்கிறுர்கள்.

உள்ளே வருகிறவர்களுக்கு பன்னீர் தெளிக்கிறுர் ஒருவர்.

மற்றெருவர், சந்தனம் கொடுக்கிறுர்.

பெண்களைப், பெண்கள் வரவேற்கிறுர்கள்.

சோலையப்பர், உள்ளே நுழைகிறுர்.

மலர்த்தட்டுடன் நிற்கும் பெண்கள் எதிரே சென்று நிற்கிறுர்.

பெண்கள், கூச்சப்பட்டு, ஒதுங்கிக்கொள்கிறுர்கள்.

## ஐந்தாண்டுத்திட்ட இலட்சணம்

"விலைவாசிகளைக் கட்டுப்படுத்துவதில்தான் ஐந்தாண்டுத் திட்டங்களின் வெற்றி இருக்கிறது. குறைந்த வருவாய் உள்ளவர்களின் தேவைக்கு ஏற்ப குறிப்பாக உணவுத் தான்யங்களின் விலையும் ஏனைய இன்றியமையாத் தேவைப்படுகிற பொருள்களின் விலை உயர்வையும் கட்டுப்படுத்த வேண்டும்."

ஸ்ரீமன் நாராயணன்,
திட்டக்குழு உறுப்பினர்.

இதைக் கவனித்த, ஆடவர் சோலையப்பரைக், கையைப் பிடித்துத் தம்பக்கம், இழுத்த படி பேசுகிறார்.]

ஆட:- பார்த்து, பார்த்து......இந்தப் பக்கமா, வாங்க... அது பொம்பளைங்க போற இடம்......தெரியலே பொண்கள் நிற்கறது.

சோலை:- ஆமா ஆமாம்...தெருவிலே பந்தலைப் போட்டிருக்கலாமே, கச்சேரிக்கு......

ஆட:- சந்தனம் எடுத்துக்கொள்ளுங்க...தெருவிலேயும் போடலாம், தெரு முழுதுங்கூடப் போடலாம்; இருக்கணுமே பணம்......தாம்பூலம்.........

சோலை:- போடுகிற பழக்கம் இல்லை...இருக்கட்டும்...ஒரு ரோஜா எடுத்துக் கொள்கிறேன்......தட்டைக் காட்டம்மா.

[பெண்கள் நாணப்படுகிறார்கள்]

இப்படி......அட, ஏன்...ஏன்...?

ஆட:- இதென்னங்க கேள்வி! பொம்பளேபுள்ளே கிட்ட போயி எதிரே நின்னுகிட்டு, பூவைக் கிளறிக்கிட்டு இருந்தா, வெட்கமா இருக்காதா.........

சோலை:- ஆமா ஆமாம்...பூ ஒண்ணுகூட முழுசா இல்லயே...உம்!...இதழ்களா இருக்கே......

ஆட:- அப்படித்தான் இருக்கும். பலபேர், கைபட்டுப் பட்டு...இந்தாங்க, இது பரவாயில்லை......

சோலை:- சரி,சரி...ஆடியபாதம், உள்ளேதானே......

ஆட:- ஆமாம்...அவன்தானே, எல்லாத்தையும் கவனிக்கணும், ஓடி ஆடி......

[கலியாண வீட்டுக் கூடம் செல்கிறார்.

நடனக் கச்சேரி நடந்துகொண்டிருக்கிறது. ஏழெட்டு நாற்காலிகள் போடப்பட்டுள்ளன. அதிலே சிலர் உட்கார்ந்துகொண்டுள்ளனர்.

வேறுசிலர், கீழே உட்கார்ந்துகொண்டுள்ளனர்.

சோடா, கலர், உடைத்துக் கொடுத்துக் கொண்டிருக்கிறான், ஒருவன்.

காலியாக இருந்த ஒரு நாற்காலியில் சோலையப்பர் உட்கார்ந்து, நடனத்தைக்கண்டு ரசிக்கிறார்.

பின்புறம், உட்கார்ந்திருந்த ஒருவன், சற்றுக் கோபப்படுகிறான்.]

அவன்:- ஐயோய்!......ஏன்யா, இப்படி ஆடி அசைஞ்சிகிட்டே இருக்கிறே; டான்சு தெரியவிடாமெ...

சோலை:- (மரியாதையாக) மறைக்குதா.........அடஅடா, வேறே இடம் இல்லையே உட்கார...

(விசிறி மடிப்பை எடுத்துப் பின்புறம் போட, அது ஒருவன்மீது படுகிறது)

அவன்:- முன்னாலே பின்னாலே பாரய்யா......உன்னோட விசிறி மடிப்பு, கண்ணிலே, பட்டுன்னு பட்டுது......

சோலை:- கவனிக்கலே....மன்னிச்சிடு...நீ, இங்கே வந்து உட்கார்ந்துகொள்கிறயா, மறைக்காது......நான், உன் இடத்துக்கு வர்ரேன்......

அவன்:- செய்யய்யா......டான்சு சரியாகத்தான் தெரியல்லே, இங்கே இருந்தா......

[அவனுக்குச் சோலையப்பர், தன் நாற்காலியைக் கொடுத்துவிட்டு, அவன் காலிசெய்த நாற்காலியில், உட்கார, அங்கு செல்கிறார்.

அதற்குள், வேறோர் ஆள் வேகமாகவந்து, அந்த நாற்காலியில் உட்கார்ந்துவிடுகிறான். சோலையப்பர், அருகேவருகிறார். கண்டும் காணாததுபோல அவன் இருக்கிறான்.]

சோலை:- பரவாயில்லே, பரவாயில்லே, நீங்கள் உட்காருங்க...நான்வேறே இடம் பார்த்துக்கொள்றேன்... (நிற்கிறார்)

அவன்:- அப்படிக் கொஞ்சம் தள்ளிப்போயி நிற்கறிங்களா......?

[வேறு இடம் சென்று சோலையப்பர், நின்றுகொண்டிருக்கிறார். ஒரு சிறுவன், இதைக் கவனித்துவிட்டு, உட்புறம் ஓடுகிறான்.

சமயற்கட்டுக்கு அருகேஉள்ள கூடத்தில், களைத்துப்போன நிலையில், வேலைகளைக் கவனித்துக்கொண்டிருக்கிறார், ஆடியபாதம். அவரைத் தேடிக்கண்டுபிடித்து, சிறுவன், பேசுகிறான்.]

சிறு:- மாமா! மாமோய்......இத, பாரேன்......இதைக் கேளேன்...

ஆடிய:- என்னடா, உசிரை வாங்கறே...கச்சேரி முடிஞ்சதும் விருந்தாச்சே...அதைக் கவனிச்சிகிட்டு இருந்தா தொல்லைப்படுத்தறயே...

## வாக்காளர் கடமை

—0—

"அர்த்தமற்ற பேச்சுக்கள் அரசியல் வாதிகளுக்கும், சட்டமன்ற உறுப்பினர்களுக்கும் தேவையற்றதாகும். மேம்போக்கான பேச்சுக்களே அவர்களைத் தகுதியற்றவர்களாக்கிவிடும். தெளிவற்ற தலைவர்களைத் தேர்ந்தெடுப்பதற்கு வயதுவந்தவர்களுக்கு வாக்குரிமை என்றநிலை காரணமாக அமைந்துள்ளது. என்றாலும், கல்வி, அறிவு ஆற்றலை, ஒழுக்கம், நாணயம் ஆகிய தகுதிகளைப் பெற்று சட்டமன்ற உறுப்பினர்களைத் தேர்ந்தெடுக்க நாம் ஏதாவது வழிவகை காணவேண்டும்."

சாமர்செட்மாம்.

**சிறு:-** யாரோ, ஒருவர், வந்திருக்காரு...புதுசா இருக்கு முகம்......

**ஆடிய:-** சரிதாண்டா, எத்தனையோ பேருக்கு அழைப்புப் போயிருக்கிறது...எல்லோருமா, ரொம்பப் பழக்க மானவங்க...

**சிறு;-** இவரு பெரிய மனுஷன்போல இருக்காரு...

(இதைக் கேட்ட, ஒருவர், கோபமாக)

**ஒருவர்:-** டேய்! பொடிப்பயலே! அப்ப, நாங்களெல் லாம், சின்ன மனுஷனுங்களா...

**ஆடிய:-** அவன், சின்னப்பையன், என்னத்தைக் கண் டான், விட்டுத்தள்ளுங்க...கோபிக்காதிங்க...

**ஒருவர்:-** இல்லே, நாலுபேர் காதிலே விழுந்தா, என்ன நினைப்பாங்க......பெரிய மனுஷனைக் கண்டுட்டான் பய...இங்கே வந்த மத்தவங்களெல்லாம், பக்கிரிங் களா...?

**ஆடிய:-** என்ன, ஏகாம்பரம்! இந்தச் சின்ன விஷயத் தைப்போயி, இவ்வளவு பெரிசுபண்றே. அவன் பள்ளிக்கூடத்திலே படிக்கிற பையன்...

**ஏகாம்;-** பள்ளிக்கூடம்வேறே படிக்கிறனு...... கர்வத் தைப் பார் ஆடியபாதம். மண்டைக்கர்வம்...இப்பவே அடக்கிவைக்கணும், தெரியுதா.

[ஏகாம்பரம், பேசிக்கொண்டே, தட்டிலே இருந்த 'லட்டு' ஒன்றை எடுத்துப் புட்டு வாயில் போட்டுக் குதப்பிக்கொண்டே செல்கிறான்.

கச்சேரி ஓசை நின்றுவிடுகிறது.

ஆடியபாதம், அவசர அவசரமாகக் கைகளைக் கழுவிக்கொண்டு, துணியில் துடைத்தபடி, கூடத்துப்பக்கம் நடந்துகொண்டே, தனக் குள் பேசிக்கொள்கிறார்.]

**ஆடி:-** அடடே! கச்சேரி முடிஞ்சிபோச்சு போலிருக்குதே

(தட்டில் வெற்றிலே பாக்கும் சில நோட்டு களும் வைத்து நடன மாதிடம் தர அவள் பணத்தைப் பார்க்கக்கண்டு)

**ஆடி:-** அதெல்லாம் ஒண்ணும் பார்க்காதிங்க. என் சக்திக்கு மீறிய தொகைதான் — சந்தோஷமா

எடுத்துகிட்டுப் போய்வாங்க......


[நடனக்காரர், ஆடியபாதத்திடம் விடைபெற் றுக்கொண்டு, செல்கிறார்கள். கச்சேரி, முடிந்ததால், சிலர் வெளியே செல்கிறார் கள். சோலையப்பர், ஒருபுறம் நின்று கொண்டு, 'சோடா' குடிக்கிறார்.

பக்கத்தில், நின்றுகொண்டு, வேறோர் ஆள், சோலையப்பரிடம் பேசுகிறான்.]

**வேறோர்:-** ஆசாமிக்கு வெளிச்சம் போட்டுக்கிட்டுத் திரியறதே வேலே. மாதச் சம்பளம் எழுவது. இவன் எதுக்காக, நூறு ரூபா டான்சு வைக்கணும் சொல் லுங்க......

**சோலே:-** கலியாணமாச்சே—கச்சேரி இருக்கவேண்டாமா ......

**வேறோர்:-** ஆ...காசு இருக்கவேண்டாமா......விரலுக்கு




கலியாண வீட்டில் குழப்பம்

ஏத்த வீக்கம் என்று பெரியவங்க ஏன் சொன்னுங்க.. ......

*[அப்போது அங்கு அவசரமாகவந்த ஒரு ஆள், சோலையப்பரின் காலை மிதித்துவிடுகிருன்.*

*சோலையப்பர், வலிதாளமாட்டாமல் துடிக்கிருர்.*

*பக்கத்திலிருந்தவர், காலைமிதித்த ஆளைப்பார்த்துக் கண்டிப்பான முறையில் பேசுகிருர்.]*

**வேருேர்:-** அடெ! அடெ! என்னடாப்பா இது......பாவம், இவரோட காலைப்போட்டு மிதிச்சிவிட்டயே...... ரொம்ப வலிக்குதுங்களா......கண் மண் தெரியாம நடக்கறது....துடிக்கருரு பாவம்....மடைப்பசங்க...

**மிதித்தவன்:-** ஏய்! யாரைப்பார்த்துச் சொல்றே, அந்தப் பேச்சு? யாரை மடையன்னு சொன்னே! பல்லு முப்பத்திரெண்டும் கீழே உதிர்ந்திடும் அறைகொடுத்தா.. ...போற வழியிலே பொதிமாடு மாதிரி அவன் நின்னுகிட்டு இருந்தா கால்படாதா?...அவனுக்காக வக்காலத்து வாங்கிக்கிட்டு வந்துட்டயா நீ. ஏன்! விசிறி மடிப்பு! விரலிலே மோதிரம்! இதைப்பார்த்து மயங்கிட்டயா......

**வேருேர்:-** என்னடா, நீ பாட்டுக்கு அடுக்கிக்கிட்டே போறெ, அளவுக்குமீறி; அயோக்யப்பயலே!

**மிதி:-** யார்டா, அயோக்யப்பய. உன் முதுகுத் தோலை உரிச்சிடுவேன் உரிச்சி......தெரியுதா......

**சோலை:-** ஐயயோ! சண்டை போடாதிங்க....வேண்டாம். சமாதானமாப் போங்க......

**வேருேர்:-** உன்னை உதைக்காதே விடறதில்லை......

**மிதி:-** பார்ப்பம்டா, இண்ணக்கி இரண்டிலே ஒண்ணு.....

*[அங்கு வந்த ஆடியபாதம்]*

**ஆடி:-** அடா அடா அடா! கொஞ்சம்கூட கண்ணியமா நடந்துக்கத் தெரியலியே......செ! உங்களோட வீரா வேசத்தைக் காட்டிக்கொள்ளவா, இது இடம்!

**வேருேர்:-** இடம், சரியாக இல்லாததாலேதான், பய, தப்பித்துக்கொண்டான்......

**மற்ருெரு:-** இல்லேன்னு தலையைச் சீவிடுவயோ......?

**இன்னெ:-** சரிதான் சும்மா, இரய்யா, இதுவரையிலே எவனும் அவர்மேலே கைவச்சதில்லை. என்னமோ உனக்கு நல்லகாலம்......

**மிதி:-** (சோகக் குரலில்) யாரு? எல்லப்பனு!....நீ பார்த்துகிட்டா இருந்தே! இல்லே கேட்கறேன், ஒரு பய, என்னைக் கைநீட்டி அடிக்கறதை நீ கண்ணுலே பார்த்துகிட்டா இருந்தேங்கிறே......

**சோலை:-** ஐயயோ! இதென்ன சச்சரவு......அடிபட்டது என் காலிலே......நீங்க ஏன்யா ஒருவரோடு ஒருவர் சண்டை போட்டுக் கொள்கிறிங்க......

**ஆடிய:-** பெரிய இழவாப்போச்சே! ஐயா! ஐயா! உங்களைக் கும்படறேன். நீங்க இங்கே வந்து எனக்கு மரியாதை செய்தது போதும், தயவுசெய்து போங்கய்யா வெளியே......நடக்கிற சண்டை எதுக்காகன்னு தெரியாமெ, கலியாண வீட்டிலே கலாட்டான்னு பேப்பர்லே போட்டுடப் போருன்......

**சோலை:-** ஆடியபாதம்! ஆடியபாதம்!

*[பேசுவது, யார் என்று கவனியாமல்]*

---

## உணவு உற்பத்தி பெருக்கிய இலட்சணம்!
## வெளி நாடுகளிலிருந்து இறக்குமதி!!

| | | | |
|---|---|---|---|
| 1948 | .... | 2841000 | டன் |
| 1949 | .... | 3706000 | ,, |
| 1950 | .... | 2125000 | ,, |
| 1951 | .... | 4725000 | ,, |
| 1952 | .... | 3861000 | ,, |
| 1953 | .... | 2003000 | ,, |
| 1954 | .... | 808000 | ,, |
| 1955 | .... | 700000 | ,, |
| 1956 | .... | 1420000 | ,, |
| 1957 | .... | 3582000 | ,, |
| 1958 | .... | 3173000 | ,, |
| 1959 | .... | 2083000 | ,, |

பெரிய அணைகள் வடக்கே கட்டினர்! பல கோடி ரூபாய் கரைத்தனர்;

கண்டதென்ன 'காங்கிரசு' ஆட்சியில்!

ஆடி:- அட, இரய்யா......சரியான சமயமாப் பார்த்துத் தான் கூப்படறே......

சோலை:- இதோ பார், ஆடியபாதம்......

ஆடி:- ஐயா! கூடத்திலே விருந்து தயாரா இருக்கு, அங்கே போ......ஆடியபாதம், ஆடியபாதம்னு கூப்பிட்டு என் உசிரை வாங்காதே......

மிதி:- வீட்டைவிட்டு வெளியே போகச் சொல்லிட்டே இல்லே! ஆடியபாதம்! உன்னைக் கவனிக்கவேண்டிய இடத்திலே கவனிச்சக்கறேன்.

மற்:- இவன் வீட்டுக்கு வந்தமே அதைச் சொல்லு! தரம் கெட்ட பய......

ஆடி:- பெரிய தரம்கண்டவருதான்யா நீ. நாக்கை அடக்கிப் பேசு......

*[சோலையப்பரைத் தள்ளிவிட, அவர் ஆடிய பாதத்தின்மீது வீழ்ந்துவிடுகிறார். ஆடிய பாதம் துடித்து]*

ஆடி:- அடாடாடா!...யார்டா பாவி, பொதிமாடுபோல,.... அப்பப்பா! படுபாவிப்பய, ரோட் ரோலர் மாதிரி; என்ன பளுவு, என்ன பளுவு......இன்னம் இரண்டு நிமிஷம் போன, கூழாயிட்டிருப்பனே......

சோலை:- ஆடியபாதம்......

*[சோலையப்பர், என்று தெரிந்ததும், பதறி]*

ஆடி:- ஐயா... நீங்... நீங்களா... தெரியாம என்னென்னமோ, பேசிட்டேன்...புத்திகெட்டுப் பேசிட்டேன்... என்னை மன்னிச்சிடுங்க...உங்க காலிலே விழறேன்...

சோலை:- பரவாயில்லே, பரவாயில்லே ஆடியபாதம்! வலி தாங்காம, ஏதோ நாலு வார்த்தை அதிகமாப் பேசி விட்டே...பரவாயில்லே......



மணப்பந்தலை விட்டு உறவினர் வெளியேறுகின்றனர்.

மிதி:- உனக்குச் சரியான புத்தி கற்பிக்காவிட்டா, என் பெயரை மாத்தி வைச்சிக்கறேண்டா, டேய்! ஆடிய பாதம்......

*[வெளியே செல்கிறார்கள்]*

சோலை:- ஐயா! ஐயா! கோபத்தைக் குறைத்துக்கொள்ளுங்க...போகாதிங்க......இருங்க......ஆடியபாதம், ரொம்பச் சங்கடப்படுவான்...அவன் வீட்டுக் கலியாண விருந்திலே கலாட்டான்னு வெளியே தெரிஞ்சா, அவனுக்குத்தானே அவமானம்....போகாதிங்க......உங்களை நான் விடமாட்டேன், போக......

மிதி:- அடச்சே! யார்டா கை நனைப்பான், இந்த அற்பப் பய வீட்டிலே, உன்னுட்டம் ரோஷமத்ததுக தவிர....

*[வழியில் நின்றவர்களைத் தள்ளியபடி]*

ஆடி:- விலகய்யா...விலகு...வாங்க! வாங்க! நீங்க வந்ததை நான் பார்க்கவேயில்லிங்க...சத்யமாப் பார்க்கலிங்க...நான் கொடுத்து வைத்தவனுங்க...கோபால்சாமி! கொஞ்சம் கூச்சலை அடக்கு...இந்த ஏழை வீட்டுக்கு வந்திங்களே......

சோலை:- ஏழையா இருந்தா என்ன ஆடியபாதம்! மனித குலம்தானே.

ஆடி:- என்னங்க...அது சரிங்க...ஆனு வேறே யாருக்கு வரும்ங்க இந்தப் பெருந்தன்மை...டே! பேச்சிமுத்து! பேச்சிமுத்து! சந்தன தாம்பூலம்...சீக்ரகிம்...தட்டிலே, தட்டிலே... வெள்ளித்தட்டுடோய்......ஐயா!

ஆளவந்தார் பிள்ளே! கொஞ்சம் எழுந்திருங்க, நாற்காலியிலே இவரு உட்காரட்டும்...எங்க முதலாளி......

ஆள:- உட்கார்ந்திருக்கிறவனை எழுந்திருக்கவா சொல்றே? முதலாளியானு, என்னய்யா கண்ணு மூணு......



சோலை:- நீங்க உட்காருங்க...ஆடியபாதம்! பதருதே, நீ வேறே நான் வேறயா...நீ நிற்கறியே, நான் நிற்கப்படாதா......

*[பல்லைக் கடித்துக்கொண்டு மெதுவாக]*

ஆடி:- ஐயோ ஆளவந்தாரு! என் பிழைப்பிலே மண்ணைப் போடாதேய்யா...உனக்கே நல்லா இருக்காய்யா,... முதலாளிய்யா...அவரு நின்னுகிட்டு இருக்கிருரு, நீ குத்துக்கல்லு மாதிரி உட்கார்ந்துகிட்டு......

ஆள:- நல்லா இல்லே, ஆடியபாதம், உன் போக்கு. மட்டு மரியாதை தெரிஞ்சவன்னு எண்ணிக்கொண்டு தான்யா, வந்தோம். கூழைக் கும்பிடு போட்டு, இளிச்சிப் பேசி, வாங்க இருங்க, சாப்பிடுங்கன்னு உபசாரம் செய்தே, முன்னே. ஒரு பணக்காரன் வந்த உடனே, நாங்களெல்லாம் உன் கண்ணுக்கு மட்டமாயிட்டமா......? பணம் இருந்தா என்னய்யா, அதனுலே, அவன் எல்லோரைக் காட்டிலும் உயர்ந்தவனுயிட்டானு......

ஆடி:- ஐயா, மெதுவாப் பேசய்யா, அவர் காதிலே விழுந்துடப் போவுது......

ஆள:- விழட்டும்னுதானே, பேசறேன்.–எனக்கென்னய்யா பயம். நீ, தூக்கி அவனை தலைமேலே உட்கார வைச்சிகிட்டு ஆடு! நாங்க வேண்டாம்னு தடுக்கப் போறேம். எங்களை வரவழைச்சி அவமானம் செய்யறியே, அவன் எதிரே. அதை எப்படிய்யா பொறுத்துக் கொள்ளுவான், சொரணை உள்ளவன்...

சோலை:- என்ன அங்கே, குழப்பம், ஆடியபாதம்!

ஆடி:- ஒண்ணுமில்லிங்க...... நீங்க வாங்க, இப்படி......

ஆள:- வாங்க ... போங்க ... ... கூழைக் கும்பிடு போடறதைப்பாரு:.... செய்யாவிட்டா, சீட்டுக் கிழிந்துவிடுமே அந்தப்பயம்... அட வாங்க போகலாம் ... இவன் வீட்டுக்கு வந்ததே தப்பு......

*[சிலர் கோபமாக வெளியேறுகிறார்கள்]*

ஆடி:- இப்படி உட்காருங்க.., ஆ–செய்யுங்க சரிசரி போறிங்களா.......... நல்லதுங்க (சோலையப்பரைப்பார்த்து) காபி சாப்பிடறிங்களா, சூடா......

சோலை:- ஓ! காப்பிதானே, கொடு......

ஆடி:- இதோ வந்துட்டனுங்க......

*[சமயற் கட்டுக்கூடத்துப் பக்கம், ஓடுகிறார், ஆடியபாதம்.*

*அங்கு சிலர், வேலைகள் செய்துகொண்டிருக்கிறார்கள்.]*

ஆடி:- எங்கே பெரியண்ணன்! ஏம்பா, டே! பெரியண்ணு ......இதோ, இங்கே, இங்கே......காப்பி இருக்கா... காப்பி...

பெரி:- காப்பியா... இருக்காதே...

ஆடி:- பார்த்துச் சொல்லு...... எங்க முதலாளி வந்திருக்காரு...

பெரி:- முதலாளியா... வந்திருக்காரு...... அப்படில்ல இருக்கணும் பெரியமனுஷரோட போக்கு...

ஆடி:- அட, அது கிடக்குது. காபி?

பெரி:- ஏனுங்க, முதலாளி, எவ்வளவோ பெரிய சீமான் ... மாளிகையிலே மூணுபேராம் சமயக்காரர் மட்டும். அவருக்குப்போய், எப்படிங்க, இந்தக் காபியைக் கொடுக்கறது... பவுடர் பாலு!...

# காங்கிரஸ் ஆட்சியில்!

| | 1936 | 1961 |
|---|---|---|
| புளி வீசை | 0-24 காசு | 1-50 |
| தனியா படி | 0-33 ,, | 2-75 |
| மிளகாய் வீசை | 0-54 ,, | 5-00 |
| மஞ்சள் வீசை | 0-31 ,, | 2-00 |
| பருப்பு படி | 0-23 ,, | 1-36 |
| சர்க்கரை வீசை | 0-39 ,, | 1-75 |
| அரிசி படி | 0-16 ,, | 1-36 |

**விலை குறையவில்லை!**
**வரி குறையவில்லை!**

**ஏழை வாழ**
**வழிகாணவில்லை!!**

ஆடி:- சாப்பிட்டா, தெரிஞ்சிவிடுமா...

பெரி:- ஏன் தெரியாது! அவர் எப்படிப்பட்ட காப்பி சாப்பிட்டுக்கொண்டிருப்பாரு... இதை ஒரு முழுங்கு குடித்ததும், குமட்டல் வந்தாலும் வந்துடுமே...

ஆடி:- ஆமாம்... என்ன செய்யறது! நான் மரியாதைக்கு ஒரு பேச்சுக் கேட்டேன், காப்பி சாப்பிடுகிறிங்க ளான்னு... அவர், கொண்டுவாடான்னு சொல்லி விட்டாரே...

பெரி:- அவர் உள்ளே வந்ததும் என்கிட்ட ஒரு வார்த்தை சொல்லியிருக்கக் கூடாதா... பசும் பால் இருந்துது அப்ப. மாப்பிள்ளைக்கு ஸ்பெஷல் காப்பி போட்டுக் கொடுத்துட்டனே... பவுடர் பால்தான் இருக்குது... எதுக்கும் எடுத்துகிட்டுப் போங்க, கொஞ்சம் சூடு பண்ணித்தாரேன்...

*[காப்பி, தர, ஆடிவபாதம் அதைக்கொண்டு வந்து மரியாதையாக, சோலையப்பரிடம் தருகிறான்.]*

ஆடி:- என்னங்க... ஏழை வீடு... இருந்தது இதுதான்...

சோலை:- (குடித்துக்கொண்டே) ஏன், இதுக்கு என்ன... நல்லாத்தானே இருக்குது...(குமட்டலைஅடக்குகிறார்)

ஆடி:- ஏனுங்க, ஏன், ஏன்? குமட்டறமாதிரி இருக்குதுங் களா...

சோலை:- இல்லே, இல்லே... காப்பிதானே...

ஆடி:- ஆமாங்க... ஆனு பவுடர் பாலுங்க... ஒரு மாதி ரியா இருக்கும்ங்க...

சோலை:- பவுடர் பாலா இருந்தா என்ன! பால்தான் பவுடர் ஆகுது...

ஆடி:- சிலபேருக்குப் பிடிக்கறதில்லிங்க...

சோலை:- எனக்கு அப்படி எல்லாம் கிடையாது .. நான் கூழே குடிச்சிருக்கறனே... சீமானு இருந்துவிட்டா, தனி போக்கு இருக்குமா என்ன! சீமான் மட்டும் யாரு? மனித குலம்தானே! ஆடியபாதம்! எங்கே, பெண்ணு மாப்பிள்ளை...

ஆடி:- இதோ! டேய், பெரியண்ணேன், மாப்பிள்ளையைக் கூப்பிடு, மாபபிள்ளையை...

சோலை:- மாப்பிள்ளைக்கு என்ன வேலை? என்ன படிச்சிருக் கான்? பி ஏ-வா...?

ஆடி:- பி. ஏ. எம். ஏ. வெல்லாம் எப்படிங்க நமக்குக் கிடைப்பாங்க. மாப்பிள்ளை பத்தாவது வரையிலே படிச்சிருக்காருங்க... மருந்து ஸ்டோரிலே, மானே ஜர்...

சோலை:- மானேஜர் வேலையா... பலே! பலே!... இவ்வளவு சின்ன வயதிலேயே, மானேஜரா... சம்பளம்?

ஆடி:- எண்பது கிடைக்குதுங்க... சொந்த வீடு இருக் குது... கொஞ்சம் கடனும் இருக்கு... இரண்டு தம்பி ஒரு அக்கா...

*[சிறுவன் ஓடிப்போகிறான் மாப்பிள்ளையிடம். மாப்பிள்ளை, சிகரட் பற்றவைத்துக்கொண் டிருக்கிறான், தோட்டவாசற்படி அருகில்.]*

சிறு:- மாப்பிள்ளை! வாங்க... மாமா கூட்டிகிட்டு வரச் சொன்னரு கையோட...

மாப்:- அட இருடா, பச்சை மிளகா! சிகரட் பிடிக்காமே, தலைவலியே வந்துட்டுது...

சிறு:- சிகரட்டைப் போடுங்க மாப்பிள்ளை! ஒரு பெரிய மனுஷர், காத்துகிட்டு இருக்காரு, உங்களைப் பார்க்க...

மாப்:- (கேலியாக) பெரிய மனுஷரா... எம்மாம்பெரிய வரு... போ! போ! மாமா. சுத்த பத்தாம் பசலி. கொஞ்சம் காசுள்ளவனைப் பார்த்துவிட்டா, போதும், பல்லை இளிக்கறதும், உடலை வளைக்கறதும், சே! பார்க்கச் சகிக்கறதில்லை...

சிறு:- இவரு, நெஜமாகவே பெரிய மனுஷர், மாப்பிள்ளை. முதலாளி! அவர் ஆலையிலேதான், இவருக்கு வேலை.

மாப்:- (மரியாதையாக) ஆலை முதலாளியா? உண்மை யாவா? அவரேவா வந்திருக்காரு! இருக்காதுடா... மானேஜரா இருக்கும்...

சிறு:- வந்துபாருங்க, தெரியுது.

ஆடி:- (மாப்பிள்ளை வரக்கண்டதும்) வாங்க, மாப்பிள்ளை, வாங்க... இவருதானுங்க... ஆசிர்வாதம் பெத்துக் கொள்ளப்பா... தங்கமானமனசு... உங்க வாயாலே மாப்பிள்ளையை வாழ்த்துங்க...

சோலை:- ஆமா ஆமா! அதுக்குத்தானே வந்திருக்கிறேன். வாழ்த்துகிறேன்...

[கீழே விழுந்து கும்பிடும்படி மாப்பிள்ளைக்கு, ஆடியபாதம் ஜாடை காட்டுகிறார்.

அவன் தயக்கமடைகிறான்.

ஆடியபாதம், வற்புறுத்துகிறார்.

மாப்பிள்ளை, வெறுப்புற்று, கீழே விழுந்து கும்பிடுவதுபோலப் பாவனை செய்கிறான்.

அதைக்கண்ட, சோலையப்பர், தடுத்து நிறுத்துகிறார்]

சோலை:- ஆ... ஆ... எம்பா அதெல்லாம்... எப்படி திருப்திதானே...பெண்ணு... ஆடியபாதம் ரொம்ப நல்லவன்...நம்ம ஆலையிலே வேலையிலே சேர்ந்து, வருஷம்... எத்தனை ஆகுது.

ஆடி:- பதிமூன்று ஆகுதுங்களே.

சோலை:- ஆமா, பதிமூன்று வருஷமாகுது... ரொம்ப நல்லவர்னு பேரு... அவரைப்போல, நல்ல பேர் எடுக்கணும்... என்ன...?

மாப்:- ஆகட்டுமுங்க...

ஆடி:- பேசிகிட்டு இருங்க, இதா வந்துடறேன்...

சோலை:- உட்காரப்பா, உட்காரு... ஐயா... இதோ ஒரு நாற்காலி எடுங்க... மாப்பிள்ளை உட்காரட்டும்...

அவன்:- (ஒரு ஆள்—கோபத்துடன்) நாற்காலியைத் தூக்கியாந்து போடவா... ஏன்யா! உன் கண்ணுக்கு என்னைப் பார்த்தா, வேலைக்காரன் மாதிரி தெரியுதா? தாய்மாமன்யா நான், பொண்ணுக்கு...

மாப்:- நீங்க போங்க, போங்க... நாற்காலி வேண்டாமுங்க...

சோலை:- நீ, நிற்கறியே, மாப்பிள்ளை.

மாப்:- பரவாயில்லிங்க, நீங்க உட்காருங்க...

சோலை:- நீ. நின்றுகொண்டே இருந்தா, நல்லா இல்லையே, நான் உட்கார்ந்துகொண்டிருப்பது...

மாப்:- அதனாலே என்னங்க, நீங்க உட்காருங்க... நிற்கறிங்களே... உட்காருங்க...

[இருந்த நாற்காலியை ஒருவன் எடுத்துவிடுகிறான். கவனிக்காமல், உட்காரப் போன சோலையப்பர் கீழே விழ.)

மாப்:- ஐயயோ! எழுந்திருங்க எழுந்திருங்க... மெதுவா... நாம கவனிக்கவே இல்லை, யாரோ நாற்காலியை எடுத்துகிட்டுப் போயிட்டாங்கபோல இருக்கு...... மடையனுக.........ஏய்! புண்யகோடி! உன் வேலை தானா இது.........நாற்காலி கேக்குதா உனக்கு, நாற்காலி......

[ஆடியபாதம் ஓடோடி வந்து]

ஆடி:- என்ன! என்ன! முதலாளி கீழே விழுந்துட்டாரா! அடிகிடி பட்டுதா...ஏன் விழுந்துட்டாரு......

புண்ய:- இந்த முதலாளி மட்டுமா! உலகத்திலே உள்ள அத்தனை முதலாளிகளும், கீழே உருண்டு விழத் தானே போகிறார்கள். உருட்டித் தள்ளத்தானே போகிறோம்.

## பாரில் பாரதம் பாரீர்!

| | | |
|---|---|---|
| ரஷ்யாவில் | .... | 60 நோயாளிகளுக்கு 1 டாக்டர் |
| அமெரிக்காவில் | .... | 760 நோயாளிகளுக்கு ஒருவர் |
| இத்தாலியில் | .... | 800 நோயாளிகளுக்கு ஒருவர் |
| சப்பானில் | .... | 1000 நோயாளிகளுக்கு ஒருவர் |
| இங்கிலாந்தில் | .... | 1200 நோயாளிகளுக்கு ஒருவர் |
| பிரான்சில் | .... | 1100 நோயாளிகளுக்கு ஒருவர் |

ஆனால்,

**“பாரத பூமியில்”**

**5,700**

**நோயாளிகளுக்கு ஒரு டாக்டர்!**

●

**பிழைக்கவும் திண்டாட்டம்!**

**வாழவும் திண்டாட்டம்!!**

●

**இனியாவது வாழ வழி வகுப்பீர்.**

ஆடி:- புண்யகோடி! கொஞ்சம் சும்மா இருடாப்பா... வாரா வாரம்தான், நீ உருட்டித்தள்ற வீரத்தைப் படிக்கறமே உன்னோட ‘புயல்வேகம்’ பத்திரிகையிலே...

சோலை:- புயலா? எங்கே? எப்போது?

புண்ய:- அந்தப் புயலின் அற்புத சக்தியே அதுதான்! எங்கே இருந்து கிளம்பும்! எப்போது கிளம்பும்! என்னென்ன செய்யும்!—என்ற எதுவும் யாருக்கும் முன்கூட்டித் தெரியாது...

சோலை:- இவர், யார்? ரொம்ப நல்லாப் பேசறாரே...

ஆடி:- புண்யகோடி! போப்பா அந்தப்பக்கம்...... உன் சினேகிதாளெல்லாம், சீட்டாடப் போயிருக்காங்க... போ...

புண்ய:- நான் தெரியாது உங்களுக்கு? தெரிந்திருக்க வேண்டுமே! நீங்கள்தானே ஆலை முதலாளி சோலையப்பர்!

சோலை:- ஆமாம், என்னைத் தெரியுமா, உமக்கு...

புண்:- உம்மை மட்டுமா! உமது போக்கு, நடவடிக்கை

எல்லாம் தெரியுமே......போனவாரம், இரண்டரைப் பக்கம் எழுதியிருக்கிறேனே. உம்மைப்பற்றி......

சோலை:: என்னைப்பற்றியா...?

புண்:- ஆமாம் ஆலையிலே நீ செய்து வருகிற தில்லு மல்லுகள். ஆலயத்திலே நீ நடத்துகிற ஆர்ப் பாட்டம்.

ஆடி:- (பதறி) புண்யகோடி...போதும்...போ. போ......

சோலை:- இருக்கட்டும்......சொல்லட்டும்......யார் என்று தெரிந்தால் நல்லது...

புண்ய:- நான்தான். சீமான்களின் கொட்டத்தை அடக் கும் 'புயல்வேகம்' பத்திரிகை ஆசிரியர்...

சோலை:- பத்திரிகை ஆசிரியரா? மெத்தச் சந்தோஷம்... என்னைப்பற்றியா எழுதினீர்கள்...?

ஆடி:- அவன் எழுதுவான் யாரைப்பற்றியும், பொறுப் பில்லாமல்...அதைப்பற்றி என்ன கவலை...

புண்:- ஆடியபாதம் ... ஆடியபாதம்! ஏழ்மை உன்னைக் கோழையாக்கிவிட்டது. வறுமை உன் புத்தி வறண்டு போகச் செய்துவிட்டது, தரித்திரம் உனக் குத் தாசர் புத்தியைக் கொடுத்துவிட்டது......

ஆடி:- பார்த்திங்களா, இதேதான் புண்யகோடியோட வித்தை — ஏழ்மை — வறுமை — தரித்திரம்னு, ஒண்ணை மூணுவிதமாச் சொல்றுனேல்லோ, அதே போலத்தான்...இல்லாததையும் பொல்லாததையும் எடுத்து எழுதிக்கொண்டே இருப்பான்......

சோலை:- எழுதவேண்டியதுதானே, ஆடியபாதம்! தவறு செய்தவர்களைக் கண்டிக்க வேண்டியதுதான். உரிமை இருக்குதே, யாருக்கும்.

புண்:- உரிமை மட்டுமல்ல, வீரம், துணிவு, தைரியம், அறிவு. ஆற்றல்......

ஆடி:- எல்லாம் இருக்கிறது அப்பா! இதுதானு இடம் அதை எல்லாம் பேச.

சோலை:- பேசட்டுமே, அதனுல் என்ன?

புண்ய:- பேசடா பேசு! பேசி என்னை என்ன செய்துவிட முடியும்? எனக்கிருக்கும் செல்வமும் செல்வாக்கும், எப்படிப்பட்டது! நீ, அன்னக்காவடி! நீ, என்னை என்ன செய்யமுடியும்! என்ற எண்ணமல்லவா, உமக்கு!

சோலை:- நான் அப்படி எல்லாம் சொல்லவில்லையே...அவ் விதமான எண்ணம்கூட எனக்கு ஏற்படவில்லையே.

ஆடி:- (கோபமாக) நீ, என்ன வம்பு செய்வது என்றே தீர்மானித்துவிட்டாயா! மனம்போன போக்கில் பேச, இது இடமல்ல. மரியாதையாகப் போ வெளியே......

புண்ய: போகிறேன்! எலும்புத் துண்டுக்கு வால் குழைக் கும் நாய்க்குட்டி, நீ. இரத்தவெறி பிடித்து அலையும், ஓநாய் இவன்......

*[ஆடியபாதம் கைஓங்க]*

புண்:- அடிக்கிருயா, அடி. அடி! கொல்லு! ஆனல் சாகு முன், நான் கூறவேண்டியதைச், சொல்லிவிடு கிறேன்......

ஆடி:- (கோபம் மூண்ட நிலையில்) போடா, வெளியே! வெளியே போய், கத்து. கதறு, கூவு, கொக்கரித்துக் கொண்டிரு......

சோலை:- ஆடியபாதம்! இரு! பொறுமை வேண்டும், பொறுமை. இதற்கெல்லாமா; இப்படிப் பதறிவிடு வது. செச்சே! ஆத்திரம் அறிவைக் கெடுக்கும்...



(பத்திரிகாசிரியர் புண்யகோடி)

புண்:- ஆடியபாதம்! கேட்டாயா, அவன் சொல்வதை... அவனுக்காகப் பரிந்துபேசுகிருயே என்னை அடிக் கக்கூடத் துணிந்துவிட்டாயே, கேள், அவன் சொல்வதை உன்னை அறிவு கெட்டவன், முட்டாள் என்று ஏசுகிருன். சூடு இல்லையா, உனக்கு, சொரணை இல்லையா, உனக்கு......

சோலை: நான், ஆடியபாதத்தை, முட்டாள், என்று எப் போது சொனனேன், அபாண்டம் பேசுகிருயே, இது தகுமா. முறையா......கேவலமான போக்கு இது......

புண்:- நீ பேசாதே! ஆடியபாதம். என்னை ஆயிரம் பேசட் டும், அடிக்கட்டும் உதைக்கட்டும், பொறுத்துக் கொள்வேன். அவன் என் இனம்! நீ, மனித குலத் தின் துரோகி! நடமாடும் நாசம்! நச்சுப்பாம்பு! பேய்!......

*[ஆடியபாதம் அடிகொடுக்க]*

புண்: (அழுகுரலில்) அடிக்கிருயா...நீயே, அடிக்கிருயா... நீயுமா? அடியுங்கள்...கை வலிக்குமட்டும் அடியுங் கள்...கொலைகாரக் கும்பல்......

ஒருவன்:- என்ன இருந்தாலும், ஆடியபாதம்! விருந்துக்கு

வந்தவனை, இப்படி அவமானப்படுத்தி இருக்கக் கூடாது...

இன்னொரு:- ஏழைதானே, என்ன செய்துவிடுவான்,என்ற எண்ணம்.

வேறு,- முதலாளி மனம் மகிழவேண்டுமே, அதற்காக...

ஒருவன்:- புண்யகோடிக்கு நடந்ததுதான், நமக்கும்!

மற்றொரு:- வாங்க போகலாம். மதியாதார் வாசல் மிதிக்க லாமா? நாம் யாரும் ஆடியபாதத்துக்குத் தேவை இல்லை. பக்கத்தில் பணமூட்டை இருந்தால் போதும், இளித்துக்கொண்டு கிடப்பான்...

பணியாள்:- சந்தனம்...! பழம்!

அவர்கள்:- யாருக்கு வேண்டும், உன், சந்தனமும் பழமும் ...அதோ, அவனுக்குச் சந்தனபிஷேகம் செய், வரம் கிடைக்கும்...

*[சந்தனத்தை வீச, சோலையப்பர்மீது படுகிறது]*

ஆடி:- மேலே விழுந்துவிட்டதா...அயோக்யப்பயல்கள்... இதோ, துடைத்துக்கொள்ளுங்கள்...

சோலை:- பரவாயில்லை...சந்தனம்தானே...

ஆடி:- சட்டை அழுக்காகிவிட்டதே...

சோலை:- இருக்கட்டும், இருக்கட்டும். கலியாண வீட்டுக்குப் போய்வந்ததற்கு, அடையாளம், இந்தச் சந்தனம்.

*[வாழைப்பழத் தோல் வழுக்கிவிட, சோலையப்பர் விழுந்துவிடுகிறார்]*

ஆடி:- அடடா! பார்த்து, பார்த்து! மெள்ள, மெள்ள, மாப்பிள்ளை! மாப்பிள்ளை! ஒரு கை கொடப்பா! மெள்ள எழுந்திருங்கள்...என்ன! என்ன! இடுப்பு வலியா! மார்புகூடவா! பலமான அடியோ!......மாப்பிள்ளை! என்ன இது! மயக்கமா!....மூச்சு வருகிறது! மயக்கம்தான்! தூக்கு! மாப்பிள்ளை! ஜாக்ரதை! ஜாக்ரதை! கொஞ்ச நேரம் படுத்துத் தூங்கினால், சரியாகிவிடும்...கொழந்தே!...கொழந்தே!...

மணப்பெண்:- ஏம்பா! கூப்பிட்டீங்களா......பாய்போடவா கூடத்திலே...

ஆடிய:- பாய்போட்டா......உறுத்துமேம்மா......மெத்தெ இல்லே......மாப்பிள்ளை! பிடியுங்க, கொஞ்சம்...உள் அறையிலே, கொண்டுபோய்ப் படுக்கவைக்கலாம்...

மா:- எந்த அறையிலே...? நல்லா இருக்கு, உங்க போக்கு...

ஆடிய:- யார்டா, இவன்...ஆபத்தான நிலைமையிலே, இதை எல்லாமா பார்த்துக்கொண்டிருப்பாங்க...... டே! பெரியண்ணன்! வாடா, இப்படி!

மாப்:- மானங்கெட்டவன்னு எண்ணமா, உனக்கு? உன் பெண்ணைக் கட்டிக்கொண்டதாலேயே, நீ, என்ன கேவலமா நடத்தினாலும் பொறுத்துக்கொள்ளுவேன்னு எண்ணிகிட்டயா?......பொண்ணு மாப்பிள்ளைக்குன்னு அலங்காரம் செய்து வைத்திருக்கிற படுக்கையிலே, இந்தப் பொதிமாடு போய் படுத்துக் கொள்ளும். நான் அதைப் பார்த்துக்கொண்டு, இருக்கவேணுமா...?

ஆடி:- முதலாளி, மாப்பிள்ளை! (மார்தட்டிக் காட்டி) எங்க, முதலாளி! என் குடும்பம் நடப்பதே, இவராலே!

மா,- அதனாலே, முறைதவறி நடந்துக்கொள்ளணுமா? கூடத்திலே, பாய் போட்டுப் படுக்கவைத்தா, என்ன வாம்.

ஆடி:- அட, உன்னோடே யார் பேசுவாங்க! விவரம் தெரியாத பிள்ளையாண்டானா இருக்கறே. வெல்வட்டு மெத்தை, இவருவீட்டு நாய்க்குப் போடுவாங்க, தெரியுமா! அப்படிப்பட்ட அந்தஸ்த்துக்காரரை, பாய் போட்டு படுக்கச் சொல்றதா.

மாப்:- அதனாலே, மருமகப் பிள்ளைக்குன்னு, ஏற்பாடு செய்த,படுக்கையிலே படுக்கவைக்கறதா?...அவனே, படுத்துக்கொண்டிருக்கட்டும், நான் இதோ, இந்த விநாடி, போகிறேன், வெளியே. இவ்வளவு கேவலமான இடம் என்று தெரியாமல், இங்கு பெண் கொண்டனே, என்னைச் சொல்லணும்.

ஆடி:- மடையனுட்டம் பேசாதே, மாப்பிள்ளை......

மாப்:- யார்டா, உனக்கு மாப்பிள்ளை! இன்னொரு தடவை, என்னை மாப்பிள்ளைன்னு சொன்னே, பல் உதிரும், கீழே...

*[மாப்பிள்ளை, கோபித்துக்கொண்டு ஒருபக்கம் செல்கிறான்.*

*பெரியண்ணனும் ஆடியபாதமுமாகச் சேர்ந்து, சோலையப்பரைத் தூக்கிக்கொண்டுபோய், கட்டிலில்கிடத்துகிறார்கள்.*

*அவர் மெள்ளக் கண்விழித்துப் பார்க்கிறார். ஆடியபாதம், மிகுந்த மரியாதையுடன், அவர்*

*பக்கத்தில் நின்றுகொண்டு பேசுகிறான்.]*

ஆடி:- எப்படி இருக்குதுங்க? தாகத்துக்கு ஏதாவது வேண்டுமுங்களா?

*[அவர் தலை அசைக்க]*

## உண்மையான வெற்றி

"வெற்றி விழாக்கள் கொண்டாடுவது நல்லதுதான். ஆனால் சாதாரண மனிதன் மகிழ்ச்சியாகவும், மன நிறைவுமற்று வாழும் அந்த நாளில் தான் உண்மையான வெற்றியை நாம் பெற்றதாகச் சொல்ல முடியும்.',

ராமலீலா கொண்டாட்டத்தில்

விசயலட்சுமி பண்டிட்.




(ஏக்கத்துடன் மணமகள்)

ஆடி:- (மணப்பெண் வரக்கண்டு) கொழந்தே! கொழந்தே! ...நீ ஏம்மா, அழறே! மாப்பிள்ளே, கோபித்துக் கொண்டு போயிட்டாரேன்னு! வந்து விடுவான். கோபம் குறைஞ்சதும்; பயப்படாதே! அவசரக்காரப் புள்ளே, வேறென்ன. (பெரியண்ணன், தண்ணீர் டம்ளர் கொண்டுவர) கொடு... இப்படிக் கொடு பெரியண்ணு! பக்குவமாக் கொடுக்கணும்...(சோலேயப்பர், தண்ணீர் குடிக்க முடியாமல், திணற) என்னங்க! என்னங்க!... ஏன், இப்படி, மிரளமிரள விழிக்கறிங்க... படுத்துக்கொள்ளுங்க... படுத்துக்கொள்ளுங்க... விசிறி கொண்டாடா, விசிறி... டேய்! மெதுவா, வீசு! அடச்சே! கொண்டுவா, இப்படி, வீசத் தெரியுதா, உனக்கு... மாப்பிள்ளேயைச் சமாதானம் சொல்லி அழைச்சிகிட்டு வா, பெரியண்ணு! போ! போ!

*[தோட்டப் பக்கத்தில்]*

பெரியவர்:- என்னதான் பணக்காரனு இருந்தாலும், இப்படியா, ஆடியபாதம், நடந்துகொள்றது.

மற்ருெ:- ஊர்லே, தெரிஞ்சா என்ன கேவலமாப் பேசுவாங்க...

இன்:- இப்பவே, என்னென்ன பேசருனுங்களோ...

பெரிய:- பேசறது என்னய்யா! எனக்கேக்கூடத்தான் சந்தேகம்... எவ்வளவு சொந்தம் இருந்தா, முதலாளி இங்கே வந்திருப்பான்! யோசித்துப்பாரேன்! ஆடியபாதம்போல, ஆயிரம் பேர், வேலே செய்கிருனுங்க, ஆலேயிலே. அவனுங்க வீட்டு, நல்லது பொல்லதுக்கு, எப்பவாவது முதலாளி போனது உண்டா?

ஒருவ:- ஆபீசர்கள் வீட்டுக்குப் போனுக்கூட, ஒரு ஐஞ்சு நிமிஷம் இருந்துவிட்டு, வந்துவிடறதுதானே வழக்கம் முதலாளிக்கு.

பெரி:- இங்கே? அடிச்சி விரட்டினுக்கூட போகமாட்டான் போலிருக்குதே.

ஒருவ:- மாப்பிள்ளேபோல அல்லவா :மரியாதை நடந்தது

மற்,- அட, மாப்பிள்ளே படுக்கவேண்டிய மெத்தையிலே இப்ப, முதலாளிதானே, படுத்துகிட்டு உருள்ருன். *(மயக்கம் தெளிந்து சோலேயப்பர் பார்க்கிருர்)*

ஆடி:- என்னங்க...ஏன்! ஏன்! நான்தானுங்க......ஆடியபாதம்!...நம்ம வீடுதான்......மயக்கமாயிடுத்து...... கீழே விழுந்துவிட்டிங்க......இதெல்லாமா...? அலங்காரம் செய்திருக்குதுங்க, மாப்பிள்ளேக்கு......உங்களுக்கு, மயக்கம் வந்துவிடவே, இங்கே கொண்டுவந்து, படுக்கவைத்தோம்...

சோலே:- ஆடியபாதம்! எனக்காக, நீ, மிகவும் தொல்லேப் பட்டாயா? அடடா! எதிர்பாராதது நடந்துவிட்டது...

ஆடி:- தொல்லே ஒண்ணும் இல்லிங்க.........உங்களுக்கு உடம்பு, எப்படி இருக்குதுங்க...?

சோலே:- கொஞ்ச நேரம், தூங்கியதாலே, நிம்மதியாகி விட்டது. பயப்படாதே! ஆமாம்! யார் அந்தப் புண்யகோடி? உன் சொந்தக்காரனு?

ஆடி:- செச்சே! என் சொந்தக்காரன் இல்லாங்க. தெரிஞ்சவன், விருந்துக்காக வந்தான்...வலியவலிய...

சோலே:- சரி, நான், உடனே புறப்படணும்.........டாக்சீ கொண்டுவா...ஏன் யோசிக்கறே....நெடுந்தொலேவு போகணுமா......ஆமாம் பாவம்!......பரவாயில்லே, நானே மெள்ள நடந்து போய்விடறேன்.




(திருமணம் பற்றி அலுவலகத்தில் உரையாடல்)

ஆடி:- வேண்டாங்க...நான்கூட வாரேனுங்க...

பெரி:- டாக்சி வந்திருக்குதுங்க. மாப்பிள்ளை, கூட்டிகிட்டு வந்தாரு...

ஆடிய:- ரொம்ப நல்லதாப்போச்சி...மாப்பிள்ளை எங்கே?

பெரி:- பெட்டி துணிமணி எல்லாம் எடுத்துவைத்துக் கொண்டிருக்காரு...

(சோலையப்பரை அழைத்துச் சென்று வண்டியில் ஏற்றிவிட்டு)

ஆடி;- வாங்க! வாங்க!...உட்காருங்க...! போப்பா...போ

(வண்டிக்காரரிடம் ஜாடை காட்டுகிறன்)

சோலை:- போய்வரட்டுமா, ஆடியபாதம்!

ஆடி;- செய்யுங்க! நீங்க இந்த ஏழை வீட்டுக்கு வந்தது, எனக்கு எவ்வளவோ சந்தோஷம்...பெருமைங்க...

(உள்ளே சென்று, மாப்பிள்ளையிடம் கனிவாக)

ஆடி:- மாப்பிள்ளை! மாப்பிள்ளே! இது கை அல்ல, மாப்பிள்ளை. கை அல்ல! என்னை மன்னித்துவிடு... அதோ, பாரு, கொழந்தை, கண்ணீர்விட்டுகிட்டு நிற்குது......போருத வேளை, இந்த முதலாளி நம்ம வீடுதேடி வந்து தொலைச்சான், அதனுலே இத்தனை தொல்லையும் வந்தது: முதலாளியாச்சே, அவன் மனம் கோணும்படி நடந்தா, நாளைக்கு வேலை போயிடுமே என்கிற பயம்! என்ன, தவறு நடந்திருந்தாலும், மறந்துவிடு மாப்பிள்ளை! மறந்துவிடு வா! உள்ளே! டேய்! பெரியண்ணன்! மரமா நிற்கறியே, போய், பெட்டி படுக்கை எல்லாம், எடுத்து உள்ளே வையேன்...

[மறுநாள். ஆலை அலுவலகத்தில்]

வேலை செய்பவர்:- என்னய்யா, அக்ரமம்! ஆடியபாதம், வீட்டிலே நடந்த கதை தெரியுமா...

மற்ருெ:- செச்சே! வெட்கக்கேடு!

இன்னெு:- விஷயம் வேறே ஐயா! ஆடியபாதம், பேரிலே ஒரு ரிபோர்ட் இருக்குது வேலையைவிட்டு. நீக்கி விடும்படி. கணக்கிலே, கோளாறு.

வேலை:- ஓஹோ! அதனுலேதான் முதலாளியை, வீட்டுக்கு வரவழைச்சி, 'சோப்' போட்டானு, ஆடியபாதம்!

ஒருவ:- மாப்பிள்ளைக்குன்னு தயாரான, படுக்கையிலே, அவன் படுக்கறதுக்கு முன்னமேயே, முதலாளி தானே படுத்துப் புரண்டாரு, தெரியுமா...

[மறைந்திருந்து சோலையப்பர் இதைக் கேட்டு திகைக்கிறார். பிறகு தன் அறை செல்கிறார்.

ஆடியபாதம், சோலையப்பர் அறைக்குள் நுழைகிறார்.]

சோலை:- வாப்பா! வா! ஆடியபாதமா...

ஆடி:- உடம்பு சௌகரியமாயிட்டுதுங்களா...?




14-1-62

செழுமை மிகு நாட்டினில் செந்நெல் குவித்து, எழுந்துவரும் உதய சூரியனை இன்முகத்தோடு வரவேற்று, இல்லந்தோறும் இன்பகீதம் எழுப்பிடும் இன்னுளில், இன்பத் திருவிடத்து அன்பர் அனைவருக்கும் என் உளம் நிறைந்த வாழ்த்துக்களும் வணக்கங்களும் உரித்தாகுக!

உலகுக்கே உணவளிக்கும் உழவர்தம் திருநாளில், உழைப்பும் உண்மையும் ஒரு சேர வெற்றி முரசு கொட்டிடும் நன்னுளில். இன்பம் தழைத்திட, இனம் செழித்திட, நீதி நிலைத்திட இன்னுள் இன்பத் திராவிடத்திற்கோர் நல்ல சகாப்தத்தின் முன்னேடியாய்த் திகழட்டுமென விழைகிறேன்.

வாழ்க திராவிடம்!
வெல்க உதய சூரியன்!

அன்பன்
எம். ஜி. ராமச்சந்திரன்

சோலை:- பரவாயில்லே! ஆடியபாதம்! நான், உன் வீட்டு விசேஷத்துக்கு வந்ததைப் பத்தியும், அங்கு, நீ, எனக்கு உபசாரம் செய்தது பத்தியும், கண்டவங்க, கண்டபடி, கேவலமாப் பேசருனுங்க... உன்காதிலே விழுந்துதா...

ஆடி:- உலகப்போக்கு அப்படித்தானுங்க... ஒண்ணை ஒன்பது ஆக்கறதுதானே சுபாவம்...

சோலை:- நம்ம ஆபீசிலேயே, பேசருங்க...நான் காதாலே கேட்டேன்...

ஆடி:- நீங்க, என் வீட்டு விசேஷத்துக்கு வந்ததாலே, பெருமை அல்லங்களா, எனக்கு... அதனுலே அதுகளுக்குப் பொருமை?

சோலை:- உன்பேரிலே, 'ரிபோர்ட்' இருக்குது. கணக்கிலே தகருரு இருக்குது. வேலை போயிடும்னு பயந்துதான், நீ, என்னை விசேஷத்துக்கு வரவழைத்து, 'சோப்' போட்டயாம், 'சோப்'.

ஆடி:- விட்டுத்தள்ளுங்க, அப்படிப் பேசறது சில பேருடைய வழக்கமாப் போச்சிங்க ..

சோலை:- அப்படி அலட்சியமா இருந்துவிடக்கூடாது ஆடியபாதம்! உன் வீட்டிலே விசேஷம், நான் வந்திருந்தேன். அது மனிதனுக்கு மனிதன் காட்ட வேண்டிய மரியாதை! ஆபீஸ் விவகாரம், தனி, அதிலே கண்டிப்பு, நிச்சயமா, இருக்கவேணும், மற்றச் சமயத்திலேயும், இடத்திலேயும், சமத்துவம் தோழமை, இருக்கத்தானே வேண்டும்; அதுதானே நல்லது. அதற்காகத்தான் நான்! உன் வீட்டுக்கு வந்திருந்தேன். அதைத் தப்பாகத் திரித்துப் பேசுகிருர்களே!...உன் பேரிலே, உள்ள 'ரிப்போர்ட்டை' பார்த்தேன்......கணக்குச் சரியாகத்தான் இல்லே... சந்தேகமாகக்கூட இருக்குது.........பரவாயில்லே, இந்த ஒரு தடவை, கண்டித்து விட்டு, மன்னித்துவிடலாம்......அப்படித்தான் எண்ணினேன்... ஆனு, இந்தப் பயல்களெல்லாம் கூடிக்கொண்டு, தூற்றுவாங்க போலிருக்குதே. நீ என்னைச் சரிப்படுத்திவிட்டே — விசேஷத்திலே உபசாரம் செய்து, என்னை வசப்படுத்திக்கொண்டே என்றல்லவா, கேவலமாகப் பேசுவாங்க போலிருக்குது. உனக்கும் கேவலம், எனக்கும் கேவலம், நம் இருவருக்கும், அப்படிப்பட்ட கேவலம் ஏற்படக்கூடாது. நீ எவ்வளவோ நல்லவன். என்னுலே உனக்குக் கேவலம் ஏற்படலாமா... செ! ஏற்படவிடக்கூடாது...விடமாட்டேன். எந்தப் பயலும், ஒருவார்த்தைகூட, உன்னைப் பத்தியோ, என்னைக் குறித்தோ கேவலமாகப் பேச விடக்கூடாது.......கார்த்துக்கொண்டிருக்கிருனுங்க ....'ரிபோர்ட்' பற்றி, நான் என்ன நடவடிக்கை, எடுக்கப் போகிறேன் பார்க்கலாம் என்று. நானு ஏமாறுபவன்! இதுகளிடம்! அதனுலே, ஆடியபாதம்! உன்னை வேலையிலிருந்து நீக்கிவிட்டேன்!...

ஆடி:- (திகைத்து) என்னங்க!...

சோலை:- இப்போது பார்ப்போம், ஒரு பயலுடைய வாயாவது அசையுதா, என்று... 'சோப்' போட்டயாமே, சோப்! நான்தான், 'ரிபோர்ட்' பார்த்து, உன்னை வேலையிலிருந்து நீக்கிவிடுகிறேனே, இனி என்ன பேசமுடியும்? இதோ. இதைப் பெற்றுக்கொள், ஆடியபாதம்! உன்னை வேலையிலிருந்து நீக்கிவிட்டேன், என்பதற்கான, உத்தரவு! இன்றே, நீக்கிவிட்டேன்!...

[ஆடியபாதம், திகைத்துப்போகிருன்.

தள்ளாடிக்கொண்டே வெளியே வருகிருன்.

அவனைக்கண்டதும், வேலைசெய்யும் மற்றவர்கள், குறும்பாகப்பார்க்கிருர்கள். அவன், ஒருவரையும் பார்க்கவில்லை.

காற்றிலே மிதப்பவன்போலாகிருன்.

மற்றவர்கள், சிறிதளவு மிரட்சி அடைகிருர்கள்.

ஆடியபாதம், அலுவலகத்தைவிட்டு வெளி ஏறி மரத்தடி அமர்ந்து யோசிக்கிருன்.]

★




வேலையிழந்த ஆடியபாதம்




பேரிருளிலிருந்து, சிறு சிறு ஒளிச் சிதறல்கள் வெடித்துக்கொண்டு கிளம்பின! கப்பிக்கொண்டிருந்த இருள், ஓட்டைவிழுந்த பாண்டம்போல, உருக்குலையலாயிற்று. விடுபட்ட ஒளிச்சிதறல்கள், இங்குமங்குமாக அலையலாயின—ஒன்றை ஒன்று ஈர்த்தன—ஈருரு ஒருருவாவதும், பல உருக்கள் ஒன்றை ஒன்று அணைத்துக்கொண்டு பேருருவாவதுமாகப் பெரும் மாறுதல் நிகழ்ந்தவண்ணம் இருந்தது. தன்னை உருக்குலையவைத்துவிட்டுப்,புதுப்புதுஉருப்பெற்றுக்கொண்டு உலவியபடி இருக்கும் ஒளிச் சிதறல்களைக் கண்ட சிதைந்த உருக்கொண்ட பேரிருள், தன் நிலையை மாற்றிக்கொள்ள முடியாத, மீண்டும் சிதைவற்ற பேருரு பெற முடியாத நிலையில், கலக்கத்துடன் இருந்தது.

சென்றது இனி மீளாது! செல்வாக்கு மீண்டும் வாராது! உள்ளது நிலைத்தாலே போதும்! மேலும் உருக்குலைதல் ஏற்படாதிருக்க வழி கிடைத்தால் போதும்! —என்ற எண்ணம் போலும், பேரிருளுக்கு.

நெடுங்கால ஆதிக்கம் செலுத்திவந்த பேரிருள், தன்னை விரட்டிட, உருக்குலைத்திடச் சிதறடிக்கச், சிதைக்கத்தக்க வலிவுக் கூறுகள், உள்ளன என்ற எண்ணம் கொள்ளவே இல்லை. அவ்வளவு ஆழ்ந்த நம்பிக்கை, தன் ஆதிக்கத்தின்மீது.

ஒளிச்சிதறல்கள் எங்கிருந்து கிளம்பின? கிளம்பும் வரையில் எங்கு அடைபட்டுக் கிடந்தன! ஏன்? எந்தச் சக்தி அவைகளை அடக்கிவைத்துக்கொண்டிருந்தது? அந்தச் சக்தியின் வலிவு குலையக்காரணம் என்ன? ஒளிச் சிதறல்கள், புதிய வலிவுபெற்ற விதம் எப்படி?

பேரிரைச்சல்! பல்வேறு வகையான ஒலிகளின் கூட்டுக் கூச்சல்! முழக்கமும் உறுமலும், சீறலும் கனைத்தலும், குரைத்தலும் குமுறலும் ஆகப் பல்வேறு வகையான ஒலிகள், ஒன்றோடொன்று கூடின, பேரிரைச்சல் எழுந்தது! எனினும் அந்தப் பேரிரைச்சலுக்கு இடையேயும், ஒவ்வோர்விதமான ஒலி, மற்றவகையான ஒலிகளைவிட, வலிவினதாகிறது. ஒவ்வோர் வேளை ஒவ்வோர் ஒலி இந்த வலிவு பெறுகிறது. மிகக் கூர்ந்து கவனித்தால் மட்டுமே அதனை உணரமுடிகிறது.

பேரிரைச்சலிலிருந்து ஒலிகள் முறைப்பட்டுவிடுகின்றன! ஒவ்வொன்று ஒவ்வோர் முறை பெறுகிறது. இரைச்சல் எனும் பொருளற்ற நிலையிலிருந்து, முறை பெற்று, பொருள் உடையதாகிறது.

பேரிரைச்சல், விலங்கினம், பறவையினம், என்பன வற்றினிடம் தஞ்சம் அடைந்து உயிர்ப்பிச்சை பெறுகிறது. மாந்தர்களோ, இரைச்சலை, கல்லைச் செதுக்கிச் சிலைகளும் கருவிகளும் செய்தல்போல, மொழிகளாக்குகின்றனர், இனிமைப் படுத்தி இசையாக்குகின்றனர், உணர்ச்சிகளையும் மேற்கொள்ளும் செயல்களையும் பொறுத்து, பொருளுள்ள, கட்டுக்குக் கொண்வரப்பட்ட இரைச்சலாக்கிப் போருக்கும் கிளர்ச்சிக்கும் பயன் படுத்துகின்றனர். காட்டிலே எப்போதும்போல, இரைச்சல்! நாட்டிலே இசை, உரை, உரையாடல், வாதிடல், கூச்சலிடல், குமுறல், கதறல், என்பவை! இரைச்சல் மட்டுமே காட்டிடை இயல்பு என்று எண்ணுதீர்! இசை எமக்கே உரியது என்றும் கருதாதீர்! என்று கூறுவது போல, வட்டமிட்டபடி இசைஎழுப்புகிறது வானம்பாடி!

பேரிரைச்சலிலிருந்து, முறைப்படுத்தப்பட்ட, பொருள் தரப்பட்ட, மொழிகளும், ஒலிக்குறிகளும், இசையும் பிறந்தன!

பேரிரைச்சலுக்குள்ளேயே இவை முன்பு கட்டுப்பட்டு அடங்கிக்கிடந்தன; ஆனால், விடுபட, வகைபட, பொருள்பெற முடிந்தது! எப்படி?

பெருங் குழப்பத்திலிருந்து அமைதி பிறக்கிறது! பெருங் குழப்பம் பிறகு முறைகளாகின்றன, ஒழுங்கு பெறுகின்றன. பெருங் குழப்பமாக இருந்தபோது, பயன், பொருள், இல்லை. முறைகளான பின்னர், ஒழுங்குபெற்ற பிறகு, பொருளும் பயனும் கிடைக்கின்றன!

பேரிருள் குலைந்து ஒளிச் சிதறல்கள் வெளிப்படுவதுபோலப், பேரிரைச்சல் பிறகு முறைப்படுத்தப் படுவதுபோல, பெருங்குழப்பம் பின்னர் ஒழுங்குமுறைகளாவதுபோல, உலகம், பேரிருளிலிருந்து விடுபட்ட ஒளிச் சிதறலாய், பேரிரைச்சலிலிருந்து கிடைத்த முறைப்படுத்தப்பட்ட ஒலியாய், பெருங் குழப்பத்தி

லிருந்து கிடைத்த ஒழுங்குமுறையாக, அமைந்திருக்கிறது என்பது, உலக உற்பத்தி குறித்து, பல்வேறு கோணங்களிலிருந்து விளக்க முற்பட்டவர்களின் கருத்துகளிலிருந்து திரட்டுப்பாலாகப் பெறமுடிகிறது.

பேரிருள் குலைந்து ஒளிச் சிதறல்கள் கிளம்பியது போல, ஒளி மடிந்து மீண்டும் பேரிருள் கப்பிக்கொள்ளும் —தன்னைச் சிதைத்த ஒளியின் மீது பழிதீர்த்துக் கொள்ளும் — நெடுங்காலப் பசியைப் போக்கிக் கொள்ளும் — அழிந்துபட்ட ஆதிக்கத்தைத் திரும்பப் பெற்றுவிடும் — ஈடற்ற வலிவுடன் எதிர்ப்பற்ற நிலை பெற்று, எவரும் எதனையும் காண இயலாத ஓர் இருட் படலத்தை விரித்துவிடும் — இருளன்றி வேறெதற்கும் இடம் இல்லை, தேவையில்லை, என்ற நிலை ஏற்பட்டுவிடும் —விட்டுவைத்தேன் சிலகாலம் ஒளிச் சிதறல்களை— மீண்டும் ஏற்படுத்திக் கொண்டேன் என் ஆதிக்கத்தை, என்று இயம்பும் நிலைபெற்றுப் பேரிருள் அரசாளும்— அந்த அரசிலே குடிமக்கள் இரார், கோல் மட்டுமே இருக்கும்!



உலக அழிவு குறித்துப் பேசுவோர், இந்தக் கருத்துப்படக் கூறுகின்றனர்.

மொழிகளாய், இசையாய், முறைப்படுத்தப்பட்ட ஒலிக் குறிகளாய், உள்ளன யாவும், மீண்டும் ஒன்றை ஒன்று எதிர்த்தும் குலைத்தும், வெட்டியும் ஒட்டியும், வேற்றுருக்கொண்டும், பொருள் குறைந்து பயன் குறைந்து, இரைச்சலாகி, ஓர் வகை இரைச்சல் மற்றோர் வகை இரைச்சலுடன் ஆதிக்கத்துக்காகப் போட்டியிட்டுப் போட்டியிட்டு, அளவு அதிகமாகி, இறுதியில், முறைகெட்டுப், பேரிரைச்சலாகிவிடும்! அப்போது வானம்பாடியின் இசையும் இல்லை, துளைக் கருவியின் இனிமை ஒலியும் இல்லை. பணிவு, குழைவு, கட்டளை, மிரட்டல், என்பனகூட விளக்கமாகத் தெரியாத நிலையில், பேரிரைச்சல் கிளம்பிவிடும்!

உலக அழிவு என்பது இதுபோன்றதே என்கின்றனர்.

ஒழுங்குமுறைகள் மீறப்பட்டும், ஒன்றோடொன்று மோதிக்கொண்டும், புதுமுறைகள் பழைய முறைகளைத் தாக்கியும், பழைய முறைகள் புது முறைகளைத் திருப்பித் தாக்கியும் முறைகள் கெட்டுக் குழம்பிப், பொருளற்றுப்போய், மீண்டும் பெருங் குழப்பம் ஏற்பட்டுவிடும்—அப்போது குடும்பம், அரசு, வாணிபம், உழவு, தொழிற்கலை எனும் எம்முறையும் இராது—எல்லாம் பெருங் குழப்பமாகிவிடும், இதுவே உலக அழிவு என்று கொள்ளப்படவேண்டும் என்ற கருத்துரைப்பார் உளர்.

எதிலிருந்து எது கிளம்பிற்றோ, அதனிடம் அது மீண்டும் ஈர்க்கப்பட்டு, முதல் அது எதுவோ, அது மீண்டும் அரசோச்சும் என்று கூறுவார் உளர்.

இத்துறையிலேயே மிகுதியாகச் சிந்தனையைச் செலவிட்டவர்களில், பல வகையினர் உளர்.

இருளிலிருந்து ஒளி பிறந்து, ஒளி மீண்டும் இருளாகும், இரைச்சலிலிருந்து ஒலியாயிற்று, ஒலி மீண்டும் இரைச்சலாகிவிடும், குழப்பத்திலிருந்து ஒழுங்கு பிறந்தது, ஒழுங்கு மீண்டும் குழப்பத்துக்கு இடம்கொடுத்துவிடும், அதுபோல் சூனியத்திலிருந்து வாழ்வு பிறந்தது, வாழ்வு மீண்டும் சூனியமாகிவிடும் என்று கூறுவோர் ஓர் வகையினர்.

இவ்வகையினரிலும் பல வகையினர் தோன்றினர், இன்னும் தோன்றியபடியும் உள்ளனர்.

அந்தப் பலவகையினரில் ஒருவகையினர், நிலையற்ற வாழ்வு இது, அழியப்போகும் அவனி இது, எனவே, இதிலே ஈடுபாடுகொள்வதும், மூழ்கிக் கிடப்பதும், தேவையற்றது, தீது பயப்பது, தவிர்க்கப்படவேண்டியது, என்ற கருத்தை மேற்கொண்டு, உலகை வெறுத்து ஒதுங்கியவர்கள்.

உலகை வெறுத்து ஒதுங்கியவர்களில் ஒரு சாரார், அந்த நிலையிலேயும், எண்ணங்களை மடியச் செய்திடும் இயல்பினைப் பெறமுடியாதாராகி, உலகை வெறுத்ததன் பயனைக்காண முற்பட்டனர் — மற்றவர்க்கு எடுத்துக் கூறத் தலைப்பட்டனர். துறவு முறை என்பது ஏற்பட்டது.

இந்தத் துறவு முறையிலும், காலத்தின் கரமும், கருத்துகளின் மோதுதலும், பல உருமாற்றங்களையும்; உரைமாற்றங்களையும், உணர்ச்சி மாற்றங்களையும் புகுத்திடவே, துறவுமுறை பற்றிய மதிப்பீடு எழவேண்டி நேரிட்டுவிட்டது. துறவு, துறவுதானா? துப்புரவானதுதானா? வேடமா? என்ற வினாக்கள் எழலாயின! விடைகள் தரப்பட்டன! தத்துவங்கள் தலைதூக்கின! அவைகட்குக் குழுக்கள் ஏற்பட்டன! மதங்களாயின! மதங்களிடை மோதல்கள் மூண்டன! இருள்! இரைச்சல்! குழப்பம்! மீண்டும் படை எடுத்தன! அழிவு, தன் அகன்ற வாயைத் திறந்து, பசிதீரப் பலிகேட்டது; பெற்றது; பலியானவர்போக மற்றவர், நமக்குள் நடந்த சமர் போதும், இனி நமக்கும் அழிவுக்கும் மூண்டுவிட்ட சமர்'தான் முக்கியம் என்ற தெளிவுபெற்று, அவரவர்க்கு விருப்பம் உள்ளது அவரவருடையது என்று ஓர் ஏற்பாட்டினைச் செய்துகொண்டு, இருளும் இரைச்சலும் குழப்பமும் பெற இருந்த வெற்றியைத் தடுத்து நிறுத்தினர். மதங்கள், முறைகள், ஒழுங்குகள், சட்ட திட்டங்கள் இவை பல்வேறு வகைகளாய், ஒன்றுக்கொன்று விட்டுக்கொடுக்கும் மனமற்ற நிலையில், ஆனால், ஒன்றை ஒன்று தாக்கிக்கொள்ளும் போக்கினைக் கண்மூடித்தனமாக மேற்கொள்ளாமல், இருந்திடக் காண்கிறோம்.

அவ்வப்போது காணப்படும் கசப்புணர்ச்சி, கலவர



உணர்ச்சி, பகை உணர்ச்சி ஆகியவை, ஓர்போது ஆதிக்கம் செலுத்திவந்த, இருள், இரைச்சல். குழப்பம், ஆகியவைகள், இழந்த இடத்தைத் திரும்பப்பெற ஏவி விடும் கணைகள் என்னலாம்.

பெரும் போர் ஓய்ந்திருக்கிறது, போர் உணர்ச்சி மடிந்துவிடவில்லை என்பதனையே இந்நிலை எடுத்துக் காட்டுகிறது.

போர் மூளாது என்று எண்ணி, 'நிம்மதி' பெறத் தக்க நிலை இல்லை; என்றேனும் அத்தகைய நிம்மதி ஏற்படுமா என்பது ஐயப்பாட்டுக்கு உரியதே—எனினும், போர் நிறுத்தப்பட்டு இருக்கிறது.

விளைவுபற்றிய நடுக்கம், விழைவைத் தடுத்துப் பிடித்து நிறுத்திவைத்திருக்கிறது.

இந்நிலையினை எண்ணிப்பார்த்து நடவடிக்கைகளில் ஈடுபடுவோரே, பெரும்பாலான மக்கள் என்று கூற இயலாது. பெரும்பாலான மக்களுக்கு, இந்த நிலைபற்றிய எண்ணம் குடைவதுகூட இல்லை. அங்ஙனம் ஓர் எண்ணம் அவர்களைக் குடைந்திடாமல் இருப்பதும் நல்லதற்கே என்று கூறலாம்; ஏனெனில், அப்படிப்பட்ட எண்ணத்தில் பெரும்பாலான மக்கள் ஈடுபட்டு இருப்பார்களானல், சுழலமுடியாத சக்கரம் பூட்டப்பட்ட வண்டியின் நிலை உலகில் ஏற்பட்டுவிடும்.


மிகப் பெரும்பாலான மக்களின் பிரச்சினைகள் வேறு! அவர்களின் நேரம் நினைப்பு, உழைப்பு அறிவாற்றல் யாவும், அவர்களுக்கென்று ஏற்பட்டுவிட்ட பிரச்சினைகளைக் கவனிப்பதற்கே போதுமானதாக இல்லை. இல்லாததால்தான் மக்களில் மிகப் பெரும்பாலானவர்கள் முக்கியமானவை என்றுகருதும், அரசியல் முறை பொருளியல் திட்டம், சமுதாய அமைப்பு, என்பன போன்ற பிரச்சினைகளை மக்களே கவனித்துத் தீர்வு காண முடியாத நிலை ஏற்பட்டு அந்தப் பிரச்சினைகளைக் கவனித்துத் தீர்வு காண்பதை மேற்கொண்டுள்ள அரசியல் வாதிகள், பொருளியல் வாதிகள், சமுக திருத்த வாதிகள் பலகாலமாகவே பல்வேறு வகையினராக பணியாற்றியபடி உள்ளனர்.

துறவு மேற்கொண்டு காட்டிடை காலந்தள்ளாது, நாடு தங்கியதனுல்தான், எண்ணற்ற சிக்கல்கள், எல்லையற்ற தொல்லைகள் ஏற்பட்டுவிட்டன, என்று கூறத்தோன்றும் சிற்சில வேளைகளில்.

"இந்தத் தொல்லைகளை எல்லாம் பார்க்கிறபோது! காவி கட்டிக்கொண்டு, இராமா! கிருஷ்ணு! கோவிந்தா, என்று எங்காவது விழுந்து கிடக்கலாம்" — என்று. சலிப்பும் சங்கடமும் சிக்கலும் ஏற்படுகிறபோது, பலர் பேசக் கேட்கிருேம்.

இந்தப் பேச்சு, சலிப்பின் காரணமாக எழுந்த அலையாக மட்டுமின்றி, ஒரு அழுத்தமான எண்ணமாக, ஒருவர் இருவருக்கு அல்ல, மாந்தர் அனைவருக்கும், அல்லது மிகப் பெரும்பாலானவர்களுக்கு ஏற்பட்டுத் துறவு முறையிலே நுழைந்துவிடுகிருர்கள் என்று வைத்துக்கொள்வோம்; என்ன நேரிடும்?

"ஏழெட்டுப் பேர் வீடு வாயிலைத் துறந்து காட்டில், கந்த மூலங்களையே புசித்துக் கண்மூடி மௌனியராக இருக்கலாம். ஆனுல் எல்லோரும் இந்தப் பாதையிலேயே சென்ருல், துறவறத்திற்காகப் பெரும் போரே நேரும். மரவுரியே கிடைப்



றவர்களும், என்னென்ன உணர்ச்சிகள் விண்வெளிப் பயணத்தின்போது தமக்கு ஏற்பட்டதாகக் கூறுகிறார்களோ, ஏறக்குறைய அதேவிதமான உணர்ச்சிகள் அனுபவங்கள், வெல்ஸ் எழுதிய கதையிலே, சந்திரமண்டலம் சென்றவர்களுக்கு ஏற்பட்டிருக்கிறது. உடலின் கனமே குறைகிறது! மனதுக்கு ஒரு தெம்பு பிறக்கிறது! சாப்பிடுகிறார்கள்! பேசிக்கொள்கிறார்கள்! உறங்கக்கூடச் செய்கிறார்கள்!

சந்திரமண்டலம் செல்கிறார்கள். பார்த்தால், எங்கும் புல்பூண்டுகூட இல்லை. பாழ்நிலமாகத் தெரிகிறது. பெரிய பெரிய எறும்புப் புற்றுகள் உள்ளன; அகன்ற வாயுடன். மற்றப்படி ஒன்றும் காணோம்.

கதிரவன் கிளம்புவது தெரிகிறது; உடனே ஓர் விந்தையும் நிகழ்கிறது.

தரைமீதுகிடந்த சிறுசிறு கூழாங்கற்களைப் போன்றவைகள், கதிரவன் ஒளிபட்டதும், அசைகின்றன!!

உயிர்! ஆமாம்! சந்திரமண்டலத்தில் உயிர்ப்புச் சக்தி இருக்கிறது!! என்று பேசிக்கொள்கின்றனர். பார்த்துக்கொண்டிருக்கும்போதே அசைந்த அந்தச் சிறு உருவங்கள், வெடிக்கின்றன, முளை வெளி வருகிறது, இலைகள் வெளிவருகின்றன, விநாடிக்கு விநாடி வளர்ந்து முட்செடிகளாகின்றன; அவை கூழாங்கற்கள் அல்ல, விதைகள் என்பது புரிகிறது.

இங்கு செடிகள் வளர மாதக்கணக்காகின்றன.

சந்திரமண்டலத்திலே, பார்த்துக்கொண்டிருக்கும்போதே, பாழ்வெளிபோல் தோற்றமளித்த இடமெங்கும், பச்சை நிறம்கொண்ட செடிகள் முளைத்து, வளர்ந்து, அடர்ந்துவிடுகின்றன.

உயிர் வளர்ச்சி, சந்திரமண்டலத்திலே மிக வேகமாக நடைபெறக்கூடும், என்றகருத்தைக்கூற, வெல்ஸ் இப்படி ஒரு காட்சியைக் காட்டுகிறார், கதை வடிவு அமைந்த, தமது நூலில்.

இங்கு உள்ளதைவிடச் சந்திரமண்டலத்தில், பிராண வாயு அதிக அளவில் இருக்கிறது என்பது வெல்ஸ் கூறிடும் கருத்தாகும்.

அதனால்தான், இங்கு செடிகள் வளர மாதக்கணக்காகின்றன என்றால், சந்திரமண்டலத்தில், பார்த்துக்கொண்டிருக்கும்போதே, செடிகள் அடர்த்தியாக வளர்ந்துவிடுகின்றன.

சிறு குன்றுகள்போன்ற அளவில், மேற்புறத்தில், அகன்ற வாயுடன் உள்ள எறும்புப்புற்றுகளில் இருவரும் இறங்குகின்றார்கள்; குதிக்கிறார்கள்.


அங்கு அவர்கள் 80-அடி கனமும் 200-அடி நீளமும் உள்ள கால்களற்ற சந்திரமண்டலக் கன்றுக்குட்டிகளை, ஐந்தடி உயரமுள்ள சந்திரமண்டலத்தான் மேய்த்துக்கொண்டிருக்கக் காண்கிறார்கள்.

கதையிலே கூறப்பட்டுள்ள விந்தைகள், வெல்ஸ் கூற விரும்பும் கருத்துகளுக்காக அமைக்கப்படுகின்றன என்றபோதிலும், அந்த நூலிலே காட்டப்பட்டுள்ள அடிப்படைக் கருத்துகளை, வெறும் கற்பனை என்று தள்ளிவிடுவதற்கு இல்லை. இன்று சந்திரனைப் படம் எடுத்திருக்கிறார்கள். வெல்ஸ் கதையிலே குறிப்பிடப்பட்டுள்ள குன்றுகள், வெடிப்புகள், மட்டுமின்றி, கடல்களும் உள்ளன என்று படம் காட்டுகிறது.

இதுபோல எண்ணற்ற விந்தைகளை, இயற்கை நெடுங்காலமாகத் தன் அகத்தே ஒளித்துவைத்துக் கொண்டிருப்பதை, எப்படியும் கண்டுபிடித்தே தீருவது என்று துணிந்து, செயலாற்றி வருகிறான் மனிதன்.

கதையிலேகூடச் சந்திரமண்டலம் சென்றவர்கள் 'அனுப்பிய கடைசிச் செய்தி'தான் குறிக்கப்பட்டிருக்கிறது; வெற்றிபெற்று வீடு திரும்பியதாக இல்லை.

இயற்கையின் இரகசியங்களைக் கண்டறியும் முயற்சியில் ஈடுபட்டதிலே, பலர் தோற்றுப்போயுள்ளனர், பலர் பலியாகிவிட்டுள்ளனர், பலர் பாதிப்பாதி அளவே உண்மையைக் கண்டறிந்தனர். ஆனால், முயற்சி, கைவிட்டுவிடப்படவில்லை! தொடர்ந்து நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.



இறுதியில், பேரிருளிலிருந்து ஒளிச் சிதறல்களும், பேரிரைச்சலிலிருந்து முறைப்படுத்தப்பட்ட ஒலிகளும், பெருங் குழப்பத்திலிருந்து ஒழுங்கும் ஏற்பட்ட நாட்கள்—நிலைமைகள்—தன்மைகள் குறித்துக்கூடக் கண்டறிய முடியும் என்ற நம்பிக்கை இன்று உலவுகிறது.

இத்தகைய ஆற்றல் மனிதனிடம், இருக்கிறது; இயற்கையை வெல்லும் ஆற்றல், இயற்கையைக் கட்டுப்படுத்தும் ஆற்றல், இயற்கையின் இதயத்தை அறிந்திடும் ஆற்றல்!

மனிதனுக்குப் பகை இயற்கை என்பது இன்று மாற்றப்பட்டு வருகிறது.

இயற்கையை எதிர்த்து நிற்கவும், மனிதன் துணிவு பெறுகிறான்; ஆற்றல் பெறுகிறான். எல்லாம் முடிகிறது, மனிதனால்; கடலின் ஆழம் காண, விண்

வெளிப் பயணம் நடத்த, கோளங்களை ஆராய்ந்திட, இயற்கையின் இரகசியங்களைக் கண்டறிய!!

இவ்வளவும் அறிந்துகொள்ள முடிகிறது மனிதனால் என்றாலும், மனிதனை மனிதன் அறிநதுகொள்வதிலே மட்டும் இன்னமும் மனிதன் வெற்றிபெற முடியவில்லை! இந்த நிந்தைக்கு என்ன சொல்வது!



பறவை போலப் பறந்திட, மீன்போல் நீந்திடக் கற்றுக்கொண்ட மனிதன், இன்னமும் மனிதனாக நடந்துகொள்ள முழுதும் கற்றுக்கொள்ளவில்லையே என்று கழிவிரக்கப்படுகிறார் ஓர் பேரறிவாளர். ஏன்?

பழைய இருள், பழைய இரைச்சல், பழைய குழப்பம், மனிதனின் மனதைவிட்டு அடியோடு நீக்கப்படாததால்தான்போலும்!

ஆக, மனிதன் ஒரேபோது, புறத்திலுள்ள இருளை மட்டுமல்ல, தன் அகத்திலேயே உள்ள இருட்டையும் ஓட்டியபடி இருந்தாக வேண்டியவனாகிறான்.

'ஓட்டியபடி' என்று கூறுவதன் காரணம், ஒரே அடியாக ஓட்டியேவிடுவது என்பது இயலாத காரியம் என்பதால். மற்றும் ஓட்டிவிடுவதிலே பெரும் அளவு வெற்றி கண்டுகொண்டிருக்கும்போதே, இருள் வேறோர் பக்கமிருந்து, மெள்ள நுழைந்துவிடவும் கூடும் என்பதாலும்.

இருளில் கிடக்கும் பொருளைக் கண்டெடுக்க, ஒளி விளக்குப் பொருத்தப்பட வேண்டும்.

பொருள் கிடைத்தானதும் விளக்கை அணைத்து வைக்கலாம், ஆனால், மீண்டும் தேவைப்படும்போது, எரியத்தக்கவிதமாக விளக்கு இருக்கவேண்டும். இவை யாவற்றையும்விட, விழி பழுதுபடாமலிருக்கவேண்டும். முகத்துக்கு விழி எனில், அகத்துக்கும் ஒன்று தேவை. அஃதே தூய எண்ணம். நமக்காக—நமக்காகவே—நமக்காக மட்டும் — பிறருடையதானாலும் நமக்கு — பிறரிடமிருந்து பறிக்கப்பட்டேனும் நமக்கு — பிறரை நாசப்படுத்தியேனும் நமக்கு — என்ற எண்ணமற்ற நிலையே மனத் தூய்மையைத் தரும். அது மேலும் நேர்த்தியுள்ளதாக வேண்டுமெனில், பிறருக்காக — நமக்கில்லாவிட்டாலும் பிறருக்காக — அனைவருக்கும் என்ற வகையினது ஆகிவிடவேண்டும்.

தமிழர் இத்தகைய தூய்மை உள்ளம் பெற்றிருந்த நாட்கள் உண்டு; அதனை நினைவுபடுத்துவதுபோல அமைகிறது இத்திருநாள்! கடுகடுப்பு மறைகிறது, கலகலப்பு மிகுந்து காணப்படுகிறது! அவரும், இவரும், எவரும் எம்மவர்! என்று கூறத் தோன்றுகிறது. எல்லோருக்கும் எல்லாம் இருக்கட்டும் என்று வாழ்த்துகிறோம். அத்தகைய தூய்மையான உள்ளம் இந்தத் திருநாளில் எழக்காரணம் என்ன?

பேரிருளும் பேரிரைச்சலும் பெருங் குழப்பமும் மாற்றி அமைக்கப்பட்ட நிலைக்குப் பிறகு, இயற்கையை மனிதன் தன் வழிப்படுத்த எடுத்துக்கொண்ட முயற்சியில் முதல் முயற்சி, முதல் வெற்றி உழவு! உழவர் திருநாள் பொங்கற் புதுநாள்! கட்டாந்தரை கழனியாயிற்று! ஒன்று ஓராயிரமாயிற்று என்று கூறத்தக்க விதத்தில் விதைப்பது கூடை எனில், அறுத்தெடுப்பது வண்டி அளவு என்ற முறையில் உழவுத் தொழில் சிறந்து விளங்கலாயிற்று. வேட்டையாடி விலங்கினம் போல் வாழ்ந்த மனிதன், வீடு கட்டி மனைஅறம் பேணத் தொடங்கியது, உழவு முறையிலே, மனிதன் கண்ட வெற்றியினால்தான்.

பெருஞ் சிறகடித்துப் பறக்கும் கழுகுகளுடன் மனிதன் போட்டியிட்டுக்கொண்டிருந்த காலம் மாறி, கிளியினைக் கூண்டிலிட்டு, கொவ்வைக் கனிகொடுத்து மகிழ்ச்சிபெறும் காலம் ஏற்படுவதற்குள், எத்துணை எத்துணை முயற்சிகள்! எண்ணும்போதே நெஞ்சு நடுக்குறும், அத்துணை ஆபத்துகளைக் கடந்திருக்கிறான். தோல்விகளால் துயருற்றிருக்கிறான், அல்லல்களை மேற்கொண்டிருக்கிறான்.

இரத்தம் ஒழுகும் வாயுடைய ஓநாய்கள், காட்டுப் பன்றிகள், காட்டெருமைகள், மருண்டோடும் மானினங்கள், கொல்லும் புலிகள் போன்றவைகள் இன்றும் உலவிடும் காடுகளில் கொன்றதைத் தின்று, இருகாற் பிராணியாக இருந்த மனிதன், இன்று நாடு ஆளவும், கலை பயிலவும், பண்பு காணவும் பல்கலைக் கழகம் அமைக்கவுமான, உயர்நிலை பெற்றுவிட்டான். தாவுவது தாக்குவது, பிய்ப்பது தின்பது, பதுங்குவது பாய்வது என்ற இயல்பிலிருந்து மிருகங்கள் தம்மை மாற்றிக் கொள்ள முடியவில்லை. மாறிட வேண்டிய தேவையும் எழவில்லை. மாறிடத்தக்கவிதமான சூழ்நிலை திருத்தி அமைக்கப்படவுமில்லை.




மனிதனோ, மிருக வாழ்க்கையை, இயல்பை மாற்றிக்கொண்டது மட்டுமல்ல, அந்த மாறுதலுக்கேற்றசூழ்நிலையையும் திருத்திஅமைத்துக்கொண்டுவிட்டான், அந்தச் சூழ்நிலை மனிதத் தன்மையை மேலும் செம்மைபடுத்திக் கொள்ளத்தக்கதாகவும் அமைந்திருக்கிறது. மனிதத் தன்மையிலிருந்து மாறிடத் துணிந்தால், கண்டிக்க அறவோர் உளர்;




தண்டிக்க அரசு இருக்கிறது. பாவம், மிருகங்களுக்கு எங்கே இவை கிடைத்துள்ளன! எப்போதும்போல, அடர்ந்த காடுகள், அருவி ஓரங்கள், சதுப்பு நிலங்கள், குகைகள் பிலங்கள் இவைதாமே உள்ளன! புதரருகே எப்போதும் இருக்கும்போது பதுங்க, பிறகு பாயத் தோன்றுமல், வருக! அமருக! என்று பிறரை அழைக்கும் இயல்பா வளரும்! பசியாற்றிக்கொள்ள வேறு முறையே இல்லாதபோது, கொன்று தின்பதன்றி, கொடுக்கச்சொல்லி உண்டிடும் முறையா இருக்க முடியும்? ஆகவே, அன்று இருந்த நிலையிலேயே இன்றும் மிருகங்கள் இருப்பதனுல், இயல்பு மாற வேண்டிய தேவையும் ஏற்படவில்லை, வாய்ப்பும் கிடைக்கவில்லை, வழியும் உண்டாகவில்லை. ஆகவே, மிருகங்கள் ஈடுபடும் செயல்களிலிருந்து நாம் தப்பிப் பிழைக்க வழி என்ன என்று எண்ணவேண்டுமே தவிர, மிருகங்களே! நாங்கள் எவ்வளவோ மாறிவிட்டோமே! இயல்புகளை மாற்றிக்கொண்டுவிட்டோமே! நல்லவர்களாகி விட்டோமே! நீங்கள் மட்டும் ஏன் இன்னமும் இரத்தம் குடிக்கும் இயல்பினைவிட்டொழிக்காதிருக்கிறீர்கள்?'' என்று மிருகங்களைப்போய்க் கேட்கவா முடியும்!

தமது எண்ணத்தைத் தெரிவிக்கும் முறையை மிருகங்கள் பெற்றிருந்தால் அவை அல்லவா நம்மைக் கேட்கும்! எல்லா வசதிகளும் வாய்ப்புகளும் இருந்தும், மனிதனே! நீ, ஏன் சிற்சில வேளைகளிலே, மிருக குணத்தைவிட மறுக்கிறுய்! என்று. உண்மையும் அதுதானே! அதை நாமே, பிறரைப்பற்றிப் பேசும்போது, எடுத்துக்காட்டுகிறோமே.

கழுகுபோலக் கொத்துகிறான்
பாம்பாகச் சீறுகிறான்
தேளாகக் கொட்டுகிறான்



ஆந்தைபோல அலறுகிறான்
குரங்குத்தனம் செய்கிறான்
பூனைபோன்ற வஞ்சகன்
எருமைக்கடா போன்ற முரடன்
தவளைபோலக் கத்துகிறான்
வண்டுபோலக் குடைகிறான்
கிடக்கிறான் கழுதை!
அடித்து விரட்டு நாயை!
நரிக்குணம், அவனுக்கு
புலிபோலப் பாய்கிறான்
ஒட்டகம்போல முதுகு
ஓநாய்போலச் சுபாவம்
எலிபோலத் திருடுவான்
கரடியாய்க் கத்துவான்
ஆமைபோல நகருவான்
உடும்புப்பிடி பிடிப்பான்




என்றெல்லாம், பேசுகிறோம். என்ன பொருள் தெரிகிறது? மனிதனிடம் மிருக இயல்பு மறைந்திருக்கிறது, புற்றரவுபோல! எந்த நேரத்திலும் தலை தூக்கலாம்! எப்போதும் விழிப்போடு இருந்தாக வேண்டும்!!

மிருகம், கூண்டில் அடைக்கப்பட்டால், வெளியே வராது, பிறருக்கு ஆபத்து ஏற்படாது.

மனிதனிடம் உள்ள மிருக இயல்பு, கூட்டிலே அடைக்கபபட்ட மிருகமல்லவே! தானு



நாடு! எனவே நம்பிக்கையுடன், தன்னிச்சையாக மக்கள் உலவுவர்!

அந்தப் பாதுகாப்பற்ற நிலையிலே, மனிதன் பாயும் புலியானுல், படமெடுக்கும் பாம்பானுல், கொட்டும் தேளானுல், கொத்தும் கழுகானுல், மற்ற மனிதர்களின் கதி என்ன ஆகும்? நினைக்கும்போதே நடுக்கம் ஏற்படு மல்லவா?

மனிதன் ஏன் இன்னமும் மிருக இயல்பிலிருந்து அடி யோடு விடுபடவில்லை? மனிதன், முன்னம் இருந்துவந்த இருளிலிருந்து, விடுபட்டு வெளிவந்தவன்; மீண்டும் மீண்டும் அவனைச் சிறையெடுக்க இருள் முயற்சி எடுத்தபடி இருக் கிறது. அதனுல்தான், மனிதனிடமிருக்கும் மிருக இயல்பு மடிந்துபடவில்லை!

அறநூற்கள் தீட்டப்பட்டிருப்பதும், அரசுகள் அமைக்கப்பட்டிருப்பதும், மனிதனுடைய மிருக இயல்பு வெடித்து வெளிக்கிளம்பி, மற்றவர்க்குப் பெருங் கேடாய் விளைந்துவிடாமல் பார்த்துக்கொள்ளத்தான்.

மிருக இயல்பு சில மனிதரிடம் சில வேளைகளில் வெளிப்படும்போது, அரசு குறுக்கிட்டுத் தண்டிக்க முன்வருகிறது. அதுகண்டு, மிருக இயல்பு வெளிப்பட இடம்தரமாட்டார்கள் என்பதனை அறிந்து மற்றவர் அடங்குவர் என்பது அடிப்படைக் கருத்தாக அமைந் திருக்கிறது. ஆனுல், அது போதாது! மனிதனிடம் மிருக இயல்பு எழவிடாதபடி சுற்றுச் சார்பு அவ்வப்போது திருத்தி அமைக்கப்படுவதில், அரசு, பெரும் கவலை எடுத்துக் கொள்ளவேண்டும்; பொறுப்பேற்கவேண்டும்.

அவ்விதமான பொறுப்பினை மேற்கொள்ளாத அரசு, பூமிக்குப் பாரம் என்கிருர், வள்ளுவர்.

> கல்லார்ப் பிணிக்கும் கடுங்கோல் அதுவல்லது
> இல்லை நிலக்குப் பொறை.

கடுங்கோலாகிய ஆட்சிமுறை கல்லாதவரைத் தனக்கு அரணுகச் சேர்த்துக்கொள்ளும். அதைவிடச் சுமை பூமிக்கு வேறு இல்லை! என்பது பொருள்.

பூமியின்மீது மலைகள் மரங்கள் உள்ளன; மாந்தர்



மில்லை, கதவுமில்லை, மனமெனும் அறையில்! எனவே, எந்த நேரத்திலும், மிருக இயல்பு வெளிக்கிளம்பிவிடக் கூடும்.

> அடித்துவிட்டான்.
> வெட்டிவிட்டான்,
> குத்திவிட்டான்.
> பெயர்த்துவிட்டான்,
> பிளந்துவிட்டான்.
> ஒடித்துவிட்டான்,
> உதிர்த்துவிட்டான்.
> கொன்றுவிட்டான்,
> புதைத்துவிட்டான்.
> கண்ணை அவித்தான்,
> காதை அறுத்தான்.

என்றெல்லாம் கேள்விப்படுகிருேமே, என்ன தெரி கிறது அந்தப் பேச்சிலிருந்து? மனிதன், மிருகம் செய் வதை எல்லாம் செய்யக்கூடியவன்—செய்துகொண்டு இருந்தவன்—ஏமாந்தால், மீண்டும் செய்யக்கூடியவன், என்றல்லவா தெரிகிறது. கூட்டில் அடைக்கப்படாத, கொல்லும் தொழிலை விட்டுவிடாத மிருகம், மனித உள்ளத்திலேயே பதுங்கிக்கொண்டிருக்கிறது. காட்டி லுள்ள மிருகங்களால் நாட்டிலுள்ளவர்களுக்கு ஏற்படக் கூடிய ஆபத்துகளைவிட, நாட்டிலுள்ள, மிருகத் தனத்தை மாய்த்துக்கொள்ளாத மனிதர்களால் மற்ற மனிதர்களுக்கு ஏற்படும் கேடுகளும், ஆபத்துகளும் தான் மிக அதிகம்.

காடு எனில், அச்சத்துடன், நேரம் பார்த்து, வழி பார்த்து, நடப்போம்.

உளர்; மிருகங்கள் உள்ளன! கேடு செய்யும் விலங்கினங்களும் உள்ளன; ஊர்வனவுள்ளன; அவைகளை வள்ளுவர், சுமை என்று கூறவில்லை. கல்லாதாரின் ஆட்சியைத்தான் பூமிக்குப் பாரம் என்று கூறுகிறார்.

திருடர்களைத் தண்டிக்கவேண்டியது அரசின் கடமை; மறுப்பார் இரார்! ஆனால், நல்லரசின்பொறுப்பு, திருடு நடத்தியே பிழைக்கவேண்டிய நிலையில் உள்ளவர்கள் எந்தச் சூழ்நிலையில், குற்றம் புரிகிறார்களோ, அந்தச் சூழ்நிலையைத் திருத்தி அமைப்பதாகும்.

பழந்தமிழ் மன்னர்கள், அறவோரின் உரைகேட்டு நடந்தகாலை, களவு கொலை கற்பழித்தல்போன்ற கேடுகள் எழாத சூழ்நிலையை அமைத்திடுவதில், கண்ணுங் கருத்துமாக இருந்துவந்தனர்.

தன் ஆட்சியிலே, மக்கள், குற்றமிழைப்போராகி விட்டால், தண்டனைக்கு உரியவர்களாகக் குற்றவாளிகள் ஆனபோதிலும், கண்டனத்துக்கு உரியவர்கள், தாமே என்று உணர்ந்து, ஆட்சி நடத்திவந்தனர், அன்றைய மன்னர்கள். மன்னர்கள் மட்டுமல்ல, மக்களும், அத்தகைய பொறுப்புணர்ச்சி உள்ளோராகத் திகழ்ந்தனர் என்பதற்கான சான்றுகளும் உள்ளன, அந்நிலை இன்றில்லை என்பதுமட்டுமின்றி, குற்றங்களின் தன்மையே இன்று விரிவாகிப்போய்விட்டது.

"பிறரிடத்தில் அன்பில்லாமையினால், உலகத்தில் களவுகளும், புரட்டுகளும், ஒழுங்கின்மைகளும், நிறைந்திருக்கின்றன.

"கள்ளர்கள் இரவில் எப்போதாவது புதுப்பிறை இருட்டில்களவாடுகிறார்கள். நாள்தோறும்பட்டப்பகலில் எல்லோரும் அறிய நடக்கிற களவுகளுக்கு அளவில்லையே. பொருளவாவினால், பொய்யாணையிடுகிறவர்களும், பொய்ச்சான்று சொல்லுகிறவர்களும், பொய்ச்சீட்டு உண்டுபண்ணுகிறவர்களும் பொய்வழக்குச் செய்கிறவர்களும், தங்களுடைய ஆற்றலுக்கு மேற்பட்ட கடன் வாங்குகிறவர்களும், வாங்கின கடனைக் கொடாதவர்களும், முறையற்ற வட்டி வாங்குகிறவர்களும், அடைக்கலமாக வைத்த பொருளைக் கவர்ந்துகொள்ளுகிறவர்களும், வேலை செய்யாமல் கூலிவாங்குகிறவர்களும், ஏழைகளிடத்தில் வேலை வாங்கிக்கொண்டு, கூலி கொடாதவர்களும், செல்லாப் பணத்தைச் செலுத்துகிறவர்களும் அளவிலும், நிறையிலும் வேறுபாடு செய்கிறவர்களும், சரக்குகளுக்கு மிகுந்த விலைவாங்குகிறவர்களும், நல்ல சரக்குக்கு விலைவாங்கிக்கொண்டு, கெட்ட சரக்குகளைக் கொடுக்கிறவர்களும், சூதாடிப் பொருள் தேடுகிறவர்களும், கண்டெடுத்த பொருளை, சொந்தக்காரர்களைத் தேடிக்கொடாதவர்களும், பிறர் பொருளைப் பார்த்துப் பொருமை கொள்ளுகிறவர்களும், களவுப் பொருளைவாங்குகிறவர்களும், களவுக்கு உதவி செய்கிறவர்களும், களவாடும்படி பிறருக்குக்கற்பிக்கிறவர்களும் பிறருக்குப் பொருள் இழப்பு உண்டாகும்படி செய்கிறவர்களும், கையில் பொருளை வைத்துக்கொண்டு, ஏழைகளுக்கு ஐயம் இடாதவர்களும், பணம் வாங்கிக் கொண்டு பெண் கொடுக்கிறவர்களும், பட்டப் பகலில் கொள்ளையடிக்கிற கள்ளர்களே!

"அன்றியும், எளியவர் தாங்கக்கூடாத நாட்டு வரி, காட்டு வரி, வீட்டு வரி, மாட்டு வரி, ஆட்டு வரி, ஓட்டு வரி, சீட்டு வரி, கூட்டு வரி, பாட்டு வரி, மேட்டு வரி, தீட்டு வரி, ரோட்டு வரி, கோட்டு வரி, ஈட்டு வரி, சாட்டு வரி முதலிய கேட்டு வரிகளைச் சுமத்தி, ஒழுங்கின்மை செய்த ஆட்சியாளர்கள் முறைமையற்றவர்களே!



கைக்கூலி வாங்கிக்கொண்டு, ஒருதலைப்பக்கம் முடிவு செய்கிற சில வழக்குமன்றத் தலைவர்கள் கொடியவர்களே! எப்போது குடும்பங்களிற் கலகம் உண்டாகும்? எப்போது வழக்கு வருமென்று கருத்தாய்க் காத்துக் கொண்டிருக்கிற சில முறைமன்றத் தலைவர்கள் வஞ்சகர்களே! யாருக்கு காய்ச்சல் வரும்? யாருக்கு வயிற்றுப் போக்கு வரும்? யாருக்குத் தலை உடையும், யாருக்குக் கைகால் ஒடியும் என்று வேண்டிக்கொண்டு, தங்களுடைய பிழைப்புக்காகப் பிள்ளைவளர்ப்பதுபோல், நோயை வளர்த்துவிட்டுக்கொண்டு பிழைக்கிற சில மருத்துவர்கள், வன்னெஞ்சக் கள்ளர்களே!"

வேதநாயகம் பிள்ளை மனம் வெதும்பிக் கூறினார் இவ்விதம்.

இல்லாமையால் களவாடிய நிலைமட்டுமல்லாமல், இருப்பதைப் பெருக்கிக்கொள்ள நடைபெறும் பகற்கொள்ளைகள் தடுக்கப்பட்டாகவேண்டிய பொறுப்பினை நல்லரசு ஏற்றுக்கொள்ளவேண்டும். இல்லையெனில் ஏமாளி பிடிபட்டான், எத்தன் கொடிகட்டி வாழ்கிறான்

என்ற நிலை ஏற்படும். அது சமுதாய அமைப்பைப் பாழ்படுத்தும். அரசு யாருக்காக இருக்கிறது என்ற ஐயப்பாட்டை உண்டாக்கி, அரசிடம் மக்கள் வைக்க வேண்டிய நம்பிக்கையையும், மதிப்பையும் குலைத்து விடும். அது குலைந்துவிடின், அடிப்படை தகர்ந்த கட்டிடமாக நாடு ஆகிவிடும்—பேரிருளும், பேரிரைச்சலும்; பெருங்குழப்பமும் படை எடுத்துப், பலி கேட்கும்; பெறும்!!

உலகிலே எனக்கு முன்பு இருந்தவர்கள் தொண்டாற்றியதன் பலனை நான் இன்று துய்க்கிறேன்; என் வாழ்வுக்கு உறுதுணையாக அமைந்துள்ளன பலவும், முன்னம் சிலர் பலர் செய்தளித்தவை. அவைகளை அனுபவித்துக்கொண்டுள்ள நான், கடனைத் திருப்பிச் செலுத்துதல் போல, தொண்டாற்றி, அதன் பலனை எனக்குப் பிறகு வருவோர் பெற்றுப் பயனடையத்தக்க வழிகாணவேண்டும்; அஃதே நன்றியறிதல் காட்டும் பண்பாகும், என்ற உணர்வுடன், அவரவர் தத்தமக்குக் கிடைக்கும் வாய்ப்பினுக்கு ஏற்பப் பணியாற்றி வருதல் வேண்டும்.

அங்ஙனம் செய்ய முற்படாதார் இருந்தும், இல்லாதாரே!!

தாயின் பாலுண்டு வளரும் மகவு, சிறுமியாகி, தாய் நோய்கண்டு வாடும்போது, பக்கமிருந்து பணிவிடை செய்வதன்றோ முறை! அங்ஙனமின்றி, உடல் உருகி, இருமி, ஈளைகட்டி, இழுத்துக்கொண்ட நிலையில் தாய் இருக்கும்போது, சிறுமி கவலையற்று இனி என் அன்னையால் என்னைக் காத்திட இயலாது; இனி இவளைப்பற்றி நான் ஏன் கவலைகொள்ளவேண்டும் என்று நினைத்துக், கழலாடிக் கிடப்பின், பெற்ற வயிறு பற்றி எரியுமன்றோ, கண்டவர்கள் கண்கள் கனலைக் கக்குமன்றோ'! அதுபோலத்தான், வாழ்வளித்த உலகுக்கு, ஒவ்வொருவரும், தொண்டுசெய்து, வண்ணம் சேர்க்கவேண்டும், வளம் ஊட்டவேண்டும். இல்லையெனில், அவர்கள் பூமிக்குப் பாரம்—வேறென்ன?

தூய தொண்டாற்றுவது புகழ் ஈட்டத்தானே என்று கேட்பர் புல்லறிவினர். புகழ், பெறுபவருடன் இணைந்துவிடுவதுமில்லை, அவருடன் சேர்ந்து மடிந்து போவதுமில்லை. அவருக்குப் பிறகும் நிலைத்து நின்று, நாட்டுக்கு அணிகலனாகிறது.

செல்வம் ஈட்டியோர், அதனை ஈந்து உவத்தலை மேற்கொள்ளவேண்டும் என்று அறிவுறுத்துகிறார் வள்ளுவர். அத்தகைய வாழ்வே, இசைபட வாழ்தல் என்று குறிப்பிடுகிறார். ஈதல் இசைபட வாழ்தல் வலியுறுத்தப்பட்டிருக்கிறது. இவ்வழி நடவாதார், பூமிக்குச் சுமையே என்று இடித்துரைக்க,

ஈட்டம் இவறி இசை வேண்டா ஆடவர்

தோற்றம் நிலக்குப் பொறை!

என்று கூறுகிறார்.

எனவே, பூமிக்குப் பாரமாக இருந்திடாது, அணி கலனாகத் திகழ்ந்திடவேண்டும் என்ற குறிக்கோள், மக்களிடை இருத்தல் வேண்டும். அத்தகு மக்களே நல்லரசு காணத் தக்கோராவர்,

மக்களே இன்று ஆட்சியை அமைக்கின்றனர். எனவே, நல்லரசு அமைவதும் அமையாததும், அவர்கள் கரத்திலேயே இருக்கிறது. ஐந்தாண்டுக்கொரு முறைதான் இந்த அரும் வாய்ப்புக் கிடைக்கிறது; அதனைத் தக்க விதத்தில் பயன்படுத்தத் தவறிவிட்டால் பிறகு ஐந்தாண்டுகள் அல்லற்பட நேரிடும்.

ஆண்டுக்கோர்முறை கொண்டாடி மகிழ்ந்திடும் அருமைத் திருநாளன்று, இதனை மனதிற்கொண்டு, நன் முடிவு எடுத்திடல் வேண்டும்.

உதயசூரியன் உதித்தால், பேரிருள் அகலும்; காண்கின்றார் மக்கள், நித்தநித்தம்.

'உதயசூரியன்' பேரிருள் அகற்றியோன்!

பேரிரைச்சலில், பெருங் குழப்பத்தில் இருந்து வந்த நிலைமாறி உலகு உயிரினங்களின் உறைவிடமாக அமைந்திட உதவியவன், உதயசூரியன்,

உழவுத் தொழில் சிறந்திட உறுதுணையாய் அமைந்தவனும், உதயசூரியன்.


உதயசூரியன் வாழ்த்துக்குரியவன், வணக்கத்துக்குரியவன், வளம் அளிப்பவன், என்பது அனைவரும் போற்றிடும் பேருண்மை.

அந்த 'உதய சூரியனை' வாழ்த்திடும் நன்னாளாக அமைந்துள்ள, பொங்கற் புதுநாளன்று, பேரிருள் விலகி, பேரிரைச்சல் நீங்கி, பெருங்குழப்பம் அடங்கி, உலகு, வாழ்விடமாகி வாழ்விடத்தில், மிருக நிலையினின்றும் விலகி, மனிதர் நாடு கண்டு, அரசு நடாத்தி, வரும் நாட்களில், மனிதரிடம் மிருக நிலை அடியோடு மடிந்து படாதிருத்தலால், நல்லரசு அமைப்பதன் மூலம், மிருக இயல்பு போக்கிடத்தக்க முயற்சியில், அறிவும் பொறுப்பும் மிக்கோர்' துணிந்து பணியாற்றவேண்டும் என்று கேட்டுக்கொள்ளவே

'இருளகல' என்ற இதனை எழுதினேன்.

பல பொருள் கொண்ட தொகுப்பாக இது அமைந்திருப்பது, இதிலே காணக்கிடக்கும், நிலைமைகள், கருத்துக்கள் ஒவ்வொன்றும், தக்கோரால் மேலும் விரிவாகவும் விளக்கமாகவும் எழுதப்படல் வேண்டும் என்பதனை வலியுறுத்தத்தான்.

★



# நாட்டை மீட்போம்!
# நல்லாட்சி அமைப்போம்!

[ என். வி. என். ]

விழாக்களிலே தலைசிறந்தது பொங்கல் திருவிழா! சாதிசமய மதக்கோட்பாடுகளுக்கெல்லாம் அப்பாற்பட்ட பகுத்தறிவுத் திருவிழா! எம்மதத்தினரும் சம்மதம் என்று ஏற்றுக்கொள்ளக்கூடிய, எழுச்சிமிக்க திருநாள்! உழைப்பின் மேன்மைக்கு முதலிடம் தரும் மனவளம் கொண்ட ஒவ்வொருவரும் மனமார வரவேற்று மகிழும் திருவிழா! இன்னும் சொல்லப்போனால், எதிர்காலத்தில் சுதந்திரத் திராவிடத்தின் தேசியத் திருவிழாவாக விளங்கப்போகும் மறுமலர்ச்சி விழா!

ஆனால், இன்று அந்த மகத்தான நாளில் மக்கள் மனநிறைவு கொண்டு மகிழும் நிலையிலில்லை. இதற்குக் காரணம் என்ன? தென்னகம் — திராவிடம் வளமற்ற நாடா? இல்லை. அறிவாற்றலில் மிக்கவர்களுக்குப் பஞ்சமா? அதுவும் இல்லை. உழைப்பாளர் பெருமக்களுக்காவது பஞ்சமா? இல்லவேயில்லை. அல்லது நம் நாட்டினர் நாகரிகமறியாதவர்களா? அப்படிச் சொல்ல யார் துணிவர். உலகிற்கே நாகரிகத்தைக் கற்பித்தவர்கள் நம் மூதாதையர் என்று வரலாறுகள் கூறுகின்றன. நாடாண்டு அனுபவம் பெருதவர்களா நாம்? நாத் துடுக்குடையவனும் அவ்வாறு கூறமாட்டான்! அவ்வாருயின், நமது மக்கள் பொங்கற் புது நாளைப் பெருமிதத்துடன் கொண்டாடுவதற்குத் தடையாய் இருப்பது எது?

ஆம்; அந்த தடைக்கல்தான் டெல்லி ஏகாதிபத்தியம்! இந்திய அரசியல் சட்டத்தின் அடிப்படையின்மீது உருவாக்கப்பட்டு நடைமுறையிலுள்ள இன்றைய காங்கிரஸ் ஆட்சியின் அமைப்பானது, தென்னகத்தை —திராவிடத்தை அடிமை நாடாக ஆக்கியிருக்கிறது.

மொழியால், கலையால், நாகரிகத்தால், அறிவால், ஆற்றலால், பண்பால், பகுத்தறிவால், அரசியல் அறத்தால், அருங்குணத்தால், உழைப்பால், உயர்தன்மையால், வளத்தால், விவேகத்தால், வீரத்தால் தனிச் சிறப்புக்குரிய தமிழ்ப் பெருங்குடி மக்கள், நாம் மேலே விவரித்துள்ள சிறப்பில் கடைசி வரிசையில் நிற்பதற்காவது தகுதியுண்டோ என்ற ஐயப்பாட்டுக்குரிய இந்தியப் பேரரசின் ஆதிக்கத்திற்கு அடிமைப்பட்டிருப்பதானது, தமிழகத்துக்கு நாம் செய்யும் துரோகமாகும்.

சின்னஞ்சிறு நாடுகள் அரசியல் வானில் இருள் சூழ்ந்திருந்த நாடுகள், நாடாண்ட பெருமைக்குரிய உரிமை பெருத நாடுகளெல்லாம் இன்று பெரும் வல்லரசுகளின் பிடியிலிருந்து விடுவித்துக்கொண்டு, உலக நாடுகள் அரங்கில் பிரதிநிதித்துவமும் பெற்றிருக்கிறதென்ருல், நம் தென்னகம் 1962-ம் ஆண்டிலுமா மாற்றுரின் ஆதிக்கப் பிடியில் சிக்குண்டு சீரழிவது? தன்மானமுள்ள தமிழர்கள் ஒவ்வொருவருக்கும் முதற் கடமையொன்று எதிர்நோக்கியிருக்கிறதென்ருல், அக் கடமை, இந்தியப் பேரரசின் கோரப்பிடியிலிருந்து நம் நாட்டை விடுவிக்கும் தலையாய கடமையை நிறைவேற்றுவதேயாகும்.

அந்த மகத்தான கடமையை நிறைவேற்றவே திராவிட முன்னேற்றக் கழகம் அரும்பணியாற்றி வருகிறது! ஆனால், காங்கிரஸ் கூடாரத்தினரோ, தென்னக மக்களின் பேருழைப்பையும், நாட்டின் மகத்தான வளப்பத்தையும் தங்களின் அற்ப ஆசைகளுக்காக டெல்லி மூலவர்களுக்குப் பாதகாணிக்கையாக்கி வருகின்றனர்!

ஆதலினலேதான் ஓய்வின்றி உழைத்தும் உழைப்பாளர்கள் அதன் பலனைப் பெறமுடியவில்லை. விவசாயப் பெருங்குடி மக்களின் வேதனை நாளுக்கு நாள் வளர்ந்து வருகிறது. விலைவாசி ஏற்றம், வேலையில்லாத் திண்டாட்டம், வறுமை ஆகிய கொடுமைகள் எண்ணிலடங்கா. ஏழை—நடுத்தரக் குடும்பங்கள் தவிக்கின்றன! இந்நிலையில் பொங்கற் புதுநாளில் மக்கள் மனநிறைவு கொள்ள மார்க்கமேது?

எனவே, இந்த ஆண்டுப் பொங்கற் புதுநாளன்று தென்னக மக்கள் பொங்கலோ பொங்கல் என்று எழுப்பும் குரலோடு, சுதந்திரத் திராவிடம் எங்கள் பிறப்புரிமை! அம்மகத்தான சாதனையை நிறைவேற்ற உதயசூரியனுக்கே எங்கள் வோட்டு என்று முழக்கமிட வேண்டுகிறேம்!

நமதருந் திருநாட்டை இந்தியப் பேரரசின் ஆதிக்கத்திலிருந்து மீட்போம்! நல்லாட்சியை அமைப்போம் என்று உறுதி உங்கள் இல்லம் நாடி வரும் கழக வேட்பாளர்களுக்கு, தாய்மார்களே, பெரியோர்களே, மாணவத் தோழர்களே, உழைப்பாளர் பெருமக்களே, உதயசூரியன் சின்னத்தில் உங்கள் வாக்குகளை உளமாரப் பதிவு செய்வீர்களாக! அத்தகு உறுதிப் பாட்டினையும் பொங்கற் புதுநாளன்று — திராவிடர் திருநாளன்று முழங்குவீர்களாக!

உதயசூரியன் சின்னத்தில் நீங்கள் அளிக்கும் வாக்குகளால் கழகம் பெறும் மகத்தான வெற்றியின் காரணமாக 1963-ம் ஆண்டுப் பொங்கல் திருநாள் கூடுமான அளவு மனநிறைவு கொண்டதாகயிருக்கும் என்பது உறுதி! உறுதி! உறுதி!

அந்த மன எழுச்சியுடன் இந்த ஆண்டுப் பொங்கல் திருநாளை—திராவிடர்தம் திருவிழாவைக் கொண்டாடும் அனைவருக்கும் மனப்பூர்வமான வாழ்த்தினையும் வணக்கத்தையும் பொங்கல் காணிக்கையாகச் செலுத்துகின்றேன்.

வாழ்க தமிழ்! வளர்க திராவிடம்!


காஞ்சிபுரம், 86, திருக்கச்சிநம்பி தெரு, "திராவிட நாடு" அச்சகத்தில்
ஆசிரியர் (உரிமையாளர்) சி. என். அண்ணுதுரையால் அச்சிடப்பட்டு வெளியிடப்படுகிறது.

பதிவு எண். எம். 4642
இலங்கையில் செய்திப் பத்திரிகையாகப் பதிவு செய்யப்பட்டது

தொலைபேசி எண். அலுவலகம் : 15
இல்லம் : 118

ஜனவரி 14 முதல்

சென்னை
கெயிட்டி
புவனேஸ்வரி
லிபர்ட்டி-பிரைட்டன்
மற்றும் தென்னாடெங்கும்..



சரஸ்வதி பிக்சர்ஸ்

# ராணி சம்யுக்தா



கதை, வசனம், பாடல்கள்
கவிஞர் கண்ணதாசன் . . . டைரக்ஷன்.. யோகானந்த்

பூரண உரிமையாளர்கள் :-
Messrs. பிக்சர் பையனியர்ஸ்,
2/21, டாக்டர் வாசுதேவன் ரோடு, : : சென்னை-10.

Cover Printed at The Ideal Printers, Madras-1.